# கந்தபுராண வசனகாவியம்



அருட்கவி சீ.விநாசித்தம்பி

592

உ



இந்நூலாசிரியரின் முன்னைய
நூல்களுக்கு
சிவபதம்பெற்ற இந்நூலாசிரியரின்
குருநாதன்
இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
வழங்கிய பாராட்டுக்கள்

## மாவிட்டபுரம் தண்டபாணிக்கந்தன் திருப்பதிகம்.

1 அளவையூர்ச் சஞ்சீவி என வழங்கும் ஆசிரியர் திரு. சீ. விநாசித்தம்பிக்கு இளமைதொட்டே பலவேறு சித்திகளும் காட்சிகளும் அமைந்திருக்கின்றன. இதனை அவர் பல முறை எனக்கு எடுத்துச் சொல்லியதுண்டு. இவற்றின் மூலதத்துவம் அறிதற்கரியது. இவ்வாறான நிலை கைகூடியவர்கள், அந்நிலையை வேத நெறிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

திரு. விநாசித்தம்பி அடைந்த சித்திகளுட் பாடற் சித்தியும் ஒன்று. சொற்களும் பொருளும் அவருக்கு அநாயாசமாகவே வந்து கொண்டிருக்கின்றன. மனனஞ் செய்து வைத்த பாடல்கள் வருவதுபோலத் தங்குதடையின்றிப் பாடல்கள் தமக்கு வருகின்றன என்கிறார். மாவையூர் தண்டபாணிக்கந்தன் திருப்பதிகத்தையும் அதனை அடுத்து வரும் பாடல்களையும் இனி வெளிவரவிருக்கும் செல்வச்சந்நிதிப் பெருமான் பதிகத்தையும் அவரே பாடிக் காட்டக்கேட்டுப் பெரிதும் ஆராமையுற்றேன். அன்பர்கள் அவரது பாடற் சித்தியைக கண்டு அவருக்குச் சூட்டிய பட்டம் "அருட்கவி"

திரு விநாசித்தம்பி தமக்குக்கிடைத்த சித்தியை வைதிகப்படுத்தித் தமக்கும் பிறருக்கும் பயன் செய்வாராக.

17 – 06 –1967

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
08 MAR 2001



# கந்தபுராண வசனகாவியம்

**ஆக்கியோன் :-**

***அருட்கவி சீ. விநாசித்தம்பி ப்புலவர்***

*நாகேஸ்வரம் அளவெட்டி,*

விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள்

(கந்த சஷ்டி ஆரம்பநாள்.)

**28-10-2000**

பதிப்புரிமை:-  ஆக்கியோனுக்கு

294.592 R

அச்சுப்பதிப்பு :

பிள்ளையார் ஒவ்செற்
பிறின்டேர்ஸ்
நல்லூர்,

முதல்பதிப்பு:-  ஐப்பசி 2000

பிரதிகள் 500

விலை :- ரூபா 200/=

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



அருட்கவி சீ. விநாசித்தம்பி

# கந்தன் கதை அமுதம்

புராணம் என்பது பழமையானது என்று பொருள் தரும். வேத தத்துவங்களை – தருமங்களை விரித்துச் சொல்வது புராணம்– அதனைப்படிப்பதால் வேதநீதிகள் எவை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம் – பங்கயத்து அயனும் மாலறியா நீதியை அறியலாம். இந்த நீதியை ஆன்மாக்கள் அறிந்து உணர்ந்து பாசநீக்கம் பெற்று இறைவன் திருவடி இன்பத்தைப் பெறும் பொருட்டுமலர்ந்தவை பதினெண்புராணங்கள்'' சிவபுராணம் பத்து, விஷ்ணுபுராணம் நான்கு, பிரம்ம புராணம் இரண்டு, சூரிய புராணம் ஒன்று அக்கினிபுராணம் ஒன்று.

ஒருதருணம் – வியாசமுனிவர் தலைமையில், மாதவமுனிவர்களின் மகாநாடுநடந்தது. அப்போது – கலியுகத்தில் அதர்மம் தலைவிரிந்தாடுமே அதனை எப்படிச் சமாளிப்பது என்று–சபையோர் வியாசரைக் கேட்டனர். அதற்கு வியாசர்

"ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம்
கலி கல்மஷ நாசினீம் ''

" கந்தப்பெருமானுடைய நிகரில்லாத கீர்த்தி ஒன்றுதான் கலியில் வரும் பாவங்களைப் போக்கவல்லது'' என்றுவிடைபகர்ந்தார்.

***

கலியுகக் கொடிய வெப்பம் போக்கவல்லது கந்தன்கருணைக் கற்பகநிழல். கொடிய சூரபத்மன் கந்தன் முன்நின்றதும் தூயவனாகிறான்

"தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்

என்பது கச்சியப்ப சுவாமிகள் பாடிய கந்தபுராணம் கூறும் சிறந்த அமுதம். இந்த அமுதநூலை – கந்தபுராணத்தை – ஆலயங்களிலும், சைவமடங்களிலும் புராணபடனமாகச் செயற்படுத்தி – நாட்டுமக்களுக்குத் தெய்வீகநெறியை நிலைநாட்டி வந்தவர்கள், முன்பு புண்ணியம் செய்த சைவச் சான்றோகள் புராணபடனம் பூமிசெழிப்புறச் செய்தது இலக்கிய கலாநிதி – பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் ஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய கந்தபுராணவசன நூலுக்குவழங்கிய (11.05.81) அணிந்துரையிலிருந்து சில குறிப்புகள்: கந்தபுராணத்துக்குப்பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகும் காஞ்சிமாநகரம். அதனைப் பேணிவளர்த்தெடுக்கும் தவவிசேடம் பெற்றது, ஈழம்–

யாழ்ப்பாணம் ஈழத்தில் கோயில்கள் தோறும் – சுவாமிசந்நிதிகளில் சந்நிதி விரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராணபடனம் நிகழ்த்தும் முறை வேறு எங்கும் காணாதது.

## யாழ்ப்பாண வரலாறு

ஈழத்தின் சிரத்தானம் யாழ்ப்பாணம். இதன் ஆதிப்பெயர் மணற்றி இதனை முதன்முதலாண்ட தமிழரசன் யாழ்ப்பாணன் – பாணருக்கு யாழ் கைவந்தது யாழ்ப்பாடி என்றும் அவன் பெயர் வழங்கும் அவனது இயற் பெயர் வீரராகவன்

***

அந்தகக் கவிவீர ராகவன் வேறு இந்த வீரராகவன் வேறு கவி வீர ராகவன் அந்தகன் (குருடன்) பிற்காலத்தவன் யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாடிக்குப்பின் ஆட்சிசெய்த ஆரியச்சக்கரவர்த்திகளுள் ஒருவனாகிய பரராசசேகரன் அரசாண்டகாலத்தில் அவனைப் பாடிப் பரிசு பெற்றவன் அந்தகக் கவிவீர ராகவன்

***

யாழ்ப்பாணச் சரித்திரத்தின் மூலவேரைக் கண்டுபிடித்தால் புராணபடன முறையின் தோற்றத்தைக் காணவழி செய்வதாயிருக்கும் கண்டியை அரசாண்ட அரசன் ஒருவனை, வீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் இன்னிசையால் இனிமை செய்ய– அவன் மணற்றியைப் பரிசாகக்கொடுத்தான்: இம் மணற்றி கண்டியரசனுக்கு மாதா வழிச்சொத்து, மாதா மாருதப் பிரவல்லி – விக்கிரமசோழன் புதல்வி மாமுகத்தி (மா–குதிரை) இவள் பல தலங்களுக்கும் யாத்திரைசெய்து, இறுதியாக நகுலாசலம் எனப்படும் கீரிமலைக்கு வந்து சேர்ந்தாள். அங்கே தவம் செய்துகொண்டிருந்த கீரிமுகமுனிவரான நகுலமுனிவரின் அநுக்கிரகம் பெற்று கீரிமலைத் தீர்த்தத்தில் மூழ்கியதும் மாமுகம் விடுபட்டு அழகிய முகத்துடன் கூடிய அரசிளங் குமரியாயினாள்.

மாமுகம் விட்டதன் ஞாபகமாக மாவிட்டபுரத்தை யமைத்துக் கோயிலெடுத்துக் கோயிலில் என்றும் இளையோனாகிய திருமுருகனைப் பிரதிட்டை செய்தாள்

முக அழகியாய் மாறிய அவளைப் பாலசிங்கன் என்னும் அரசன் மணந்து பெற்ற புதல்வனே கண்டியரசனீ.

இனி மணற்றிற்கு வருவோம் பலவேறு மக்களை அழைத்துவந்து குடியேற்றஞ் செய்து மணற்றியை ஆளத்



தொடங்கினான் யாழ்ப்பாடி அழைத்து வந்தவர்களுள் முக்கியஸ்தர் ஒருவர். அவர் கச்சிக் கணேசையர் மேலும் மிகமிக முக்கியமான பொருள் ஒன்று குடியேறியது. அது கந்தபுராணம்

கச்சிகணேசையரும் யாழ்ப்பாடியும் கச்சியப்பசிவாச்சாரியரோடு உடன்படித்தவர்கள் ஆகலாம். அன்றி கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்குபற்றியிருப்பார்கள் என்றும் ஊகிக்கலாம். கச்சியப்ப சிவாச்சாரியார் காலத்திலேயே கந்தபுராணம் யாழ்ப்பாணத்திற்கு வந்து விட்டது.

## புராணபடனம் பற்றியவை

1. கோயிற் சந்நிதியிற் புராணபடனம் நடத்தவேண்டியிருந்ததால் –சந்நிதி விரோதமின்றி புராணபடனம் நடத்தும் முறையைக் கச்சிக்கணேசையரும் யாழ்ப்பாடியும் கலந்துரையாடி வகுத்திருக்கலாம்.
2 அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்திலேதான் முதன்முதல் இந்தப்புராண படனத்தைக் கச்சிக்கணேசையர் ஆரம்பித்தார் என்று சொல்லுவதுண்டு
3 பெண்களின் உதிரத்தில் கந்தபுராணம் இரண்டறக்கலந்திருந்தது அவ்வாறாய உதிரத்தில் உதித்தவரே நாவலர் பெருமான்

*** *** ***

இந்தவிதமாக நிகழ்ந்து வந்த புராண படனங்களில் பிரசித்தம் பெற்றபுராணம் கந்தபுராணம் அதைப்படிக்கப்படிக்க – படிப்போர்க்குச் சிவதத்துவத்தேன் உள்ளத்தில் ஊறும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவர்கள் கந்தபுராணப் பாடல் நூலைப்பதிப்பித்தார். பாடலைப்படி த்துப் பொருளறியாதவர்க்காகக் கந்த புராண வசனத்தையும் எழுதினார் ஆயினும் காலப்போக்கில் புராணம் படிப்போரும் கேட்போரும் சுருங்கிப் போகக்காண்கிறோம்.

எம்பெருமான் கந்தனின் புராணத்தைப் படிக்காவிட்டாலும் அவரது கதையை ஆலய சந்நிதானங்களில் மக்கள் படித்து நலம் பெற வேண்டுமென்ற தெய்வீக உந்துதலால் – கந்தபுராண வசனகாவியம் என்ற நூலைச் சிறியேன் ஆக்கினேன். கதைப்போக்கு அப்படியே அமையும் வண்ணம் –மிக

இலகுவான தமிழ்நடையில் – கவிநடையில் இந்நூல் ஆக்கப்பட்டது. இந்நூலைப்படிப்பதால் தெய்வீகசிந்தனை – கந்தனது கருணை உலகவாழ்வுச்சிறப்பு – அனைத்தும் உண்டாகும்– உற்சவகாலங்களுக்கு முன்பும் கந்தசஷ்டி காலங்களிலும் இந்நூலைப்படித்துப்பயன் பெறலாம்.

*வீசுபுகழ் கந்தவேள் கருணைபொங்க*
*ஆசையுடன் ர்ந்நூலை ஆக்கியுள்ளேன்*

–

சுபம்

கந்தனடியாரின் அடிமை
அருட்கவி
சீ. விநாசித்தம்பி

நாகேஸ்வரம்
அளவெட்டி
14.08.2000

## அன்புரை

மெய்யடியார்களே,

கந்தப்பெருமான் தமிழரின் சொந்தப்பெருமான் அவரது கதையைப் படிக்கப்படிக்க கருணைத்தேன் சுரக்கும் இந்தப்பிறவி முற்பிறவிபழிதீர்ந்து ஞானவாழ்வுறலாம் சேவலும் மயி?லும் சித்திரவேலும் காவலாய் வந்தெம்மைக்காக்கும் இந்நூலை எல்லாரும் படித்து நலம்பெறுமாறு வேண்டுகின்றேன்.

இந் நூலின் முகப்புப்படத்தை வரைந்துதவிய சித்திரகலாநிதி திரு. சண்முகராசா ஆசிரியருக்கும் இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய நல்லூர் கரணவாய்–பிள்ளையார் அச்சகத்தாருக்கும் இந்நூலை வெளியீடு செய்யும் வெளியீட்டுச் சபையாருக்கும் மணம் பூத்த நன்றி கூறுகிறேன்.

சுபம்.

❋



உ

# வாழ்த்துரை

# கந்தபுராண வசன காவியம்

அருட்கவி என்று அனைவராலும், போற்றித் துதிக்கப்படுபவர் அளவெட்டி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்கள். இவருடைய பாடல்களும் கட்டுரைகளும், வாழ்த்துரைகளும், ஆசியுரைகளும், சொற்பொழி வுரைகளும் சங்கீத கதாப்பிரசங்கங்களும் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எம்மவரால் பெரிதும் வரவேற்கப்பட்டவை. செந்தமிழும் நாப்பழக்கம் என்று சொல்வர் பெரியோர். இந்த வகையில் நினைத்தவுடன் கருத்தமைந்த பாடல்களை வெளிப்படுத்தும் திறன் இவருக்கு உண்டு. இவருடைய நாவில் நாமகள் வீற்றிருந்து அனைத்தையும் வெளிப்படுத்துகிறாள் என்பது முற்றிலும் உண்மை.

பழுத்த முதுதமிழ்ப் புலவராக விளங்கின்றததனால் இன்று கந்தபுராணவசன காவியத்தையும் பாடி முடித்து வெளியிடுகிறார். அகராதி கொண்டு பொருளை ஆராயாமல் கற்றவர்கள் பக்தர்கள் நன்கு விளங்கக் கூடியதாக இந்நூல் வெளிவருகிறது. படிக்கும் போது பக்தி இரசனை குன்றாது கந்தபுராண காவிய ஒழுங்கு தவறாது காணப்படுவதை நன்கு உணரலாம்.

இநநூலை மேலோட்டமாக பார்க்கிற சந்தர்ப்பம் தான் எனக்குக் கிடைத்தது. அதிலும் சில இடங்கள் என்னை மிகுதியும் ஈரத்தன. மோனம் நீங்கு படலத்தில் இடம் பெற்ற ஆறு அடிகளை திரும்பத் திரும்ப படித்தேன். முழு நூலுக்கும் இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

**"மீண்டும் வந்து விமலனை வேண்டினர்**
**ஆண்டவன் வேலனை அருள்வோம் என்று**
**திருவாய் மொழிந்து திகழ்பன் மக்கட்கு**
**அரிய ஞானம் ஆம்பொருள் சொல்லால்**

"செப்பரி திதய்ம் திரண்ட மோனமோ
டிப்படி யிருத்தல் எனவருள் சுரந்தனன்"

முருக அவதாரமும் அற்புதமான விளையாட்டுக்களும் நூலாசிரியர் வாக்கிலே பெருமிதத்தைத் தருகிறது. இந் நூலின் இடையிடையே சந்தர்ப்பத்துக்கேற்ப கச்சியப்பசிவாச்சாரியருடைய கந்தபுராணப்பாடல்கள் மகுடம் வைத்தா போல் அமைந்துள்ளன. அரசு செய் படலம் அசுரரின் எழுச்சிக்கும் வீர உணர்வுக்கும் எடுத்துக்காட்டாக அமைகிறது.

கந்தபுராணத்தில் கருத்தூன்றிப் படிக்கவேண்டிய பகுதி யுத்தகாண்டமாகும். இப்பகுதியைநாற்பது பக்கங்களில் அமைத்து தந்திருக்கிறார் நூலாசிரியர். அடுத்து தேவர்களின் வேண்டுதல்களும் தெய்வயானை அம்மன் திருமணமும் மூல புராணத்தின் படியே முறையாக இடம் பெறுகிறது. பக்தர்களும், விரதிகளும் ஆய்வுசெய்வோரும், அகந்தையை அடக்கி வாழவேண்டும் உண்மையை உணர்வோரும் பயனடையக்கூடிய வகையில் தெளிவான வாக்குகளினால் வெளிப்படுத்தப்படுகிறது தட்சகாண்டத்திலேயாகும். கந்தபுராணத்தில் இப்பகுதி மிகவும் பயனுள்ளது. பூர்த்தியாக வள்ளியம்மை திருமணப்படலத்தை அமைத்து நூலை நிறைவு செய்கிறார் "அருட்கவி" அவர்கள்

கந்தப்பெருமானின் அருட்பெருஞ் சரிதையை மிக இலகுவான முறையில் ஓதி உணர்ந்து இன்புற இந்நூல் மிகவும் சகாயமாக அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து அருட்கவி அவர்களையும் வாயார வாழ்த்தி அமைகின்றேன்.

"புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடியனக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி '

***தங்கம்மா அப்பாக்குட்டி, (J.P)***
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை, ஸ்ரீ துங்கா.*

உ

சிவமயம்

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின்
## அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் கந்தபுராண வசனகாவியம் எனும் நூலை இலகுதமிழில் வெளியிடுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். இந்தியாவில் தோன்றிய புராணமாக இருந்தாலும் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் வாழ்க்கை முறையாக இருப்பது கந்தபுராணம். அதனாலேயே யாழ்ப்பாண கலாச்சாரத்தை கந்தபுராண கலாச்சாரம் என்று விமர்சித்துள்ளனர். சைவ சமயத்தின் அடித்தளமாக விளங்குவது சைவ சித்தாந்தம் இக்கருத்தை தெளிவுபட விளக்குவது கந்தபுராணம். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் தெய்வமாக விளங்கும் முருகப்பெருமானைத் தெளிவுபட விளக்குவது கந்தபுராணம். இம்மையிலும் மறுமையிலும் மனிதன் வாழ வேண்டிய வழிமுறைகளை வகுத்துப் புராணத்தை எளிய நடைமுறைத் தமிழில் தொகுத்துள்ளார் திரு. விநாசித்தம்பி அவர்கள். இதுபோன்ற பல நூல்களை எழுதிய நூலாசிரியருடைய முயற்சி பாராட்டுதற்குரியது. பல துன்பங்களைச் சுமந்துகொண்டிருக்கும் மக்களுக்கு இதிலிருந்து விடுபடுவதற்கு இறைவழிபாடே ஆணித்தரமானது. இதை உறுதிப்படுத்தும் முகமாக இந்நூல் வெளிவருவது எல்லோருக்கும் முருகனுடைய திருவருளை பெற்றுக் கொள்ள வாய்ப்பாக உள்ளது. நூலை பெற்று எல்லோரும் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக எல்லோருக்கும் இறைவனது ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**2வது குருமஹா சந்நிதானம்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**

30-09-2000.

உ

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தலைவர், இந்துநாகரிகத்துறை,

## பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்,

# அணிந்துரை

கந்தபுராணம் முருகப்பெருமானின் தெய்வீகப் பெருமைகளையும் சைவசிந்தாந்த விழுமியங்களையும் கூறும் ஒப்பற்ற நூல். முருகப்பெருமானின் திருவருள் கைவந்த கச்சியப்ப சிவாச்சாரியாரினால் அருளப்பெற்றது. கந்தபுராணத்தின் பெருமையை யாழ்ப்பாணத்தோடு இணைத்து இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுமிடத்து.

> "கந்தபுராணத்துப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகுங் காஞ்சிமா நகரமேயாயினும் அதனைப் பிள்ளைமைப் பருவத்தில் இருந்தே பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும் தலவிசேடம் படைத்தது ஈழம். சிறப்பாக யாழ்ப்பாணம். ஈழத்தில் கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில் சந்நிதி விரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராண படனம் நிகழ்த்தும் முறை வேறுஎங்கும் காணாதது. இம்முறையின் வரலாறுசிந்திக்கற்பாலது" எனக் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம் மேலோங்க இப்புனித நூலே வழிவகுத்தது. இதற்கு முன்னோடியாக விளங்கிய பெருமை நாவலர் பெருமானைச் சார்ந்தது. மக்களை நல்வழிப்படுத்தி பிறவிப் பிணியைப் போக்குவதற்கு கந்தபுராணமே கைகண்ட ஔசதமென கருதியவர் நாவலர். "எத்துணைக் காலம் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எத்துணையும் தெவிட்டாது தித்தித் தமுதூறும் அதியற்புத அதிமதுர திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதியிலக்கண திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்கள் உள்ளத்தூற் றெடுத்த மெய்யுணர்வேயாம்" என யாழ்ப்பாண சமய



நிலையில் நாவலர் பெருமான் கூறியிருப்பது குறிப்படத்தக்கது. நாவலர் பெருமான் இக்கந்தபுராணத்தை தெளிவான செந்தமிழ் நடையில் உருவாக்கியதன் நோக்கத்தை குறிப்பிடுமிடத்து,

> "நம்முடை சைவசமய நூல்களை எல்லோருக்கும் எளிதில் உபயோகமாகும் பொருட்டு வெளிப்படையாகிய வசன ந டையிற் செய்து, அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தின் வசன நடையிற் செய்து, அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தின் அது பெரும் புண்ணியமாகும் என்று துணிந்து, சில வருடத்துக்கு முன் பெரிய புராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்கு பெரும் பயன் விளைத்தலை கண்டறிந்தமையால் கந்தபுராணத்தையும் அப்படியே செய்கின்றேன்"

எனக் கூறியுள்ளார். அத்தகைய பெருமை மிக்க கந்தபுராணத்தை நாவலரது வழியைப் பின்பற்றி கந்தபுராண வசன காவியமாக எமது பிரதேசத்தில் வெளிப்படுத்தியுள்ளவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களாவர். கந்தபுராணம் சார்ந்த மெய்யுணர்வு அருட்கவியின் உள்ளத்தில் ஏற்பட்டதன் பயனே இவ்வசனகாவியமாகும். எனில் மிகையில்லை. இறைவன் புகழ்பாடிப் பரவுதலையெ தம் வாழ்நாளின் இலட்சியமாகக் கொண்ட இவர் அருட்கவி. சிந்தித்தவற்றைக் கவிதை வடிவில் உடன் கொண்டுவருவதில் வல்லவர். சிறந்த பக்திமான். இறைவனைப் போற்றும் பல தோத்திர நூல்களையும், பக்திப் பாமாலைகளையும் இயற்றி வெளியிட்டு மக்கள் உள்ளத்தில் சமய உணர்வினை ஊட்டி வருபவர். எமது சமயம் சார்ந்த உண்மைகளை தெளிவாக விளக்குவதில் வல்லவர். அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் திருத்தலத்தோடு தம் சமயப்பணியை இணைத்துக்கொண்டவர். நீண்டகாலமாக அவர் கவிதைத்துறையில் கொண்டிருந்த அனுபவமும் ஆற்றலும் ஒன்றிணைந்து கந்தபுராண வசன காவிய உருவாக்கத்துக்கு உதவியுள்ளன.

இவ்வசன காவியம் கந்தபுராண மரபிற்கு இயைய விநாயகர், சுப்பிரமணியர் காப்புச் செய்யுட்களுடன் தொடங்கி நூற் பயனையும் கூறி கடவுளர் வாழ்த்துக்களுடன் 201 பக்கங்களில் விரிவுபெறுகின்றது. உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் என்ற வரிசையில் கந்தபுராண மூலநூல் மரபுக்கியைய இவ்வசன காவியம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வசன காவிய நடையில் தெளிவும் பொருத்தமான சொற் பிரயோகங்களும் இந்நூலை அணி செய்கின்றன. நாவலர் பெருமானின் கந்தபுராண வசன நூலின் மரபில் இந்நூல் வசன காவியமாக அமைந்து புராணமரபின் மற்றொரு பரிமாணத்தைக் காட்டிநிற்கின்றது. எடுத்துக்காட்டாக முருகனது திரு அவதாரம் கந்தபுராணத்தில் கூறப்படும் போது,

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்.
- - - - - - - - - -
ஒரு திருமுருகன் வந்தாங்கு அதித்தனன் உலகம் உய்ய"

என்ற பாடலை அருட்கவி அவர்கள் பின்வம் வசனகாவிய வடிவில் அழகுற அமைந்துள்ளார்.

"அருவமும் உருவமும் அநாதியும் பலவும்
ஒருவனும் ஆகி ஓங்கிய பிரம்மப்
பரம்பொருள் அறுமுகம் பன்னிருகரங்கள்
இரு திரு வடிமலர் இசைந்த முருகன்"

கந்தபுராணப்படனம் எமது ஆலயங்களில் தொன்றுதொட்டு இடம்பெற்று வருகின்ற நிகழ்வாகும். புராணத்துக்கு பயன் சொல்பவர்களுக்கு நாவலரது கந்தபுராண வசனம் உதவுவது போல இந்நூலும் உதவ வல்லது.மேலும் இந்நூலின் அமைப்பில் தேவைக்கேற்ப வசனக் கவிதை



நடையும் மாற்றம் பெறுகின்றது (பக்கம் 47). யுத்த காண்டத்தில் வரும் வரிகள் யுத்த களத்தினை மனக்கண் முன் நிறுத்துகின்றது.

"கடும்போரைக் கண்டுமிகக்
கதிரவனும் மனமகிழ்ந்தான்
கொடுங் கோபச் சிங்கமுகன்
குழுமிவந்த பூ தர்களை
மலைமேல் எடுத்தெறிந்தான்
வந்தசில பூ தர்களை
அலைகடலில் எடுத்தெறிந்தான்
ஆகாயம் மேலெறிந்தான்
அள்ளியள்ளி எறிந்தெறிந்தே
அவனியிற்கா லால் மிதித்தான்
கொள்ளும்வரை வாயிலிட்டான்
குருதிநதி ஓடியது" (பக். 127)

யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசாரம் மேலும் வேரூன்றி சிறக்க இந்நூல் வழியமைக்கின்றது. என்று கூறின் மிகையில்லை. மக்களிடையெ சமய உணர்ச்சி ஊட்டவல்ல சிறந்ததொரு வசன காவியமாகிய இவ்வாக்கத்தை சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

கந்தபுராணத்தை மனமுருகிப் பாடி மகிழ்பவர்கள் பெறும் பயன் பற்றி பின்வரும் பாடல் கூறும்.

"இந்திர ராகப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ
ரந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே"

கந்தபுராண நூற் பயனைப் பெற அருட்கவியின் கந்தபுராண வசன காவியம் வழியமைக்கும் என்பது எமது திடமான நம்பிக்கை. காலத்தினால் மாறுபடாத சமய தத்துவ சிந்தனைகளை இளந்தலைமுறையினர்

நன்கு அறிந்து கொள்ளும் நோக்கில் இந்நூலினை ஆக்கியளித்த அருட்கவியின் ஆற்றலைப் பாராட்டுகின்றோம். அருட்கவி விநாசித்தம்பி மேன்மேலும் இது போன்ற பயனுள்ள நூல்களைச் சைவ உலகுக்கு தந்துதவ எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக! கந்தபுராணச் சிந்தனைகள் எங்கும் பரவ வேண்டும் என்ற நோக்கில் வெளிவரும் இந்நூலை நாவலர் பெருமானின் இலட்சியத்தினை நிறைவு செய்வதாக உள்ளது.

"சைவசமயிகள் சிவபுராணங்கள் வாங்கி,
தங்கள் தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்ப,
மெய்யன்போடு வாசித்து பாவங்களை வெறுத்து, தங்கள்
தங்களாலியன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து,
சிவபெருமானை வழிபட்டு உய்யக் கடவர்கள் "

என்ற நாவலரின் கூற்று இப்புராணத்தின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்துகின்றது.

*கந்தபுராண வசன கவிதை என்றும் நிலவி எங்கும் பரவி சிறப்புற்றோங்குக!*

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்.

திருநெல்வேலி,
28. 09.2000.
நவராத்திரி ஆரம்ப நாள்.



உ

பொன்னாலை
பிரபல பௌராணிகரும், சிறந்த நூலாசிரியருமாகிய
**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**
*வழங்கியது.*

புராண படனத்தால் பூமி செழித்தது, மக்கள் சைவ நீதிப்பண்பாக வாழ்ந்தனர் தெய்வத்திருவருள் உலகமெலாம் மலர்ந்தது, காலப்போக்கில் புராணம் கேட்போர், ஆலயத்தூண்கள் மாத்திரம் என்ற நிலையாய் மாறிவிட்டது. இறைவனது பழம்பெருமையையும் வேத ஆகம உண்மைகளையும் புகட்டுவன புராணங்கள் அந்நியநாட்டு நாகரிகத்தால் அதனைக்கேட்டு உணரும்நிலை அருகிவிட்டது.

கந்தபுராணத்தில் உள்ள பொருள், வேறு எந்தப் புராணத்திலுமில்லை என்பது பழமொழி. இத்தகைய கந்தபுராணத்தை எதிர்கால நம்மக்கள் இலகுவாகப் படிப்பதற்கேற்ப பிள்ளையார் கதை போன்ற பாணியில் இலகுதமிழில் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் கந்தபுராணவசனகாவியம் என்றநூலை ஆக்கிதந்துள்ளார். இதனை ஒரு தெய்வீகச் செயல் என்று பாராட்டுகிறேன். புராணத்தின் வரம்புதவறாமல் இந்நூல் விளங்குகிறது. இதனை ஓதுவோர் கந்தபுராணம் முழுவதையும் படித்தவர்களாகுவர் அருட்கவியின் பணி மேன்மேலும் ஓங்குக. கந்தன் திருவருள் பெருகுவதாக என்று திருவருளை வேண்டிநிற்கின்றேன்.

**அன்பன்,**

**தி.பொன்னம்பலவாணர்.**

உ

சிவமயம்

அளவெட்டி, அருணோதயக்கல்லூரியின் முன்னாள் ஆதிபரும் புராணபடனத் தொண்டரும் ஆகிய

## அ. விஸ்வநாதன் B.A. அவர்கள் வழங்கியது

கந்தன் கருணைக் கடல். கலியுக வரதன். விண்ணுலக வாசிகளாகிய தேவர்களைப் பல காலம் இம்சைப்படுத்தியும் கொன்றுகுவித்தும் சுவர்க்கத்திலிருந்து துரத்தியும் சொல்லொணாத்துன்பத்திலாழ்த்திய சூரனாதிய அசுரர்களை அழித்து மீட்டும் தேவர்களை விண்குடி யேற்றி நல்வாழ்வு அளித்தவர் அறுமுகனாகிய முருகப்பெருமான். அசுரர்களால் தேவர்களுக்கு நேர்ந்தகதி இன்று இலங்கைவாழ் தமிழருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதினின்றும் கைதூக்கி உதவவல்லது கலியுக வரதனாகிய கந்தப் பெருமானது உபாசனையும் வழிபாடுமே.

இதற்கு வாய்ப்பாக எமக்கு இருப்பது காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியரால் ஆக்கப் பெற்ற கந்தபுராணமே. இது பதினாயிரத்திற்கும் மேற்பட்ட விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. இம்மைக்கும் மறுமைக்கும் மிக்க பயன்தரவல்லது. சுருங்கக்கூறின் கந்தபுராணம் கிடைத்தற்கரிய ஒரு கற்பகதரு என்றே சொல்லி விடலாம்.

எமது தமிழ் நாடு உய்வடையும்படி அவதாரம் செய்த ஆறுமுக நாவலர் பெருமான் கந்தபுராணம் பற்றிக் கூறியவை:- "எத்துணைக்காலந் திரும்பத்திரும்பப் படிப்பினும் கேட்பினும் எள்துணையேனும் தெவிட்டாது தித்தித்து அமுதூறும் அதியற்புத அதிமதுர திவ்விய வாக்காகிய கந்தபுராணம்".

"இந்தக் கந்தபுராணத்தை விதிப்படிமெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் படிப்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜெயம், இராசவசியம் முதலாய பயன்களைத் தாம் தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது சத்தியம், சத்தியம், சத்தியம் முக்காலுஞ் சத்தியம்," என ஆணையிட்டுக் கூறுகின்றார்.

இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தில் கண்ட உண்மை. இந்த நாட்டுக்கு வந்த, வருகின்ற, வர விருக்கின்ற இடையூறுகளினின்றும் சைவத்தையும் தமிழையும் தமிழனையும் பாதுகாத்து வைத்தது, வைக்கின்றது, வைக்க இருப்பது கந்தபுராணமே.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த கந்தபுராணத்தை ஆலயங்களிலும், திருமடங்களிலும், வருடந்தோறும் தவறாது பயபக்தியுடனும் விரத நியமங்களுடனும் படித்துப் பொருள் சொல்லும் புராணபடனத்தைத் தொடக்கிவைத்தவர் நாவலர் பெருமான் அவர்களே. அத்தோடமையாது கச்சியப்பரது செய்யுள் வடிவிலமைந்த கந்தபுராணத்தைக் கற்றோர் மற்றோர் யாவரும் தாமே வாசித்து அறியும்படி, புராணமரபும் தமிழ் நூல்மரபும் தவறாத பிரகாரம் உரைநடையிலும் வடித்துத்தந்திருக்கிறார்கள். இதைவிடக் காசிவாசி செந்தில்நாத ஐயரவர்கள் "கந்தபுராண நவநீதம்" என்றும் மகாவித்துவான் நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் "சுப்பிரமணியபராக்கிரமம்" என்றும், இலக்கியக்கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் "கந்தபுராணபோதனை", "கந்தபுராணக் கலாச்சாரம்" என்றும் நூல்களை உரை நடையில் யாத்துத் தந்திருக்கின்றனர்

இவ்வுரைநடை நூல்கள் இப்போது இலகுவில் கிடையா. கிடைப்பினும் சகலராலும் வாசித்துத்தாமே பொருளைக் கிரகிக்கமுடியாது. இதனை உணர்ந்து

போலும் எமது தவப்புதல்வர் **அருட்கவி சீ. விநாசித்தம்பி** ஐயா அவர்கள் நாவலர் பெருமான் வழிநின்று தூயதமிழில் சீரிய மரபு தவறாமல் கந்தபுராணத்தை இனிய எளிய உரை நடையில் பாடசாலை மாணவர் உட்படத் தாமே வாசித்துக் கிரகிக்கக் கூடிய வகையில் அச்சிட்டு வெளியிடுகிறார்கள். அன்னாரது தெய்வ நம்பிக்கையும் பரோபகார சிந்தையும் இருந்தவாறு!

எனவே சகலரும் தவறாது வாங்கிப்படித்துப் பயனடைவோமாக. அத்தோடு அருட்கவி அவர்கள் மென்மேலும் இத்தகைய தொண்டுகளில் ஈடுபட இறைவன் திருவருள் புரிவாராக என வேண்டியும், நாமும் அன்னாரை வாழ்த்தியும் அமைவோமாக.



உ
சிவமயம்

அருள் நெறிச் செல்வர்
**வி. செல்வரத்தினம் J.P**
(அகில இலங்கை சமாதான நீதவான்)
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லபனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

நான் மாணவனாக இருந்த காலம் தொடக்கம் அருட்கவி திரு.சீ. விநாசித்தம்பி புலவர் அவர்களுடன் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்து வருகின்றேன். இவரிடம் தெய்வீகசக்தி இருப்பதை நான் அறிவேன். அவர்கள் நாம் முன் செய்த காரியங்கள், இன்று செய்கிற காரியங்கள், நாளை செய்யப்போகிற காரியங்கள் யாவற்றையும் உணரும் தெய்வீக ஆற்றல் பெற்றவர். இவர் பலசமய நூல்களை பாடலாகவும், வசனநடையாகவும் சிறந்த முறையில் சைவ மக்களுக்கென ஆக்கி வெளியிட்டு, இருக்கிறார். இவரிடம் ஆழமான சிந்தனைத்திறனும், அழகானமுறையில் எழுதும் ஆற்றலும், உண்மையான பக்தியும் இருப்பதை அவரின் நூல்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

கடுமையில் கண்டித்துத் தண்டித்து இறைவன் அருள் பாலிப்பதை விளக்குவது கந்தபுராணம் எமது அருட்கவி அவர்கள் கச்சியப்பர் சுவாமிகளால்

கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட சைவ சிந்தாந்த கருத்துகளை எல்லோரும் எளிதில் படித்து விளங்கி உய்வு பெறும் பொருட்டு எளிய இனிய தமிழ் வசனநடையில் "கந்தபுராண வசன காவியம்" என்னும் நூலை ஆக்கி உங்களிடம் கொடுத்து இருக்கிறார்.

இந்நூலை அன்புடனும் பக்தியுடனும் படிப்பவர்கள் சிந்தை தெளிந்து கந்தவேளை எந்தவேளையும் மறவாது பெருமானின் கருணைக்கு உள்ளாகி எல்லா மங்களங்களையும் பெறுவார்கள்.

அருட்கவி அவர்களின் திருத்தொண்டு வாழ்க, ஓங்குக, இவரின் நூல்கள் மேன்மையடைக.

இவர் மேன்மேலும் இதுபோன்ற சிறந்த பல நூல்களை ஆக்க வேண்டும் என்றும், பல்லாண்டு வாழ்ந்து சமயப் பணியும், இறை தொண்டும் ஆற்ற வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்

அன்பன்
**வி. செல்வரத்தினம்.**

அப்புக்காத்துவளவு,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.



# நாவலர் வழியில் நற்காவியம் தந்த பாவலர் அருட்கவி ஐயா வாழி!

முருக வரலாற்றை யெல்லாம்
முழுதாய்ந்தே எழுதியோர் காவிய மாக்கி
பெருகிடும் திருவருள் நலம் பொழிய
பேரன்பர் மிகவுவந்து கற்பதற்கே
அருமையாய் அருட்கவி ஐயா யாத்த
அற்புத கந்தபுரான வசன காவியம்
உரிமையாய் சைவத்தமிழ் உலகிற்கு
உகந்த நூலென்றே வாழ்த்தி ஏற்றோம் மகிழந்து

நாவலர் வழியில் நின்றே
நற்றமிழ் நூல்கள் யாத்து
தேவரின் நெறியில் வாழ்ந்து
தேன்தமிழ் பரப்பி வாழும்
வாவுசீர் வள்ளல் அருட்கவி ஐயா
மாண்புயர் கந்த புரான காவியத்தை
சேவையாய் ஆக்கித் தந்தே தமிழருக்கு
தெய்வ ஆசிகள் சேர்த்தாரிங்கு.

தீங்கரும்பின் சாறெனத் தித்திக்கும் முக்கனியெனப்
பூ ங்கமரும் தேனெனப் புதிய பால் அமுதென
ஓங்இசைத் தமிழென உலகி லின்பம் ஊறவே
ஒரு திருமுருகன் சரிதத்தை தந்த ஐயா வாழி!

மதுரகவி காரை. எம். பி. அருளானந்தம்.
ஆசிரியர்,
யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

உ

# வெளியீட்டுரை .

ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான, பிரதம செயற்பாட்டாளராகப் பணியாற்றி வருபவர் இருநூறுக்குமேற்பட்ட கவிதை நூல்களை எழுதியவர் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பல இடங்களிலும் உள்ள தேவஸ்தானங்களுக்கு திருவூஞ்சல் தோத்திரமாலை, பிள்ளைத்தமிழ், திருப்பள்ளிஎழுச்சி, திருப்புகழ் அநுபூதி, பேரினபக்காதல்- அருளொளிக்கீர்த்தனைகள் தலபுராணங்கள் முதலியன பாடியவர். அரச இந்து சமயக்கலாச்சாரத்திணைக்களத்தால் "சைவநன்மணி" எனக் கௌரவிக்கப்பட்டவர். நல்லூர் தேவஸ்தானம் "அருட்கவி" என்னும் பட்டமிட்டுக் கௌரவித்தது கதாப்பிரசங்கம் பண்ணிசைப்பகுதிகளில் இலங்கை வானொலி முதலாந்தரக் கவிஞராகப்பணியாற்றியவர். சிறந்த ஆசிரிய சேவை ஆற்றியவர். யாழ் இந்து சமய பேரவைத்தலைவருமாவர் இந்த கந்தபுராண வசனகாவியம். இவரது சிறந்த படைப்பா கக்கண்டு மனங்குளிர் கிறோம்.

வெளியீட்டுச்சபை.

நாகேஸ்வரம்,
அளவெட்டி,
28-10-2000.



உ

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| *முகவுரை* | iii |
| *அணிந்துரைகள்* | iv |
| *வெளியீட்டுரை* | xxii |

## *1.உற்பத்தி காண்டம்*

| | | |
|---|---|---|
| 1. | திருக்கைலாசப்படலம் | 7 |
| 2. | பார்ப்பதி படலம் | 7 |
| 3. | மேருப் படலம் | 8 |
| 4. | காமதகனப் படலம் | 8 |
| 5. | மோனநீங்கு படலம் | 9 |
| 6. | தவங்காண் படலம் | 9 |
| 7. | மணம்பேசு படலம் | 10 |
| 8. | வரைபுனை படலம் | 10 |
| 9. | கணங்கள் செல்படலம் | 10 |
| 10. | திருமணப் படலம் | 11 |
| 11. | திருஅவதாரப் படலம் | 12 |
| 12. | துணைவர் வரு படலம் | 13 |
| 13. | சரவணப்படலம் | 14 |
| 14. | திருவிளையாட்டுப்படலம் | 15 |
| 15. | தகரேறு படலம் | 17 |
| 16. | அயனைச்சிறைபுரிபடலம் | 18 |
| 17. | அயனைச்சிறைநீக்கு படலம் | 19 |
| 18. | விடைபெறு படலம் | 20 |
| 19. | படையெழு படலம் | 23 |
| 20. | தாரகனவதைப் படலம் | 23 |
| 21. | தேவகிரிப்படலம் | 28 |
| 22. | அசுரேந்திரன் மகேந்திரம் செல் படலம் | 28 |
| 23. | வழிநடைப் படலம் | 29 |
| 24. | குமாரபுரிப் படலம் | 31 |
| 25. | சுரம்புகு படலம் | 32 |
| 26. | திருச்செந்திப் படலம் | 33 |

## 2. அசுரகாண்டம்


| | பக்கம் |
|---|---|
| 1. மாயைப்படலம் | 34 |
| 2. காசிபன் புலம்புறுபடலம் | 35 |
| 3. அசுரர் தோற்றுப்படலம் | 35 |
| 4. காசிபனுபதேசப்படலம் | 36 |
| 5. மார்க்கண்டேயப்படலம் | 37 |
| 6. மாயைஉபதேசப்படலம் | 45 |
| 7. மாயை நீங்குபடலம் | 46 |
| 8. அசுரர் யாகப்படலம் | 46 |
| 9. வரம்பெறுபடலம் | 49 |
| 10 சுக்கிரனுபதேசப்படலம் | 51 |
| 11. அண்டகோசப்படலம் | 53 |
| 12. திக்குவிசயப்படலம் | 61 |
| 13. எதிர்கொள்படலம் | 64 |
| 14. உருத்திரன் கேள்விப்படலம் | 64 |
| 15. நகர்செல் படலம் | 65 |
| 16. பட்டாபிஷேகப்படலம் | 66 |
| 17. அரசு செய்படலம் | 66 |
| 18. தேவரை ஏவல்கொள்படலம் | 68 |
| 19. புதல்வரைப் பெறுபடலம் | 68 |
| 20. வில்வலன் வாதவிப் படலம் | 69 |
| 21. இந்திரன் கரந்துறைபடலம் | 70 |
| 22. விந்தகிரிப்படலம் | 71 |
| 23. அகத்தியப் படலம் | 72 |
| 24. கிரவுஞ்சப்படலம் | 73 |





| | |
|---|---|
| 25. விந்தம் நிலம்புகு படலம் | 73 |
| 26. வில்வலன் வாதபி வதைப்படலம் | 74 |
| 27. காவிரி நீங்கு படலம் | 74 |
| 28. திருக்குற்றாலப்படலம் | 76 |
| 29. இந்திரன் அர்ச்சனைப்படலம் | 77 |
| 30. தேவர் புலம்புறுபடலம் | 77 |
| 31. அயிராணி சோகப் படலம் | 78 |
| 32. மகா சாத்தாப் படலம் | 78 |
| 33 இந்திரன் கயிலை செல்படலம் | 80 |
| 34. அசமுகிப்படலம் | 81 |
| 35. இந்திராணி மறுதலைப் படலம் | 81 |
| 36. மகாகாளர் வருபடலம் | 81 |
| 37. அசமுகி சோகப்படலம் | 82 |
| 38. இந்திரன் மீட்சிப்படலம் | 82 |
| 39. சூரன் அரசிருக்கைப்படலம் | 82 |
| 40. அசமுகி நகர் காண்படலம் | 83 |
| 41. அசமுகி புலம்புறுபடலம் | 83 |
| 42. சூரன் தண்டம்செய்படலம் | 83 |
| 43. அமரர் சிறைபுகுபடலம் | 84 |


## 3. மகேந்திர காண்டம்


| | |
|---|---|
| 1. வீரவாகு கந்தமாதனம் செல்படலம் | 87 |
| 2. கடல்பாய் படலம் | 87 |
| 3. வீரசிங்கன்வதைப்படலம் | 88 |
| 4. இலங்கை வீழ்படலம் | 88 |
| 5. அதிவீரன் வதைப்படலம் | 88 |
| 6. மகேந்திரம் செல்படலம் | 88 |

7. கயமுகன் வதைப்படலம் 89
8. நகர்புகுபடலம் 89
9. சயந்தன் புலம்புறு படலம் 90
10. சயந்தன் கனவுகாண்படலம் 91
11. வீரவாகு சயந்தனைத் தேற்றுபடலம் 92
12. அவை புகுபடலம் 93
13. சதமுகன் வதைப்படலம் 95
14. காவலாளர் வதைப்படலம் 95
15. நகர் அழிபடலம் 95
16. சகத்திர வாகுகள் வதைப்படலம் 95
17. வச்சிரவாகு வதைப்படலம் 96
18. யாளிமுகன் வதைப்படலம் 96
19. வீரவாகு மீட்சிப்படலம் 97
20. சூரன் நகர்புரி படலம் 97
21. சூரன் அமைச்சியல் படலம் 98

## *4. யுத்தகாண்டம்*

1. ஏமகூடப்படலம் 104
2. வரவு கேள்விப்படலம் 105
3. முதல்நாள் பானுகோபன் யுத்தப்படலம் 105
4. இரண்டாம்நாள் சூரன்மன் யுத்தப்படலம் 108
5. மூன்றாம்நாட் பானு கோபன் யுத்தப்படலம் 115
6. நகர்புகுபடலம் (மூன்றாம் நாள் பிற்பகல்) 116
7. இரணியன் யுத்தப்படலம் 117
8. அக்கினி முகாசுரன் வதைப்படலம் 119
9. மூவரயிரவர் வதைப்படலம் (4ம் நாள் பிற்பகல்) 121
10. தருமகோபன் வதைப்படலம் (நாலாம் நாள் இரவு) 122
11. பானு கோபன் வதைப்படலம் 122



12. சிங்கமுகாசுரன் வதப்படலம் 124
13. சூரபன்மன் வதைப்படலம் 132
(7ம் நாள் தொடக்கம் 10ம் நாள் வரை)
14. தேவர்கள் போற்றுப்படலம் 141
15. இரணியன் புலம்புறுபடலம் 141
16. மீட்சிப்படலம் 142

## *5. தேவகாண்டம்*

1. திருப்பரங் குன்று சேர்படலம் 144
2. தெய்வயானையம்மை திருமணப்படலம் 144
3. விண்குடி யேற்றுபடலம் 147
4. கந்த வெற்புறு படலம் 147
5. இந்திர புரிப்படலம் 148

## *6. தக்ஷகாண்டம்*

1. உபதேசப்படலம் 149
2. தக்கன்தவம் செய்படலம் 151
3. தக்கன் மகப் பெறுபடலம் 152
4. சந்திர சாபப்படலம் 154
5. உமை கயிலை நீங்குபடலம் 156
6. காளிந்திப்படலம் 159
7. உமை தவப்புரி படலம் 159
8. திருமணப்படலம் 160
9. தக்கன் கயிலை செல்படலம் 161
10. பிரமயாகப் படலம் 162
11. சாலை செய்படலம் 163
12. ததீசிப்படலம் 164
13. ததீசி யுத்தரப்படலம் 166

14. கயமுகன் உற்பத்திப்படலம் 174
15. அனந்தன் சாபநீங்குபடலம் 179
16. தானப்படலம் 180
17. வேள்விப்படலம் 181
18. உமை வருபடலம் 181
19. வீரபத்திரப்படலம் 183
20. யாக சங்காரப்படலம் 183
21. அடிமுடி தேடுபடலம் 185
22. தக்கன் சிவபூசை செய்படலம் 187
23. கந்த விரதப்படலம் 188
24. வள்ளியம்மை திருமணப்படலம் 193


உ
சிவமயம்

# கந்தபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

01. *திகட சக்கரச் செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்*

02.. *உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை*
*வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க*
*மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற*
*கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.*

## சுப்பிரமணியர் காப்பு

03. *மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி*
*யேவருந் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி*
*மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்*
*சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி*

## நூற் பயன்

04. *இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினது மேவிச்*
*சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ*
*ரந்தமி லவுணர் துங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்*
*கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.*

## வாழ்த்து

05. *வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்*
*கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க*
*நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.*

உ

# கடவுள்வாழ்த்து

## சிவபெருமான்

1. திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
யுருவந் தனையு முருவத்தையு மன்றி நின்றா
ணொருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்.

2. ஊனாகி யூனு ளுயிரா யுயிர்தோறு மாகி
வானதி யான பொருளாய் மதியாகி வெய்யோன்
றானாகி யாண் பெண் ணுருவாகிச் சராச ரங்க
ளானான் சிவன்மற் றவனீள் கழற்கன்பு செய்வாம்.

## வேறு

3. பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையும்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

4. பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

5. பங்கயன் முகுந்தனாம் பரமென் றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுழி
யங்கவர் வெருவர வங்கி யாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.

6. காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனுமாய் வலிகொள் வான்றொடர்
பூண்பதின் றாய்நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்.

## சிவசக்தி

7. செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.



## விநாயகக் கடவுள்

8. மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## வைரவக் கடவுள்

9. பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

10. வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வாலமாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

## வீரபத்திரக் கடவுள்

11. அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ருடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

## சுப்பிரமணியக் கடவுள்

12. இருப்பரங் குறைத்திடு மெ·க வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

13. சூரலை வாயிடைத் தொலைத்து மார்பு கீண்
டீரலை வாயிடு மெ·க மேந்தியே
வேரலை வாய்தரு வெள்ளிவெற் பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

14. காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
வாவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.

15. நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாம் தலைமை யெய்திய
வேரகத் தறுமுக னடிக ளேத்துவாம்.

16. ஒன்றுதொ றாடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ னூடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்.

17. எழமுதி ரைப்புனத் திறைவி முன்புதன்
கிழமுதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.

18. ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமரகோட் டம்வா
ழாறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.

## திருநந்திதேவர்

19. ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

## திருஞானசம்பந்தர்

20. பண்டைவல் வினையினாற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடும்
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.



## திருநாவுக்கரசு நாயனார்

21. பொய்யுரை நூல்சிவ புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படுந்
துய்ய சொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

22. வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ
னுறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

23. கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தை கொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

## திருத்தொண்டர்கள்

24. அண்டரு நான்முகத் தயனும் யாவருங்
கண்டிட வரியதோர் காட்சிக் கண்ணவா
யெண்டகு சிவனடி யெய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்.

## சரசுவதி

25. தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றவாம்.

திருச்சிற்றம்பலம்

உ

# கந்தபுராணக் கதை

## வசனகாவியம்

### காப்பு

*திகழ் தசக்கரத் செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகடு அசக்கு அரவின் மணியாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.*

### தோத்திரம

*பொன்மருப் பேந்திப் பொருப்பினில் எழுதும்*
*சின்மயக் களிறே திருவடி போற்றி*
*உமை யொரு பாகனாய் ஓங்கிய சிகர*
*இமையத் துறையும் ஈஸ்வரா போற்றி*
*அகில உயிர்க்கும் அன்னை யாகிய*
*பகவதி பார்வதி பவானி போற்றி*
*ஆதியாம் நான்மறை அடக்கிய ஞான*
*கீதையை உரைத்த கிருஷ்ணா போற்றி*
*திருவருள் பொழிந்து சிந்தையி லிருக்கும்*
*முருகா மந்திர முதல்வா போற்றி*
*பொங்கிய வளமெலாம் பொழிந்தெமைப் புரக்கும்*
*செங்கம லாசினிச் செல்வியே போற்றி*
*நாவிலும் மனத்தும் நயந்துநின் றுணர்ந்தெழுங்*
*காவியம் சுரக்கும் கலைமகள் போற்றி*
*பரங்கிரி அலைவாய் பழநி ஏரகம்*
*பரவு குன்றுகள் பழமுதிர் சோலைச்*
*சரவண பவனாய் தவவள்ளி குஞ்சரி*
*மருவும் முருக வரதனே போற்றி*
*அண்டருக் கரிய அரனடி பரவும்*
*தொண்டர்தம் பாதத் துணைமலர் போற்றி*



உ

*சிவமயம்*

# உற்பத்தி காண்டம்

## 1. திருக்கைலாசப் படலம்

*வெள்ளை இடபமும் வெண்ணீறும் போல்*
*தெள்ளிய சிறப்புடைத் திருக்கைலாயத்*
*திருவோலக்க சீர்மண்டபத்துள்*
*கருணைச் செல்வி கௌரி உமையுடன்*
*எம்பெருமானார் இனிது வீற்றிருக்க*
*தும்புரு நாரதர் தோத்தரித் திசைத்தனர்*
*விண்ணவர் முனிவர் மேற்கரம் கூப்பினர்*
*தண்ணளி நந்தி தனிப்பிரம் பேந்தி*
*அடியார் கூட்டம் அணிவகுப் பியற்றினர்*
*துடியார் உமையாள் தோத்தரித் தெழுந்தனள்.*

## 2. பார்ப்பதி படலம்

*"இறைவா நின்னை இகழ்ந்த தக்கனின்*
*கறைதரு பெயரால் கருதிய நாமம்*
*தாட்சா யணியெனும் தனிப்பெயர் நீக்கி*
*மாற்றோர் பெயர்வர வகைசொல்வா" யென*
*இறைவி கேட்க. " இமவான் மகளாய்*
*நறைமலர் மலரும் நலந்தரு பத்மை*
*என்னும் பொய்கையில் இனிய தாமரைப்*
*பொன்னின் மலரில் புகுந்து வளர் " கென*
*திருவாய் மலர சிவஉமா தேவி*
*மருவினாள் . அங்கே வருமலை யரசன்*
*வாரி எடுத்து மனைவி மேனையின்*
*சீரிய கரந்தர தேவியும் குழந்தையைப்*
*பால் கொடுத்தணைத்துப் பார்வதி என்று*
*கோல்வளைக் கரத்தால் குலவி அணைத்து*
*வளர்த்தனள். பார்வதி வயதைந் தானதும்*
*உளத்தினில் நினைந்தே உயர் தவம் முயன்றாள்*
*தண்மலை யரசன் தகுதவச் சாலை*

பண்புற ஆக்கினன். பார்வதி . பரமனை
நெஞ்சினில் நிறுத்தி நிறைதவம் புரிந்தாள்
செஞ்சடைப் பரமனும் திருவுளம் நிறைந்தான்.

## 3.மேருப்படலம்

தினகர னனைய செஞ்சடைக் கடவுளை
சனகர் சனந்தனர் சனாத னர்சனற்
குமாரர் நால்வரும் குழுமிச் சென்று
உமாபதி யேமெய் யுயர்தரு ஞானம்
எத்தகைத் தெனவே உணர்வதை யறியோம்
அத்திறம் எமக்கிங் கருளுக என்றிடக்
கல்லாலின் கீழ் கதிர்சடைப் புண்ணியன்
சொல்லா வகையில் சொல்லிய வண்ணம்
தெட்சணா மூர்த்தியாய்த் திகழ்ந்தனன். விண்ணோர்
துஷ்ட சூரரால் தொல்லைக ளடைந்தனர்
இந்திரன். தன்மனை இந்திரா ணியுடன்
சொந்தச் சுவார்க்கம் துறந்து. துதித்திடும்
மேருவை அடைந்து விமலனைத் தொழுதான்
தாருயர் மைந்தன் சயந்தனும் தேவரும்
சூரரி னாலே துயர்சிறைப் பட்டனர்
காருறு கண்டா கவலையைத் தீரென
“ பேருறு தக்கனின் பெரும்யா கத்தில்
கலந்து கொண்டதனால் கலக்க மடைந்தனை
வலந்தரு குமரன் வருவான் உங்களின்
இன்னல் போக்குவான்” எனஇந் திரற்கு
முன்னிய கைலை முதல்வன் உரைத்தான்
வானவர் கோமான் மகிழ்ந்தவண் நீங்கி
நான்முக னுடனே நாராய ணனிடம்
விபரம் உரைத்து மேவிய அனைவரும்
தவம்புரி உமையைச் சங்கரன் மணம்செய
உபாயம் செய்தனர். உளங்கவர் மதனைச்
சபாபதி யிடம்போய்ச் சரம்விடப் பணித்தனர்
பயந்த காமனை பலாத் காரத்தால்
செயலுறப் பணித்தனன் திருமறை நான்முகன்

## 4. காம தகனப் படலம்

மலரவன் சபித்தால் வருந்தீங் கெனவே
சிலைமதன் தெட்சணச் சிவனை நோக்கி
கயிலையின் மேற்குக் கடையிற் புகுந்தான்



மயங்கினான் எழுந்தான் மலர்க்கணை பொழிந்தான்
கணைமலர் கண்ட கண்ணுதற் கடவுள்
தணல் விழிமலர்ந்தான் சாம்பரானான் மதன்
புலம்பினாள் அழகிற் பொலிரதி தேவி
நலந்தரு நம்பனை நயந்தருள் கேட்டாள்
இரதியே எதற்கும் ஏக்கமு றாதே
பருவத பார்வதிப் பரையை மணந்தபின்
உனது நாயகனையும் உயிர்பெறச் செய்வோம்
எனவாக் குரைத்தனன். அமரரும் பிரமனும்

## 5. மோனநீங்கு படலம்

மீண்டும் வந்து விமலனை வேண்டினர்
ஆண்டவன் வேலன்ன அருள்வோம் என்று
திருவாய் மொழிந்து. திகழயன் மக்கட்கு
“அரிய ஞானம் ஆம்பொருள் சொல்லால்
செப்பரி திதயம் திரண்ட மோனமோ
டிப்படி யிருத்தல் ” எனவருள் சுரந்தனன்.

## 6. தவங்காண் படலம்

சனகர் முதலிய தவத்தினர் அகல
நினைவதற் கரிய நிமலன். பார்வதி
தவமுயர் சாலைத் தனியிடம் நோக்கி
உவமனில் லாத ஒருதனி விருத்தனாய்
செஞ்சடை புரளத் திருவெண் ணீற்றுடன்
அஞ்செழுத் தோதி அசைந்துவந் துற்றனன்
வந்த வேடரை மகிழ்ந்துப சரித்து
வந்த காரியம் உரைக்குக என்று
தோழியர் மூலமாய்த் தோகையாள் பார்வதி
கேள்விகள் கேட்க. கிழவனும் – “ தவத்தின்
தன்மையை இகழ்ந்து சங்கரன் எப்படி
நின்னை மணப்பான். நெடுஞ்சுடு காடு.
தங்குவான் சாம்பல் தலைமயிர் பாம்பு
பொங்கும் நஞ்சு புசிப்பவன் புலித்தோல்
ஆடையன் அவனை அழகுயர் நீயும்
கூடும் திருமணம் கொள்ளுதல் நன்றோ?
என்றனன். அம்பிகை எழுசுடு சினத்துடன்
இன்றிவண் நீங்குதி எனக்கடிந் துரைக்க.
பார்வதி யேஎனைப் பயில்மணம் புரியெனப்
பேர்வளர் தேவியும் பிறிதிடம் பெயர்ந்தாள்.

அன்னவள் தவமும் அருங்கற் புயர்வும்
மன்னிய உலகெலாம் மலர்ந்து கண்டிட
மருவிய கள்வனும் மழவிடை யோனாய்த்
திருவுருக் காட்டித் தேவிக் கருளினர்.

## 7. மணம்பேசு படலம்

அமையும் ஏழு அருந்தவ முனிவர்
இமவானி டத்தே இறையோன் நினைவைக்
கூறலும் மன்னன் குளிர்ந்துளம் மகிழ்ந்துதன்
பேறிது வென்று பெருவர வேற்புடன்
நல்லுரை கூறிட நாயகி மேனையும்
மெல்லக் கலங்கி, விளங்கிய தக்கன்
தலைபோ னதுபோல் தமியேன் தலைவனின்
தலையும் போகுமோ சஞ்சல மிதுவென
முனிவரைக் கேட்க, முக்கணன் அன்புக்
கனியை விரும்புவன் கயவரைக் கடிவான்
அஞ்சாதீர் என அரிவையைத் தேற்றி
நஞ்சார் கண்டனை நண்ணினர் முனிவரர்

## 8. வரை புனைபடலம்

இமவான் சொற்படி இசைதேவ தச்சன்
அமைத் தனன் மண்டபம், அனைத்த மரர்க்கும்
ஓலை போக்கினன், உமையவள் திருமணம்
சாலவும் சிறக்க, சதுர்முகன் திருமால்
இலக்குமி சரஸ்வதி இந்திரை துர்க்கை,
இலைக்கதிர் சூலி எழுநதி மலைகள்
கடல்கள் அரவுகள் கரிகள், யாவரும்
திடமிகு திருமணம் சிறக்கவந் துற்றனர்
மலைக்கோன் வேண்டிட மகாசிவ பெருமான்,
தலைக்குரு நந்தி சகல ஏற்பாடும்

## 9. கணங்கள் செல்படலம்

இனிதே இயற்ற – எல்லாத் தேவரும்
முனிவரும் சூழ– முதுமறை ஏழிசை
தும்புரு நாரதர் துதிதரு விஞ்சையர்
கும்பிட் டிசைக்கக் குண்டோ தரனின்
புயத்தில் திருவடி பொருந்த மிதித்து
நயமார் இடப நன்முது கேறி
மலையிடைத் திருமண மண்டபம் நண்ணினர்



கலைநிறை கணபதி கருதுமைந் நூற்றேழ்
கோடிபூ தங்கள் குலாவமுன் சென்றார்
சூடும் மதிரவி சுடர்க்குடை பிடித்தனர்
முனிவர் திருமால் முளரியோன் முதலாம்
அனைவரும் சூழ ஆண்டவன் எய்த
அகங்குளிர் மன்னன் ஔஷதிப் பிரஸ்த
நகருக் கழைத்து நன்குப சரித்தான்
தேனுவின் பாலால் திருவடி மலரை
மேனா தேவி மிளிரபி ஷேகம்
செய்து மகிழ்ந்தனள் தேவ தேவனார்
செய் மணித் தவிசில் சிரிப்புடன் அமர்ந்தார்.

## 10. திருமணப்படலம்

சிவன் திருமணத்தில் தேவர்கள் ஏனையோர்
குவிந்துகூடியதால் குறித்திடும்தென்பால்
உயர்ந்ததால் ஆங்கே உணர்குறு முனிவனை
நயமிக அனுப்பினன் நமச்சிவா யத்தன்
திருமணக் காட்சியைச் சிறியேன் காணும்
தருண மிழந்தேன் தமியேன் என்று
அகத்தியன் நினைக்க, அனைத்து நிகழ்வும்
மிகத் தெளிவாக மிளிரக் காட்டுவோம்
கவலை விடுகெனக் கண்ணுதலியம்பி
தவக்குறு முனியை தமிழ்ப் பொதிகைக்கு
அனுப்பிய பின்னர் – அயன் சடங்கியற்ற
மனக்களிப்புடனே மண்டலம் குளிர
சுக்கிரன் வியாழன் துணைக்குருக் களாக
மக்களைக் காக்கும் மாது பார்வதியின்
நற்கரம் பற்றி ஞான சங்கரனார்
சிற்பர தத்துவ திருமங்கல நாண்
ஓங்கும் பங்குனி உத்தர நாளில்
பூங்கொடி கழுத்தில் புனைந்தனர் பொலிந்தே
அப்பொழு திரதியின் அன்புறு நாதனை
ஒப்புடன் உயிர்பெற உன்னினான்இறைவன்
வந்தான் மன்மதன் மலரடி பணிந்தான்
எந்தாய் பிழைபொறுத் தெனையாண்டருள் கென
மதனே உன்றன் மனைவியின் கண்களுக்(கு)
இதமாய்த் தெரிவாய் ஏனையோர்க் கருவாய்
வாழ்கென வாழ்த்திமகிழ் மண மக்கள்
வாழ்திருக் கயிலை வந்துவீற்றிருந்தனர்

## 11. திரு அவதாரப்படலம்

சூரரின் துயரால் துடித்த தேவர்கள்
பேரருட் பரமன் பெற்றியை அறிய
வாயுவை அனுப்பினர் வாயுவும் நந்தியின்
ஏயசீற் றத்தால் இடர்ப்பட் டிரங்கி
நந்தியை வணங்கி, நாரணன் பிரமன்
இந்திர னிடம்வந் தெல்லாம் இயம்பினன்
திகைத்த தேவர்கள் திருக்கயிலைக்குள்
அகத்தூய்மையுடன் அருட்குரு நந்தியின்
அனுமதி பெற்றனர். அம்மை அப்பனை
மனம்மெய் வாக்கால் வழிபா டாற்றினர்
அப்பா சிவனே அல்லலைத் தீர்த்திட
ஒப்பாரில்லா உம்மைப் போன்ற
ஒ'ருமகவுதவுக– உமக்கே யடைக்கலம்
என்றுகண் ததும்பிய இமையோர் தம்மை
ஒன்று மஞ்சற்க உதவுவோம் மைந்தனை"
எனவிடை கூறி ஈசானம் முதல்
தனதைம் முகத்துடன் தாங்கும் அதோமுகம்
மன்னிய ஆறு வதன நெற்றியில்
துன்னிய அறுபொறி தோற்றுவித் தருளினார்
தோற்றிய பொறிகளின் சூட்டினால் எல்லாக்
காற்றும் ஓய்ந்தன கடல்கள் வற்றின
பூமி பிளந்து பொலி உயிர் நடுங்கின
ஆயினும் எதற்கும் அல்லல்க ளில்லை
வெப்பம் கண்டு விமலியும் ஓடினாள்
அப்புறம் தேவர்கள் அலறி ஓடினர்
மீண்டும் வந்தனர் விமலனை வேண்டினர்
தூண்டு பொறிகளைச் சுமக்கும் வண்ணம்
வாயுவைப் பணித்தான் மழவிடை யண்ணல்
வாயு சுமக்கும் வலியிழந் தாங்கண்
தேயுபால் கொடுத்தான் தேயுவும் களைத்துப்
பாயுங் கங்கையின் பாலே விடுத்தான்
கங்கையும் வற்றிக் கதிதரும் அமுதம்
பொங்கும் சரவணப் பொய்கையில் விடுத்ததும்
அருவமும் உருவமும் அநாதியும் பலவும்
ஒருவனும் ஆகி ஓங்கிய பிரம்மப்
பரம் பொருள் அறுமுகம் பன்னிரு கரங்கள்
இருதிரு வடிமலர் இசைந்த முருகன்
தீப்பொறி மாறிச் செம்பொற் கமலப்



பூத்தவி சின்மேல் பொலிதர இருந்தனன்
திருமால் முதலியோர் திகழும் கார்த்திகை
அருள்மா தறுவரை அழைத் திவனுக்குப்
பாலூட் டுகவென, பாவையர் தயங்கினர்
தாலாட் டுவக்கும் சரவண பவனும்
குழந்தைகள் ஆறுருக் கோலமாய்ப் பிரிந்தனன்
பொழிந்தபா லூட்டிப் பூவையர் மகிழ,
ஆடுவான் ஒருவன் ஆனந்த மாகப்
பாடுவான் ஒருவன் பாடிப் பாடி
ஓடுவான் ஒருவன் ஒளிக்கும் ஒருவனைத்
தேடுவான் ஒருவனாய்ச் சிவமகன் திகழ்ந்தான்

## 12. துணைவர் வருபடலம்

வெம்மைகண் டோடிய வேதநா யகிஉமை
அம்மை வந்தனள் அறிந்தனள் நிகழ்ச்சியை
தான் பெற வேண்டிய தனயனைச் சங்கரன்
தான் பெறச் செய்தமை சாற்றிடும் தேவர்கள்
விரகிது எனவே வெகுசின மடைந்து
சுரரின் பெண்கள் சுதர்களைப் பெறாமல்
சாபம் கொடுத்துச் சங்கரன் வாம
பாகத் தினிதே பயின்றருள் புரிந்தாள்.
ஓடிய உமையின் ஒலியடிச் சிலம்புகள்
ஆடிச் சிதறிய அருநவ மணிகள்
உமையின் வடிவின் உருவ மங்கையராய்
அமைவதைக் கண்டான் அரகர சிவனும்.
சிவன்பார் வையினால் தெரிவையர் கருவுற
புவன பராபரி பொங்குசீற் றத்துடன்
இக்கரு வுடன்நெடுங் காலந்துயர் பெறுகென
அக்கணம் சபிக்க அயிர்த்தனர் மங்கையர்
நடுங்கிய வேளை நனைந்த வியர்வையில்
தொடுந்திறல் வீரர் தோற்றினர் இலட்சம்
படைவீர ராகப் பால முருகனுக்
குடையீர் நீவிரென் றுரைத்தனன் பரமன்
கருவோடிருந்த கன்னிஒன் பதின்மரும்
பரமன் பார்வதி பதமலர் வேண்டினர்
சிவபெருமானின் திருவுளப்படியே
சிவசக்தி உமையாள் திருவாய் மொழிய
நந்தி கணத்தவர் நற்கரு வுற்று
வெந்திறற் காளைப் பரு வம்வரைக்கும்

வளர்ந்த குழந்தைகள், மாணிக்க வல்லிபால்
விளங்கு நன்மைந்தன் வீர வாகு, பொன்
முத்து வல்லிபால் மொழிவீ ரகேசரி
புஷ்ப வல்லிபால் புகழ்வீர மகேந்திரர்
கோமே தகிபால் குளிர்வீ ரமகேச்சுரர்
வைடூரி யத்தள்பால் வயவீர புரந்தரர்
வைரவல்லிபால் மகாவீர ராக்கதர்
மரகத வல்லி பால் வீரமார்த் தாண்டர்.
பவள வல்லிபால் பயில்வீராந்தகர்
இந்ர நீலத்திடம் எழில் வீரதீரர்
ஆகிய வீரர்கள் அன்னையர் உந்திநின்(று)
ஆதி யயன்போல் அவதரித்தார்கள்
இறைவன், இம்மக்கள் எம்மக்க ளென
இறைவி திருவருள் இனிது பாலித்தாள்
தனித்தனி சுடர்வாள் சங்கரன் கொடுத்து
இனித்த மக்களே இலட்சவீ ரரினுடன்
சுந்தர முருகனின் சோதர ராகச்
சந்ததம் வாழ்கெனச் சங்கரன் சாற்றினான்

## 13 சரவணப்படலம்

சரவணப் பொய்கையில் தவழும் முருகனை
இருவரும் அன்பாய் எடுத்து வருவோம்
எனமொழிந் திறைவன் இடபவா கனத்தில்
தனதுமை யுடனே சரவணம் வந்தனர்
பார்வதி யம்மை பாலர் அறுவரைச்
சேர்தர அணைத்தாள், செனித்த போதுதித்த
பன்னிரு கரமும் பாதமிரண்டும்
முன்னிய முகங்கள் மூவிரண்டு மாய்க்
கந்தன் என்னும் கவினார் பெயருடன்
மைந்தன் விளங்கினான், மாதா, மகனின்
உச்சி மோந்தனள் உயர்முலைப் பால் கொடுத்
தச் சிவன் மடிதர அப்பனும் வாழ்த்தினன்
சோம சேகரன் சுந்தரி உமைநடுச்
சோமாஸ் கந்தனாய்ச் சுதன் வீற்றிருந்தான்
அருமுலை யூட்டிய அன்னையர் கார்த்திகை
திருமிகு தாயரைச் சிவனார் நோக்கி
மாதர்காள் நீவிர்எம் மைந்தனை வளர்த்தீர்
ஆதலால் அன்னான் அருட்கார்த் திகேயன்



ஆய நும்பெயரால் அழைக்கப்படுவான்
ஏயநும் நாளில் எவர்நோன் பிருப்பினும்
கூடும் வரங்கள் கொடுப்போம் – முடிவில்
வீடும் கொடுப்போம் , விண்ணிலே வாழ்கென
ஞானவாக் களித்தான், இதந்தரு சரவணச்
சுனையில் உமையாள் சுரந்தபால் கலக்க
தந்தை பராசரர் சாபத்தாலே
வந்த மீனுருவ மைந்தர் அறுவரும்
பருகினர் உடனே பழம்வடி வெய்திப்
பரமனை வேண்டினர், பரங்கிரி சென்று
தவம்புரிந்திடுக சண்முகன் வருவான்
செவிகுளிர் ஞானம் செப்புவான் செல்கென,
ஐயன் பகர அறுவரும் அகன்றனர்
கைகுவித்தமரரும் கருணைபெற் றேகினர்.

## 14. திருவிளையாட்டுப் படலம்

திருவடித் தண்டையும் சிலம்பும் கழலும்
மருவு சதங்கையும் வளர்அரை ஞாணும்
செவிக்குண் டலங்களும் திண்மார் பினிலே
உவமனில் மதாணியும் ஒளிகிளர் நெற்றியில்
வீரப்பட் டிகையும் விளங்கக் குமரன்
நீரெழு தடாக நிறைமலர்ச் சோலைகள்
குன்றுகள் கடல்கள் குலவிடு மிடமெல்லாம்,
ஒன்றிய முனிவராய் ஒருமுக முருகனாய்
யானைகள் குதிரைகள் யாளிகள் ஆடுகள்
ஏனைய வாகனம் எல்லாம் உடையனாய்
ஊது குழலனாய் ஒலிமணி யுடனே
கீதம் பாடும் கிளரிசை யாளனாய்.
பற்பல உருவில் பற்பல ஆடல்கள்
பொற்புயர் நிகழ்ச்சிகள் புரிவதைக் கண்டு
உமையவள் இறைவனை உவந்து நோக்கி
"குமரன் சிறுவன் குறிக்கொணா ஆடல்கள்
புரிகிறான் இவன்தன் புகழினைக் கூறுக"
பரிவுட னிவ்வணம் பகர்தலும், சடையோன்.
"அம்மையே, யானே அறுமுக னானேன்
நும்மையே போல்வுன் யாண்டும் நிற்பான்,
போதமும் வீடும் போற்றினர்க் கருள்வான்
நாதவிந் துகலை ஞானபண் டிதனவன்
அயனைக் குட்டி ஐந்தொழில் புரிவன்

துயரிடு சூரரின் தொடர்குல மழிப்பன்
விண்ணவர் வாழ்வை மேலுறச் செய்வன்
தண்ணருள் முருகனின் சால்பிவை காணுதி:
கங்கைதாங் கியதால் காங்கே யனென
தங்கிய பொய்கையால் சரவண பவனென
கன்னியர் அறுவரால் கார்த்திகே யனென
அன்னைநீ அணைத்ததால் அருட்கந் தனென
ஏத்துபல் லாயிரம் இலட்ச நாமங்களால்
தோத்தரிக்கப்படும் சுந்தரன் இவனே!
தாரகப் பிரம்மம் சாற்றுமா றெழுத்தும்
சீருறு முருகனின் திவ்விய மந்திரம்
இவற்றினைக் கேட்ட எம்பெருமாட்டி
சிவத்துடன் மகிழ்ந்து தெளிந்துவீற் றிருந்தார்.
குமரக் கடவுள் குலமலை குவிப்பார்
அமர்த்துவார் நிமிர்த்துவார் –அலைகடல் ஒன்றாய்
ஆக்குவார், கங்கையால் அழல்வட முகத்தைப்
போக்கித் தணிப்பார் பொலிமதி–ரவியிடம்
சேர்ப்பது முதலிய திருவிளையாட்டால்
பார்ப்பவர் வியக்க பயின்றனர் குழந்தையாய்
ஆண்டவன் செயலை அட்டமா திசையோர்
நீண்ட செங் கதிரோன் நிறைமதி யாவரும்
கண்டு திகைத்து கனகமா மேருபால்
அண்டி வந்திருக்கும் அமரர் பதியுடன்
நான்முக னாரிடம் நண்ணினர், அங்கே
பான்மலி குழந்தைப் பன்னிருகையன்
ஒருமுகத் துடனே உலாவினன் இனிதே
வருமம ரர்கள் மயக்குறு வண்ணம்
மேருவை அசைத்தார் மிகுகொடு முடிகளை
வேருடன் பறித்து வீசிக்குவித்தார்.
எம்மிறை முருகனை இந்திரன் எதிர்த்தான்
தம்முயர் யானைமேல் தாவிவீற் றிருந்தான்
அவன்விடும் படைகள் அலர்ந்தன மலராய்
கவினுறு குலிசம் கடுந்துக ளானது
அயிரா வதமும் ஆருயிர் துறந்தது
வியலுறு கணையை விட்டான் முருகன்
இந்திரன் வருணன் இயமன் கதிரவன்
வெந்து மடிய விளையாட் டியற்றினன்
நடந்த செயலை நாரதர் கண்டனர்
அடைந்தார் வியாழ அருட்குரு நாதர்பால்
எல்லா முரைத்தார் எழுந்தார் குருவும்



சொல்லால் மனத்தால் சுருதியால் உரைப்பதற்
கரிய முருகனை அஞ்சலி செய்தார்
பிரணவப் பொருளே பிறைசூ டிமைந்தா
இந்திரன் முதலோர், எந்தையே! தேவரீர்
வந்ததை அறியார், மயக்கமுற் றலைந்தனர்,
அந்தரர் வாழ்வை அருள வந்தவரே
தந்த தவறெலாம் சண்முகா பொறுப்பாய்
எனநின் றிரங்கி ஏத்தினார் வியாழன்.
மனங்குளிர்ந் தையன் வானவர் எல்லாம்
உயிர் பெற வைத்தார் ஓம் முருகாவென
நயமிகு கந்தன் நற்றாள் பணிந்தனர்
அருளா ரமுதே அடியோம் பிழைபொறுத்
தருள்வாய் என்றனர் அறுமுகன் சிரித்தான்
வானவர் தம்மை மயிலோன் பார்த்தார்
நானொரு குழந்தையாய் நடித்தேன், நீங்கள்
என்பெரு வலிமையை எதிர்த்தறி யும்படி
முன்பல ஆடல்கள் முயன்று காட்டினேன்
விண்பொலி எனது விசுவரூ பத்தைக்
கண்கொடு காணுக காட்டுதும் எனவே
அண்டம் நிறைந்திட அறுமுகன் வடிவம்
கொண்டு காட்டிடக் குமரா நின்னெழில்
காணும் கண்களைக் கடையேம் பெற்றிடப்
பூணும் கருணை புரிகென வானவர்
வேண்டிடக் குமரன் விழிகொடுத்தமரர்
நீண்ட களிப்புற நின்றனர், இந்திரன்
இரந்த வண்ணம் இமய மேருவைக்
கரந்து பிறிதிடம் கந்தன் தங்கினான்
சுரர்குல மெல்லாம் தொழுது குளிர்ந்தபின்,
உரவுறு இலக்கத் தொன்பது சோதரர்
சூழ்ந்திடக் கயிலைத் தொல்பதி யமர்ந்தனன்
வாழ்ந்து தேவர் வழிபாடியற்றிய
கற்பக வெற்பு கந்த வெற்பென்று.
பொற்பெயர் பெற்றது புண்ணியர் தொழவே

## 15. தகரேறுபடலம்

புவியின் கண்ணே புனித ஓர் யாகம்
சிவனுக் கென்றே செய்தனர் நாரதர்

வேள்வியக் கினியில் வீரத் துடனே
தாளொடுத் தோடும் சாற்றொணாத் தோற்றத்
தாட்டுக் கடாவொன் றங்கெழுந் தோடி
அனைவரும் வெருவுற ஆயஎவ் வுலகும்
சினமுடன் திரிந்து தீமைகள் புரிந்தது
கயிலைக் கேகக் கனியாழ் நாரதர்
அயலுறு முனிவர்கள் அயர்ந்து நின்றனர்.
எதிரில் கந்தனும் இலட்சத்தொன்பது
மதிதரு வீரரும் மகிழ்வுட னாடுதல்
கண்டனர், தம்துயர் கழறினர் துதித்தனர்
வண்டுறை கடம்பன் மாமுனிக்குழுவை
அஞ்சேல் எனவே ஆறுதல் கூறி
விஞ்சிய விறல்மிகு வீரவாகுவை
அனுப்பினர் அவர்போய் – அயனுலகத்தில்
தொனித்திடு கடாவின் சுடர்க்கொம்புகளில்
பிடித்து வந்தனர், பெரும்பரம் பொருளே
துடித்திடு கடாவை சுகவாகனமாய்
சாற்றிடும் சராசரம் தண்ணளி செழிக்க
ஏற்றருள் வீரென இறைஞ்சி நாரதரும்
முனிவரும் வேண்டிட முருகப் பெருமான்
மனமுவந் தேற்று மகிழ்ந்தருள் பொழிந்தான்

## 16. அயனைச் சிறைபுரி படலம்

முந்துறு கயிலை முதல்வனைத் தினமும்
வந்து வணங்கும் வானவர் முனிவர்
கந்தன் பதமும் கருத்துமெய் வாக்கால்
சந்ததம் பணிகுவர், சதுர்முகன் ஆண்டை
எம்பிரான் முருகனை எண்ணான் ஏத்தான்
செம்பொருட் சிவனெனத் தெளியா தவனாய்
ஏகுதல் கண்ட எம்மிறை முருகன்,
வேகமாய் அழைத்து வினவினான் பற்பல,
இருக்கினை ஓதென, இயம்பலுற் றானயன்
பெருக்குயர் ஓம் எனும் பிரணவ மந்திரம்
புகன்ற போதப் பொருள் புகலென்றனன்
அகண்ட பூரண னாகிய கந்தன்.
அயனும் பொருளை அறியா னாகி
நயனம் விழித்து நடுங்கி நிற்கையில்,
பிரணவப் பொருளைப் பேசாப் பிரம்மனே
சராசரம் படைக்கும் தன்மை எத் தகையென



சண்முகன் வினவி சதுர்முகன் தலையில்
மண்விழக்குட்டி மலர்ப்பதத் தாலுதைந்
தெண்ணுறு கந்தவெற் பினில்சிறை வைத்தனன்
எண்ணரும் இருவினை இயற்றிடும் மேலாம்
படைப்புத் தொழிலைப் பன்னிரு கையன்
கடைப்பிடித் துயிரெலாம் கனிவுறக் காத்தான்

## 17. அயனைச் சிறைநீக்கு படலம்

சிருட்டிக் கடவுளைச் சிறைமீட் டெடுக்க,
திருமால் முனிவரர் தேவர்கள் குழுமி,
நந்திதே வரின்பால் நல்விடை பெற்று
எந்தை சிவன்பால் எல்லாம் இயம்பினர்
பிரமன் சிறையின் பெருந்துயர் மீளக்
கருணையங் கடலே கண்ணருள் செய்குவாய்
என்று நின்று இமையவர் வேண்டிடக்
கொன்றைச் சடையோன் குருநந் தியைப் போய்
முருகனைக் கண்டு முளரியோன் சிறைமீட்
டருளெனக் கேளென் றனுப்பினான் ஆங்கண்
குழந்தைக் கந்தனைப் குருநந்தி பணிந்தரன்
மொழிந்ததை மொழிந்தனன் முருகனும் வெகுண்டு
பிரமனைச் சிறைவிடேன் பெயர்த்து நீ நிற்பையேல்
வருசிறை யுனையும் வைப்பேன் என்றான்
கைதொழு தேத்திக் கலங்கிய நந்தி
கைலேசன் பால் கடுகிச் சென்று
நடந்ததை உரைத்தனர் நம்பனும் நகைத்து
திடந்தரு மெருதில் சிவமகனாரிடம்
வந்தான், தந்தையை, வணங்கினான் முருகன்
கந்தா அயனைக் கடும்சிறை நீக்கி .
நல்லருள் செய்கென நக்க னுரைக்க ,
சொல்லரும் பிரணவச் சொற்பொருளறியான்
ஆணவம் அடங்கான், அறவுரை தெளியான்
பேணும் படைப்புப் பெருந்தொழில் புரியும்
அருகதை யற்ற அயனைச் சிறை விடேன்
முருகனிவ்விதம் மொழிவது கேட்டு,
சிவபெருமானும் சிறிய சினத்துடன்
கவலை ததும்ப கருணைக் கந்தா,
நந்தியை அனுப்பினேன், நானுமே நேரில்
வந்து கேட்டேன் மறுத்து நிற்கின்றாய்,
பித்துனக் கடுமா? என்றரன் கேட்க,

பூத நாயகனே புண்ணிய தந்தையே
தங்கள் சொற்படி சதுர்முகன் தன்னை
இங்கு சிறைவிடுத் தேனெனக் கந்தன்
தந்தையின் தாளிணை ஏத்தி நிற்கையில்
"முந்து பிரணவ முதுபொருள் யாதென
நீ புகல் வாயோ. நிகழ்த்து வாயெனக்கென.
ஆ பயில் அப்பனும் அன்பாய்க் கேட்டனன்
செவிசாய்த் துநின்ற சிவனார்க் குயர்பிர
ணவத்தின் பொருளை நயந்திர கசியத்
துரைத்தனன் முருகன் உவந்தனன் பரமன்
தரித்திடு கந்த சைலத் தறுமுகன்
வீற்றிருந் தருள. விரிஞ்சன் முருகனைப்
போற்றிப் பணிந்து புகழ்ந்து விடைபெற்
றேகினன் தம்மிடம் எந்தை சிவனும்
மாகக் கைலை மலைவந் தமர்ந்தார்.

## 18. விடைபெறுபடலம்

அரிதரு மக்கள் அமிர்த வல்லியும்
சுரும்பமர் குழலி சுந்தர வல்லியும்
இமயமலைப் பாங் கிலங்கிய சரவணத்
தமர்ந்து தவஞ்செய் தறுமுக முருகனைத்
திருமணம் செய்யத் திருவுளம் பற்றினர்
முருகனும் தோன்றி முகுந்தன் மக்களே.
அமிர்த வல்லி அயிரா வதத்தால்
அமரன் இந்திரன் அணைத்து வளர்க்கும்
குஞ்சரி ஆகுக. குணச் சிவமுனிவரின்
நெஞ்சுவந் தீர்த்த நிறைமான் மகளாய்ச்
சுந்தர வல்லி செகத்துறு வேடரின்
செந்தினை காக்கும் செழுங்குறப் பெண்ணென
வருக. நாமே மணம் புரிந்திடுவோம்
புரியும் தவமினிப் போதுமென் றுரைத்து
அண்ணல் மறைந்தான் அமிர்தவல்லி
எண்ணுறு சிறுமியாய் இந்திரனிடம் போய்
சிறியேன் உன்னுடன் செனித்த உபேந்திரன்
அறிவுறு புதல்வி ஆதலால் என்னை நீ
வளர்த்திடு வாயென வச்சிரா யுதனும்
அழைத்தனன் அங்கே ஐரா வதத்தை
இந்தக் குழந்தையை எடுத்துச் சென்று
மந்திர விதியால் வளர்ப்பாய் என்ன.



பெருங்களி றவளைப் பிடரியிற் சுமந்து
அருங்கொடை மனோவதி அடைந்து வளர்த்தது.
தொண்டை மண்டலத்தே தொடர்வள் ளிமலை
அண்டிய தலத்தில் அருட்சிவ முனிவரின்
துதிமிகு மகளாய்ச் சுந்தர வல்லி
மதிதரு நோக்கில் மாநிலம் வந்தாள்

### தேவர்கள் வரம் வேண்டல்

கன்னியர் களுக்குக் கனிவரம் தந்தபின்.
பன்னிரு கையன் படர்கந் தவெற்பைவிட்(டு)
அன்னை பிதாவுடன் ஆதிக் கைலையில்
முன்னிய கருணை முதல்வனாய் இருக்கையில்
இந்திர னாதியோர் எழிற்பிரம் பேந்தும்
நந்தியைப் பணிந்து நவில்விடை பெற்று
சிவனை அடைந்தனர் சித்தங் கலங்கிய
கவலையோ டிந்திரன் கைகூப் பிநின்று
பரமபிதாவே பலயுகங் களாக
மருவிய அசுரரால் வருத்த மடைந்தோம்.
தமியேன் மைந்தன் சயந்தனும் தேவரும்
அமர(ர்) உலகத் தரம்பையர் யாவரும்
வலிய சூரனின் மகேந்திர புரியில்
நலியும் சிறையில் நடுங்கு கின்றனர்
நின்றன் குமாரன் நேரே வந்தும்
துன்றிய அசுரரின் தொல்லைகள் கூடி
அலைகின் றோமே அப்பா அருள்கென
குலமுறு தேவ கோமான் இரந்தான்
அவ்வா றயனும் அரியும் வேண்டினர்
செவ்வா னுருவில் திகழும் செஞ்சடைப்
புண்ணியன் புன்னகை புரிந்து தேவரின்
வண்ணமிசைந்து வாக்களித் தனுப்பினன்
தன்முன் நின்ற தனயனை நோக்கி
என்மக னேநீ இராட் சதர் குலத்தை
அழித்துத் தேவரின் அருஞ்சிறை வெட்டி

வழிப்படி இந்திரன் வாழ்வரசளித்து
வருவாய் என்று வள்ளல் முருகனை
திருவாய் மலர்ந்தனர் சேயும் இசைந்தான்

***

பாரினை அலைத்துப் பல்லுயிர் தமக்குப்
பருவரல் செய்து விண்ணவர்தம்
ஊரினை முருக்கித் தீமையே இயற்றி
உலப்புறா வன்மை கொண்டுற்ற
சூரனை அவுணர் குழுவொடுந் தடிந்து
சுருதியின் நெறிநிறீ மகவான்
பேரரசு அளித்துச் சுரர்துயர் அகற்றிப்
பெயர்தி என் றனன் எந்தை பெருமான். (க)

***

பரம உருத்திரர் பதினொரு வரையும்
விரைவுத் தோமரம் விண்ணுயர் கொடிவாள்
அம்பு குலிசம் அங்குசம் தண்டம்
அம்புயம் வில்மழு அடிமணி ஆகிய
படைக் கலமாகவும், பஞ்சபூ தங்களை,
தடுக்கு முயிர்களை, தாக்கி யழித்திட
வல்லதும், இனிய வரங்களைக் கொடுப்பதும்
சொல்லொணா ஞானச் சுடர்வடி வானதும்
ஆயவேல் ஒன்றையும் அப்பன், மைந்தன்
நேயக் கரங்களில் நிறைவாய் உதவி
இலக்கத் தொன்பான் இளையோருடனே,
பலப்பல படைக்கணம் பயில் துணையாகவும்
அண்டா பரணன் அருட்குரு நந்தி
சண்டன் உக்கிரன் சாற்றுதீக் கண்ணன்
சிங்கன் முதலிய திறற்கண நாதரைச்
செங்கரக் கந்தனின் சேனாதி பராய்
மேவிரண்டாயிரம் வெள்ளம்பூ தங்களும்
தாவும் சமரிடத் தந்தனன் சங்கரன்



ஐந்துபூ தங்கள் அயனாதியரின்
முந்துறும் ஆற்றல் முழுவதும் கொண்டதும்
இலட்சம் குதிரைகள் இணைக்கப் பெற்றதும்
வெலும்மனோ வேக விரைவினை உடையதும்
ஆகிய தேரையும் அளித்தான் பரமன்
தோகை மயிலுடைச் சுப்பிரமணியன்
மாதா பிதாவை வணங்கினான் மும்முறை
பாதா ரவிந்தம் பரவித் துதித்தான்
சிவனும் உமையும் செல்வனைத் தூக்கி
உவகை ததும்ப உச்சிமோந் தசுரரை
அழித்து, வெற்றி அலங்கல் புனைந்து
செழித்த வீரனாய்ச் சிறப்புடன் வருக
என்றாசி கூறி இந்திரன் அயன்மால்
ஒன்றிய சுரரை உடன்செல் லப்பணித்தனன்
தினகரர் கோடி சேர்ந்த செவ்வதனப்
புனைமுடி முருகன் போருக் கெழுந்தான்.

## 19. படையெழு படலம்

மாதவன் சொற்படி வாயு நாயகன்
ஓதிடும் நாற்பத் தொன்பான் வாயுவும்
சூழ்ந்து வந்திடச் சுந்தரத் தேரைத்
தாழ்ந்து வணங்கிச் சண்முக வேளை
அமரச் செய்தனன், ஆய இரண்டாயிரம்
விமலப் பூத வெள்ளத்துடனே
நூற்றெட் டதிபர் நுவலணி வகுக்க
சாற்றும் பேரிகை தண்ணுமை பம்பை
எக்கா ளத்துடன் இசைமழை சொரிய
நக்கன் மைந்தன் நானிலம் புக்கான்.

## 20. தாரகன் வதைப் படலம்

சீரயில் முருகன் செல்லும் வழியில்
தாரகன் உறையும் தனிக்கிர வுஞ்ச
மலையினைக் கண்டான்– வானவர் கலங்கினர்
கலைமுனி நாரதர் கடுகியாங் குற்றார்

முருகனைப் போற்றி மொழிந்தனர் இம்மலை
தருமுனி அகத்தியர் சாபம் பெற்றது
வருவோர்க் கெல்லாம் வழிநிலை மாற்றி
அழிக்கும் மாயம் அனைத்தும் கொண்டது
பழிக்கும் தாரகன் பதிமா யாபுரி
அணித்தாய் கொண்டனன் அமரில், திருமால்
அணிசக்கரத்தை அபகரித்துத் தன்
மார்பினில் கொண்டான் மதகரி முகத்தான்
போரிட்டிவனுயிர் போக்கினால் சூரனை
வெல்லுவதெளிது வேல் முருகா என,
நல்ல முனிவரின் நயப்புரை கேட்டு,
வயந்தரு வீர வாகுவை நோக்கி
புயந்தரு தம்பியர் பூதர்க ளுடனே
சென்று தாரகன் சிரங்கொய் வாயென
அன்றே யெழுந்தான் அடல்வீர வாகு.
அண்ணல் முருகனை அடிபணிந் தாயிரம்
எண்ணுயர் பூதர்கள் இணங்கிச் சூழ்ந்திட
தேவதச் சன்தரு சித்திரத் தேரில்
மேவுமா யாபுரி விரைந்து புகுந்தனர்
ஆண்டவன் முருகன் அமரர்களுடனே
வேண்டிய ஆயிரம் வெள்ளம் சூழ்தர
மாண்புறு வீர வாகுவின் பின்னே
சேண்பயில் வேலுடன் சென்றனர் அணிகொள
வந்திடும் வீர வாகுவின் வீரர்கள்
முந்திடும் அசுரரை முட்டி அழித்தனர்
மாயா புரியை வளைத்துநிற் கின்றனர்
ஏயஇந் நிகழ்ச்சியை ஏகிய தூதர்கள்
தாரகன் இடத்தே சாற்றினர் உடனே
வீர அசுரரை விரைந் தழைத்திடுமின்
பொங்கு தீயினால் புல்லெரித் ததுபோல்
தாங்கும் தேவரைச் சமரிட்டழிப்பேன்
என்றனன் தாரகன் இவுளிகள் யானைகள்
துன்றிய தேர்கள் தொடரசு ரப்படை
போரிடத் தொடங்கினர் – புரண்டன பிணங்கள்
கோர அசுரரின் குருதியா றானது
பூதர்கள் சிலரும் பூமியிற் சரிந்தனர்
தீதுறு தாரகன் தேரைவிட் டிறங்கினான்
தன்கை யிருந்த தண்டத்தாலே
வன்பூ தர்களை வதைத்துக் கொன்றான்



இலக்கவீரர் எய்தனர் பல்கணை
அலக்க ணின்றி அசுரன் நின்றான்
தெய்வப் படைகளால் தீங்கில்லாமல்
பொய்வரு மாயம் புரியும் தாரகன்
வைரத் தண்டால் மன்னு தேர்ப்படைகளைக்
கையை நீட்டிக் கடலிடை வீசினான்
விரவிய இலக்க வீரரும் இனிதே
கரைவந்தேறினர், கனற்சினத் துடனே
வீரகேசரி வேலனை நினத்துக்
கூரிய நூறு கொடுங்கணை ஏவி
தாரகன் முடியைத் தள்ளி வீசினான்
வீரிய தண்டை வீசினான் தாரகன்
வந்த தண்டு மார்பில் பட்டதும்
நொந்து மயங்கினார் நுவல்புகழ்க் கேசரி
மருவிய வீர வாகு தேவர்
சரம்விட் டசுரனின் சாபம் முறித்தார்.
வெங்கணை விட்டு வீரவாகுவை
மங்க மயக்கினான் – மற்றைய எழுவரும்
தோற்றமை கண்டு, தனிவீர வாகு
சாற்றரும் வலிய சமரிடத் தாரகன்
மாய வடிவம் வகைவகை எடுத்தான்
கூவினர் அசுரர்கள் குணலை யாடினர்.
வீரவாகுவும் வீரபத்திரனின்
நேரிய படையை நினைந்து தூக்கினர்.
அஞ்சினான் தாரகன் அசல மானகிர
வுஞ்சக் குகையுள் ஓடி ஒளித்தான்
வீரவாகுவும் விரட்டி உட்புகுந்து
ஓர்வழியறியா துணர்வு மயங்கினர்
மற்றைய வீரரும், வாகுவைத் தேடி
பற்றிருட் குகையுட் பயின்று மயங்கினர்
அந்நிலை கண்ட அசுரன் தாரகன்
முன்னி எழுந்தான் முழங்கிய பூதரைக்
கணைவிட் டோட்டினான் களிப் பொடுநின்றான்
பணிமுனி நாரதர் பன்னிரு கையர் பால்
சென்று வணங்கினார் சிரக்கிர வுஞ்சத்
துன்று மாயாவிருள் சூழ்ந்த வீரரின்
நிலைமையைச் சொன்னார் நெடுவடி வேலவன்
"நலமிக நாமே நண்ணிச் சமரிட்
டசுரரும் மலையும் அழித்து வீரரெம்
வசமுறச் செய்து வயம்பெறுவோ" மென,

தருமொழி உரைத்துச் சண்முகநாதன்
மிகுவே கத்துடன் விண்வழியாக
பூதலம் வந்தான் பூதர்கள் சூழ்ந்திட
ஆதி முருகன் அறுபோர் தொடர்ந்தான்
பூதரும் அசுரரும் பொருதனர் கடிதே
பூதர பற்பலர் போரினில் இறந்தனர்
அசுரர் பற்பலர் அலமந் தோட
விசைகொடு கொன்றனர் விண்ணவர் படைகள்
வடிவே லவன்முன் வந்தான் தாரகன்
அடிமுதல் முடிவரை அழகினைப் பார்த்தான்

முழுமதி அன்ன ஆறு
முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீராறும்
அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியுங் கண்டான்
அவன்தவம் செப்பற் பாற்றோ (க)

கண்டனன் கந்தனின் கவின்தனை நயந்தான்
பண்டு தான் பெற்ற பலவரம் நினைந்தான்
முருகனைப் பார்த்து , " முருகா- கேட்பாய்
திருமாலுக்கும் தேவேந்திரற்கும்
அயனுக்கு மன்றி, அரனிடம் போரிடும்
முயற்சி எனக்கிலை, முடுகிநீ என்னிடம்
சமரிட வந்த தகைமை எது சொல்"
இவ்விதம் வினவலும் - எம்பெருந் தந்தை
செவ்விதே தேவரின் சிறையை மீட்கவும்
உங்கள் குலத்தை ஒழிக்கவும் என்னை
இங்கே அனுப்பினர் இப்பெரு மலையும்
நீயும் என்றன் நெடு வேலாலே
ஆய ஓர்கணத் தழிவீர் என்றலும்
தாரகன் சினந்தான் தனுஒலி செய்தான்
சீரணி முருகனும் சிலைநாண் ஒலித்தனர்
நான்முகன் முதலோர் நடுங்கிக் கலங்கினர்
அசுரன் கணைகள் ஆயிரம் விடுப்ப
பசுபதி மைந்தன் பயில் ஒரு கணையால்
அவன்வில் ஒடித்தார். அவனும் ஆயிரம்



திவர்கணை விட்டுத் தேர்க்கொடி அறுத்தான்
எம்பெருமானும் எண்கணை ஏவி
கம்பித அசுரனின் கடுசிலை முறித்து,
சேனையும் தலைவரும் சிதறக் கொன்றார்
ஏனைய அசுரரை இடம்விட் டோட்டினார்
மயங்கி எழுந்த வல்ல தாரகன்
வயங்கொள்தேவ வன்படை விட்டான்
தேவப்படையும் திருமால் மருகனை
மேவிப்போற்றி வியந்து நின்றது
இவனை வெல்லுதல் இயலா தெனவே
சிவன் படைக் கலத்தைச் செலுத்தினான் தாரகன்
அதனை ஆண்டவன் அங்கையில் பற்றினான்
மதமிகு மசுரன் மாயப் போரிடக்
கிரவுஞ்ச மலையைக் கிட்டினான் - மலைமுப்
புரமென நிற்கவும். புரமூ. வசுரராய்
முகில்களாய் மலைவர முழங்கு இடியாகியும்
மகிமைச் சக்கர வாளக் கிரிசூழ்
தோயிருளாய்வர பூதங்களாகியும்
வாயு வாய்மலைவர வருமக் கினியுமாய்
அனலாய் மலைவர ஆயிரங்கோடி
தினகர ராகவும் செப்பொணா வடிவில்
மாயப் போரினில் வந்தான் அசுரன்
ஆய நிலைமைகள் அனைத்தையும் கண்ட
சோதி வேலவன் சுடர்ப்பிர காசமாம்
நீதி வேலினை நிறைகரத் தெடுத்தான்
தாரகா சுரனையும் தறுங்கிர வுஞ்சக்
கோர மலையையும் குடைந்து பிளந்துயிர்
அழித்துத் தேவரின் அயர்வினை நீக்கி
அழைத்திங் குறுகென அருளுரை இயம்ப
உடனே எழுந்த தோங்கு வேலாயுதம்
கடிதே அசுரனும் கருதிய கிரியும்
அழித்தமை கண்டனர் அரியயன் இந்திரன்
களிப்புட னொலித்துக் கலைக்கூத்தாடினர்
இலக்கத் தொன்பான் இணைந்த வீரரும்
குலக்குறு பூதரும் கந்தனைப் பணிந்தனர்
தாரக ன்கொண்ட தவச்சிவப் படையை
வீரவாகுவிடம் வேலவன் அளித்தார்
போரினில் இறந்த பூதர்க ளெல்லாம்
ஆருயிர் பெற்றனர் அமர்க்களம் நீங்கினர்

## 21. தேவகிரிப் படலம்

எந்தைவேல் முருகன், ஏழில்மால் பிரமன்
இந்திரன் பூதர் இலக்கத் தொன்பான்
வீரரும் சூழ வியன்இம யத்தின்
சீரிய தென்றிசை தேவகிரிதனைச்
சேர்ந்தனர் ஆங்கண் தேவர்கள் எல்லாம்
தேர்ந்த பூசனை செய்வதற் கெண்ணிக்
கந்தனை வேண்டினர். கட்டளைப் படியே
சுந்தரக் கோயிலைத் தொடர்கிரி யதனில்
தேவ தச்சனும் சிறப்புறச் செய்தனன்
ஆவலுடனே அறுமுகன் கழலிணை
கங்கை நீர் கொணர்ந்து களபமஞ் சனத்தால்
பொங்குநீ ராட்டிப் போற்றி வணங்கினர்

## 22 அசுரேந்திரன் மகேந்திரம் செல்படலம்

சண்முகன் வேலால் தாரகன் இறந்ததை
தண்ணளி மனைவி சௌரியும் ஏனைய
மனைவி மார்களும் மனம்பதை பதைத்து
நினைவு குலைந்து நெட்டுயிர்த் தழுதனர்

தாங்காத் துயரால் சௌரி என்பாள்
ஏங்கி விழுந்தாள் இனையன புலம்பினர்

"மையோ டுறையும் மணிமிடற்றோன் தந்தவரம்
மெய்யாம் எனவே வியந்திருந்தேன் இந்நாளும்
பொய்யாய் விளைந்ததுவோ பொன்றினையால்என் துணைவா
ஐயோ இதற்கோ அருந்தவமுன் செய்தாயே" (க)

அக்கணம் சிங்கனின் ஆசுரம் சென்றூர்
புக்க தாரகனின் புதல்வரிற் சிறந்த
அசுரேந் திரன்வந் தழுது புலம்பி
அசுரனின் உடலை அக்கினிக் கிட்டனன்
மனைவி சௌரியும் மறுமனை வியரும்
கனல்புகுந் தேஉடன் கட்டை ஏறினர்
வரந்தரு வீர மகேந்திர புரியைத்
திரங்கொள் அசுரேந் திரன்சென்றடைந்தான்
சூர பன்மனின் துணைக்கழல் பிடித்துத்
தாரகன் பிரிவைச் சாற்றிப் புலம்பினான்



அவனுரை கேட்டான் அடற்சூ ரபன்மன்
கவலையுங் கொண்டான் கண்களி லேஅனல்
புகை மூக்கிடையே பொங்கி எழுந்தது
பகைநகை புரிந்தான் பாரெல்லாம் கேட்க
உரக்கக் கூவினான் உடன் பிறந்தானைக்
கருக்கி யழித்த கந்தனை யானே
கணத்தில் அழிப்பேன் கடிதில் படைக்கலம்
இணைத்து வருமின் என்றுரை பணித்தான்
அந்த வேளையில் அமோகன் என்னும்
மந்திரி எழுந்தான் "மன்னா கேட்குதி.
மாற்றான் வலிமையை வகுத்தா ராய்ந்து
மேற்கொளும் காலம் மேன்மை. மிகுபலம்
தெளிந்தே செருவில் செல்லுதல் வேண்டும்
அளந்தறி யொண்ணா ஆற்றல்நீ யுடையை
அழிவில் லாத அருந்திறல் பெற்றனை
அழிந்த தாரகன் அத்தகை வரமிலன்
ஆகையால் குழந்தையால் அவனிறந் தொழிந்தான்
வேகமா வீரன்நீ. மிகுசிறு குழந்தையோ
டமர் செய முன்பே ஆய்ந்துசெல் " எனவே
அமைச்சன் கூற அசுரன் அடங்கினான்
தூதர்கள் மயூரன், சுகன், பகன் சேனன்
சாதனை படைத்த சக்கர வாகன்
இவர்களைச் சண்முகன் இயல்பினை யறிந்து
கவனமாய் வருகெனக் கட்டளை யிட்டான்

## 23. வழிநடைப் படலம்

கீதமார் தேவ கிரியுறை கந்தன்
ஆதவன் உதித்ததும் அமரரும் படைகளும்
நிரைநிரை சூழ நேரிய தென்றிசை
வரையினை நோக்கி வந்தனர், முன்னே
பரணிடப் பங்குறப் பார்வதி உமையாள்
அருந்தவம் புரிந்த அசல கேதாரம்,
முனிவர் வியாசர். முகுந்தனே பரம்பொருள்
எனவே தூக்கிய எழிற்கரம் நின்றிடச்
சிவனே பரம்பொருள் எனமெய் உணர்த்திய
தவமார் காசி சங்கரனிருக்க
யானொரு நற்கிரி யாகுவன் என்று
வாழுயர் சிலாதனர் மகன்திரு நந்தி
இறைவனை முடிமேல் இருத்திமகிழ்ந்த

மறைத்திருப் * பருப்பதம், மாங்கனி பொருட்டாய்
உமையின் மீதே உருத்தவன் போலே
தமது கந்தமா தனகிரி நீங்கிப்
பாதா ளத்தில் பயில் குகைவழியே
நாதனாய் வந்த நற்றிரு வேங்கடம்,
சிலந்தி பாம்பு சிந்துரம் கீரன்
சிலைக்கண் ணப்பர் சிவகோ சரியார்
கன்னியர் பலரும் கதிமுத்தி பெற்ற
தென்னுறு கையிலைத் திருக்கா ளத்தி,
திறல்மிகு காளியின் செருக்கினை யடக்க
விறல்மிகு வேடனாய் வேட்டைநா யுடனே
ஊர்த்துவ தாண்டவம் ஓங்கிச் சிலம்புகள்
ஆர்த்திடச் சிவனார் ஆடிய பெரும்பதி
ஆலம் காடு அமரர்க் கிடமாய்
மாலயன் வதியும் மாமரம் விரவும்
ஊழியில் அழியா உயர்நிலை கொண்டது
நாழிநெல் கொண்டு நல்லறம் புரிந்து
இணைமுலை கைவளை இலிங்கத் தழுத்தி
அணையும் சீவரை அறத்தால் காத்த
உமை காமாட்சி உறைந்திடும் காஞ்சி,
தமையறியாமல் தாமே பரம் பொருள்
எனத்தடு மாறி இருக்கயன் திருமால்
மனச்செருக்கழிய வளர்சோ தியாகி
நின்றதும் அடியார் நினைத்திட முத்தி
அன்றே தருவதும் ஆயஅண் ணாமலை,
ஓலையைக் காட்டி உயர்சுந் தரர்முன்
கோலமார் அந்தணக் கூனற் கிழவனாய்
ஆண்டவன் தோன்றி அடிமைகொண் டடியான்
வேண்டிய பாட்டுடை வெண்ணெய் நல்லூர்
இடர்குற் றமற்ற இறந்த உயிர்களை
மிடற்று நஞ் சுடையோன் மேவுமைந் தெழுத்தை
உபதேசிப்பதும், உமைதம் ஆடையால்
சுபமுண்டாக சூழ்ந்துவீ சுவதும்
பயில்சா ரூப பதத்தைக் கொடுப்பதும்
செயலுயர் காசித் திருப்பதி ஒத்ததும்
ஆகிய சிவவிருத் தாசலம், பதஞ்சலி
யோகப் புலிமுனி நுண்மெய் யறிவால்
தரிசித் துவக்கத் தாண்டவம் ஆடும்
பரமனின் தில்லையம் பலமாம் சிதம்பரம்,

* திரு மல்லிகார்ச் சுனபருவதம் – ஸ்ரீசைலம்



முதலிய தலங்களை முருகன் பணிந்து
அதிரலை மண்ணி யாற்றரு கடைந்தார்

## 24.குமாரபுரிப்படலம்

அறுமுகன் மண்ணி யாற்றங் கரையில்
குறுகலும் கதிரவன் குடபால் மறைந்தான்
தேவர்கள் வேண்டிடத் திருமுரு கையன்
தேவதச்சன் சிருட்டித் துயர்ந்த
பொன்னுயர் கோயிலில் புகுந்துவீற் றிருந்தான்
மன்னுமந் திரத்தால் வானவ ரெல்லாம்
கந்தவேளைக் காதலித் துவந்த
கந்த மலரால் கழற்பூசை யாற்றினார்
சேயோன் அமர்ந்த திருப்பெரு நகரம்
சேஞ்ஞ லூரெனும் சிறப்பினைப் பெற்றது
தாரக னால்வரும் சஞ்சலம் நீங்கிப்
பேருயர் இந்திரன் பிறங்கும் காலை
அடைக்கலம் கொடுத்த அயிராணி நகைகள்
அடங்கிய மூடையை, அவண்வன தேவதை
மீளப் பெறுகென விண்ணேந் திரன்முன்
வைத்தலும் கண்டான் மனந்தடுமாறினான்
மெத்திய காம விரக நோயினால்
இந்திராணியை எண்ணி நெஞ்சழிந்து
அந்தி தொடக்கம் அலர்பகல் வரையும்
காம நோயினால் கலங்கிய இந்திரன்
சேமம் தரவரும் திருக்கும ரேசனை
மறந்து பெரும்பழி மன்னினேன் என்று
திறந்தரு முருகனின் சேவடி மலரை
கடிமலர் கொண்டு கைதொழு திறைஞ்சி
அடிமலர்ப் பூசனை ஆற்றி மகிழ்ந்தான்
அப்போ தறுமுகன் அப்பன் சிவனை
கைப்போ திட்டுக் கனிந்து துதித்திடும்
எழில் மிகு கோயில் இந்திரன் மூலமாய்
வழிமுறை யாக வகுப்பித்தி லிங்கம்
தாபித் தேத்த தந்தையும் தாயும்
தீபமும் தூபமும் செழித்தலிங் கத்தில்
வந்து தோன்றி மைந்தனை வாழ்த்தி
கந்தா உனக்கொரு படையீ தென்று
பரம உருத்திர பாசு பதத்தைச்

சரவணன் கரத்தில் தந்து "மைந்தனே
வலிய இப் படைக்கலம் மாலயன் பெறாத
நிலையில் உள்ளது நிருதர் சேனையை
ஒருகணத் தழிக்கும் உக்கிரம் கொண்டது
பெருகிய போரில் பெரு வெற்றி பெறுக"
என்று வாழ்த்தி எந்தையும் உமையும்
சென்றபின் முருகன் சேஞ்ஞலூர் நீங்கி.
திருவிடை மருதூர் சீரார் மயூரம்
திருப்பறி யலூரென சிவதலம் வணங்கி
திருவா ரூர்வழி தீப்பாலைவனம்.

## 25. சுரம்புகு படலம்.

மருவினர் ஆங்கே வாயுவும் மேகமும்
செல்லா தஞ்சும், சிறுமுட் செடிகள்
கள்ளி மரங்கள் கரிந்து நிற்கும்
இத்தகை நிலத்தில் எம்மான் முருகனும்
மெத்திய படைகளும் விரைந்த போதில்
பாலை வனநிலம் பசுந்தழை பரப்பும்
சோலை வனமாய்ச் சுகந்தம் தந்தது
இவ்வழியாக இறைவன் முருகன்
செவ்வேலேந்திச் செல்வதைப், பரங்கிரிப்
பதியில் தவஞ்செயும் பராசரர் புத்திரர்
சதுர்முகன், தத்தன் சக்கிரபாணி
அநந்தன் தெய்வக்குலமணி நந்தி
நினைந்தன சித்தி தரு தவ மாலி
ஆகியோர் ஞானத் தறிவாலறிந்து
தோகையோன் முன்னே தோன்றித் துதித்தனர்
அருள்புரிந் திடுகென அறுவரும் வேண்டினர்
மருவிய அன்னார் வரலாறனைத்தும்
இந்திரன் கந்தனுக் கியம்பினான் இனிதே.
முந்திய இவர்கள், முனிவர னாகிய
அறிவுயர் பராசரர் அன்புயர் மைந்தர்
அறுவரும் சரவணத் தமுழ்ந்து நீ ராடிக்
கலக்கிக் குதித்து கங்கைவாழ் மீன்களை
விலக்கிக் கரையினில் வீழ்ந்திடச் செய்தனர்
அப்பொழு தாங்கே வருபிதா மைந்தரின்
ஒப்பிலாச் செயலை யுற்று நோக்கினர்
மீன்களைத் துயருற வினைபுரி நீங்கள்
மீன்களாகுதிர் மேவுமிப் பொய்கையில்



நீந்துமின் எனவே நெடுமுனி புகன்றனர்
சூழ்ந்த நம்சாபத் துயரென் றகலும்
என்று வேண்டிட, இறைவன் கந்தனைத்
துன்று பால்கொடுக்க சுந்தரி உமையவள்
வருவாள் ஆண்டு வழிந்துறு பொய்கையில்
பெருகும் பாலை பேணிநீர் உண்மின்
தந்த சாபம் சாலவும் தீரும்
இந்த மொழிப்படி இருமும் மக்களும்
அப்பால் பருகி, அச்சாபந்தணிந்
திப்பால் பரங்கிரி, எந்தை சிவனின்
அருளால் எய்தி அருந்தவம் செய்தனர்
மருவிய நின்றன் வருகைகண் டுங்கள்முன்
வந்தடைந்தாரென மறுகுமவ் வறுவரைக்,
கந்தனும் திருக்கண் கருணை உதவி
எம்மொடு நீங்களும் இணைந்து வருகென
எம்மையாள் முருகன் எழுந்தனன் பயணம்

## 26 திருச் செந்திப்படலம்

திருக்கும ரையன் திருச்செங் குன்றூர்த்
திருப்பதி யடைந்து சிவனைப் பணிந்து
சீரலை வாயெனும் செந்தூர் அடைந்தார்
சார்கலைத் தேவ தச்சனைக் கொண்டு
கொடிமணிக் கோயில் கோலமாய்ப்புனை வித்
தமரர்அஞ் சலிக்க, அக்கினி வருணன்
அமிர்த வெண்குடை அங்கையிற் பிடிக்க
தண்ணளி வாயுவெண் சாமரை வீச
வண்ணமார் வீர வாகுடை வாளை
ஏந்தி நிற்க எட்டு வீரரும்
சார்ந்த இலட்சத் தம்பி வீரரும்
வாயிலில் நின்று வழிபா டியற்ற
ஏயசிங் காசனத் திருந்தான் கந்தன்
ஆங்கண் நின்ற அமரேந்திரனைப்
பாங்குற நோக்கி, பார்வதி பாலன்
தீங்குறு சூரரின் செயல்–தவம் எல்லாம்
ஈங்குநீ உரையென இந்திரன் தன்குரு
வியாழனைப் பார்த்து, "விபரம் முழுதும்
தயாநிதி குருவே தாங்களே சாற்றுக"
என்றலும் புண்ணிய இமையவர் குருவும்
நின்றடி தொழுதார் நெஞ்சனில் முருகனை

வைத்தார் வள்ளலே வலிய சூரரின்
சித்தார் தவமும் செயலும் வீரமும்
தேவரீர் அருளால் செப்புவேன் குறைகள்
யாவும் பொறுத்து நயந்தருள் புரிக
எனப்பிர கஸ்பதி இதயங் குவித்து
கனமிகு வசுரரின் கதைசொல்ல லுற்றார்

உற்பத்தி காண்டம் முற்றிற்று.

உ
செந்திலாண்டவன் துணை

# 2. அசுர காண்டம்

ஊரிலான் குணங் குறியிலான் செயலியான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்

## 1. மாயைப்படலம்

மாமுனிவர் காசிபரின் மைந்தரறு பத்தாறு
கோடியசு ரர்களுக்கு கோன் அசுரேந் திரனென்பான்
மங்கலகே சியைமணந்து, மகளாய் சுரசைதனை
தங்குகின்ற அசுரகுலம் தழைக்கவெனப் பெற்றார்கள்
அசுரகுரு சுக்கிரனார் அவளுக்குப் புத்திசொல்லி
வசியமுறு மாயமெலாம் வழங்கிஅவள் சித்திபெற்ற
மாயையெனப் பெயர்சூட்டி மாதவத்துக் காசிபரைப்
போயணுகி மணம்முடித்துப் புத்திரரைப் பெறுகஎன
மாயையும் பேரழகி வடிவெடுத்து மேருமலை
ஆயவட திசையிருக்கும் அருள்முனியை வந்தடைந்தாள்



தவமுனிவர் இருக்கின்ற சாரலிலே மாயையவள்
நவமணியால் மண்டபங்கள் நறுமணமார் பூஞ்சோலை
நன்னீரின் பொன்வாவி நாற்புறத்து மண்டபங்கள்
பொன்னழகா புரிபோல புதுப்பொலிவை யாக்கிவிட்டாள்
மின்னலைப்போல் மேனிகொண்டு. விளங்கினாள்–அவ்விடத்தே
தன்னிலைமை மாறினார் தவக்காசி பர்முனிவர்
அவளருகில் சென்றடைந்தார் அசுரகுல மாயைதனை
உவகையொடு சேருவதற் குளம்குமுறி வேண்டி நின்றார்
தவத்தாரை விரும்பாத தையலைப்போல் மாயையுமே
சிவமேருத் தென்திசையில் செழித்தநீர்க் கங்கையிலே
நீராடப் போகின்றேன் நீரிங்கே நில்லு மென
சீரான பெண்மணிபோல் சென்றாளே சுரசையவள்

## 2. காசிபன் புலம்புறு படலம்

சித்தமிகத் தடுமாறி திரிந்தாரே காசிபரும்
கத்துகின்ற குயில் அன்னம் கருவண்டு மடப்பிடி மான்
மான்புறா மற்றுமுள மரம்பொய்கை மலர்தென்றல்
வான்பரவு மலையெல்லாம் வந்துவந்து கூப்பிட்டு
மாயையைத் தேடிநின்றார் மதன்கணையால் வாட்டமுற்றார்
மேய கதிர்ச் சூரியனும் மேற்றிசையில் போய்மறைந்தான்
தண்ணளியார் வெண்மதியும் தலைகாட்டி வானெழுந்தான்
பெண்ணவளும் காசிபராம் பெருமானை நாடிவந்தாள்

## 3. அசுரர் தோற்றுபடலம்

மாமுனியைக் கண்பார்த்து மாயைமங்கை கூறுகிறாள்
சேமமிக நீரென்போல் சீரழகு பெற்றிடுக
உவந்துநான் எடுக்கின்ற ஒவ்வொரு பேர் வடிவத்திலே
தவமுனிவ ரேநீவிர் தாங்கியெனைச் சேர்ந்திடுக
என்றலுமே காசிபரும் எழில் மிகுந்த தேவனென
நின்றநிலை கண்டிசைந்தாள் நிருதர்குல மாயையவள்
கோலமுயர் மண்டபத்தில் கூடினர்காண் இருவருமே
மூலதவச் சூரபன்மன் முதற்சாமத் தில்பிறந்தான்
இருவரதும் தேகத்திலே எழுந்துவந்த வியர்வையிலே
விரைந்து வந்தார் அசுரமக்கள் வெள்ளம்முப்பா னாயிரமாம்
இரண்டாம் சா மத்தினிலே இன்னொருமா மண்டபத்தில்
திரண்டசடை சிங்கத்தின் சீருருவம் எடுத்தார்கள்
சிங்கமுகப் பேரசுரன் செறிந்தமுகம் ஆயிரமும்
பொங்கியெழும் கரங்களுமே பொலிந்த இரண்டாயிரமும்
தாங்கியே வந்துதித்தான் சார்வியர்வை வழியாக

ஆங்குநாற் பதினாயிரம் அசுரவெள்ள மும் பிறந்தார்
வருமூன்றாம் ஜாமத்திலே மதயானை வடிவெடுத்து
தருநான்கு கொம்புடைய தாரகனைப் பெற்றார்கள்
நண்ணியெழு வியர்வை யிலே நாற்பதினா யிரவெள்ளம்
துண்ணசுரர் உதித்தார்கள் தொடரும்நான் காம்யாமம்
ஆட்டினது வடிவெடுத்தார் அசமுகியு வந்துதித்தாள்
மூட்டிவரு வியர்வையிலே முப்பதினா யிரவெள்ளம்
அசுரர்கள் ஆட்டுக்கடா ஆயமுகத் தோடுதித்தார்
இசைவாக மாயையவள் ஏகினளே வேறிடத்தே
யாளி புலி குதிரை மான் நரிகரடி மாடுபன்றி
நீளும் பல வடிவெடுத்து நிகழ்வைக றைப் பொழுதில்
முனிவரும் மாயையுமாய் முனைந்தெழுந்த சேர்க்கையினால்
நினைவரிய அசுர வெள்ளம் நேர்அறுபத் தாயிரமாய்
புற்றீச லைப்போலே புதிதாகப் பிறந்தாரே
உற்ற இந்த வேளையிலே உயராயிரத்தண்டம்
எங்கணுமே துர்நிமித்தம் எழுந்தனவே பயங்கரமாய்
கங்குல் விடிந்ததுமே காசிபரும் மாயைப் பெண்ணும்
சொந்த வடிவுடனே சுதர்கள் முன் வந்தார்கள்
மைந்தனாம் சூரபன்மன் வயச்சிங்க முகாசூரன்
அடுத்ததா ரகாசூரன் அசமுகியாம் நால்வருடன்
எடுத்த இரு லட்சவெள்ளம் இலங்குமசு ரத்தொகையும்
பார்த்து மகிழ்ந்தார்கள் பல மிகுந்த சூரபன்மன்
கூர்த்த துணைவரொடு கும்பிட்டான் பெற்றாரை

## 4. காசிபனுபதேசப்படலம்

பெற்றவரே நாங்கள் பேணும்பணி செப்புகென,
கற்றமுனி காசிபரும் கனிந்தினிது கழறுகின்றார்
மக்களே நீங்களெல்லாம் மறைபுகலும் தவமார்க்கம்
மிக்கதவ னத்துடனே மேவுங்கள் முதல் மூன்று
பதிபசுபா சங்களவைபதியென்றால் பரம் பொருளே
அதிபனவன் தன்மைதனை அளந்துரைத்தற் குரியதன்று
ஆணவம்மா யைகன்மம் ஆகும்மும் மல பாசம்
காணுமிவற் றாலுயிர்கள் கனபிறவி யெடுத்திளைக்கும்
மேலான தேவர்மக்கள் விலங்குபல் ஊர்வன நீர்
வாழுவன தாவரங்கள் பறவையென ஏழுவகை
ஆயபல பிறவியெலாம் அழிந் தழிந்து பிறப்பெடுக்கும்
ஏயஅறம் ஒன்றதுவே இன்பசிவ முத்திதரும்

***



தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால் (க)

***

ஆகுமுயர் தவத்தாலே அதிமோட்சம் போகமன்றி
போகமோட்சமும் பெறலாம் பொற்பதவி பெற்றிடலாம்
உண்மைத்தவம் செய்தார் உயர்திருமால் அயன்முதலோர்
தண்மைத் தவத்திற்குத் தவ மொன்றே ஒப்பாகும்
ஆதலால் பிள்ளைகளே அறம் செய்துபழிநீக்கி
காதலுடனே சிவனைக் கருத்திருத்தி நலம் பெறுக.

## 5. மார்க்கண்டேயப் படலம்

காலனையும் வென்றவனின் கதை சொல்வேன் கேளுங்கள்
சீலமிகு கடகமெனும் திருநகரில் குச்சகப்பேர்
அந்தணர்க் கோர் நன்மைந்தன் அவரது பேர் கௌசிகராம்
பந்தவினைப் பவக்கடலின் பற்றறுக்கத் துணிந்தெழுந்தார்
நன்னீர்த் தடாகத்தை நாடினார் அங்கமர்ந்தார்
தண்ணீர் உணவுறக்கம் தான்விடுத்து மௌனமெய்தி
ஆதீண்டு குற்றியைப் போல் அசைவற்றுத் தவம் புரிந்தார்
மாதேவன் ஐந்தெழுத்தை மனத்தெழுதி நிலை மறந்தார்
கூடிவரும் மிருகமெல்லாம் கோசிகரில் உராய்ந்து செல்லும்
நாளுமிந்தத் தவங்கண்டு நாரணனார் தேவருடன்
உவந்து வந்தார் முனிவரது உடம்பைக் கையால் தடவி
தவஞ் சிறந்து விளங்குகின்ற தனயனனே நின்னாமம்
மிருககண் டூயனென வழங்குக சிவபெருமான்
கருணை மிகவும் பெருகி கடந்தவினைப் பற்றின்றி
வீடேகு வழிகண்டு மெய்ஞ்ஞான முனிவனென
நீடுழி வாழ்கவென நிறை வாழ்த்துப் புகன்றகன்றார்
தண்மிருக கண்டூயர் தந்தைதா யிடம் சென்று
கண்ணபிரான் சொன்னவற்றைக் களிப்புடனேவியந்துரைத்தார்
தந்தையாம் குச்சகரும் தன்மைந்தன் தனைநோக்கி
சிந்தை குளிர்ந் தேனப்பா திகழ்பிரம சாரியத்தை
மேற்கொண்டாய் இனிநீயும் மிளிர்கிருகத் தாச்சரியம்
மேற்கொள்ள வேண்டுமென்றார் மிருககண் டூயமுனி
தந்தையே தங்கள்மொழி தட்டவில்லை ஆயினும் நாம்

பந்தத்தில் சிக்கினால் பரமனடி சேர்வேனோ
எந்தையே என்னுரையை ஏற்றருள வேண்டுகிறேன்
முந்துநன்னீர் முன்னிருக்க முழுச்சேற்றைப் பூசுதல் போல்
பெண்ணுடனே வாழ்கின்ற பிணிவாழ்க்கை அமைந்துவிடும்
எண்ணில்லாப் பாவங்களை இணைத்துப் பிரமனுமே
பெண்ணுருவாய்ப் படைத்துப் பிரபஞ்சம் நடத்துகிறான்
பெண்ணாசை பூமியிலே பெருநரகிலே செலுத்தும்
இந்திரன் அகலிகையை இச்சித்துப் பழிபடைத்தான்
வந்ததிலோத் தமையாலே மலரயன்நான் முகனானான்
இன்னதுயர் வாழ்க்கையிலே ஏகமன மில்லையப்பா
பொன்னடியைப் போற்றுகிறேன் பொறுத்தருள்க என்மொழியை
என்ற உரை செவிஏற்ற எந்தையாம் குச்சகரும்
துன்றுதவப் புத்திரனே சொல்வதைக்கேள் என மொழிவார்
ஆதிபராசத்தி உமை அம்பிகையைப் பங்குவைத்து
சோதிசிவ சங்கரனார் தொல்லுலகை நடாத்துகிறார்
உயர்ந்த முனி வசிட்டர் முதல் ஓதுமுனிவர்களெலாம்
நயந்த குலப்பெண்ணுடனே நல்வாழ்க்கை பூண்டினிய
தவநெறியைத் தாங்கிநின்ற சரித்திரங்கள் அறியாயோ
புவனத்தில் இறந்தவர்கள் புகுந்ததுன்பம் நீங்குதற்கும்
நரகமடையாது சிவ நல்லூரைச் சேர்வதற்கும்
மருவு மணம் நீபூண்டு வாழ்வதுவே நன்றென்றார்

துறந்தவர்கள் வேண்டியதொர்
துப்பரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும்
இருங்கடன் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந்
தோம்புமுறை யல்லால்
பிறந்தநெறி யாலுளதொர்
பேருதவி யாதோ (க)

இவ்வாறு தந்தைசொல இசைமிருக கண்டுயர்
செவ்விதெனத்தந்தைசொலும்தேன்வார்த்தையான்மறுக்கேன்

"தந்தை சொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகந்தோர்
வந்தனை செய் வேதநெறி மாற்றினர்கள் மாறாச்
செந்தழல வாயநிர யத்தினிடை சேர்வர் (க)



ஆதலால் தந்தையே அடியேன் நான் உங்கள் உரை
ஏதமின்றி ஏற்கின்றேன் என்னுரையைக் கேட்டருள்க
திருமணப்பெண் இலட்சணங்கள் சீராய் அமைந்து விட்டால்
தருமநெறி மணம்முடிப்பேன் சாற்றுகிறேன் தன்மைகளை
தாய் தந்தை இல்லாதார் தனித்துப் பிறந்தவர்கள்
ஆயசுற்ற மற்றவர்கள் அமைவான அழகில்லார்
சீறந்தகுல மில்லாதார் தொடர் நோயர் பெற்றபிள்ளை.
புறச்சமயம் புகுந்தவர்கள் புன்விலங்குப் பெயருடையோர்
கூன்குருடு செவிடுமை கொண்டோர் பிறர்வீடு
தான் புகுவோர் ஆடவரைத் தன்வாசல் முன்நின்று
பார்த்திடுவோர். பொதுமகள்போல் பார்க்கின்ற விழியுடையோர்
சேர்த்தபே ருண்டிகொள்வோர் தீராத நித்திரையோர்
வயதிலே மூத்தவர்கள் மருவுமொரே கோத்திரத்தார்
உயரமிக உடையவர்கள் உருவத்தில் குறுகியவர்
பருத்தவர்கள் மிகமெலிந்தோர் பசப்புடையோர் செந்நிறத்தார்
கருநிறத்தோர் பொன்னிறத்தோர் கவினில்லாவிளர்ப்புடையோர்
நாணமற்றோர் நகைமிகுந்தோர் நடம்பார்க்க விரும்புபவர்
பேணியசொல் கேளாதோர் பெருவலிமை மிகுந்தவர்கள்
சினமுடையோர் சிவபெருமான் சேவடிக்கன் பில்லாதோர்
முனிவரரை இகழ்வோர்கள் மொழிந்தகுண நிறையில்லார்
கடுமொழியோர் கற்பில்லார், கடவுளரைக் கல் என்பார்
அடுபூனைக் கண்ணுடையோர் அதிநீண்ட கூந்தலுளார்
நரைத்தவர்கள், நீள்மூக்கர், நனிகுறைந்த கூந்தலுளார்
சிறுத்த விழியார் நீண்ட திணிபல்லர், வளைகழுத்தர்
மயிர்பரந்த காலுடையார், வருமன்ன நடையில்லார்.
நயமான பாதவிரல் ஞாலமிசை முட்டாதார்.
வாய் அங்கை நகம்உட்கால் வரும் செம்மை யில்லாதார்
ஏய இவையனைய குற்றம் இல்லாத பெண்ஒன்றை
மணம் புரிந்து கொள்வன் என மகன்மிருக கண்டுயர்
இணங்கினார், குச்சகரும் எண்ணினார் பெண்பார்க்க
எதிர்ப்பட்ட சிலமுனிவர் இயம்பிய மொழிப்படியே
துதிசோழ தேசத்திலே சொல்லும்அநா மயமென்னும்
வனத்தில் உசத்தியரின் வளர்குடிசை சென்றடைந்தார்
விருத்தாம் பிகை என்ற விளங்குமவர் புத்திரியை

மிருககண் டுயருக்கு விவாகநலம் செய்துவைக்க
வந்தேன் என்றியம்பினார் மகிழ்ந்தாரே உசத்தியரும்
சிந்தைமிக வும்குளிர்ந்து சிறந்ததன் மனைவியொடு
விருத்தையையும் அன்னாரின் மெய்ப்பாதம் பணிவித்து.
விருந்தளித்துச் சிலதினங்கள் குச்சகரைத் தங்கவைத்தார்

## விருத்தை மரணம்

கன்னியாம் விருத்தையவள் கானகம்போய் நீராடி
மன்னுமவள் தோழியர்கள் மருவவரும் வேளையிலே
காட்டானை ஒன்றங்கே கடுகிவந்து துரத்திடவே
ஓட்டமாய் எல்லாரும் ஓலமிட்டார் ஓடிச்சென்றார்
தேவிவிருத் தாம்பிகையும் சிந்தையயந் தோடுகையில்
மேவுவழிக் கிணறொன்றில் வீழ்ந்தாள் இறந்துவிட்டாள்
தேடிவந்த தோழியரின் செய்தியெலாம் கேட்டுநொந்து
வாடினாள் உசத்தியரின் மனைக்கிழத்தி மங்கலையும்
எல்லாரும் விருத்தையவள் இறந்தகிணற் றண்டைவந்து
சொல்லோல மிட்டுவெகு துயரத்தி லாழ்ந்தார்கள்
குச்சகரும் அங்கு வந்தார் குறித்தவிருத் தாம்பிகையை
இச்சகத்தில் உயிர்ப்பிப்பேன் எண்ணெயிலே இவளுடலை
பேணிவைத்துக் காத்திடுவீர் பெருந்தவம்நான்மேற்கொண்டு
மாணுயர்ந்த இவளுயிரை வரவழைப்பேன் என்றுரைத்து
நீராடும் பொய்கையிலே நெடுஞ்சூல எமன்தன்னை
சீராகவே நினைந்து செய்தனரே பெரியதவம்
அப்போதில் அவ்யானை அருந்தவத்துக் குச்சகரை
கைப்பற்றி தூக்கித்தன் கவின்பிடரிமேல் வைத்து
நெடுந்தூரம் செல்லுகையில் நினைந்தார்அவ் யானைமுன்பு
படுசாபம் பெற்றதனை பகுத்தறிந்து கொண்டாரே

## யானையின் வரலாறு

அணிகலிங்க நாட்டினிலே அசிபுரமென் னும்பதியின்
வணிகனாம் தேவதத்தன் மகனாய தருமதத்தன்,
தந்தைதாய் இறந்த பின்பு தனிவாழ்வு கொண்டிருந்தான்
அந்தணனாய் வேடமிட்டே வந்தானோர் இரசவாதி
தருமதத்தன் நம்பவைக்கும் நயமான மொழிபுகன்றான்
கயிலாயம் காட்டிடுவேன் காரிரும்பைப் பொன்னாக்கும்
செயலுடையேன் சிறுபொன்னைச் சிகரம்போல்
ஆக்கிடுவேன்



என்றுரைத்த இரசவாதி இருக்கும் பொருள் அத்தனையும்
இன்றுகொண்டு வருவாயேல் இல்லத்தில் வைக்குமிடம்
இல்லாத வாறு யான் இயற்றுவேன் என்றலுமே
பொல்லாத ஆசையினால் புத்திகெட்ட தருமதத்தன்
கடமிகும் இரசவாதி காற்றில்லா அறையினுள்ளே
அபகரித்த பொன்னெல்லாம் அகன்றகுகை யிற்போட்டு
நெருப்பிட்டுப் புகைப்பித்தான் நினைவிழந்து தருமதத்தன்
நெருப்பெழுந்த புகையால்கண் ணீர் சொரிந்து நிற்கையிலே
வைத்தகுகை எடுத்துவிட்டு மாற்றிரும்புக் குகையை வைத்து
இத்தலத்தே மூன்றுதினம் எனைநினைந்து இருந்து கொள்வாய்
மாகாளி பூசைசெய்து வருவேன் நான்என்று சொல்லி
மாபாவி இரசவாதி வாராமல் மறைந்துவிட்டான்
தருமத்தன் அங்கிருக்கும் தனிக்குகையை வந்தெடுத்தான்
இரும்பாக வேகண்டான் எண்ணியெண்ணி நெஞ்சழிந்தான்
அறத்தை விற்ற தீவினையால் அவ்விடத்தே உயிர்விட்டான்
மறத் தொழிலின் யானையாய் மண்ணுலகி லேபிறந்தான்
இவற்றை அறிந்ததவம் இலங்குமுனி குச்சகர்தன்
தவத்திலொரு நாட்பலனைத் தந்தார்அவ் யானைக்கு;
ஆனைஉரு மாறினான் ஆருமிலாத் தருமதத்தன்
வானவர்கள் மலர்சொரிய மாமுனியைக் கைதொழுது
விண்ணுலகம் போய்ச்சேர்ந்தான் மீண்டும்மா தவம்புரிந்தார்
நன்முனிவர் குச்சகரும் நமராசன் அவர்முன்னே
இன்முகனாய் வந்தெய்தி என்னவரம் வேண்டுமென்றார்
விருத்தாம்பி கைபிழைக்க வியனுயிரைத் தருக என
கருத்து வந்து எமதருமன் கருதியதன் தூதரிடம்
'அவளுயிரை விடுகவென' ஆகியகட் டளையிட்டார்
எவர்களும் வியப்படைய எழும்பினாள் விருத்தம்மை
உள்ளநிறை வாகிநலம் உற்றமுனி உசத்தியரும்
பள்ளமடை போலன்பு பாயுமகிழ் வெய்தி–வரும்
குச்சகரின் தாள்போற்றி குறித்ததிரு மணவினையை
நிச்சயித்து மணமகனை நெடிதழைக்க லுற்றார்கள்.
மிருககண் டுயருக்கும் விருத்தாம் பிகையார்க்கும்
தருமமிகு நன்னாளில் தகுந்ததிரு மணம்நிகழ்த்தி
குச்சகராம் முனிநாதன் குறித்ததவம் செய்வதற்காய்
உச்சமலை சூழ்ந்திருக்கும் உத்தரதே சம்சென்றார்
மெய்யன்புத் தம்பதிகள் மிருகண்டு எனும்மகனை
உய்யுமுயர் சிவக்கொழுந்தாய் உலகுய்யப் பெற்றார்கள்
மிருகண்டுக் காறாண்டு மேவியது உபநயனம்
குருமுறையும் திருமறையும் குலவுநெறிசெய்தார்கள்
சீராரும் மிருகண்டு சிறந்தமுற் கலமுனியின்

பேரார் மருத்துவதிப் பெண்ணைமணம் பூண்டிருந்தார்
இவர்களுக்குப் பன்னாளாய் இனியமக்கட் பேறின்றி
தவம்புரிய எண்ணியவர் தங்கும்அநா மயம்நீங்கி
காசியம் பதிசென்று கங்கையிலே நீராடி
ஈசன்மணி கர்ணிகையாம் எழிற்கோயில் சென்றிறைஞ்சி
அங்கோர் பால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார்
திங்கள்நதி சூடிவரும் சிவபெருமான் காட்சிதந்து
நீயாது விரும்பினாய் ' நினைந்துகேள் என்றலுமே
தேவாதி தேவாஎன் சிந்தைகுளிர் ஓர்மகவைத்
தந்திடுக என்றிரந்தார் சங்கரனார்கேட்கின்றார்
தீயகுணன் அறிவில்லான் செவிடுமை முடமான
நோயுடையன் ஆயுளுமோர் நூறாண்டு வாழ்ந்திடுவன்
அவன் வேண்டு மா? அன்றேல் அன்புடையன் நற்குணத்தன்
திவள்அழகன், என்பக்தன் சேர்ந்துபதி னாறாண்டு
வாழ்மைந்தன் வேண்டுமா? மதித்துரைப்பாய் என இயம்ப
எந்தையே நின்னடிக்கே இனியபக்தி மைந்தனே
தந்தருள்க எனக்கேட்கச் சங்கரனார் வரமீந்தார்
அருட்பெருமான் வரத்தாலே அரிவை மருத்துவதி
கருவுற்றாள் – பங்குனியில் கனிந்தநாள் ரேவதியில்
வருமிதுன லக்கினத்தில் வளம் நலகும் சுக்கிரனும்
குருவுமுச் சம்கொள்ள குலவுசூ ரியன் முதல
கோள்கள் நட் பாட்சிசெய கொன்றையணி செஞ்சடையன்
தாள் கொண்டு வாழ்வுபெறும் சற்புத்திரன் பிறந்தான்
சுற்றத்தார் உபசரித்தார் சுரரெல்லாம் முழவிசைத்தார்
உற்றிடுமும் மூர்த்திகளும் உவந்துவந்து வாழ்த்திசைத்தார்
மலரயனும் நாடிவந்து மார்க்கண்டே யர்நாமம்
பொலியுமிவன் பெயரென்று புகன்றாசி புரிந்தகன்றார்
செல்வனாம் மார்க்கண்டர் சேரகவை ஐந்தானார்
நல்வேத உபநயனம் நயந்தவர்க்குச் செய்தார்கள்
மார்க்கண்டர் எம்பெருமான் மலரடியே வழிபடுவார்
கூர்த்தமுது குரவரையும் குணம்படைத்த அடியரையும்
சந்ததமும் போற்றிடுவார் சங்கரனை நெஞ்சமூத்தி
ஐந்தெழுத்தை உச்சரிப்பார் அன்புருவில் பூசைசெய்வார்
இவ்வண்ணம் நிகழுகையில் இறைவன் தவத்துரைத்த
அவ்வண்ணம் மார்க்கண்டற் காண்டுபதி னாறுற்று
பூர்த்தியும் வந்ததென்று புந்திநொந்தார் பெற்றவர்கள்
சீர்த்தசிவ பூசை செய்யும் சேயுமிதைச் சிந்தித்தான்
அப்பாவே அம்மாவே அல்லலுறக் காரணமென்?
செப்புகெனக் கேட்டதுமே செப்பினார் வரலாற்றை
அப்போது மார்க்கண்டர் அன்புடைய பெற்றோரே



இப்படியே தந்தசிவன் எப்பொழுதும் இருக்கின்றார்
எம்பெருமான் பூசைசெய்வேன் இயமனையும் வென்றிடுவேன
நம்புங்கள் யான்சென்று நம்பனையே வேண்டிடுவேன்
எனவுரைத்து மார்க்கண்டர் ஈஸ்வரன் வீற்றிருக்கும்
மனமகிழ்ச்சி தருங்கோயில் மணிகர்ணி கைசென்று
அத்தலத்தே நீராடி அரன்நாமம் பலபாடி
சித்தமிக நெக்கிநெக்கி சிவலிங்கம் பூசித்தார்
இலிங்கத்தின் மேலெழுந்தார் எம்பெருமான், சிறுவன்முன்
நலம்பொலியப் பூசிக்கும் நன்மகனே உன்றனுக்கு
என்னவரம் வேண்டும் இயம்பென்றார். மார்க்கண்டர்
முன்னிற்கும் முக்கண்ணா முடுகுயமன் கையினிலே
சிக்காமல் என்றனுக்குத் தேவரீர் அருளுகென,
அக்கணமே சிவபெருமான் அஞ்சற்க, அஞ்சற்க
என்றுரைத்துத் திருவடியை இனியதவ மார்க்கண்டர்
துன்றுசிரத் தேவைத்து சோதிலிங்கத் தேமறைந்தார்
பதினாறும் பூர்த்தியென்று பயிலுமொரு யமதூதன்
விதியாய உயிர்வாங்க விரைந்தோடி வந்துநின்றான்
பரமனடி பற்றிநின்ற பாலனது சிரம்பார்த்தான்
பரவுவிதிப் பூசனைநற் பான்மையெலாம் கண்டுணர்ந்தான்
விரைவாகத் திரும்பினான் விளம்பினான் இயமனிடம்
கரையில்லாச் சினங்கொண்டு கணக்கர்சித் திரகுத்தர்
தமைவினவி மறுமுறையும் தனதமைச்சன் காலனையும்
போயவனைக் கொணர்கனப் புகன்றனுப்பினான் இயமன்
காலனவன் பாலன்முன்பு கடுகெனவே வந்துநின்றான்
சீலமிகு மார்க்கண்டர் தெரிந்திடும் அக் காலனிடம்
ஏன்வந்தாய் எனக்கேட்க, இயம்புவேன் கேளப்பா,
யான் இயம தர்மனுக்கு நல்லடிமை நின்னுயிரை
வாங்கிவரச் சொல்லிவிட்டார் வயதுனக்குப் பதினாறு
ஈங்குநேற்றுப் பூர்த்தியப்பா, இனிநீர்தென் புலத்திற்கு
வரவேண்டும் இவ்விதியை மறுக்கவோ முடியாது
பரவுசிவ பூசைசெயும் பாலாஉன் றனைப்பார்க்க
எம்மிறைவன் மகிழ்வுடனே எதிர்பார்த்தங் கிருக்கின்றார்
உம்மைவர வேற்றிடுவார் ஓங்குமிந் திரஉலகம்
தந்திடுவார் என உரைக்க தவக்கொழுந்து மார்க்கண்டர்
இந்திரலோ கப்பதத்தை இறையடியார் வேண்டார்கள்
சிவதொண்டன் நான்இயமன் தென்புலத்தே வரமாட்டேன்
எவர்பதமும் யான்விரும்பேன் ஏகுவாய் என உரைத்தார்
காலனும் போய்க் கதை சொன்னான் கனன்றெழுந்து கூற்றுவனார்
சூலம்பா சந்தண்டு துண்ணெனவே கையேந்தி
மேதிமேல் ஏறிவந்தான் வீரர்பலர் புடைசூழச்

சிவம்பூத்த மார்க்கண்டர் திருமுன்னே வந்துநின்றான்
மைந்தனே மார்க்கண்டா, மழவிடையோன் திருவாக்கை
எந்தவகை யாரேனும் இமையோர்களாயிடினும்
மாற்றவோ முடியாது, மன்னுமுன் சிவபூசை.
ஏற்றபழி போக்குமன்றி என்பாசம் விலக்குகின்ற
வல்லமையோ அதற்கில்லை, வானரசர் இந்திரர்கள்
எல்லையிலாத் தொகையோர்கள் இறந்ததனை அறிந்திலையோ
எனக்குமே பிறப்பிறப்புண் டெண்ணுவாய் பாலகனே
மனக்கவலை கொள்ளாதே வாஎன்றான் நமராசன்
இயமனே கேள்எனவே இளம்சிறுவன் மார்க்கண்டர்
நயமாக உரைக்கலுற்றார், நம்பனடி யார்களுக்கு
முடிவில்லை, இருப்பினும் உன் முட்டுறுதென் புலம்நோக்கி
அடியெடுத்து வாரார்கள், ஆயபதிபசு பாசம்
ஆய்ந்துணர்ந் தோர் பிறவியெனும் அல்லலிலே நீங்கினர்காண்
வாய்ந்த பர சிவனுக்கும் மருவுமவர் அடியவர்க்கும்
வேற்றுமையைக் காணுபவன் மிகுந்தபெரும் அறிவிலியே
ஆற்றுமவர் விரும்பார்கள் அமருலகும் பெரும்பதமும்
அத்தகையேன் யான்என்னை அடைந்தாய்உன் உயிருக்கும்
மெத்ததுயர் வந்தடையும் விரைந்தோடிப் போ என்றார்
மார்க்கண்டர் கூறலுமே மறலிமிகக் கோபித்தான்
ஆர்த்தெழுந்து பாசத்தை அடியான்மேல் வீசிவிட்டான்
பாசமுமோ பாலனது பால்நீற்றுக் கழுத்தினிலே
கூசாமல் பாய்ந்ததனைக் கூர்த்தசிவன் பார்த்துவிட்டான்
இலிங்கத்தின் மேலாக எழுந்தானே பரமசிவன்
கலங்காதே நீயென்று கருதுபுகழ் மாணிக்கு
நல்ல உரை கூறியபின் நடமாடும் இடப்பதத்தால்
மெல்லவே இயமன்றன்னை வீழவுதைத் தான்சிறிது
எமதர்மன் மாண்டுவிட்டான் எருமையுடன் எமபுரத்தார்
அமையுமந்தத் தருணத்தில் அனைவருமே மாண்டார்கள்
போற்றிநின்ற மார்க்கண்டப் புண்ணியனை எம்பெருமான்
ஏற்றமொழி யால்வாழ்த்தி என்மகனே நீ என்றும்
முடிவில்லா ஆயுளொடு முட்டாத பூசனையால்.
அடிநீழல் முனிவனாய் அமர்வாய்யென்றே மறைந்தார்
மார்க்கண்ட மாமுனிவர் மாதா பிதாவுடனே
வார்த்தைநலம் புகன்றிந்த மண்ணகத்தோர் விண்ணகத்தோர்
ஏத்திநினைந் திடுமன்பர் இதயத்தி லேயிருக்கும்
மூத்தமுனி நாயகனாய் முதுசீவன் முத்தராய்
எண்ணில்லாப் பலகற்பம் இருந்துநலம் புரிகின்றார்
மண்மாது பூமியுள்ள மாபாரம் தாங்காமல்
கண்ணுதலைச் சென்றேத்திக் காலனில்லாக் காரணத்தால்



எண்ணரிய உயிரினங்கள் இறப்பின்றி வாழ்கின்றார்
புண்ணியனே இயமனவன் புரிந்தபிழை பொறுத்தருளி
திண்ணமிக அவனுக்கருள் செய்கவென வேண்டிநின்றாள்
பூமாது வேண்டிடவே புண்ணியனார் புன்சிரிப்போ(டு)
ஆமாறு நமனுயிருக் கருள்புரிந்தார் யமனெழுந்தான்
எம்பெருமான் பதம்பணிந்தான் இறையோனும் இயம்புகிறார்
நம்பெருமை அடியார்கள் நமசிவய ஐந்தெழுத்துச்
சொன்னவர்கள் என்புகழின் தோத்திரங்கள் பாடியவர்
உன்னும் வி பூதியுடன் உருத்திராக்கம் அணிந்தவர்கள்
முதலாய தொண்டரிடம் முனைந்துநீ செல்லாதே
எதிரில்லா நான் இயமன் என்றமொழி கூறாதே
அன்னவரை யானெனவே அறிந்துசெயல் புரிந்திடுவாய்
இன்னல்புரி பாவியரை இழுத்துநர கத்திடுவாய்
ஆயபல அறிவுரைத்தார் அந்தகனும் ஏனையரும்
போயினார் இயமபுரம் புரிந்தார் செயல்முன்போல்

"நண்ணருங் கதிபெறு நமது தொண்டரை
மண்ணுல கத்தவர் மனிதரே யென
எண்ணலை அவர்தமை யாமென்றெண்ணுதி
கண்ணுறின் அன்னவர் கழலின் வீழ்தியால்" (க.)

இருந்தவத்தால் குச்சகரும் இறந்த பெண்ணை உயிர்ப்பித்தார்
திருந்துமத யானையை தேவவடி வாக்கிவிட்டார்
இத்தகைய பேராற்றல் இயற்றுதவத் தாற்பெறலாம்
அத்தகைய தவவிரதம் அறைகுவேன் கேண்மினென

## 6 மாயை உபதேசப்படலம்

மாயையங்கே வந்தாள்அம் மாமுனியை நோக்கிநின்றாள்
ஆயதவ மத்தனையும் சோதிமுத்திக் கேயுதவும்
நம்மக்கள் மிகுசெல்வம், நலம்வீரம் நீளாயுள்
இம்மையிலே, பெரும்புகழ்கள், எய்தவழி செய்திடுவீர்
என்றலுமே காசிபரும் ஈதெல்லாம் நீயேதான்
ஒன்றியுரைத் திடுகவென்றார் உடனேதன் மக்களுக்கு
சொல்லுகிறாள் மாயைத்தாய் தொல்லுலகில் பிறந்தபயன்
கல்வியொடு செல்வமுமே கனிந்தபயன் ஆமறிவீர்
பிறங்குமிதில் ஒன்றேனும் பெறாதவர்கள் பேய்ப்பிறப்பாம்
திறங்கொள்ளும் செல்வமெலாம் தேடிமிகப் பெற்றிடுவீர்
நேற்றிரவு பிறந்தமையால் நிசாசரர்கள் ஆனீர்கள்

ஏற்றமிகு தேவரெலாம் எழுந்தபெரு முயற்சியினால்
பெருந்தலைமை பெற்றார்கள். பிள்ளைகளே நீங்களுமே
அருந்திறலைப் பெற்றுவிட்டால் அதிகபுகழ் பெறுவீர்கள்
இத்திசைஆ லந்தீவென் றறியுங்கள் இதன்வடபால்
உத்தர பூ மிப்பெயரோ டோர்பதியும் உண்டுகண்டீர்
அத்தலத்தே அசுரரெலாம் அரியதவம் புரிவார்கள்
இத்தலத்தே நீவிரெலாம் நெடியதவம் புரிந்திடுவீர்
சிவபெருமா னைப்போற்றி சிறந்த குண்டம் உண்டாக்கிக்
குவிநச்சுச் சமித்திட்டு குருதிமா மிசம் சொரிந்து
மிகுயாகம் செய்திடுங்கள் வேள்விக்குப் பொருளெல்லாம்
தகுமுறையாய் தந்திடுவேன் சகலருமே போங்கள் என்றாள்
தாய்சொன்ன மொழிகேட்டுத் தம்பியரொ டேசூரன்
ஆயவிதி தவயாகம் ஆற்றுவதற் கங்குசென்றான்

## 7 மாயை நீங்குபடலம்

காசிபரை விட்டகன்றாள் கபடமிகு மாயையவள்
பேசுகின்ற மண்டபமும் பேணுபல பண்டங்களும்
காணாமலே கலங்கி கடுந்துயரத் தாற்கலங்கி
நாணாகி நெடிதுயிர்த்து நற்றவரும் நெஞ்சுடைந்தார்
தன்மைந்தன் காசிபரை சதுர்முகனார் தேடிவந்தார்
புன்மை தரு காமத்தால் புலம்புகிறாய் ஏன்மகனே
தவத்தை மறந் திவ்விதம் நீ தையலிடம் மனம்விட்டாய்
சிவத்தை மறந் துள்ளத்தில் தீநெறியே சென்றாயே

உள்ளினும் சுட்டிடும் உணரும் கேள்வியிற்
கொள்ளினும் சுட்டிடும் குறுகிமற்றதைத்
தள்ளினும் சுட்டிடும் தன்மை ஈதினால்
கள்ளினும் கொடியது காமத் தீயதே (க)

மயல்கொண்ட பெண்ணவளோ மாயையெனத்தெரிந்துகொள்வாய்
செயலெல்லாம் மறந்து விடு செய்தவத்தை முன்போலே
என்றுரைத்து நான்முகனார் ஏகினரவ் விடத்தைவிட்டார்
கன்றுமனக் காசிபரும் கவலையொழிந் தார்சென்றார்

## 8. அசுரர்யாகப் படலம்

தாய்சொன்ன வாறுமக்கள் தவம்செய்ய வடதிசைக்குப்
போய் வருவோம் என்றுரைத்துப் புறப்பட்டுப் போனார்கள்
வரும்பதினா யிரம்வெள்ளம் மாசேனை நடுவினிலே
பெரும் தலைவன் சூரபன்மன் பின்னணியில் தாரகனும்



முன்னணியிலே சிங்கமுகனும் வரச் சென்றார்கள்
இந்நிகழ்ச்சி தனைக்கண்ட இந்திரன் விண்ணுறுதேவர்
திக்குயானை ஆதிசேடன் செறிநாகர் மேருமலை
திக்கதிபர் ஆதிகூர்மம் செகமாது யாவருமே
அஞ்சி மனம் நடுநடுங்கி ஆறாத துயருற்றார்
துஞ்சசுரர் குருவாய சுக்கிராச் சாரியாரும்
ஆகாய மார்க்கமாய் அசுரர்தனைக் கண்டு வந்தார்
ஆகுமொரு மந்திரத்தை அகத்திலே சிந்தித்து
செல்லுகின்ற அசுரர்குலச் சேனைநடுவே சென்றார்
வெல்லரிய சூரனுக்கு விளம்புகிறார் சுக்கிரனார்
சூரபன்மா நீஅசுரர் துன்பத்தை நீக்குகின்ற
சீரான ஏலாதி திரிகடுகம் போல் மிளிர்வாய்
என்றதுமே சூரபன்மன் இசைந்த சுக்கி ரன் விபரம்
அன்றுகேட் டறிந்து கொண்டான். அவரேதம் குருநாதர்
ஆவாரென் றவரடியில் ஆனந்த மாய் வணங்கி
நாவாரப் போற்றினான் நண்ணு சுக்கி ரன். சிவனின்
மந்திரத்தை உபதேச மாயுதவி, ஐம்பொறிகள்
முந்துறாதே யடக்கி மொழிந்த கொலை, கட்காமம்
தீமையெலாம் நீக்கிடுவாய் செய்திடுவாய் தவம் சிறக்கும்
ஆமசுர குலமெல்லாம் அதிகபுகழ் பெற்றிலங்கும்
எனப்புகன்று சுக்கிரனார் ஏகினார் – சூரபன்மன்
அனைத்தினையும் செய்யஎண்ணி ஆலங்கா. டதையடைந்தான்

***

| | | |
|---|---|---|
| அதன்ஓர்பால் | அகலமுடன் | ஆழமெல்லாம் |
| ஆயிரயோ | சனைகொண்டோர் | ஓமகுண்டம் |
| அதைச்சூழ | நூற்றெட்டாம் | ஓமகுண்டம் |
| அவற்றைசூழ்ந் | தாயிரத்தெட் | டோமகுண்டம் |
| விதம்விதமாய் | ஆக்கினான் | யாகத்திற்கு |
| வேண்டுபல | பொருளுக்காய் | மாயைதன்னை |
| இதயத்தில் | எண்ணினான் | உடனே ஈசன் |
| இன்னருளால் | வழங்கினாள் | யாகத்திற்கு. |

***

சிங்கம்புலி, கரிகரடி குதிரைஆடு
சேர்மிருக மாமிசங்கள் இரத்தம் எண்ணெய்
பொங்கிடுநெய் தயிர்பால்கள் கடுகினோடு

பொரிவிளகுத் திரவியங்கள் யாகத்துக்காம்
பசுவினங்கள் நெய்யன்னம் செந்நெல் கொண்ட
பச்சரிசி அரிசனம்சேர் அரிசி பூக்கள்
பசியகஸ் தூரிநறு மணப்பொருட்கள்
பயில்சுருக்குச், சுருவம், பொரி, முதிரைவர்க்கம்
மிகுநச்சுச் சமித்துவகை கொள்கலங்கள்
விண்ணுயர்வச் சிரகம்பம் எல்லாம் வைத்தார்
தகுமூவா யிரம்யோச னைப்பரப்பில்
தனியாகம் செய்யலுற்றான் சூரபன்மன்
மருவுநடு வேதியின் மத்திதன்னில்
வச்சிரகம் பம்நாட்டி நான்குவாயில்
வருவீர மடந்தையரைப் பூசைசெய்து
மாமிசங்கள் பலிகொடுத்து நடுமதிற்குள்
திகழ் பூதம் பிசாசுகட்குப் பலிகொடுத்தான்
செருமா யிரத்தெட்டுக் குண்டந்தோறும்
புகுநஞ்சு விறகிட்டு நெருப்பு மூட்டி
பொலி தம்பி மாரோடு சிவனை எண்ணி
அவன் நாமம் உச்சரித்தான் அவிகொடுத்தான்
அயல்நின்ற தாரகனை வேதி-வேள்வி
அவியாது பார்த்துக்கொள் எனப்பணித்தான்
அப்பால் நூற் றெட்டுவேதி வேள்வி செய்தான்
அவ்வேள்வி சிங்கமுகன் செய்யவிட்டு
ஆயநடு வேதிக்குத் தான்புகுந்து
செவ்வனே சிவநாமம் உச்சரித்துச்
செய்கின்றான் பெருயாகம் சூரபத்மன்
நக்சுவிற கைக்கொட்டித் தீக்கடைகோல்
நச்சுமரத் தாலாக்கி நெருப்புண்டாக்கி
உச்சரித்து மந்திரத்தால் நெய்சொரிந்தான்
உதிரம்மா மிசம்அன்னம் எண்ணெய் இரத்தம்
தயிர்பால்தேன் நெற்பொரிதோ ரைநெல்மலைநெல்
சார்குளநெல் தினைஇறுங்கு முதிரைவர்க்கம்
உயர்மிளகு கடுகுஎள்ளு யாவும் கொண்டு
ஓமத்தீ ஒளிர்வீசிற் றுணர்ச்சி யாகம்
அயன்திருமால் விண்ணவர்இந் திரன்நடுங்க
அடுசூரன் இளைஞரொடு பத்தாயிரமாண்
டியற்றினான் பெருயாகம் சிவன்வராமல்
இருப்பதறிந் துயர்விண்ணில் நின்றவாறு
தன்னுடம்புத் தசையெல்லாம் வாளினாலே
தானரிந்து யாகத்தில் போட்டுப்போட்டு
உன்னிவரும் இரத்தத்தை நெய்யாய் ஊற்றி



ஓராயிரம் வருடம், யாகம் செய்தான்
வெட்ட வெட்டத் தசைகளெலாம் வளரக் கண்டான்
விடையவனும் வாராமையால் பின்ஓ ராண்டு
திட்டமிட்டு முன்போல யாகம் செய்தான்
சிவன்காட்சி தராமையால் மனம்வருந்தி
நட்டநெடு வச்சிரகம் பத்தி னுச்சி
நயந்தேறி வீழ்ந்தெரிந்து சாம்பரானான்
சிங்கமுகன் இதையறிந்தான் வேள்வி நீங்கி
சிந்தை மிக நொந்தரற்றி வந்தான் ஆங்கே
எங்கள்குலம் காக்கவந்தாய் எங்குசென்றாய்
எந்தைநீ தாயும்நீ எம்மன்னன்நீ
எங்கேபோய்ப் புகுந்தாயோ எங்களண்ணா
என்றலறிப் புரண்டழுதான் தாரகன் தன்
தொங்குதுதிக் கையாலே அடித்து விம்மி
தொடுகடல்போல் புலம்பினான் துயரத்தாலே
அங்குசிங்கன் தன்னுடைஆ யிரம்சிரத்தை
அயில்வாளால் அறுத்தறுத்து வேள்விக்குண்டம்
பொங்குவிதம் போட்டெரித்தான் தலைகள் முன்போல்
பொலிந்துமுளைத் தெழக்கண்டான் வீரம்கொண்டான்
தாரகனும் அவ்விதமே தலையறுத்துத்
தழல்ஓம குண்டத்தில் போட்டான், ஏனைச்
சூரர்களும் தலையறுத்துக் குண்டமிட்டார்
சுடுதீயில் பலவசுரர் வீழ்ந்து மாண்டார்
விண்ணவர் கோன் இந்திரனும் விபரம் கேட்டு
மிகமகிழ்ந்து வானகத்தில் பார்த்து நின்றான்
தண்ணளியான் சிவபெருமான் ஆங்கண் ஞானச்
சதுர்மறையந் தணக்கிழவ னாகவந்தார்
சிங்கமுகன் தனைநோக்கி நீங்கள் இங்கே
சஞ்சலிக்கும் வரலாறு யாதோ என்றார்
அங்கவனும் தங்களது சரிதை எல்லாம்
அந்தணர்க்குப் பரிவாக அறைதலுற்றான்.

## 9. வரம்பெறுபடலம்

அப்பனாம் காசிபர்எம் அன்னை மாயை
அன்னையின் சொற்படியே அரனை வேண்டி
ஒப்பிலாத் தவம் செய்தோம் சிவனைக்காணா
துடலரிந்து வேள்வி செய்தான் என்றனண்ணன்
அண்ணனைப் போல் நாமுமுயிர் விடத்துணிந்தோம்
அந்தணர் நீர் வராவிட்டால் இறந்திருப்போம்

கண்ணுதலும் சிங்கன்மொழி கேட்டுச் சொல்வார்
கவலைதனை இனிவிடுக என்று கூறி
மழவிடையோன் வான்தேவ கங்கை தன்னை
வரவழைத்தான் வந்தகங்கை நடுக்குண்டத்தில்
மழமழெனப் புகுந்திடலும் மாண்டசூரன்
வந்துதித்தான் அசுரரெலாம் குதுகலித்தார்.
எல்லாரும் கண்டுகொள அந்தணர்தம்
இயல்பான வடிவெடுத்தார் உமையாளோடு
சொல்லார்முக் கண்ணுடனே நாற்றோள் கொண்டு
தோன்றினார் சூரரெலாம் வீழ்ந்து போற்றி
எந்தையே எம்முன்னே வந்தாய் ஈசா
எங்கள்தவப் பயன்தருவாய் என இரந்தார்
வெந்துயரம் மிகப்பட்டீர் இனிஉமக்கு
வேண்டும்வரம் என்னஎன விடையோன்கேட்டான்
பிரமனுடன் அமரரெலாம் இதனைக்கண்டு
பெரிதுயிர்த்து தத்தமிடம் போயகன்றார்
அரனுடைய திருவடியைச் சூரபத்மன்
அவனியிலே வீழ்ந்திறைஞ்சி வேண்டுகின்றான்
பிருதிவியின் அண்டமெலாம் அரசனாக
பெரும்ஆஞ்ஞா சக்கரமும் அவற்றைக்காக்க
இருதயத்தில் நினைத்தவுடன் அங்கங்கெல்லாம்
ஏகுதற்கு வாகனமும் அழியா யாக்கை
மிகுபலமும் விட்டுணுவா தியரை வெல்லும்
வெம்படையும் பெருவலியும் படைக்கலங்கள்
வெகுபலவும் வேண்டுமென வரங்கள் கேட்டான்
விமலனுமே அவன்கேட்ட படிநயந்தார்.
ஓங்குமா யிரங்கோடி அண்டம் தன்னுள்
ஓராயிரத் தெட்டை யுகநூற் றெட்டு
தாங்குமர சாள்க இந் திரஞாலத்தேர்
தருமோராஞ், ஞாசக்க, ரமும்தந், தோம்நற்
சிங்கவா கனந்தந்தோம் அசுரர்ஏனைத்
தேவரைவெல் லும்பாசு பதமும் வேண்டும்
துங்கமிகு படைவளமும் தந்தோம் என்றார்
துணைவரெனும் இருவரும்வந் திறைஞ்ச, ஈசன்
மக்களே நீவிர்நும தண்ணனுக்கு
வயமிகுமீர் தோள்களைப் போல் வாழ்வீராக
மிக்கிடுவிண் ணோர்தம்மை வெற்றிகொள்வீர்
விளங்குமென் சக்தியன்றி நுமையார் வெல்வார்
என உரைத்துக் கங்கைதனை வானனுப்பி
எம்பெருமான் பரமசிவன் மறைந்தார் அன்றே



மனமகிழ்ந்து சூரபன்மன் வணங்கி வாழ்த்தி
வருதம்பி மாருடனே கொலுவிருந்தான்

## 10. சுக்கிரனுபதேசப் படலம்

சூரபன்மன் தனை அசுரர் பலரும் வாழ்த்தி
துள்ளினார் ஆடினார் பாடினார்கள்
சேர் படைகள் அணிவகுக்கத் தலைவர் பல்லோர்
செயல்புரியத் திக்கெங்கும் விண்ணும் மண்ணும்
அனுப்பிவிட்டுத் தம்பியரோ டுவகை பொங்க
அப்பனாம் காசிபரை அணுகினார்கள்
கனத்ததவத் தால் பெற்ற வரங்களெல்லாம்
கனிவாக எடுத்துரைத்தான் சூரபத்மன்
உளம் வெதும்பி னார்முனிவர், தேவர்க்கெல்லாம்
ஊறு வந்த தோவேதா சாரமெல்லாம்
தளர்ந்ததோ எனக்கலங்கி, சுக்கிரன்பால்
தகுந்தவழி கேளுங்கள் எனவிடுத்தார்.
சுக்கிரனை வந்தடைந்தார் சூரர் கூட்டம்
தொழுதார்கள் நாங்களினிச் செய்வதென்ன
பக்குவமாய் சொல்லுகஎன் றாங்கே நின்றார்
பலவானாம் சூரனுக்குப் குருபகர்வார்
பதிபசுபா சங்கள்மூன் றுண்டென் றும், பின்
பயிலுமிரு வினையினால் பிறப்பிறப்பு
விதி முறையில் வருமென்றும் இன்பதுன்பம்
விளையுமென்றும் ஊழினாலே மறுபிறப்பில்
துன்ப இன்பம் தொடருமென்றும் பிறவிபின்னும்
தொடருமென்றும், பசுக்கள் பதி ஒன்றேயாகு
மென்பதனால் பதிக்குமே குற்றம் சூழும்
என்றும்சிலர் கூறுவர் யான் இயம்பக் கேண்மின்,
பாசமெனச் சொல்வது பொய் இரண்டாய்க் கூறும்
பதியும் அந்தப் பசுவுமொன்றே, சிவனுற் பத்தி
நாசமிலார் மலரகிதர் சோதிரூபர்
நண்ணுதிரு விளையாட்டின் இச்சை கொண்டு
தம்மாயை யால் பூதக் கூட்டம்மற்றும்
தமக்குரிய பிறவற்றை யாவுமாக்கி
வெம்மாயை உடம்பெல்லாம் கடாகாயம்போல்
மிகவும் தாம் கலந்து நின்றே உடம்பழிந்தால்
தம்முன்னை நிலையிருப்பர், இந்தவாறே
சங்கரனார் எக்காலும் ஆடல் செய்வர்
இம்மை இரு வினைகளும்பொய் அவற்றாலெய்தும்

இன்பதுன் பங்களும்பொய் முத்தியென்றும்
அதற்குயாம் முயல வேண்டும் என்பதும் பொய்
ஐம்புலனும் பொறிகளும் பொய் அவற்றைக்காணும்
பசுவும் பொய்யாம், புத்தி செயல்கள் வாக்கு
பலவும் பொய் இவையெல்லாம் உடம்புக்கன்றி
சிவனைப்போய்ச் சாராது பிறப்பிறப்பு
செயும் வினைகள் யாவுமே சிவனுக்கில்லை
கவனித்தால் இவையனைத்தும் உடம்பிற்கேயாம்
கடல்கடோறும் பொருந்திநிற்கும் ஆகாயம்போல்
வருவதுபோ வதும்ஆவ தழிவதும் பின்
வல்வினைகள் இயற்றுவதும் உடம்பிற்கேயாம்
கருதுமுயிர் தானேயாய்ப் பொருந்து மீசன்
களங்கமின்றி ஒரேதன்மை யாயிருப்பர்
தருமம்நம் துணையென்றும் அதனைத் செய்தல்
தகுமென்றும் பாவம்தீ தது தகாது
தருமிந்த மொழி யெல்லாம் அறிவீனம்காண்
தருணத்தில் எவை செய்ய நேர்ந்ததோ அச்
செயலெல்லாம் இதுதீது இதுநன்றென்று
சிந்தியா தவையெல்லாம் மாயைஎன்று
செயற்படுத லேமுறைமை, தருமத்தைச்செய்
தீப்பாவம் செய்யாதே என்பார்மூடர்
இவற்றைச் செய்தால்வருவ தொன்றுமில்லை
இவையெல்லாம் கனவாகும் மறுமைக்கில்லை
புவியிலே மறுபிறப்பென் பதுவுமில்லை
புகழ் பெரியர் சிறியரென் பது தகாது
உயிரெல்லாம் ஒன்றாகும் என்பதுண்மை
உரைக்குமிது ஞானியர்காண் உண்மையாகும்
அயராதே மகனேநீ மேன்மையுற்றாய்
ஆகையால் நீபிரம்மம் ஆனாய் கண்டாய்
உங்கள் பகைத் தேவர்களை வணங்கிடாதே
உம்பரரைத் தண்டித்துச் சிறையிலேவை
அங்கவரைத் துன்புறுத்தி ஏவல் கொள்வாய்
அவர்களது பதவிகளை அசுரர்க்காக்கு
கொலைகளவு கள்காமம் வஞ்சகம் செய்
குறையொன்றும் வாராது புகலுமண்டம்
பலவும் பார்த் தாங்காங்குன் இறைமையைச்செய்
பயிலுமிவ் வண்டத்தில் வீற்றிருப்பாய்.



## 11, அண்ட கோசப்படலம்

எங்குருவே உங்கள்உப தேசம்நன்றே
ஈஸ்வரனார் தந்தஆ யிரத்தெட்டண்டம்
தங்குமவற்றின் நிலைமை சாற்றுகென்ன
தானறிந்த படிசுக்கிரன் உரைக்கலுற்றான்
மூலப்பிர கிருதிக்கு மேலேயுள்ள
மொழிஅசுத்த மாயைசுத்த மாயைஎன்னும்
மூலதத் துவங்களும் அவற்றில் தோன்றும்
முழுவதுமே நிற்கஇப்பால் அவற்றின் கீழே
உள்ளமூ லப்பிரகி ருதியின் கண்ணே
ஒளிர்புத்தி தத்துவமும் தோன்றும் அஃதில்
துள்ளும் அகங் காரதத் துவங்கள் தோன்றும்
தொடரதிலே ஐம்புலன்கள் தோன்றும் ஆங்கண்
ஆகாச முதலைந்து தத்துவங்கள்
அணிதோன்றும் பிருதிவி தத்துவத்தில்
ஆயிரமாகோ டியண்டம், உள, அவைகள்
அமைந்தபொன் னிறமுடனே பரந்திருக்கும்
ஒன்றின் மேல் ஒன்றாக இருக்கமாட்டா
உனக்குத்தந் தனஆயி ரத்தெட்டண்டம்
ஒன்றியவவ் வண்டநிலை உரைக்கற் பாற்றோ
ஓரண்டத் தினினியற்கை சொல்லக்கேட்பாய்
சாளரத்தில் தோன்றுசூ ரியவெளிச்சம்
தங்குபர மாணுக்கள் இருபான்நான்கு
சூழும்ஒரு மயிர்நுனியாம் அதனில்எட்டு
தோன்றும்ஈர் அதில்எட்டு பேன்அஃதெட்டு
நெல், நெல்லில் எட்டொரங் குலமாம் அஃதில்
நிகழும் இரு பான்நான்கோர் முழம், முழங்கள்
சொல்லும் நான் கொருதனுவாம் தனு இரண்டு
தோன்றும் ஒரு தண்டமாம் தண்டமீரா
யிரங்கள் ஒரு குரோசமாம் குரோசம் நான்கு
இணைவதொரு யோசனை, யோ சனைகள் பின்னி
வருநூறு கோடி ஓர் அண்டமாகும்
மண்ணுலகின் மேல், உயரம் ஐம்பான் கோடி
யோசனையாம் கீழ்ஐம்பான் கோடியாழம்
நுவல் மேரு வரையிருந்து திசைகள் எங்கும்
பேசும் அண்ட கடாக ம் வரை ஐம்பான் கோடிப்
பெருந்தூரம் ஆகும் புவி அடிக்கீழ் அண்ட
கடாகம் ஒரு கோடியோ சனை அதன்மேல்
காலாக்கினி உருத்திரனின் கோயில் ஓங்கும்

இடமாகும் ஒருகோடி யோசனை அங்
கெழு சுவாலை யோசனைகள் பத்துக் கோடி
அக்கினியின் புகை பரவும் ஐந்து கோடி
அவர் சிங்கா சனஉயரம் ஆயிரம் அப்
பக்கு வாசனம் இரண்டா யிரப்பரப்பு
பரவுகாலாக் கினிபதினா யிரமுயர்ந் தோன்
இவர் பத்து ருத்திரரும் பத்துக்கோடி
இசைந்த பரி சனங்களும் சூழ்ந்து நிற்க
திவளும்வாள் பரிசைவில் அம்பு தாங்கித்
திகழுவார் ஆதிகூர் மம் துதிக்கும்
குறித்திதன்மேல் நரகங்கள் இருபத்தெட்டுக்
கோடியுள, அதன்மேலே, கீழே மண்ணும்
பொறித்த நடு இரும்பும்மேல் பொன்னு மாய
புவனம் தொண்ணூற்றொன்ப, திலட்சமான
உயரமுள ததன்மேலே மழுவொன்றேந்தி
உருகரிய முகத்துடனே சுழலும் கண்கள்
பயிலும் கூர் மாண்டருத்திரா வீற்றிருப்பர்
பாதலங்கள் ஏழிருக்கும் அதற்குமேலே.
அதற்குமேல் கனிட்டபா தலங்களுண்டு
அதன் கீழே அசுரரும் நடுப்பரப்பில்
விதப்பட்ட நாகர்களும் மேற்பாகத்தில்
வீரமிகும் அரக்கர்களும் இருப்பர் மேலே
ஆடகேச ருத்திரனின் புவனம், அப்பால்
அட்டகஜம், அட்டமா நாகம் ஆதி
சேடனால் தாங்குகின்ற பூமி யுண்டு
திகழுமிந்தப் பூமியிலே சம்பு, சாகம்
கோமேத கம், புட்க ரம்க்ர வுஞ்சம்
குசைசான்ம லிப்பெயர்கள் உடைய ஏழு
தீவுண்டு பால்தயிர் நெய்உவர் தேன்
செங்கரும்புச் சாறுநன்னீர்க் கடல்களுண்டு
இவற்றினை சூழ்ந்து சுவர்ண பூமியுண்டாம்
இதைச் சுற்றிச் சக்ரவா ளக்கிரியுண்டு
கவர்ச்சிதரு புற ஆழி இருண்ட பூமி
கவினண்டச் சுவர் இருக்கும் கணக்கிட்டுக் கொள்
பிரமாவின் வலப்புறத்தில் உதித்த மைந்தன்
பேரான சுவாயம்பு வுக்கு மைந்தன்
பிரிய விர தன்பூமி முழுது மாண்டான்
பிள்ளைகளாய் அங்கித்ரன் துதிமான் வபுட்டு
மேதாதி சோதிட்டு அவ்வியன சீர்
மிருசவநன் எனஏழு பேரிருந்தார்



ஆதரவாய் எழுதீவும் அவர்களாண்டார்
அணிசம்பு தீவரசன் அங்கி தீரன்
தன்னரசை ஒன்பதுகண் டங்களாக்கி
தனயராம் பாரதன் கிம் புருடன் அரி,
மன்னுகேது மாலன் குரு பத்தி ராசு வன்
வரும்இளா விருதன் இர மியன் இரண்யன்
அரசுசெய விட்டனனே, தீவின் மத்தி
அணிமேரு மலையுண்டு, பூமியின் மேல்
பெருமுயரம் எண்பான் நான்காயிரம் கீழ்
பேணுபதி னாறாயிரம் மேல் உச்சி
முப்பத்தீ ராயிரம் கீழ் நன்னான் காகும் *
முளரிபோல் வடிவுடைய மேரு மீது
செப்பரிய மூன்றுமே கலைகளுண்டு
திகழ்மேல்மே கலையிற்பல சிகரமுண்டு
நடுச்சிகரம் பிரமன் மனோ வதிவிளங்கும
நவில்மேற்கு விஷ்ணுவை குண்ட மாகும்
வடகீழ்பால் சிவனுடைய புரம்சோதிட்கம்
மருங்கெட்டில் திசையதிபர் புரங்களுண்டு
அம்மலையின் மருங்கிலே வடக்குத் தெற்காய்
அதி நெடிய வழிப்போக்குக் குகையொன்றுண்டு
செம்மையிதைச் சூரபத்மா, நினைத்துக் கொள்வாய்
சீர்மேருக் கீழ்திசையில் வெண்மையான
மந்தரமும், தெற்கிலே பொன்னிறத்து
மலைகந்த மாதனமும் மேற்கில் நீலம்
தந்தநிற விபுலமலை மாதுளம்பூ
தனிநிறத்து சுபார்சுவமலை யும் வடக்கில்
அவற்றில் முறையே கடம்பு நாவல், ஓங்கும்
அரசால விருட்சமுள. நாவலுற்ற
உயர்பரப்பு தனித்தனியீர் ஆயிரம் மற்
றொவ் வொன்றும் ஆயிரமாம் மலைகள் சூழ
அருணம்மா னசம், அசிதோ தம், மாமடு, வென்
றரியநீர் நிலையுண்டு, வனங்களாக
திரள் சயித்தி ரதம் நந்த னம் வைப் பிரசம்
திருதாக்கியம் உண்டு, மலை, மேரு தெற்கில்
நாவன் மரம் நின்றதால் பாரதவருடம்
நாவலந்தீ வென்ற பெயர் உடைத்தாயிற்று
நாவலின் பழச்சாறு பெருகிஓடி
நதிசாம்பு நதம் என்னும் பெயராயிற்று
இந்நதி நீர் பருகியவர் பொற்றேகத்தை
எய்திமூ வாயிரமாண் டினிது வாழ்வார்

* யோசனை

மன்னுகிரி மேருதனைச் சூழவுள்ள
மலைஎட்டு விளங்கியழ கெறித்திலங்கும்
கிழக்கிலே மாலியவான், தெற்கு நிடதம்
கிளர்ஏம கூடம்இம யம்மேல் பாலே
அழகு கந்த மாதனமும் வடக்கே நீலம்
ஆய சுவே தம்சிருங்கம் அமைந்திருக்கும்
வடகடலி லிருந்து சிருங் கம் வரைக்கும்
மன்னு குரு* வருடமாம் அதிலிருந்து
தொடர் சுவே தம்வரைஇ ரணிய கண்டம்
தொடர்நீல மலைவரைஇ ரமிய கண்டம்
மேருவைச் சூழ்ந்தது இளா விருதகண்டம்
மிளிர்மாலி யவான் தொட்டுக் கடல்வரைக்கும்
சீரதிக பத்திரா சுவகண்டம், நற்
தேசுகந்த மாதனம்மேல் கேதுமாலம்
நிடதமுதல் எழும் வரை அரிகண்டம், பின்
நிறை இமயம் வரையும் கிம் புருட கண்டம்
படரும் தென் கடலிருந்து இமயம் மட்டும்
பரவுபா ரதகண்டம் பொலிந்திருக்கும்
தகு கேதுமா லம்பத்திரா சுவ கண்டங்கள்
தனித்தனிமுப் பத்துநால் யோசனைகள்
மிகுதி ஒவ் வொன்றுமொன்பான் ஆயிரங்கள்
வியன்பரப்புக் கொண்டனவாய் விளங்கி நிற்கும்
பாரதத்தைத் தவிர்ந்தமற்றை எட்டும் வாழ்வோர்
பயில் தேவ ராய்த்திகழ்வர் குருக்கண்டத்தில்
ஓர் தாய்க்குப் பெண்ணாணாய் ஒருங்கு தோன்றி
உடல் புணர்ந்து தேவதருக் கனிகாயுண்டு
பச்சை நிற முடையவராய் வாழுமாயுள்
பதின்மூவாயிரமுடைய ராயிருப்பார்
மெச்சுகின்ற படிகநிற முடையராகி
விறல் முனிவர் சாரணர் சித் தர்கள் கூட்டம்
அதன் வடபால் வசிப்பர் மேற் குறித்த ஆயுள்
ஆயபத்தி ராசுவத்தில் செந்நிறத்தர்
ஓதும் இர ணியத்திலே மதி நிறத்தார்
உண்ணுவது பழவர்க்கம் இரமியத்தில்
கருங்குவளை நிறமுடையர் உண்டி ஆலங்
கனியாகும் இளாவிருத வருடந்தன்னில்
உருவெண்மை உடையர்கள் னல் புசிப்பர்
உயர்கேது மாலம்செங் கழுநீர் வண்ணர்

* வருடம் –கண்டம்



உண்பர் கண்ட கிப்பழங்கள் அரிகண்டத்தில்
ஓங்குசந் திரதிறத்தர் கனிகாய் உண்பர்
தண்கிம்பு ருடத்தில் வெண் மை நிறத்தர்
தரும் இத்திப் பழமுண்பர் ஏமகூடத்
தென் பாலும் இமயவட பாலுமாகித்
திகழும் இக் கிம்புருடத் தேகைலாசப்
பொன்மலையுண் டதன்மேலே உமையினோடு
புண்ணியனாம் சிவபெருமான் வீற்றிருப்பர்.
அம்மலையோ ஊழிகா லத்தில் அண்டத்(து)
அடிமுடிகள் வரைவளரும் இந்த எட்டுச்
செம்மியகண் டத்திருப்போர் நோய்மூப் பின்றி
திறல் அறிவு நிறைஆயுள் சீராய்ப் பெற்று
கிரதயுகம் போல்ஏனை யுகமும் வாழ்வார்
கிரமமாய்ப் பாரதத்தில் புரிந்த நன்மை
தருவினையின் பயனெல்லாம் எய்து வார்கள்
சாருமிக் கண்டத்தில் மழை பெய்யாது
பாரதத்தோர் உழவு முதல் தொழில்கள் செய்வர்
பாவபுண்ணி யத்தின்அரன் அருள்பெற்றுய்வர்
சீரறிவு நிறைஆயுள் வடிவம் உண்டி
செய்கையெலாம் யுகங்களுக்குப் பொருந்தக் காண்பர்.
காய்கனிமூ லங்கள்மலை நெல்லையுண்பர்
கழறும் எட்டு வருடத்தரும் இங்கே வந்து
தோய்பாவ புண்ணியங்கள் இயற்றிப் போகம்
துய்த்திடுவார் ஆதலால் பாரதம் தான்
நல்வினைதீ வினைகளுக்குக் காரணங்கள்
நல்குமிடம் எனத் தெளிந்து முனிவர் தேவர்
சொல்விளங்கும் பூசைதவம் அனைத்துமிங்கே
சூழ்ந்து வந்து குறைகளெலாம் நீக்கிக் கொள்வர்.
சீராரும் பாரதனின் மக்களாகச்
சிறப்புடைய இந்திரன், கசேருகன், நற்
பேரார்தா மிரபன்னன், கபத்தி, நாகன்
பேணு சௌம்யன் கந்த ருவன், வருணன், எண்மர்
நேரான குமரி என்னும் பெண்ணும் வந்தார்
நிகழும்பா ரதனாண்ட பாரதத்தைக்
கூறாய் ஒன் பது போர்க்கும் கொடுத்தான் அஃதில்
குமரி கண்டம் மற்றவற்றில் சிறந்த தாகும்.
கங்கை கவு தமியமுனை துங்க பத்ரை
காவிரிநர் மதை சரசு வதி பாலாறு
பொங்கு பெண்ணை குமரிபாஞ் சாலிவேணி
பொருநைசர யூ முதலாம் நதிகளுண்டு

பொதியம் மகேந் திரம் சையம் பாரியத்ரம்
பொருந்து சத்தி மான் விருட்சம் விந்தம் என்னும்
அதிசிறந்த ஏழுமலை யுண்டு காஞ்சி
ஆதியஏழ் முத்திதரும் நகரமுண்டு.
சிவத் தலங்கள் ஆயிரத்தெட்டுடனே, மேலாம்.
செழித்தவை திகவொழுக்கம் செறிந்து வேத
தவசத்ய நெறியுடைத்து குமரி கண்டம்
சாருமிவை பொருந்தியன சம்புத்தீவாம்.
பாற்கடலால் சூழ்ந்திருக்கும் சாகத்தீவை
பயில்பிரிய விரதனது மகன் மேதாதி
ஆட்சி செய்து சாந்தவயன் சிவன் சிசிரன்
ஆனந்தன் கோதயன்கே மகன் சீர்த் துர்வன்
ஏழுதம் மக்களுக்கும் பகிர்ந்தளித்தான்
இங்குசோ மகம் சுமனம் நார தீயம்
சூழும் சந் திரம் வப்பி ராசனம் பொற்
துந்துபிகோ மதமெனுமேழ் மலைகளுண்டு
சிவை விபாவை மநுதத்தை சித்தி கிரமை
தெருள் அமிர்தை சுகிர்தை என ஏழா றுண்டு
பவனமாம் வாயுபகவானை இங்கே
பரவுவார் குகுரர்ஆ ரியர்கள் விந்தர்
தயிர்க்கடல் சூழ் குரைத் தீவை வுட்டு மன்னன்
தன் மக்கள் உரோகிதன் சுப் பிரதன் தீரன்
வைத்திதன் சுவேதகன் சித்யன் மூகன்
மருவுமெழு பேருக்கும் வகுத்தளித்தான்
அங்கே உன் னதம்குமுதம் குமாரம் மேகம்
அணிசந்த கம் மகுடம் துரோணம் என்னும்
தங்குமெழு மலைகளும் சோனை தோமை
தண் வெள்ளி மதிநேத்தி ரைவிருத்தி
விமோசனை என்னுமேழ் நதிகளுண்டு
விரைவாயு வைத்தெய்வ மாகக்கொண்டு
பராவிடுவார் தர்ப்பகர் சா ரணர்விதண்டர்
பயில்தண்டர் நீலர்கபி லர்களாவார்
நெய்க்கடல் சூழ் கிரவுஞ்சத் தீவுமன்னன்
நிகழ் பிரிய விரதன் மகன் சோதிட்டென்பான்
மக்கள்சா ரணன் கபிலன் கிருதி கீர்த்தி.
வரு இலம்ப கன்வேணு மானஉற்பிதற்கு
பிரித்தளித்தான் குசேசயம் புஷ்பா வர்த்தம்
பிறங்கும் அரி வித்துருமம், இமம்.து திமானம்
பொருத்தமந் தரம் என்னும் மலைகள், தம்பை
புனிதை, பூ ரணைசிவை விதூதபாவை.



இமைசர்வ பாபகரை எனும்ஏ ழாறும்
இங்குண்டு, பிரமாவை வணங்குகின்ற
தபதர், சடா வகர், அநே கர்மந்தேகர்
தங்கிவாழ்ந் திடுவார்கள் இதற்கப்பாலே
அணிகருப்பஞ் சாற்றாழி சூழ்சான் மலியின்
அரசன் துதி மான்என்பான் தனது மக்கள்
முனிகுசலன் வெய்யவன் அந்த காரன்
மொழி மனோ ரதன் தேவன் துந்துபிக்கு
பங்காக்கி ஆளவிட்டான், புண்டரீகம்
பயில்திமிரம் சுரபிவா மனம் விருத்தம்
துந்துபிசம் மியத்தடம் என்னும் ஏழு
தொடர்மலையும் புண்டரிகை யாதி யாமை
குமுதை மனோ பமைகவரி சந்தியைப் பேர்க்
குளிர் நதிகள் ஏழுமுண் டங்கு வாழ்வோர்
உமை நாதன் சிவனைத் தொழும் புட்கலாதர்
உயர் புட்க ர்தனியர் சிசிரர் ஆவர்
தேன் கடல் சூழ் கோமேத கத்து மன்னன்
செப்பும் அவ் வியன் என்பான் தனது மக்கள்
சோமன் மரீ சகன் விமோ சனன் குமாரன்
சுகுமாரன் மோகன் சக லன் தமக்கு
ஏழாக்கி நல்கினான், அங்கே சிங்கம்
இரமியம்அத் தம்சலகம் உதயம் ஆம்பி
கேயம்கிர வுஞ்சமெனும் மலைகளுண்டு
கிளர் இட்சூ சுகுமாரி குமாரி மாயை
அயாதி தே னுகபத்தி ஏழாறுண்டு
ஆமங்கர் மந்தகர்மா ன்சரமா கதர்கள்
தயாவுடனே சந்திரனைப் போற்றிவாழ்வர்
தண்சுத்தோ தகக் கடல்சூழ் புட்கரத்தை
சவனனென்பான் தாதகிமா பீதன் பேரால்
எண்ணுமக்கள் இருவருக்கும் கூறு செய்தான்
இடபம் மகேந் திரம் வருணம் வராகம் நீலம்
இந்திரம் மந் திரியம் எனும் மலையேழுண்டு
எழு குடிலை சிவை சமனை தரணி சிங்கை
முந்தும் உமை குமரி எனும் நதியே ழுண்டு
முதுநாகர் நகரர்–ஞா யிறேத்தி வாழ்வர்
துலங்குபுட் கரத்தீவின் முடிவில் மான
சோத்ரகிரி ஐம்பதா யிரமுயர்ந்து
விளங்கு சக டக்கால் போல் வளைந்திருக்கும்
மேவுமதன் திசைகளிலெண் அதிபர் வாழ்வர்
இவ்விதமே கடல் முடிவில் மலைகள் நிற்கும்

இவ்வாறு தீவுறைவார் பவநோயின்றி
செவ்வாயுள் பத்தாயி ரம்படைத்துத்
திரை நரைமூப் பில்லாமல் வாழுவார்கள்
மானசோத்திர மென்னும் மலையைச் சூழ்ந்து
மாணிக்க ரத்தினமாம் நிறத்தைக் கொண்ட
தானசக்கர வாளகிரி யுண்டுட் பக்கம்
தனி ஒளியும் வெளிப்பக்கம் இருளுமாகும்.
அதிலியக்கர் இராக்கதர் பேய்கள் வாழ்வர்
அட்ட பா லகர் மேருத் திசைகளெட்டும்
வதிந்திடுவர், சக்கரவா ளத்தினப்பால்
மகாபெரும் புறக்கடலும் அதற்குமப்பால்
இருட்பூமி, அப்பாலண் டச்சுவர்கள்
இன்னுயிரை வலியவிட்ட பாவத்தாரும்
பொருள் ஞானம் சிறிதுமிலாப் புன்மையோரும்
பொருந்தும் இருட் பூமியிலே கிடந்துழல்வர்.
அண்டச் சுவர் அணிமையிலே அநாதியான
அருட்கடவுள் பரமசிவன் வீற்றிருக்கும்
பண்டை மகா கைலாய மலைவிளங்கும்
பரவி உறை வாரங்கே சிவகணங்கள்
சம்புமுதல் ஆறண்டச் சுவரை இந்தத்
தரணியெனச் சாற்றுவார் தகுசான் றோர்கள்
இம் மண்ணின் மேலேஓர் இலக்கம் தூரம்
ஏழ் பரியான் கதிரவனின் உலகமுண்டு
கதிரவனா ருடன் முப்பான் மூன்றுகோடி
கணதேவர் சஞ்சரிப்பர். புவியினுக்கும்
கதிரவனின் உலகிற்கும் இடையில் மேல் மேல்
கணர்குய்ய, கர், வாயு பதது, சப்த.
மேகங்கள் கிம்புருடர் கருடர் சித்தர்
விஞ்சையர்கள் தேவகங்கை சஞ்சரிப்பர்
ஆதவனின் உலகுக்கு மேலி லட்சம்
ஆய யோசனை திங்கள் உலகிருக்கும்
மேவு திங்கள் உலகின்மேல் ஓர் இலக்கம்
மிகு யோசனை தொலைவில் விண்மீன் தேசம்
ஏவு விண்மீன் உலகின்மேல் வெவ்வேறாக
இரண்டு லட்சம் யோசனைதூ ரத்தில் கோளர்
புதன் சுக்கி ரன்செவ்வாய் வியாழன் காரி
பொருந்துமுல கங்களுள அவற்றின் மேலே
துதி சப்த ரிஷி துருவன் உலகமாகும்
சொன்னதிது வரையும்புவர் உலகமாகும்.
பகர்ந்தபுவர் உலகமிந்தப் புவியிருந்து



பதினைந்தி லக்கம் யோ சனைகளான
மிகுதூரத் துள்ளதிதன் மேற் சுவர்தம்
விண்ணுலகம் எண்பத்தைந் திலக்க தூரம்
சுவருலகத் திந்திரரும் சுரரும் வாழ்வர்
சுவருலகுக் கப்பால் ஈர் கோடிதூரம்
தவத்துமக லோகமுண்டு மார்க்கண்டேயர்
சார்ந்தமுனி வரர்வாழ்வர் அப்பால் எட்டுக்
கோடியோ சனையில்சன லோகமுண்டு
குலவுபிதிர் உறைவார்அப் பாலீராறு
கோடியோசனையில் தவ லோகமுண்டு
குளிர் சனகர், முதலியமா முனிவர் வாழ்வர்
தவலோகத் தின்மேல் ஈர் எட்டுக் கோடி
சாற்றுயோ சனைதொலையில் சத்யலோகம்
அவண் பிரமன் படைக்கின்ற தொழிலைச் செய்வர்
அதன்மேல் முக் கோடியோ சனை தூரத்தில்
முது பிரம லோகமுள ததற் கப்பாலே
முக்கோடி யோசனையில் விட்ணுலோகம்
அதன்மேல் நாற் கோடியோ சனைதூரத்தில்
ஆதியாம் சிவலோகம் அமைந்திருக்கும்
சிவலோகம் மேல் அண்ட கடாக ஓடு
திகழும் ஒரு கோடியோ சனை உயர்ந்து
நுவலுமிந்தப் பிருதிவி அண்டந் தன்மீது
நூற்றெட்டுப் புவனம், ருத்ரர் இடமுமுண்டு
உயர் சிவா கமங்களும் பிறநூல்யாவும்
ஒளிரண்டத் தியல்பை வெவ் வேறாய்க் கூறும்
நயமாக இவற்றைநான் நன்காராய்ந்து
நன்றுரைத்தேன், சிவபெருமான், உனக்குத் தந்த
ஆயிரத் தெட் டண்டமும் நான் சொன்னதைப் போல்
ஆகுமென அறிகுவாய் சூரபன்மா,
நீயவற்றைச் சென்றுகாண் என்று வாழ்த்தி
நின்ற சுக்கி ரனைப் போற்றி மகிழ்ந்தான் சூரன்

## 12. திக்குவிஜயப் படலம்

சுக்கிரனின் உரை நயந்து சூரனும் சிங்கனும் புறப்பட்டார்கள்
தோற்றுபடை காத்து நின்ற தாரகனுக் கத்தனையும் தொடர்ந்து
சொன்னார்
அக்கணமே மனமகிழ்ந்த தாரகனும் குதூகலித்துப் பகைவர்
அழித்துவெல் லுவதெமது கடனென்றான். மாயைஆங்
காகாயத்தால்

வந்து நின்றாள் சூரனுடன் தம்பியரும் அசமுகியும் வணக்கஞ்
செய்தார்

வாழ்த்துரைத்தாள் உங்களுக்கு வேண்டிய போதெனை
நினைந்தால் வருவேனென்றாள்

இந்திரனை வானவரை வென்றுலகமத்தனையும் இனிதே ஆள்வீர்
எனவாழ்த்தித் தாய்ஏக சூரனளகாபுரியை வெல்லச் சென்றான்
சிவன் தந்த இந்திரஞா லத்தேரில் சூரன்பன்மன் . சேனைசூழ
சிங்கமுகன் நாலுவகை சேனையொடு வருகைதர செல்வம் பூத்த
உவமையிலா வடதிசையின் சீரளகா புரிநோக்கி ஒலிகிளப்பி
உக்கிரமாய்ப் படைசூழ்ந்து வரக்கண்ட தூதுவர்கள் ஓடிச்சென்று
வடமன்னன் குபேரனுக்கு மொழிபுகல, மனமேங்கி, வந்த சூரன்
மலரடியைத் தொழுதுனக்குயான் அடிமைஎன்றலுமே
மணங்குளிர்ந்தவ்

விடமிருந்த செல்வமெல்லாம் வாரிச்சென் றான் சூரன்,
இன்னலாலே

இதயம் நொந் தளகையரன், சிவன் கொடுத்த வரம்தன்னை
எண்ணிநின்றான்.

வடகிழக்கில் ஈசானன் இருப்பதால் அதைவிடுத்து வானவர் கோன்
வதிவிடத்தை நண்ணினான் வரவறிந்த இந்திரனும் மருவு சொர்க்க
இடம்புகுந்து மறைந்துவிட்டான் இதையறிந்த சூரபன்மன்,
புரமனைத்தும்

எரியூட்டிக் கொளுத்திவிட்டுத் தென்கிழக்கின் அக்கினியை
எதிர்த்துச்சென்றான்

அக்கினியும் சூரபன்மன் தனையெதிர்த்துப் படையுடனே
ஆர்ப்பரித்தான்

அடுபோரில் சிவப்படையை விடுவதற்குத் தாரகனும் அங்கே
நின்ற

பக்குவத்தைக் கண்டதுமே அக்கினியும் நடுநடுங்கிப்
பகர்தலுற்றான்

பரமனது சிவப்படையை விடுவாயேல் உலகமெல்லாம்
பழாய்ப்போகும்

அப்படையின் தலைவனுமே பழிபடுவர் ஆதலால்
அதைவிடாதே

அடியனேன் பிழை பொறுப்பாய் எனவணங்கத் தாரகனும்
அக்கினிக்கு

செப்புகிறான் நீஎங்கள் ஏவலனாய் இருந்தென்றும்
செயல்கள் செய்வாய்

திருநகரம் போஎன்று நகரிலுள செல்வமெலாம் திரட்டிச்
சென்றான்

சூரபன் பலிங்கனுடன் பலபாகர் தம்முடனே, சூழ்ந்து செல்லத்



தொடர்ந்தியம புரமடைந்தான் இயமனும் வந் ததிர்
கொண்டு தோத்தரித் நான்
சேரும் நின் உறவோடு நம்பணியை இங்கேயே செய்து
கொண்டு
சீவிப்பாய் எனக்கூறிச் செல்வ மெல்லாம் கொள்ளையிட்டுச்
சென்றார் அப்பால்
தென்மேற்குத் திசையதிபன் நிருதியூர் சென்றார்கள்
செய்திகேட்டுத்
திகழ் நிருதி " நானுமது சுற்றத்தான் " என உரைத்துச்
சேனை சூழ
முன்பாக நின்றதா ரகன்பக்கம் போய்நிற்க, முகமகிழ்ந்து
மொழிநிருதி நகர்விட்டு வருணனிடம் வாயுவிடம் முடுகிச்
சென்றான்
அச்சமிகு வருணனும் கடல்புகுந்தான் வாயுஇருட்
பூமிபுக்கான்
இச்சமயம் வந்துற்ற சூரபன்மன் இருந்தவெலாம் சூறையிட்டு
நச்சுமனத் தவுணருறை சத்தபா தலம்புக்கு நன்மைகூறி
மெச்சுபுகழ் நாகலோ கம் சென்றான் ஆதிசே டன்
போரிட்டான்
வருமாதி சேடனார் தோல்வியுற,அவன்மேலே மகிழ்ந்திருந்து
தருசாகத் தீவடைந்து பாற்கடலைக் கூழாக்கிச் சார்ந்த
வேளை
திருமாயன் கருடன்மேல் ஏறிவந்து சங்குகதை வில்வாள் நேமி
மருவுபடை யொடுவந்து வல்லசுர படையெலாம் மடியச்
செய்தார்
கடும் போரில் எதிர்வந்த தாரகன்மேல் சக்கரத்தைக்
கடிதுவிட்டார்
கொடுமசுரன் மார்பினிலே சக்கரம்போய்க் குளிர்மாலை
யாயிற்றங்கே
திடமான நாரணனும் அசுரரின் வரமெல்லாம் சிந்தை செய்து
அடுபோரை நிறுத்திஅவர் தம்மோடு நட்புரிமை யாக்கிக் கொண்டார்
அதன் பின்பு சூரபன்மன் சுவர்க்கத்தை அபகரிக்க அங்குசென்றான்
இதை யறிந்த இந்திரனும் மனைவியிந்தி ராணியும் இடத்தைவிட்டு
மெதுவாகக் குயிலுருவில் பறந்தகன்றார்,அசுரபடைவிண்ணோர்தம்மை
உதையடி போட் டவர்கையில் விலங்கிட்டு சூரன்முன்நிறுத்தினார்கள்.
தேவரெலாம் மனம்கலங்கி நீயேஎம் தெய்வமெனச் செப்பி நின்றார்
யாவரையும் சிறைநீக்கி எமதேவல் செய்கஎன இயம்பி அப்பால்
பூவயனின் சத்தியலோ கம்சென்றான், ஆங்கவன் புகலுகின்றான்
ஏவரையும் வெற்றி கொண்ட வீரன்நீ யானுன்றன் பாட்டனன்றோ,
காசிபனின் மகனேநீ காசிபரின் தந்தையான், கருத்துக் கொண்டால்

பேசுமுன் பாட்டன்யான் என்றுரைத்து திறல்வில்லும் பேரார்தேரும்
ஆசியுடன் சூரனது தம்பியர்க்கு வழங்கினான். அகமகிழ்ந்து
வீசுபுகழ் வைகுண்டம் சென்றதுமே திருமாயன். மிகவும் வாழ்த்தி
உபசார மொழிபுகல. உளம்மகிழ்ந்து சிவலோகம் உற்றடைந்தான்
சிவன் வாசல் படைநிறுத்தி தான் தனியே சிவபெருமான் செய்யபாதம்
தவளுபில் தொழுதெழுந்தான் சங்கரனும் விடையளித்தார் அப்பால் சூரன்
நவமான அண்டகோ ளகையடைந்தான் வைரவர்கள் உருத்திரர்கள்
வழிகாட்ட அனைத்திடமும் சென்றுவெற்றி கொண்டதன்பின் ஆங்காங்கே தன்
வழி அசுரர் ஆளவிட்டு சுவர்க்கத்தைச் சூரபன்மன் வந்தடைந்தான்
மொழிகின்ற அசுரகுல மன்னன் அசு ரேந்திரன்தன் குருவினோடு
விழிகொண்டு பார்ப்பதற்கு சூரனிடம் ஆர்வமாய் வந்தடைந்து.

## 13. எதிர்கொள்படலம்

நல்லாசி கூறினான் சூரனும் பூவுலகை நாடிவந்தான்
வல்லானாம் இந்திரனும் நான்முகனும் தேவர்களும் மதிகலங்கி
வெல்லாழி மாதவனைப் பாற்கடனுள் கண்டிறைஞ்சி விளைந்ததுன்பம்
எல்லாமே தீருவதற் கென்னவழி என்றிரங்கி ஏத்திநின்றார்
தக்கனது யாகத்தில் நாமெல்லாம் பங்கு கொண்ட தன்மையாலே
நக்கனது தண்டனையே நண்ணியது பலவரங்கள் சூரன்பெற்றான்
பக்குவமாய் அவனிடமே செல்லுவோம் வருக எனப் பகவன் கூறி
ஒக்கபதி னொருகோடி உருத்திரர்கள் உடன்ஏகி உரைத்தார்ஆசி

## 14 உருத்திரன் கேள்விப் படலம்

சிவன்போல வடிவுடைய இவர்கள் யார் என உருத்தி ரர்களைப்பார்த்தான்
அவண் நின்ற நெடுமாயன் உருத்திரனின் வரலாற்றை உரைக்கலுற்றார்
நவமாகப் படைப்பவனே நானென்று நான்முகனும் செருக்குமிக்குச்
சிவனை மறந் ததால் உயிர்கள் பெருகாதுநின்றன கலக்கங்கொண்டான்
அதனாலே பலகாலம் அயனும் பெருந் தவமிருந்தான் அரனைக்காணா
திதயமிக நொந்தழுதான் விழுந்தகண்ணீர் பேய்களாய்வடிவங்கொண்டு



மதிகலக்க முறநிற்க. மயங்கினான் மலரயனும். மயக்கம் தீர்க்க.
மதியழகன் தோன்றினான். மைந்தனே பரம்பொருள்நீ எனச்செருக்கி
இந்த நிலை பெற்றனைநீ. இனிப்படைப்புத் தொழில்புரிக எமதுபக்கம்
முந்துமுருத் திரர்தம்மை உனக்கனுப்பி வைக்கின்றோம் என–மொழிந்தார்
அந்தமில்சீர் பதினொருருத்திரரும் அயன் நெற்றி மிசை வந்துதித்தார்
வந்தவகை விசாரித்து மன்னுயிரைப் படையுங்கள் என்றான் வேதன்
வந்தபதி னொருபேரும் பதினொருகோ டிஉருத்தி ரரைப்படைத்தார்
முந்துவினைப் படிஉயிரைப் படையுங்கள் எனப்பிரமன் மொழிந்தபோதில்
அந்தவிதம் நீபடைத்தி. யாம்செல்வோம் உருத்திரர்கள் பதினோர்கோடி
அந்தரராய் இருக்கட்டும் எனக்கூறி பதினொருவர் அகன்று சென்றார்

## 15. நகர்செல் படலம்

“ பவர் ” முதலாம் பதினொரு கோடித்தேவர் வரலாற்றைக் கேட்டசூரன்
உவகையுடன் அதிசயித்தான். தேவதச்சனைக் கொண்டு நகரமொன்றை
அவனியிலே எண்பதினா யிரம்யோச னைப்பரப்பில் அமைப்பித்தானே
நவமான நால்வாசல் பொன்மதில்கள் கோபுரங்கள் நடனச்சாலை
செய்குன்று 1* சூளிகைகள் மன்றங்கள் சோலைவனம் சிறந்தவாவி
வெய்யமதில் பதினாயி ரம்யோச னைநடுவில் வீற்றிருக்கும்
தெய்வீகத் தொருகோயில் மந்திரிமார் மண்டபங்கள் தேவியோடு
மையலுற அமர்ந்திருக்கும் உறையுள் எலாம் வகைவகையாய் வகுக்கச்செய்தான்
அமைத்தநகர் வீரமகேந் திரமென்னும் அரசாட்சி நகரமாக

*1 சூளிகை–நிலாமுற்றம்

இமையபுரம் ஏமபுரம் இலங்கைபுரம் நீலபுரம் எழிற் சுவேதம்
*2 கமைமிகுந்த அவுணர்புரம் வாமபுரம் பதுமபுரம்
என்னுமெட்டும்
தமதுநகர்க் கெண்திசையும் ஆக்குவித்தான், வடதிசையில்
ஆசுரம்பேர்
உடைய நகர் சிங்கனுக்குத் தந்தான் நா, வலந்தீவில்
ஏமகூடம்
நெடுமலையின் அருகினில்மா யாபுரம்பேர் நகரத்தை
நிறைவாய் ஆக்கி
திடமுடைய தம்பியாம் தாரகனுக்குக் கொடுத்து
சிறப்பினோடு
படைகளுடன் வீரமகேந் திரம்சென்று குதூகலித்துப்
பயின்றானம்மா.

## 16. பட்டாபிஷேகப் படலம்

வீர மகேந்திர புரத்தில் சூரபன்மன் வீற்றிருக்க விண்ணோர்
எல்லாம்
நீரபிஷே கம் செய்ய சுக்கிரனும் முனிவர்களும்
நிறைமலர்கள்
மாரியெனப் பொழிந்தாசி புகல அயன் கிரீடத்தை
வாழ்த்திச்சூட்ட
சூரனுடைய தம்பிமார் அயனரியை இருக்கவைத்து விழா
எடுத்தார்.

****

சூரனின் தம்பிமார் சொற்கட் டளை இட
ஏரார் இந்திரன் ஏழிற்கா ளாஞ்சி
ஏந்தினன், குபேரன் ஏந்தினன் அடைப்பை
வாய்ந்த சாமரை வாயு வீசினான்
வருணன் ஆலவட்டம் வீசினான்
தருமனும் முளரியும் தகுபிரம் பேந்தினர்
உயர் அசு ரேந்திரன் உடைவாள் ஏந்தினான்
ஜெயவிசை பாடினர் சித்தர் கந்தருவர்
முதுகங்கை நீரால் முனிவரர் வாழ்த்தினர்
துதித்தனர் ஏவல்கள் தொடர்ந்தனர் தேவர்கள்

****

## 17. அரசுசெய் படலம்

நீ எனது தந்தை காசி பர்க்குப்பாட்டன்
நெடிது நாம் அழைக்கின்ற தருணமெல்லாம்

*2கமை- அழகு



வா என்று மாயனுக்குச் செயல்பணித்தான்
மலரயனும் புத்திரரும் பஞ்சாங்கத்தைப்
பார்த்துரைக்க வேண்டுமெனப் பணித்தான், செய்ய
பானுதனை வரவழைத்தான், நீ இங்குள்ள
சீர் மதில்மேல் செல்லற்க, கோபுரத்தின்
திருவாயில் வழியாக உட்புகுந்து.
இளங்கதிராய்த் திரிந்திடுக என உரைத்தான்
என்றென்றும் பூரணசந் திரனாய்க் கீழ் மேல்
விளங்குகிற வாயல்வழி மிளிரவேண்டும்
விண்மதிக்கு இவைகூறி நெருப்பை நோக்கி
தளங்குளிரும் மக்களுக்குப் பணியாளன்நீ
தாமரைபோல் குளிர்ந்திருக்க வேண்டும், சூலம்
துளங்குமிய மனைநோக்கி எனது நாட்டில்
தொடர் உயிரை நீ பறித்தல் தகாது வாயு
தனைநோக்கி குப்பைகளை கூட்டவேண்டும்
தண்வாயு, களபநீர் தெளிக்கவேண்டும்
மனநடுங்கும், இந்திரனும் சுரரும் எட்டு
வாழ்திசையின் அதிபர்களும் முனிவோர் தாமும்
இனிவாக இங்குவந்து பணிகள் செய்வீர்
இந்தவகை எல்லார்க்கும் தொழில் கொடுத்தான்
நினைவாரை நினைக்கின்ற நிமலன்தந்த
நெடுவரங்கள் பலபடைத்த சூரமன்மன்
பாங்குமிகு தெய்வதச்சன் புதல்வியான
பதுமகோ மளையைமணம் பூண்டான் சூரன்
தேங்குதிறல் யமன் புதல்விவிபுதை தன்னைச்
சிங்கமுகன் மணம்புரிந்தான் நிருதிபெற்ற
பூங்குயில்நேர் சவுரியைத்தா ரகன் விவாகம்
புரிந்தனன் பின் மேலுலகம் கீழு லோகம்
ஓங்குதிசை யனைத்திலுமே தம்பிமாரும்
உயரரசு புரியவைத்துத் தானும் ஆண்டான்
மந்திரிகள் துர்க்குணன் தருமகோபன்
வக்கிரபாலன் மகிடன் சங்கபாலன்
முந்துதுன் முகன்முதலோர் பதவியேற்க
முக்கண்ணன் வரப்படியே அரசு பூண்டான்.
அந்தரத்தே வர்களெலாம் அசுரர்சொன்ன
அத்தனை ஏ வல்களையும் தவறில்லாமல்
சிந்தைமிக நொந்து நொந்து செய்கின்றார்கள்
தேவரின்கோன் இந்திரனைச் சூரன் நோக்கி

## 18. தேவரை ஏவல்கொள் படலம்

அவுணருக்குச் சந்ததமும் மீன்பிடிக்க
அமரர்கோன் இந்திரனைப் பணித்தான் சூரன்.
கவலையினால் இந்திரனும் கடற்பால் நண்ணி
கைகூப்பி வேண்டினான் வருணன் தன்னை
அவனுடைய எண்ணப்படி மீன்கள் எல்லாம்
அதிகமாய்க் கரைகுவிய வருணன் செய்தான்
உவகையுற்றான் சூரபன்மன் உருகி ஏங்கி
உம்பரரும் கண்பெருகி ஏவல் செய்தார்.

## 19. புதல்வரைப்பெறு படலம்

சூரனுக்குப் பதுமகோ மளையிடத்தே
சுத னொருவன் தோன்றினான். அன்னான் ஓர்நாள்
சூரியனின் கிரணஞ்சாளரத்தினூடே
சுடர்பரப்ப வெகுண்டுபாய்ந் தவனைப்பற்றி
நேரியதன் தொட்டிற்கால் உடனேகட்டி
நித்திரை செய் தான் அந்த நிலைமைகண்டு
சோர்வடைந்த தேவர்கள்போய்ச் சூரன்முன்பு
சொன்னார்கள் பானுசிறைப்பட்ட வாற்றை.
அப்பொழுது சூரபன்மன் மகனைவேண்டி
ஆதவனை மீட்டுவா அயனே என்றான்.
ஒப்புடனே அயனங்கு சென்று வேண்ட
உன்படையை எனக்குத்தா என்று பெற்று
வெப்பனையும் விடுவித்தான் அந்தமைந்தன்
விறற்பானு கோபனென நாமம் பெற்றான்
இப்புதல்வன் பின்அக்கினி முகன் பிறந்தான்
இரண்டுதலை அவனுக்கு விளங்கிற்றம்மா.
இரணியன் முத்தலையுடனும் வச்ரவாகு
ஈரைந்து தலையுடனும் வந்துதித்தார்
பரவுபல மனைவியர்கள் ஒரேகாலத்தில்
பயந்தனர் மூவாயிரம்புத் திரர்கள் தம்மை
வருமிவர்க ளுடன்வீர மகேந்திரத்தில்
மன்னனாய் அரசாண்டான் சூரபன்மன்
உரமிகுந்த சிங்கனுக்கு விபுதையின்பால்
உதித்தனனே அதிசூரன் என்னும் மைந்தன்
மற்றைமனை வியரிடத்தில் நூறுமக்கள்
வயத்தார கன்மனைவி சவுரி என்பாள்
பெற்றெடுத்தாள் அசுரேந்ரன் என்னும் பண்பு



பிறங்குகின்ற அறம்நீதி வீரம் நேர்மை
உற்றபெரும் புத்திரனை: சூரர்பின்னே
உதித்தஅச முகினன்பாள் கற்பில்லாதாள்
நற்றவத்தோர் வேள்விகளை நாசம் செய்வாள்
நாடுகுலம் அழிக்கும்தீ வினையை ஒத்தாள்

## 20. வில்வலன் வாதாவிப் படலம்

பாவமே வடிவுடையாள் நாணமில்லாள்
பயிலமரர் மனைவியரைத் தலைவன் மார்க்கு
மேவுமனை வியராக்கும் விறல் படைத்தாள்
மிளிரழகு வாலிபரை வலிந்து சேர்வாள்.
ஆவலுடன் துருவாச ரிடத்து வந்தாள்
அவரைத்தன் கணவனாய்க் கொள்ள நின்றாள்
மாவலிமை அசமுகி அம் முனிவர் தம்மை
வலிந்திழுத்துச் சேர்ந்திரண்டு மகவைப் பெற்றாள்
மனித முகமுடையவில் வலனும் நீள்செம்
மறியாட்டு முகவாதாவி யும், பிறந்தார்.
முனிவடிவில் * தாய் வடிவில் வந்தமக்கள்
முனிவரது தவப்பயனைக் கேட்டு நின்றார்
தனியான தவங்கொடுக்க மறுத்தவேளை
தந்தையையே கொல்வதற்கு எழுந்தார் மக்கள்
இனி நீங்கள் முனிவர்களைத் துயர்ப்படுத்தி
இறுதியிலே அகத்தியரால் மாள்வீராக
என்று பெரும் சாபமிட்டு முனி மறைந்தார்
இருவருமே தவமிருந்தார் அயனை எண்ணி,
தன்றம்பி வாதாவி தனைத் துணித்து
தழல்யாகம் சொரிந்திறைஞ்ச அயனும் வந்து
கொன்ற தம்பி உயிர்பெறவும் பின்பும் அன்னான்
கொலையுண்டால் எழும்புதற்கு வரமு மீந்தார்
வென்றிமிகும் களிப்புடனே இருவரும் போய்
விறற் சூரன் இடம் சென்று விபரம் சொல்லிக்
குடகநாட்டுக் காட்டினிலே இருவரும் போய்
குறித்திடுமாச் சிரமைத்தவ் வழியே செல்லும்
திடமிகுத்த முனிவர்களை. அழைத்து வந்து
திகழ் முனிவர் போலவில் வலன் நடித்து
அடல் மிகுந்த வாதாபி யாய ஆட்டை
அருந்துகறி யாய்க் கொடுப்பான் உண்டபின்பு

* அசமுகி- செம்மறியாட்டுமுகமுடையவள்
வாதாபி – தாயைப் போல் முகமுடையவன்

கருதிடவே வருகவென ஆட்டைக் கூவ
கனைத்தபடி வாதாபி, வயிற்றினின்று.

## 21. இந்திரன் கரந்துறை படலம்

வெளிவருவான், முனிவருமே இறந்து போவார்
விழுந்தபிணத் தசையுண்பார் இருவர்தாமும்
அளவில்லாக் கொடுந்தொழிலைச் செய்துவந்தார்
அசுரனாம் சூரபன்மன் ஆயிரத்தெட்டு
ஒளிபெருகு மண்டமெல்லாம் இந்ரஞாலத்
துயர்தேரில் வலம்வருவான் அரசுசெய்வான்
களிபொருந்தச் சுற்றுலா முடித்துமாலைக்
காலத்தில் மகேந்திரத்தை வந்து சேர்வான்
இந்திரனைச் சிறைப்படுத்தி அவனதில்லாள்
இந்திராணி தனைக்கவரச் சேனைவிட்டான்
இந்திரனும் கேள்வியுற்று மாயையாலே
ஏகினான் மண்ணுலகம். ஏவலாட்கள்
அந்தரத்தில் காணாமல் அறிவு மங்கி
அமரர்களை அடித்துதைத்துச் சூரன்பால் போய்
இந்திரனும் மனைவியுமே எங்கோ சென்றார்
என்றலுமே தேடும்படி விட்டான் சேனை.
விண்ணுலகம் பொலிவிழக்க உபேந்திரனாய
விட்டுணுவும் வைகுந்தம் சென்றடைந்தார்
தண்ணளிசேர் இந்திரனின் மகன் சயந்தன்
தனது சிற் றப்பனாம் விஷ்ணுவின்பால்
நண்ணினான் பெற்றாரின் செய்திகேட்டு
நடுங்கினான் புலம்பினான் அந்தவேளை
பண்ணிசையார் நாரதனார் காட்சிதந்தார்
பதறிநின்ற சயந்தனுக்குப் பகர்ந்தார் நீதி.

****

ஆக்கமும் வறுமை தானும் அல்லலும் மகிழ்வு மெல்லாம்
நீக்கமில் உயிர்கட் கென்றும் நிலையெனக்
கொள்ளற்பாற்றே
மேக்குயர் கடவுட்டிங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவுநாளும் முறைமுறை பொருந்திற்றன்றே.
(க)

மைந்தா சயந்தா வரும்தாழ் வுயர்வுகள்
இந்த மண்ணில் எவர்க்கு முண்டு
எனப்பல கூறி ஏகினார் நாரதர்
மனம் தெளிவுற்று வருத்தம் தீர்த்தான்
சீர்கா ழிப் பதி சேர்ந்தான் இந்திரன்
நீர்பொலி நந்தன நிறைமலர் கொய்து
எம்பெருமானை இறைஞ்சி மகிழ்வான்
எண்ணிலா அசுரர்கள் இவ்விடம் வந்து
உம்பரர் கோனை ஓடித் தேடினர்
உபாய மாக ஓர் மூங்கிலாய் நின்றான்
இருவரும் தங்கினர் இயற்றினர் பெருந்தவம்
எங்கும் காணாது ஏகினர் அசுரர்
மருமலர் நந்தனம் மழையில் லாமையால்
வாடி வதங்க மனத் துயரத்தை
ஈசனுக் குரைத்தான் இந்திரன் அங்கே
எழுந்தது வானொலி " ஏக்க முறாதே
தேசம் செழிக்க சிறப்புடன் ஒருநதி
தேடி இங்கெய்தும் செழுமலர் பெறலாம்

## 22. விந்தகிரிப் படலம்

எனும் அசரீரி இன்மொழி கேட்டு
இமயவர் கோமான் இதயம் குளிர்ந்தான்
முனிவர் நாரதர் முதுவிந்த கிரியை
முன்னே வந்து முகமன் புகன்றார்
விந்தகிரிக்கும் மேருமலைக்கும்
விரோதமேற்பட விரும்பினார் நாரதர்
அந்தமா மேரு அகந்தையைக் கேட்டாய்
ஆதவன் தொடும்படி ஆகாசம் வரை
வளர்ந்து நிற்கின்றேன் மகேஸ்வரனுக்கு
வளைவில் லானேன் மாதா உமையாள்
வளர்ந்தாள் என்னிடம் மன்னும் கயிலையும்
மருவிய தென்னயல் வானவ ரெல்லாம்
எனைச் சூழ்ந், துள்ளனர் எனப்பல வாக
இறுமாப்புடனே இருப்பதும் மேரு
எனமுனி யுரைக்க, இழிவுரை கூறி
எழுந்தது விந்தம் ஏந்திழையார் போல்
வெட்க மின்றி வில்லாய் வளைவனோ
விமலி உமையாள் வேந்தன் தவத்தால்
அக்கினி வந்தாள் அவள் பிறந்திலனே
அந்த மேருவை ஆதியில்வாயு
தாக்கி எறிந்ததைச் சகலருமறிவார்
சரசப் பறவைமுன் தனிமின் மினியாய்
ஏக்கமாய் நின்றதை எவருமே யறிவார்

இடமுகன் ஏடாய் எழுதிய வண்ணம்
பொய்யோ? எனப்பல புகன்றிகழ்ந்துரைத்து
புவியும் வானமும் பொருந்திய வண்ணம்
மையார் மலையாய் வளர்ந்தது விந்தம்
வானவர் நடுங்கி வழிதடு மாறினர்

## 23. அகத்தியப் படலம்

சூரியன் முதலிய சுரர்குல மெல்லாம்
தொழுதனர் அகத்தியத் தூய மாமுனிவரை:
சீரிய கஜேந்திரன் தேடி யழைக்கத்
திருமால் வந்தருள் செய்யவில்லையோ,
நான்முகன் கிளியாய், நயந்து திலோத்தமை
நங்கையைத் தொடர நம்பன் சிவனார்
தான் காத்தருளிச் சஞ்சலம் தீர்த்தார்
தனிவிருத் திராசுரன் தன்னை யழிக்க
உள்ளங்கையில் உவரியை அடக்கி
உதவிய பெரியோய் ஓங்கிய மலையின்
துள்ளும் செருக்கைத் தொலைத்தருள் செய்கென
துவண்டிடும் தேவரின் துன்பமறிந்து
குறுமாமுனிவர் கோலமா கயிலைக்
குன்றுறை சிவனைக் குழைந்து நினைத்தார்
செறிமலர்க் கொன்றைச் சிவனார் தோன்றி
திறலெலாம் கொடுத்துத் தீதுறு மலையைச்
சென் றடக்கியபின் தென்திசைப் பொதிகை
சேர்ந்து வாழ்ந்திடென சிவனே நினது
பொன்றிருத் தீர்த்தம் பொலிந்தருள் செய்யெனப்
புகன்றதும் காவிரிப் பொன்னியை முனியுடன்
போவெனப் புகன்றார் பொன்னியும் சிவனின்
பூவடி போற்றி புண்ணியா, முனிவரோ,
தாவிய ஐம்பொறி தவிர்ந்தவர் ஆயினும்
தமியேன் ஆடவர் தன்னொடு போவது
சரியோ என்றனள் தையலே கலங்கேல்,
சாருமிம் முனிவன் தன்கை காட்டிப்
புரியுமுன் பொருட்டாய்ப் போ என்ற போதில்
பூமியில் செல்லெனப் புராந்தகன் புகன்றான்
இறைவன் இயம்பிய இசை மொழிப்படியே,
ஏத்துமா குறுமுனி, ஏந்திழை பொன்னியை
நிறைவுறு கமண்டலம் நின்றிடச் செய்து
நேரிழை உலோபா முத்திரை கணவனும்



புலத்தியர் தந்தையும் ஆகிய அகத்தியர்
பொன்மேரு மலையின் தென்பால் சென்றார்.
மலைத்திடு தாரகன் மாயா புரியிலே
வலிக்கிர வுஞ்சன் மலைவழி கண்டார்.

## 24. கிரவுஞ்சப் படலம்

அசுரன் கிரவுஞ்சன் அகத்தியர் வரவை
அங்கே கண்டான் ஆயினான் மலையாய்
வசியமாய் ஒருவழி வகுத்து நின்றான்
மாய வழியிடை வந்தமுனிவர்
திரும்பிச் செல்லும் திக்கறியாமல்
திகைத்தார் முனிவர் தீயுடன் காற்றும்
பெரும் இடிமழையும் பேரிருட்படலமும்
பிறவும் கண்டார், பிறங்குதன் கையில்
இருந்த தண்டால் இடித்தார் மலையை
எண்ணிலாத் துவாரம் ஆயது மலையும்
திருந்தா அவுணா செய்தநின் மாயையால்
செறிந்தஇம் மலையாய் திகழுவாய் என்றுமே
இக்கிரி அசுரர்க் கிருப்பிட மாகவும்
இமயவர் முனிவர்க் இடர்இட மாகவும்
சிக்கென நிற்பாய் செவ்வேள் முருகனால்
சிதறுண் டழிவாய் என்னும் சாபம்
இட்டார் அகத்தியர் இயம்பியபடியே
எய்தினான் அசுரன், இனிதே முனிவர்
விட்டிறந் தவர்க்குத் தாரக மந்திர
விருந்துப தேசிக்கும் விஸ்வலிங்கரின்
காசி பணிந்து, விந்தைமா மலைவழி
கடுகி நடந்தார் கண்ணெதிர்ப் பட்ட
மாசறு மலையை வழிவிடச் சொன்னார்
மறுத்தது விந்தம் மாமுனி தன்கரம்.

## 25. விந்தம் நிலம்புகு படலம்

நீட்டினார் மலையை நிலத்தில் ஆழ்த்தினார்
நெஞ்சு கலங்கி நின்சீர் அறியேன்
தாட்டுணை பணிந்தேன் பிழை பொறுத்த தருள்கென
சரணம் செய்தது தனிப்பெரும் விந்தம்
"சென்று நான் வருகையில் சிறந்த முன் பொலிவில்
திகழுவாய் "எனவே செப்பினார் முனிவர்

ஒன்றிய சூரியன் உம்பரர் எல்லாம்
உத்தம முனிவரை ஒடுங்கிப் பணிந்தனர்

## 26. வில்வலன் வாதாவிவதைப் படலம்

குடக தே சம்புகும், குறுமுனிவ ரவை
விடமுறு மன வில் வலன் வா தாவி
கண்டதும் அவரைக் கடிதில் கொன்றே
உண்டிட எண்ணினர், உடன் வா தாவி
ஆட்டுக் கடாவாய் ஆங்குபுல் மேய்ந்தான்
தீட்டி வஞ்சகச் செயல்புரி வில்வலன்
முனிவர் வேடத்தில் முனிவரைப் பணிந்து
தனதிடமழைத்துத் தாழ்ந்து பணிந்து
தேவரீர் இங்கே திருவமுதுண்டு
மீதியை எனக்கு விழைந்து தருக
எனப்பல கூறி இனிய கறிவகை
கணத்தினில் ஆக்கி, கடாவையும் வெட்டி
பற்பல கறியாய்ப் பாகம் செய்து
அற்புத முனிவரே அருந்துக என்றான்
மந்திரம் சொல்லி மாமுனி உண்டபின்
சுந்தரத் தம்பியே துரிதமாய் ஓடிவா
என்றலும் வாதாவி இருஷியின் வயிற்றில்
துன்றிய கடாவாய்த் துள்ளி எழுந்தான்
வில்வலன் விரகை விளங்கிய முனிவர்
நல்வலக் கையால் நயந்து வயிற்றை
தடவிய போதில் சமைந்தான் அசுரன்
கடுங்கோபத்துடன் வில்வலன் எதிர்க்க
அவனையும் தண்டால் அழித்தார் முனிவர்
சிவனை நினைத்தார் சீர்பல மிகுந்த
கொங்கு நாட்டைக் குறுகிய போதில்
அங்கிரண்டசுரரும் ஆவியாய்ச் சூழ்ந்து
முனிவரை அணுக, முற்றுணர் பெருமான்
நினை சிவ லிங்கம் நெடிது தாபித்து
புனைமலர் சாத்திப் பூசித்த போதில்
முனைபிர மகத்தி முழுவதும் நீங்கினர்

***

## 27. காவிரி நீங்கு படலம்

சூரன் கொடுமைக்குப் பயந்தோடி
சுரேந்தி ரன்சீர் காழியிலே



பேரார் மூங்கில் வடிவாகிப்
பெருமான் சிவனை மனத்திருத்தி
தவநெறி தாங்கி இருக்கையிலே
சார்ந்தார் நாரதர் அவனருகே
அவனது சேமம் விசாரித்தார்
அமரர் கோமன் எடுத்துரைத்தான்
ஏதும் குறைகள் இல்லையையா
எம்பெரு மானைப் பூசிக்க
* போதுகளில்லாத் துயராலே
புந்தி நெகிழ்ந்து வாடுகின்றேன்
மழைநீர் குளநீர் இல்லாமல்
மலர்ச் செடி யெல்லாம் வரண்டதையா.
பிழை செய்தேனோ பெருமுனியே.
பிறிதொரு குறையும் எனக்கில்லை.
இந்திரன் இவ்வா றுரைத்தலுமே
இருஷி நாரதர் கூறுகிறார்
நந்தனம் செழிக்கும் உன்னரசும்
நண்ணும் உன்பால் அறிதிஎன்றார்
கொங்கு நன்னாட்டில் குறுமுனிவர்
கொண்ட கமண்டலம் கொண்டுவரும்
கங்கை பொன்னியை இங்குவரக்
கணபதி நாதனை வேண்டிடுவாய்
கங்கை காவிரி யாய் இங்கே
கடுகிப் பாயும் நிலம் செழிக்கும்
ஐங்கரக் கணபதி யருள்வேண்டி
அழைத்திடுவாயென முனியகன்றார்
இந்திரன் கணபதிச் சிலை நாட்டி
இசைந்திடு நை வேத் தியம்படைத்து
மந்திரபூசனை புரிதலுற்றான்
வாரணமுகத்தான் வந்துதித்தான்
ஆண்டவரிடத்தே குறையிரந்தான்
அகத்தியர் கமண்டலப் பொன்னிதனை
ஈண்டெமக்கருள்கென இரந்து நின்றான்
எம்பெருமானொரு ** கொடியானான்
காக வடிவில் விநாயகரும்
கமண்டலத் தேவந் துட்கார்ந்தார்
போஎன்று கரத் தால்அதைக் கலைத்தார்
புனித காகமும் கமண்டலத்தை

* போது – புஷ்பம் ** கொடி – காகம்

விரலாற் கவிழ்த்து மறைந்ததுவே
விநாயகர் அந்தண வடிவாகி
விரவும் பொன்னியை, மண்ணுலகில்
மேவிப் பாயென விளம்பலுற்றார்
பொன்னியும் காவிரி எனும்பேரால்
பூமி ததும்பப் பாய்ந்ததுவே
முன்னிய அந்தணச் சிறுவனை அம்
முனிவரும் குட்டிடத் துரத்தலுற்றார்
கைக் கெட்டிடாத கணபதியைக்
கடிதே கிட்டிட முடியாமல்
நெக்கிக் களைத்தார் குறுமுனிவர்
நினைந்தார் கணபதி மனமிரங்கிச்
சொந்த வடிவம் எடுத்து நின்றார்
துதித்தார் அழுதார் பதைபதைத்தார்
எந்தை கணேசா உனைக்குட்ட
எடுத்த கரத்தால் என்தலைக்கே
குட்டினேன் குட்டினேன் எனத்தலையில்
குட்டிப் பதைத்த குறுமுனியைக்
கிட்டியருள் செய் தேற்றவரம்
கேளென்றலுமே முனிவரனும்
அப்பா கணேசா கமண்டலநீர்
அடியேற்கருள வேண்டும், உனை
இப்போ தெடுத்த குட்டுடனே
எவரும் குட்டிக் கும்பிட்டால்
எல்லா வரமும் கொடுத்தருள்வாய்
என்று பணிந்திட அப்படியே
பொல்லாக் கணபதி வரங்கொடுத்தார்
பொன்னியின் நீர்கமண்டலம் கொடுத்தார்
வல்லபை நாதனை வழிபட்டு
மாமுனி தென்திசை புறப்பட்டார்
வெல்லும் சக்கர விஷ்ணு மூர்த்தி
மேவுகுற்றாலத் தலம்புகுந்தார்

## 28. திருக்குற்றாலப் படலம்

அங்கே புகுந்தலும் அரி அடியார்
அகத்திய முனியை இகழ்ந்தார்கள்
தங்கும் சைவ வடிவெடுத்தும்
தழுவும் வைணவ அடியான்போல்



அத்திகிரியைத் தரிசிக்க
அடியேன் வந்தேன் என்றலுமே
ஒத்த வைணவர் பணிபுரிய
ஓங்கும் தலத்தில் உட்புகுந்து
திருமால் வடிவைச் சிவலிங்கத்
திருவுருவாக்கி வழிபட்டார்
வருமாயத்தை அறிந்தார்கள்
மாயன் தொண்டர் சினந்தெதிர்த்தார்
குறுமுனி கோபாக்கினி விட்டார்
குழறி ஓடினர் வைணவர்கள்
அரிபதி சிவபதி யாகினதே
அடைந்தார் குறுமுனி பொதிகைமலை

## 29. இந்திரன் அர்ச்சனைப் படலம்

தண்ணீர்க் காவிரி சீர்காழிச்
சண்பகவனத்தை அணுகியது
கண்ணாயிரத்தான் பொங்கிவரும்
களிப்பால் சிவனைக் கைதொழுவான்
பூங்கா வனத்தின் செழிப்பாலே
பூசனை சிறந்தது மனங்குளிர்ந்தான்
ஓங்கிய சூரனை வென்றவன் போல்
உவகைக் கடலில் குளித்தெழுந்தான்

## 30. தேவர் புலம்புறு படலம்

இந்திரன் சீர்காழிப் பதியிலே ஈஸ்வரனை
இறைஞ்சி வரும் காலத்திலே
அந்தரத் தேவர்கள் வந்தார்கள் அழுதார்கள்
ஐயனே அசுரர்களினால்
வெந்தபுண் ணாய்நெஞ்சுக் கவலையால் வாடினோம்
வினைதீர்க் கவழியில்லையே.
முந்திவரும் தலைவன்நீ எம்மைவிட் டிவ்விடம்
மூங்கிலாய் நிற்பதழகோ
என்றலும் தேவர் கோன் என்செய்வோம் மக்களே.
என் மனைவி அயிராணியை
அன்றப கரிப்பதற் கசுரர்கள் வருகையில்
அஞ்சி நாம் இங்கு வந்தோம்
ஒன்றுக்கும் அஞ்சாமல் ஓங்காரக் கைலாய
உமை பாகனைப் பணிந்து

மன்றாடி வேண்டுவோம் வாருங்கள் எனக்கூறி
வழிப்பயணம் போக நினைந்தான்

## 31. அயிராணிசோகப் படலம்

இந்திரன் தன்மனைவி இந்திராணியிடம் ஏகி
எண்ணியதைக் கூறும் வேளை
இந்திராணி அறிவிழந் தையனே அசுரர்கள்
அடாத செயல் செய்யவருவார்.
எந்த ஒரு துணையுமில்லை எப்படியிங் கிருப்பனோ.
யானுமும் முடனே வருவேன்
சிந்தனை செய்யாமல் புறப்படுக என்றனள்:
தேவேந்திரன் புகல்வான்.

## 32. மகா சாத்தாப் படலம்

மங்கையே உனக்கென்றும் ஐயனார் துணைபுரிவர்
வருந்தற்க என்ற போதில்
தங்குபுகழ் ஐயனார் யாரென்று கேட்கிறாள்:
சாற்றுவான் தேவேந்திரன்
பொங்கிவரு பாற்கடலை முன்புநம் தேவர்கள்
புகுந்து கடைகின்ற போதில்
கங்கைபுனை வேணியன் அங்குவரு நஞ்சுண்டு
கண்டத்திலே யணிந்தார்
சிவனாரின் சொல்லின்படி பின்புகடைந் திடுவேளை
திரண்டமலைமத் துடைந்து
அவமாகப் பாதலம் புகுவேளை ஐங்கரனை.
அர்ச்சிக்க மந்தரமலை
திவமாக மேலெழத் திருமாலும் தேவர்களும்
சென்று கடல் கடைந்த போதில்
நவமான பொற்குடத் தமிர்தம் வரக்கண்டு
நமக்கு நமக் கென்ற மரரும்
அசுரரும் கலகமிட மாயனோர் மோகினிப்பெண்
ஆகியங்கே உதித்தார்.
வசிய அம் மோகினியின் வடிவிலே அவுணர்கள்
மனங்கொண்டு மதிமயங்கி
இசையும் அமிர் தத்தைவிட் டெழில் மங்கை தனைக்கவர
எல்லாரும் சண்டை கொண்டார்
வசையான போர்விடு மின். இவ்வமிர்தம் வேண்டுமா
மங்கைஎன் னைவேண்டுமா?



சொல்லுங்கள் எனக் கேட்க, நீ வேண்டுமெமக் கென்று
சுழல் அசுரர் கூறலுற்றார்.
வல்லவர்கள் உங்களில் வீரன்யார் அவனையே
மணம் சேர்வன் என்றுகூற
மல்லாடி அசுரர்கள் மாண்டார்கள் மற்றிருவர்
வகையாகத் தேவருடனே
செல்லுவோ மென்றங்கு மோகினி அமிர்த்தைத்
தேவர்க்குப் பகிரும் போதில்
இருவரும் அமிர்தத்தை மந்திரம் சொல்லாமல்
எடுத்துண்ணும் தன்மைகண்ட
இரவியும் சந்திரனும், மோகினிக்குக் குறிப்பாக
இருவரையும் காட்டிவைக்க
வருமமிர்தம் பகிர்கின்ற அகப்பையால் அவ்விருவர்
வலியதலை மீதடித்தாள்
தருணமதில் அமிர்துண்ட தலைகளழியாமையைத்
தையல் மோகினியும் கண்டாள்
வாருங்கள் நீவிரிரு வீருமமு துண்டதால்
மன்னு சிவனருளினாலே
சேருமிரு கிரகங்க ளாகுகென அவர்களும்
திகழ்ராகு கேதுவானார்
கூருமெழு கிரகருடன் இவர்களும் கூடவே
கோள்களொன் பரனாயினார்
வாரிதியின் கரையோரம் வண்ணமோ கினிசெல்ல
மகாதேவன் அங்கு வந்தார்.
நாவலந்தீவிலே சாலமர நிழலிலே
நாராய ணனும் நம்பனும்
தாவியுடன் கூடுகையில் கான்றுமிழ்ந் திட்டநீர்
சலம் பெருகு கண்டகி எனப்
பூவுலக நதியாக வச்சிரகந் திப்பெயர்ப்
புழுக்கள்சக் கரவடிவிலே
மேவுபொன் கூடுசெய் தோங்கார சக்கர
முழுவடி வில் வாழ்வுற்றன.
சக்கரக் குறிக்கூட்டுள் இறந்தபின் வெறுங்கூடு
சலத்துடன் கரையைச் சேரும்
சக்கரக் குறிக்கூட்டி னுட்பொன்னை எடுத்தபின்
தனிமூர்த்தம் எதுவென்றறிவர்
சேர்ந்தகூ டேசாளக் கிராமமென, சக்கரத்
திருமாலின் அடியரெல்லாம்
தேர்ந்து பூ சிக்கின்ற திருவுருவ மாய்க் கொள்வர்
சிவனுமரி யும் சேர்ந்த தால்

வார்ந்த செஞ் சடையுடன் செண்டேந்தி உக்கிர
வடிவுடைய மகனுதித்தான்
ஓர்ந்து சிவபெருமானும் அரிகரபுத் திரனென்னும்
ஒப்பிலாநாம மிட்டார்

அரிகரபுத் திரனுக்குப் பலவித வரம்நல்கி
ஆயஉருத் திரரில் கூட்டி
ஒருபுவன மும்தந்து முனிவரர் தேவர்கள்
ஒருங்கு வழிபடவும் செய்தார்
பெருமைமிகும் இச்கதையைக் கேட்டபின் இந்ராணி
பேதமை ஒழிந்து தனியே
ஒருமையி லிருப்பதற் குடன்பட்டாள் இந்திரன்
ஓம் ஐயப்பா என் றழைத்தான்
ஐயனே அரிகர புத்திரா எனக் கூவி
அமரர்கோன் வேண்டி நிற்க
உய்யவரு பூதகண முடன் வெள்ளையானையில்
உக்நதபூ ரணை புட்கலைத்
தையலர்கள் பாகனாய் வந்தனன் ஐயப்பன்
சாற்றினனிந் திரன் நிலைமையை
மெய்யுருகும் இந்திராணி நிலைகண்ட ஐயனார்
விளம்பினார் ஆறுதல் மொழி

## 33. இந்திரன் கயிலைசெல் படலம்

இந்திரா சென்றுவா, இவளுக் கிடை யூறின்றி
என்வீரன் மகாகாளரே
வந்து துணைபுரிகு வார், என்றங்கு முதல்வீரன்
மகாகாளர் தனைவிடுத்தார்
இந்திரனும் மனைவிக்கு நன்மொழிகள் பலகூறி
ஏராரும் கயிலை சென்றான்
நந்தியந் தேவரிடம் இந்திரனும் தேவர்களும்
நாடிய கருத்துரைத்தார்
சனகாதி முனிவர்க்குத் தட்ஷணாமூர்த்தியாய்ச்
தத்துவம் புகட்டுகின்றார்
தனியாலின் கீழ்எவரும் தற்போது செல்லுதல்
தவிர்த்திடல் வேண்டு மென்றார்
இனியசிவ மலைகாக்கும் எந்தையே, சூரரால்
இமையோர்கள் கொண்டதுயரம்
தனைக்கூற வேவந்தோம் சங்கரன் வருமளவும்
தமியேங்கள் இங்கிருப்போம்.



## 34. அசமுகிப் படலம்

நந்தியனு மதியுடன் இந்திரனும் அமரரும்
நாடி ஓர்பால் அமர்ந்தார்
இந்திரன் பலகாலம் வாராமைகண்டு சசி *
ஏக்குற் றிருக்கும் வேளை,
வெந்தொழிலும் காமமும், வீரமும் வஞ்சனையும்
மிக்குற்ற அசமுகி எனும்
நிந்தனை அரக்கியும் அவள்தோழி துன்முகியும்
நெடியசண் பகவனத்தே.

## 35. இந்திராணி மறுதலைப் படலம்

வந்தனர், தவமுற்ற இந்திராணி தனைக்கண்டு
வாய்ந்த தன் தமையனுக்கு
சொந்தமனை யாட்டியாய்க் கொண்டுசெல வந்தனள்
துண்ணென எழுந்தாள் சசி,
பந்தமறு காசிபரின் மகளாக வந்தநீ
பழிச் செயல் புரியலாமா
வெந்துயரம் மற்றோர்க்குச் செய்யுமவர் தமக்குத்தாம்
மேலான துன்பம் புரிவோர்

## 36. மகாகாளர் வருபடலம்

வந்தவழி செல்லுவாய் என்றவுடன் அசமுகிதன்
வாயுதட் டைக்கடித்தாள்
இந்திராணி கைகளைப் பிடித்திழுத்துக் கொண்டு
இரைச்சலோ டேநடந்தாள்
சிந்தை நடுக் கங்கொண்டு தேவனே ஐயப்பா
சிறியேனைக் காத்தருளென
வெந்துகை கூப்பினாள் வீரமா காளரும்
வீசுவா ளுடனே வந்தார்
வீரனைக் கண்டதும் அசமுகியரக்கியும்
வீரநகை செய்து பார்த்தாள்
யாராலும் வெல்லரிய இவனென்னை என் செய்வன்
யாரடா நீ என்றனள்,
சீருறும் ஐயப்பன் காவலுறு வீரன்யான்
தேவியின் கையைவிட்டால்
நேரிதாய்ச் செல்லலாம் இல்லையேல் மாளுவாய்
நெஞ்சில் என்வார்த்தை நம்பு

* சசி–இந்திராணி

எனவீரன் கூறலும் மூவிலைச் சூலத்தை
இராட்சசி எடுத்து எறிந்தாள்
தினவுடைய வீரனும் சூலத்தை வெட்டினார்
திரண்ட அச முகிகையினை
அனலேறு வாளினால் வெட்டினார் அருகிலுறும்
அவள்தோழி துன்முகிநெடுங்
கனவளைக் கையொன்றும் வெட்டினார் சசிதன்னைக்
காப்பாற்றி அருள்புரிந்தார்

## 37. அசமுகி சோகப் படலம்

அசமுகியும் துன்முகியும் பலபலவசைகளுடன்
அழுகையெழு வீரம்பேசி
சசிதேவி தனைநோக்கி எங்குநீ சென்றாலும்
தாவியுனைச் சிறைப்படுத்துவேன்
நிசமென்று சபதங்கள் பலகூறித் தமையனிடம்
நேரிலே செல்லலுற்றாள்
வசியமிகு மாகாளர் இந்திராணி தனைத்தேற்றி
மாறாத காவல் செய்தார்

## 38. இந்திரன் மீட்சிப் படலம்

மன்னுசசி தேவிக்கு மாகாளர் துணைசெய்த
வரலாற்றை நாரதமுனி
அன்னவகை இந்திரனுக் கணுகியுரைத்தார் அங்கே
அமரர்கோன் வெகுண்டாறினான்
முன்னவன் நந்தியைப் போற்றிவிடை பெற்றினிது
முந்துசீர் காழிவந்து
மின்னுவாள் மாகாளர் தனைத்தழுவி நன்றி சொலி
விரைந்து சசிதேவியுடனே

## 39. சூரன் அரசிருக்கை படலம்

மேருமலை போயமரர் தம்மோடு மறைவாக
வேதனையுடன் தங்கினான்
சீரமைந்த அத்தாணி மண்டபத்தே சூரன்
சிங்காரக் கொலுவிருக்கும்

***



## 40. அசமுகிநகர் காண்படலம்

நேரத்தில் அசமுகியும் துன்முகியொ டோலமுடன்
நேராக வந்து சேர்ந்தாள்
பேரிடியைப் போலப் பெரு மூச் சிட்டுக் கதறினாள்
பெருகும் அசுரர்கள் திகைத்தார்

## 41. அசமுகி புலம்புறு படலம்

தமையனை இகழ்ந்தனள், மருகரைக் கண்ணோக்கி
வரலாறெல்லாம் கூறினாள்
அமைவான சிங்கனை தாரகனைப் பார்த்துத்தன்
அவமானநிலை புலம்பினாள்
தமதுகை வெட்டுண்ட விபரத்துடன் சூரன்
தங்கு மாசனத் தைக்கிட்டி
நமது துயர் கண்டும்நீ சும்மா இருப்பதேன்
நான் சாவேன் எனவிம்மினாள்

## 42. சூரன் தண்டம் செய்படலம்

சூரனின் கண்களில் தீப்பொறி பறந்தன,
சூழ் அண்டங்கள் குலுங்கின
சேருமுல கங்கள்தம் நிலைமைதடு மாறின
சிந்தித்தான் தம்பியருடன்
வீரமிகு மகன்பானு கோபனும் கோபமுடன்
வெளிப்பட்டான் கைவெட்டிய
தீரனையும் தேவர்கோமானையும் சசியையும்
சேர்த்தழித் திடுவே னென்றான்.

–

அப்பொழுது நான்முகனைச் சூரனங் கழைப்பித்தான்
அசமுகியின் கைகள் முன்போல்
செப்பமாய் வந்திடச் செய்யென்றான் அவ்விதம்
செய்தனன் பிரமதேவன்
ஒப்பரிய சூரியன் முதலோரைச் சிறையிட்டான்
உயர்வான வாயுக்களும்
தப்பரிய ருதுமாதம் ஆயதெய் வங்களும்
தரணிதிகழ் அரசர்களும்
சிறையி லடைபட்டனர், சிலருடைய நாக்கையும்
சிலருடைய செவி மூக்கையும்
முறைமுறை நின்றவர் காலையும் தலையையும்
முனைவாளால் வெட்டுவித்தான்

மறையவன் வேண்டலும் சூரியன் சந்திரன்
மற்றுநாள் கோள்களெல்லாம்
சிறைநீங்கப் பெற்றனர் சினத்தோடு சூரனும்
திருமாளிகை யுட்புகுந்தான்

## 43. அமரர் சிறைபுகு படலம்

நாலுவகை ப்படையுடன் பானுகோபாசுரன்
நண்ணினான் சமர் புரியவே
காலனிகர் துன்முகி சண்பக வனந்தன்னைக்
காட்டவே படைவீரர்கள்
கோலமிகும் அப்பதியை அழித்தனர், சசியையும்
கொற்ற மாகாளர்தனையும்
மூலையெல் லாந்தேடிக் காணாதலுத்தனர்
முட்டினான் அமரருலகம்

-

இந்திரன் புத்திரன் சயந்தனும் தேவர்களும்
எதிரியாம் பானுகோபன்
வந்ததைக் கண்டனன் மாபோர் புரிந்தனன்
வாள் அனைய ஆயுதங்கள்
முந்துகர மேந்தியே இருசாரார் பொருதனர்
முது நீலகேசன் வீழ்ந்தான்
விந்தைமா யாபலி பதுமன், மாருதபலி
விறல் வாமன் சோமாசுரன்
தண்டகன் மாகதன் வருணன் சுரகேசரி
சார்ந்தபல்லசுரர் திகைத்தார்
மிண்டிடும் ஐயிராவதத்தினில் இருந்திடும்
வீரனாம் சயந்தனுடனே.
திண்டிறல் பானு கோபனுடனே அசுரரும்
தீரமிகு சமர் புரிந்தார்
எண்டிசை புகழும் ஐ ராவதமும் கோபனின்
எதிர் மார்பில் கொம்பு பாய்ச்சித்

-

தீவிரப் போர் செய்து வீழ்ந்தது சயந்தனும்
சிறையிலே அடைக்கப்பட்டான்
ஆவி கொளும் அவுணர்கள் அங்குள்ள அமரர்களை
அநியாயச் சிறையிலிட்டார்
தாவியமர் உலகையும் சுவர்க்க லோகத்தையும்
சாம்பலாய் எரித்து விட்டார்



கூவியெ வொலி செய்து பானுகோபன் வெற்றி
கொண்டதைத்தந் தைக் குரைத்தான்
சிறைப்பட்ட தேவர்களின் கால் கைகள் செவிமூக்கு
தேகத்தினுறுப்பு யாவும்
பொறிபட்ட வாளினால் அறுப்பித்தான், அறுத்தவுடன்
பொருந்தியன தேவர் உறுப்பு
வெறிபட்ட சூரனும் விண்ணவர்கள் நிலைகண்டு
வெஞ்சிறையில் வாடவைத்தான்
நெறிபட்ட தேவமா தர்களும் அசுரர்க்கு
நெடும் ஏவல் புரியலுற்றார்
இந்திரன்மகனான சயந்தனும் விண்ணவரும்
இப்படித்தம் நிலையிழந்தார்
சொந்தம்சிவ மோட்சமே யன்றிமற் றெல்லாமும்
துண்ணென அழியுமென்று
சிந்திப்ப தன்றிவே றெதுவென்ன லாகுமோ?
செருவுற்ற ஐராவதம்
வந்து வெண் காட்டிலே சிவபூசை இனிதாற்றி
மருப்போடு வசித்த தாங்கே.
சயந்தனின் கதிகேட்டு இந்திரன் மனைவியுடன்
சைவப் பொன் மேரு நாடி
நயந்ததவம் செய்கையில் நம்பனார் வெளிப்பட்டு
நாடிய வரத்தைநல்கி
பயந்தவிர்க, நாமினிப் பார்வதியை மணம் செய்தோர்
பாலகனை இங்குதருவோம்
வியந்திடும் அப்பாலன் அசுரகுலம் அழித்துங்கள்
விண்ணாட்சி தருவன் என்றார்

இவ்விதம் வியாழபகவான் முருகனுக்குத் தேவர்கள்
செய்கையைக் கூறிமுடித்தல்

எந்தையே, இந்திரனும் அரியயன் முதலோரும்
இரதிபதியை அனுப்ப அவன்போய்க்
கந்தமலர்ப் பாணமிட் டனற்சாம்ப லானபின்
கண்ணுதலை வந்திறைஞ்ச
தந்தனன் நின்னைமுக் கட்பொறிக ளாகவே
சண்முகா இன்னும் சொல்வேன்
அந்தரர்படும் துயரம் சொல்லிமுடி யாதுமற்
றண்ட மெல்லாமிவ்விதம்

கொடுங்கோல னாகவே சூரனர சாள்கிறான்
குமரா விண்ணவர் துன்பத்தை
இடங்கண்டு தீர்த்தருள்க என்று குரு பகவானும்
இணையடி துதித்தியம்ப
தடங்கண்ட வேலனும் தரளப்புன் னகைபூத்துச்
சாந்தி மொழி கூறியங்கே
நடுங்குமிந் திரனுக்கும் நாமுமக்கருள் வமென
நல்வார்த்தை தந்தருளினார்.

அசுரகாண்டம் முற்றிற்று

உ

# 3. மகேந்திர காண்டம்

முருகவேள் வணக்கம்

விரிஞ்சன் மால் தேவராலும் வெலற்கரும் விறலோனாகி
பெருஞ்சுரர் பதமும் வேத ஒழுக்கமும் பிறவுமாற்றி
அருஞ்சிறை அவர்க்குச் செய்த அவுணர்கோன் ஆவிகொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்
(க.)



## 1. வீரவாகு கந்தமாதனம் செல் படலம்

செந்திலம் பதியில் திருக்கொலு விருக்கும்
எந்தை கந்தவேள் எண்ணினான் பற்பல.
அந்தரத் தேவரும் அசுரர் கூட்டமும்
தந்தையின் மக்கள் தனித்தொரு சாரரை.
அழித்தல் முறையன் றாகையால் அசுரன்பால்
மொழிபுகல் தூதனை முறையாய் அனுப்பிச்
சம்மதம் மறுத்தால் சமரிடல் நன்றெனத்
தம்மனம் நினைந்து, சதுர்முகன் முதலியோர்
எண்ணமும் அறிந்தனன் ஈரிரு முகனின்
திண்ணிய உரைப்படி திறல்வீர வாகுவைத்
தூதனாய் அனுப்பினர் தூதனும் துணிவுடன்
கீதக் கிண்கிணி பாதத் திசைப்ப
*கந்தமா தனத்தில் கணக்கிலா உருவனாய்
வந்தனர் மலையின் உச்சியில் ஏறினர்
அங்குநின்றுலகம் அனைத்தையும் காணும்
பொங்கிய வடிவனாய் புவனம் பார்த்தான்
முருகன் திருவடி மூவிரு முகங்கள்
அருள்விழி கரங்கள் அனைத்தும் வாழ்கெனத்
தோத்திரம் புரிந்து, தூதுவன் வடிவில்
ஆர்த்திடும் கடல்பாய்ந் தப்பால் சென்றார்

## 2. கடல்பாய் படலம்

பொங்கிய தூதன் புரிந்தெழும் காற்றால்
தங்கிய உயிர்கள் யாவும் சுழன்றன
வீரனின் மூச்சால் வீரமகேந்திரம்
கோராக் கினிப்புகை கொண்டு வரண்டது

* இராமேச்சுரம் கோயிலுக்கு வடக்கே ஒன்றரைமைல் தூரத்தில் உள்ளமணற்குன்றைக் கந்தமாதனம் என்று சிலர் கூறுவர்

இலங்கை புகுந்ததும் காவல் புரிந்திடும்
பலம்மிகு யாளி முகனின் மைந்தன்
அதிவீரன் என்பவன் அடுபடைவீரன்
விதிநலமில்லா வீர சிங்கன்

## 3. வீரசிங்கன் வதைப் படலம்

விண்வழி வந்த வீர வாகுவ்வை
எண்மிகுமாயுதம் எடுத்தமரிட்ட
மின்னெறிவாளால் வீர சிங்கனை
முன்னிய தூதுவன் முடித்தனன் அன்றே

## 4. இலங்கைவீழ் படலம்

.வீரவாகுவும் மிளிர்மலை இலங்கை
நேரிய சிகர நெடுவரை பாய்ந்தார்
அக்கிரி காத்த அதிவீரனுடன்
தொக்க அசுரரும் சோர்ந்து நடுங்கினர்
தூதுவன் குதிக்கத் தொடுகடல் இலங்கை
மோதும் ஆழியில் மூழ்கிய தன்றே

## 5. அதிவீரன்வதைப் படலம்

இலங்கையைக் காத்த அதிவீரன்படை
மலங்கி எழுந்து வன்படைதாங்கி
வீரவாகுவை வெகுண்டுதாக்க
கூரியவாளால் கோர அசுரனின்
கைகால் தலைகளை கடுகியே வெட்டினர்
வையகம் குருதி மாநதி ஓட
வீழ்த்திய உடனே வெங்கட்கூற்றன்
காழ்த்த உயிரைக் கைக்கொடு சென்றான்

## 6. மகேந்திரம்செல் படலம்

வீரமகேந்திரம் விரைந்து சேர
வீரவாகுவும் விண்ணில் எழுந்தார்
பாரத்தாற் கடல் பதித்த இலங்கை
நீரைக் கிழித்து நிமிர்ந்தது முன்போல்
அறுமுகன் தூதுவன் ஆயிரம் யோசனை
செறியும் வானம் நிறையத் தோன்றி
வீரமகேந்திர வியன்நகர் வடபால்
கோரன் அதிகோரன் கொண்டநாற் படைகள்
மிகுமிகும் ஆயிரம் வெள்ளத் துடனே



தகுபெறு காவல் தாங்குதல் கண்டார்
இவர்களை அடக்கி ஏகுவே னாயின்
சிவமுரு கையன் செயலையான் செய்யும்
விதமாய் அமையும் வேறோர் வாயிலால்
மெதுவாய்ப்புகுந்து விளம்பலாம் தூது
எனநினைந்தாங்கே கீழ்த்திசை சென்றார்
சினமகிடாட்சன் செயல்வீர பானு
காவல் புரிவதைக் கண்டார். அதன்பின்
மேவினர் தென்பால் மீகா மனைப்போல்
கயமுகன் ஆங்கே காவலில் நின்றான்
இயம னுக்குமோர் இயமனைப்போன்ற.

## 7. கயமுகன் வதைப்படலம்

வலியன், வீர வாகுவைக் கண்டான்
கலகல என்று சிரித்தான் அழைத்தான்
காற்றிற்பஞ்சு கடுகிவந் ததுபோல்
ஆற்றலில்லாதாய் அடாநீ நில்லடா
இப்படிப்பேசி எதிர்த்தான் தூதனை
செப்பும் இருவரும் செருவகைபுரிந்தனர்
அருள் வீரவாகுவும் அசுரனின் மார்பில்
ஒருதரம் உதைந்தார் கயமுகன் மடிந்தான்
அசுரரும் அசுரரும் அமர்செய் தார்என
அசுரர் கூட்டம் ஆங்குதிரண்டது
"யானிவண்வந்தது நற்றூதனாகவே
ஈனப்போர் செய்வது எம்மிறை பொறுப்" பென
அசுரரின் கண்படாது அணுவுருக் கொண்டார்
இசைமிகு கோபுரம் ஏறிவீற்றிருந்தார்

## 8. நகர்புகு படலம்

மகேந்திர புரியின் மாட்சியை வியந் தார்
மகாவடி வெடுத்து மன்னும்இந் நகரைக்
காணலாம், ஆனால் கடும்சின அசுரர்
காணுதல் தகாது, கந்தன் உரைத்த
தூதன் செயலைத் தொடருவேன் என்று
மாதவச் சூரன் வதிவிடம் செல்ல
ஆகாய வழியாய் அணுகினார் பெருத்த
வாகுடைப் பானு கோபனின் கோயில்
அக்கினி முகனின் அதிசயக் கோயில்
பக்குவ இரணியன் பயின்றிடும் கோயில்
வச்சிர வாகுவின் வதிவிடக் கோயில்

மெச்சிடும் மூவா யிரவரின் கோயில்
யாவையும் கண்டு நவில் மந்திரியாய்
சேவை யாற்றும் தரும கோபனின்
சேனுயர் மாளிகைச் சிகரத்தமர்ந்தார்
மாணுயர் சயந்தனும் மற்றுள தேவரும்
உறுதுயர்ச் சிறையை உற்றுநோக்கினார்

## 9.சயந்தன் புலம்புறுபடலம்

செறிகை கால்களில் திருகிடும் விலங்குகள்
அழுத்திய தழும்புடன் அசுரரைக்கண்டு
உளத்துறு பயத்துடன் உறக்கமின்றி
வாடுதல் கண்டார், வானுறு சயந்தன்
மூடிய வினையின் முனைப்பை நினைவான்
என்பிதா கயிலைத் தந்தைபால் சென்று
வெந்திறற் சூரனின் விபரம் சொல்வரோ?
பொன்னுல கெரித்ததும் எனைச்சிறை செய்ததும்
அன்னை அறிந்து கலங்கிடு வாளோ
கருணைக் கடலாம் கைலாய பதியே
இருளுறும் என்துயர் அறிந்திட வல்லார்
எனப்பலவாறாய் எண்ணினான் சயந்தன்
கனப்புகழ் வீர வாகுசெல் நேரம்
கண்டகன் உதாவகன் கராளன் மாபலன்
கண்டன் இசங்கன் சங்கன் முதலாம்
அசுரர் கூட்டம் சயந்தனை வருத்தி
அசடே உன்றன் அப்பனும் அம்மையும்
எங்கிருக்கின்றனர் இயம்பா விட்டால்
தங்கிய தேவரும் நீயும் இறப்பது
திண்ண மென்று சித்திர வதையிட்(டு)
எண்ணிலாத்துன்பம் இழைத்தனர் ஆங்கே
அசுரரும் அலுத்தனர், அச்சிறையகத்தே
நசிவுறு சயந்தன் நம்பனை நினைந்து
மாலய னறியா வள்ளலே, சிவனே.
கோலயா னைக்கும் குருவிக்கும் நாரைக்கும்
பன்னகம் சிலந்தி பற்பல உயிர்க்கும்
முன்னே வந்தருள் முக்கண் முதலே.

பொன் பொலியும் கொன்றைப் புரிசடையாய் இவ்வழிசேர்
துன்பம் அகற்றித் துறக்கத்துள் தாழாது
பின்பு நனிநோற்றுப் பெறற்கரிதாம் நின்னடிக்கீழ்
இன்பம் ஒருதலையா எய்தஅருளாய் எனக்கே (க.)



## 10. சயந்தன் கனவுகாண் படலம்

இவ்விதம் கலங்கி இதயம் வெந்தான்
அவ்விர வுறங்கும் அத்தரு ணத்தில்
சித்தர வேலவன் சீரிய வடிவில்
பத்தன் சயந்தனின் பயிலும் சூக்கும
சரீரம் காணும் தன்மை யாக
பராவும் வண்ணம் பார்த்திட வந்தான்

வீறுகேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலயிடம் வரதம்
ஏறுபங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறிரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்தான் (க)

கண்டனன் கந்தனை கண்ணீர் விட்டனன்
தண்டமிழ் அழகா சாற்றுநீ யாரென
வண்டுறை கடம்பன், வரலா றுரைத்து
மண்டிய நினது மனத்துயர் அறிந்து
வந்தேன் மகனே வருத்தம் ஒழிக
நந்திறல் வீர வாகுவைத் தூதனாய்
அனுப்பினேன், அன்னான் அசுரர் பலரையும்
வினைப்பயன் சூரனின் மகனொரு வனையும்
தொலைத்துஇந் நகரையும் தூசாய் அழித்து
நலத்தொடிம் மாலையே நம்மிடம் வருவான்
பத்து நாட்களில் படுதுயர் தீர்ப்பேன்
சீத்துயர் செந்தில் திருப்பதி விட்டு
இத்தலத் தொருபால் எழுந்தருள் செய்வோம்
என்றலும் சயந்தன் இருகை கூப்பி
மன்றல் மார்பழகா, வானவர் துயரினைத்
தீர்க்கவந்தவனே திருவடிக்கடைக்கலம்
போர்க்கொடிப் புண்ணியா போற்றி போற்றி
எனக்கைகூப்ப "இன்னலை ஒழிப்பாய்
உனக்குமுன்னே உயர்வீரதூதன்
வந்துவாக்குரைப்பான் வருந்தாதே" என
கந்தன் மறைந்தான் – கனவிலே மற்றைய
தேவர்க்கும் தோன்றித் திருவருள் புரிந்தான்
மேவிய யாவரும் விழிதுயில் நீங்கினர்
அனைவரும் தத்தம் கனவினை உரைத்து
நினைவில் மகிழ்ந்து நிம்மதி கண்டனர்

## 11. வீரவாகு சயந்தனைத் தேற்றுபடலம்

புயவலி வீர வாகுத் தூதன்
சயந்தனைக்காணும் தகைய வடிவில்,
உட்புக நினைந்தார் உடனே முருகனின்
மட்டிலா மோகன மந்திரம் செபித்தார்
சிறைக்கா வலர்கள் திகைத்தறி விழந்தனர்
சிறைக்குள் சயந்தனை தேவரை யணுகினார்
அறுமுகன் தூதுவன் ஆவார் இவரென
இருகைகூப்பி இன்முகங்காட்டி
ஐயா நீர்யார் அடியேற் கருள்கென,
கைலாசத்தான் கண்ணருட் கந்தனின்
தம்பியும், தூதனும் தமியோன் ஆவேன்
நம்பிடும் தெய்வ நந்தி கணத்தவன்
உங்களைச் சிறைமீட் டும்பர் வாழ்வளிக்க
சங்கரன் மைந்தன் சடுதியில் வருவான்
என்றுரைகூற எந்தையே எங்கள்
அன்னையும் அப்பனும் அழிவுற் றார்களோ
ஏதுநடத்ததோ, என்றுநின்றலற
யாதும் குறைவிலை, நடநதவை எல்லாம்
சொல்கிறேன், என்று சுரேந்திரன் சசித்தாய்
வெல்கொடி முருகன் விபரம் அனைத்தும்
கூறினான் தூதன் குளிர்ந்தான் சயந்தன்.
ஆறுமுகன்புகழ் அனைத்தும் புகல்வான்

***

தன்னிகர் இன்றி மேலாய்த் தற்பர வெளியா யாரும்
உன்னரும் பரமாய் நின்ற ஒருவனே முகங்கள் ஆறும்
பன்னிரு புயமுங் கொண்டு பாலகன் போன்று கந்தன்
என்னுமோர் பெயரும் ஏந்தி யாவரும் காணவந்தான்

பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு புயமும் கொண்டே
எங்கள்தம் பெருமான் போந்த ஏதுமற் றென்னை,என்னில்
செங்கண்மால் உந்தி பூத்தோன் சிறுமையும், மகவான் துன்பும்
உங்கள்தம் சிறையும் நீக்கி உலகெலாம் அளிப்பக் கண்டாய் (க)

உரைத்த தூதனின் உரைஉணர்ந் தடியோம்
பெருத்த தக்கனின் பெருயாகத் தில்
பங்குபற்றிய பழியிது என,நும்
தங்கவாக்கியம் தன்னால் அறிந்தோம்
எம்மிடர்நிலைமை எந்தைக் குரைக்குக.
தம்பணிவெற்றி தருகஎன் றேத்தினான்



## 12. அவைபுகு படலம்

வல்லவன் வீர, வாகு தே வர்பின்
வெல்லரும் சூரனின் விண்ணுயர் கோபுரம்
கண்டார் ஆங்கே உக்கிரன், மயூரன்
மண்டிய நால்வகைச் சேனைகள் பதினா
யிரங்கள் சூழக்காவல் புரிந்தனர்
புரங்கொள் இவர்கள் கண்ணில் படாமல்
விண்வழி யாக விளம்பிடும் சூரனின்
வண்ணஅத் தாணி மண்டபம் கண்டார்
மேனகை திலோத்தமை ஊர்வசி யாதிய
வானுறு மங் கையர் வரிசையாய் ஆல
வட்டம் வீசினர் மதியு மிரவியும்
வட்டக் கவிகை வளமாய்ப் பிடித்தனர்
இன்னவகையில் இமையோர் பணிசெய
மின்னெறி முடியுடன் விருதுகள் பலவொடு
மன்னவன் சூரன் மகிழ்ந்திருப்பதனைத்
தூதுவர் பார்த்தார் சொல்லரும் சிவனின்
மாதவத்தாலுறு வரங்களை இவன்வீண்
செய்கிறான், இறுதியில் சிவகுரு கழலெனும்
மெய்ப்பொருளன்றி வேறிவற் கொன்றிலை
எனப்பலஎண்ணி இருமூன் றுமுகன்
புனைகழல் போற்றிப் புகுந்தான் சூரன்முன்
இருப்பதற் கேற்ற எழிற்சிங்காசனம்
* திருக்குழந்தைக்குச் சிவிகை முத்துப்
பந்தருற்றதுபோல், பற்பல இரத்தினக்
கொந்தணி ஆசனம் குமரனின் அருளால்
தோன்றிய தினிதே தூதனும்அ:.தில்
தோன்றிவீற்றிருந்தார் சூரர்கள் திகைத்தனர்
காவலைக்கடந்தவன் தேவனோ யாரிவன்
மூவுலகளந்த முகுந்தனோ சிவனோ
இறந்த தாரகன் இவ்வடிவத்தில்
பிறந்து வந்தானோ பேரதி சயமிது
எனப் பலர்நினைக்க இகலுறு சூரன்
சினத்தொடு பற்களைத் தெறித்திடக்கடித்தான்
தூதனைப் பற்றிச் சூழ்ந்திடும் அசுரர்
வேதனை யுடனே விளம்பினர் பற்பல
என்முன் வந்தாய் என்னிலும் உயர்ந்த
பொன்மய ஆசனம் பொருந்த வீற்றிருக்கும்

*திருஞானசம்பந்தர்

நீயார் சொல்லென, தீயெனக் கோபம்
ஆய நிலையுடன் , அசுரனே, உன்றன்
தம்பிதா ரகனைக் கிரவுஞ்சமலையை
வெம்பிட அழித்த வேலவன்தம்பிநான்
இந்திராதியோரை இன்னற் படுத்தினாய்
செந்தழல் நிகர்த்த சிறையிலடைத்தாய்
பற்பல கொடுமைகள் பற்பல தேவர்க்(கு)
அற்பகல் புரிகிறாய் அமரரைச் சிறைவிட்
டுயர்வழி நின்றால் உயிர்பிழைத் துண்மைச்
செயல்புரிந் தினிதே சீருறவாழ்வாய்
என்றலும் சூரன் ஏளனம் செய்து
ஒன்றிய தேவர் ஒருவரை யும்விடேன்
அறுமுகப் பாலனை அழிப்பேன் நாளை.
உறுதூதுவனே உன்னுயிர் தந்தேன்
இப்படிச் சூரன் இயம்புதல் கேட்டு
செப்பரும் சிவனின் திருவிழி தோன்றிய
அப்பன் முருகனின் ஆற்றலை அறியாய்?
சிவனே அந்தக் சிறுவனென் றுணர்வாய்
அவனே உனக்கென அண்டமும் ஆயுளும்
தந்தவன் என்பதைச் சற்றும் அறிந்திலை
இந்த விதமாய் எம்வீர வாகு
எடுத்துக் கூறியும் இணங்காச் சூரன்
அடுத்த வீரர்கள் ஆயிரம் பேரைப்
பணித்தான் இவனைப் படுசிறைக் கிடுகென
அணித்தாய் நின்ற அருள்வீர வாகு
குறித்தஆ யிரவர் குடுமிகள் எல்லாம்
இறுக்கிப் பிடித்தார் எதிருறு சூரன்முன்
வீசி எறிந்தார், வீண்மொழிச் சூரனே
தேசுடை வேலனால் சிதறுவாய் நீயென
தூதுவன் திரும்பினார் சூரன் வெகுண்டான்
தூதுவன் இவனைத் தொலைத்திடு வாயென
சதமுகனிடத்தே சாற்றினான். என்முன்
எதிருறும் ஆயிரம் என்படை வீரரின்
குடுமிகள் எல்லாம் கூட்டிப் பிடித்துக்
கொடுங்கொலை செய்தான் குறுகிப் பிடியெனச்
சொன்னதைக் கேட்ட சூர்படைச் சதமுகன்



## 13. சதமுகன் வதைப் படலம்

இலட்சம் பேருடன் எதிர்த்தான் தூதனை
இலட்சண தூதன் சூளிகை எறிந்து
வீரரை யழித்தார் வேலனை நினைத்தார்
நூறு முகத்துச் சதமுகன் தன்னை
விழுத்திக் கொன்றார் மிகுபேர் உருவம்
செழித்த வான்வரை சேர்ந்துமுட் டும்படி

## 14. காவலாளர் வதைப் படலம்

எடுத்தார் சூரன் எழிலார் அரண்மனை
அடுத்தார் ஆங்கே ஐம்பது வெள்ளம்
வீரரைக் கண்டார் விரைந்தெழு தோமரம்
கூரார் பிண்டி பாலம் கதைகொடு
எதிர்த்த வீரரை இழுத்து நசுக்கியும்
மிதித்துத் துவைத்தும் மிகுதலை யறுத்தும்

## 15. நகர்அழி படலம்

சூரன் அரண்மனை துணிந்து வந்தார்
* வேரம் ஒன்றை வியந்து கண்டார்
அதனைப் பிடுங்கி அத்தாணி மண்டபம்
சிதற எறிந்தார் சீறினான் சூரன்
பற்பலர் இறந்தனர் பலர் அங்கம் இழந்தனர்
பற்பலர் பயந்தனர் பற்பலர் புலம்பினர்
தூதனைப் பிடிக்கச் சூரரைப்பணித்தான்
வீர சூரர்கள் வெம்போர் புரிந்தனர்
வீர வாகுவும் வியன்நகர் முழுதும்
கனன்று பிடுங்கினார் ககனத் தெறிந்தார்
புனற்றேவ கங்கையும் புகுமிடம் தூர்ந்தது.

## 16. சகத்திர வாகுகள் வதைப்படலம்

மன்னிய வீர மகேந்திர மழித்தவன்
தன்னை எதிர்த்து சகத்திர வாகுகள்
என்போர் வந்தனர் இலங்கும் ஐந்நூறு
புன்சடைத் தலைகளும் பொலிந்த ஆயிரம்

வேரம்: செய்குன்று சூளிகை -மலைச்சிகரம்

கரங்களும் உடையோர் கதறக் கதற
மரங்களில் சிறந்த மராமரம் பிடுங்கி
அடித்தும் இழுத்தும் ஆறாய் இரத்தம்
படித்தலம் பாயப் பண்ணி முடித்தார்

## 17. வச்சிர வாகுவதைப் படலம்

செறிந்த இச்செய்தி சேணுயர் தூதனால்
அறிந்த சூரன் அவனிளங் குமரானாம்
பத்துத்தலையும் இருபது தோளும்
வச்சிர தேகமும் வலிமையும் உடைய
வச்சிரவாகுவை வாழ்த்தி, தூதனை,
இக்கணம் கட்டி இழுத்து வருவாய்
எனவழியனுப்ப எழுந்தான் வச்சிரன்
சினமிகு படையுடன், தேடி வருகிறான்
அறுமுகன் தூதுவன் அறுமுகன் கழலை
நிறுவினார் நெஞ்சில் நெடும்ஒலி புரிந்தார்
வந்த வீரரை மாண்டிடச் செய்தார்
வெந்திதல் வச்சிரன் விண்போய்க்கீழ்விழத்
தூக்கி எறிந்தர், துணித்தார் ஒருகை
தாக்கிய பின் அவன் தசத்தலை அறுத்தார்
இச்செயல் கண்ட இரவியும் மனத்தில்
அச்ச முற்றங்கே அகன்றதை யொப்ப
சூரன் இச் செயலைச் சொல்லாத எனக்கு
கோரத் தண்டனை கொடுப்பானெனவே
மேலைத் திசையில் விரைந்து மறைந்தான்
வேலைத் தூக்கிய வேளிடம் செல்ல
வீர வாகுவும் விண்வழி கிளம்ப
சூரர்கள் பயந்து துவண்டனர் ஒளித்தனர்

## 18. யாளிமுகன் வதைப் படலம்

மாலைக் காலம் மருவிய போது
கோலத் தூதுவன் குமரனை நினைந்து
சீருயர் இலங்கை திருநகரடைந்தார்
பேருயர் காவலன் யாளி முகனை
எதிர்த்தமரிட்டு இலங்கிடும் அவனின்
ஆயிரம் முகமும் இராயிரம் கரமும்
துணித்து வென்றனர், அதிவீரனெனும்
இனித்ததன் மகனையும் இழந்த யாளிமுகன்
தானுமிறந்தான் – தண்ணளித்தூதன்



வானிலுயர்ந்து மறிகடல் கடந்து
கந்தமாதனத்துக் கடற்கரைவிளங்கும்
செந்திலம் பதியைச் சேர்ந்தனர் இனிதே.

## 19.வீரவாகு மீட்சிப்படலம்

வலிமிகு வீர வாகுவும் ஆங்கே
பொலிவுறு தம்பியர் புத்தேள் கூட்டம்
வந்தோர் மகிழ வரலாறுரைத்துக்
கந்தனை வணங்கிக் கதையெலாம் சொன்னார்
அந்தரத் தேவர் அருஞ்சிறை விடேனென
வெந்திறற் சூரன் விளிம்பியதுரைத்தார்
எந்தை முருகன் இந்திரன் பிரமன்
திருமால் யார்க்கும் திருமுகம் பார்த்து
பெருமா சமரம் புரிந்திட நாளை
புறப்படுவோமென புந்தி மகிழ்ந்து
சிறப்புயர் அமரர் திரண்டனர் ஒருங்கே
சயந்தனனின் நிலையும் சாற்றிய உரையும்
நயந்தரு தூதர்இந் திறற் குரை செய்தார்

## 20. சூரன் நகர்புரி படலம்

வச்சிர வாகுவின் மரணமறிந்து
பிச்சுறு சூரன் பெற்றதன் மகனின்
சோகத்தாலே துடித்துக்கதறினான்
பாகத்திருந்த பதும கோமளை
ஏனைய மனைவியர் ஏங்கிக் கதறினர்
ஈன அமங்கல இழவொலி எழுந்தது
தருமகோ பன்பேர் அதர்ம மந்திரி
விரவிய ஆறுதல் விளம்பிச் சூரனை
ஆறுதல் படுத்தினன் அயனை வரும்படி
வீறுதம் தூதரை விட்டனன் சூரன்.
இந்த அண்டத்து நான் முகன், முருகனின்
முந்துறு சேனையுள் முனைந்து போய் விட்டான்
என்றாலும் மற்றைய மண்டலப்பிரமனைச்
சென்றழைப்பாயெனச் சீக்கிரம் ஏவலர்
அழைத்துவந்ததும் அவ்வயனாலே
அழிந்த நகரெலாம் அழகுறச் செய்தான்

## 21. சூரன் அமைச்சியல் படலம்

வச்சிரவாகுவின் மரணத்துயரம்
மனத்தினில் நீக்கினான் வந்தனர் ஒற்றர்கள்
மெய்ச்சுடர் வேலவன் விளங்கிய செந்தூர்
விரகுடன் சென்ற பகனும் மயூரனும்
சரவண பவனின் தகுதியை உரைத்தனர்
எந்தை முருகனின் இரண்டாயிரமாய்
இலங்குபூதப்படை எண்ணுநூற்றெட்டு
விந்தைத் தலைவர்கள் விதம்படுபடைகள்
விளங்கிடுவகையெலாம் விளம்பினர் கடிதே
உடனே சூரன் உற்றிடும்தம்பியும்
ஓங்கும் புதல்வரும் உயரதிகாரரும்
திடமிகும் அசுரரும் திரண்டசபையில்
சிந்தை சுழன்றுமுன் செயலெலாம் விளம்பி
சிறியபாலனை பெரியவன் நான்போய்ச்
செருவில் வெல்வதோர் அருகதை யன்று
அறிமின் என்றலும் , அப்போ தாங்கே
அமைச்சன் மகிடன் ஆர்ப்பரித் துரைப்பான்
முன்னே நடந்தவை முழுவதும் அறிந்தும்
முழுச்சமரின்றி முடங்கிக் கிடந்தீர்
அன்னாட் செயலெலாம் அரன்மகன் செயலென
அறிந்தும் அவனை அழியாதிருத்தல்
அரசே தங்களுக் கடுக்குமோ சொல்லுக
அனல்சிறி தாயினும் அதனை உடனே
உரமாய் அழித்திடல் உறுசெய லன்றோ
ஒரு சிறு பாலனென் றெண்ணுதல் தவறே
ஆகையால் உடனே அடுசமர் புரிய
ஆயத்தமாகுவோம் அனைவரும் என்றான்.
வேகமாய்த் துர்க்குணன் என்னும் அமைச்சன்
விளம்புவான் அரசே மிகச்சிறுகுழந்தையை
வெல்வதற்குனது வீரப்படைகளை
விரைவுடன் அனுப்பி வெல்லலாம் என்றான்
வல்லபன் தரும கோபனாம் மந்திரி
வாய்திறந்துரைப்பான் மன்னனே அந்தக்
குழந்தை முருகன் அரிஅயன் அரனலன்
கூடிய விரைவில் சேனைத்தலைவருள்
பழம் பெரும்தலைவனைப் படையுடன் அனுப்புக.
பரம வெற்றியுடன் வருவான் என்றான்
சினம்மிகு கால சித்துஎனும் மந்திரி
திடுக்கென எழுந்தான் சிறிய பாலனை



கணமொரு பொழுதில் கட்டி வருவேன்
கருதுமுத் தரவு தந்தால் போதும்
என்றான், சண்டன் என்னும் அமைச்சன்
என்னை விடுங்கள் எதிரியை நொடியில்
கொன்று வருவேன் கொடுங்கள் உத் தரவெனக்
குமுறி எழுந்தான் கூடிய அவுணரின்
சகல படைக்கும் தளபதி அனலி
தகுபோர் புரியத் தகாதா லோசனை
புகுந்து போர் புரிவோம் புறப்படுமென்றான்
போர்படைச் சிங்கனும் புகன்றான் அவ்விதம்
அத்தருணத்தே அடுபானு கோபன்
அப்பனைப்பார்த்தான் அறிவுயர் தந்தையே
வித்தக மின்றி விளைந்தமுற் குறைகள்
வியத்தகு நினக்கு வேதனை தந்தன.

பொருளல தொன்றினைப் பொருளெனக் கொடு
வெருவுதல் செய்வதும் வினையம் ஓர்கிலா(து)
ஒருசெயல் விரைந்துசெய் துயங்கிவாழ்தலும்
பெரியவர் கடமையோ பேதைத்தன்மையே (க)

ஆகையால் சிறுவனோ டடுசமர் புரிதல்
ஐயனே தங்களுக் கழகன்று அதனால்
ஏகுவேன் யானே. என்றலும், இரணியன்
எனும்பெயர்ச் சூரனின் இன்னொரு மைந்தன்
பானு கோபனைப் பயில்போர்புரியப்
பண்ணுதல் தவிர்க. பாரிய வீரன்
நானே உள்ளேன் எனை அனுப்பாமல்
நனி ஆலோசனை நாடுதல் தகுமோ?
இவ்விதம் கூறலும் இரணியன் தம்பி
எழுத்தான் அவன்பெயர் அக்கினி முகனாம்
வவ்வியழித்திடும் வன்படையுடனே
மாபோர் புரிவேன் மலரவன் தந்த
வயந்தருவில்லும் வச்சிரகவசமும்
வைத்திருக்கின்றேன் மகிழ்ந் தெனையனுப்புக
இயைந்த வகையில் இவ்விதம் அனைவரும்
இயம்பும் ஆலோசனை எல்லாம் கேட்டபின்
ஆயிரந் தலையுளான் அறநெறி அறிவும்
ஆற்றலும் படைத்தோன் அவையில் எழுந்தான்
தீயன வெறுக்கும் சிங்க முகாசுரன்
செந் நெறியாளன் சிறப்புரை உரைத்தான்

## சிங்கமுகாசுரன் அறிவுரை

" அண்ணா மன்னவா, அடியேன் உரையை
அமைதியாய் கேட்குக, அமைச்சரும் யாவரும்
திண்ணிய தங்களின் திறலினைப் பேசினர்
செல்வரின் கோபம் சீரிய அறிவையும்
கடந்து சென்றிடும், கனந்தரு நீதியைக்
கருதார், யோசனை கழறுவார் பகைவர்
இடம்பெறு செயல்களை எதிர்கொளும் ஊறுகள்
எண்ணிச் செய்திடின் இடைஞ்சல் வராது
தூண்டில் உணவைத் துய்த்த மீன்போல்
சுரர்க்குத் துன்பம் தொடுத்ததால் வருந்தினாய்
ஆண்டவன் தந்த அரசுக் காலமும்
அண்ணிய தெண்ணிலை" ஆயஎன் சக்தி
ஒன்றே உங்களை ஒழித்திடு" மெனவே
உமையொரு பாகன் உரைத்தன எண்ணிலை
ஒன்றிய குரவர் ஓங்கிய தவத்தினர்
உணர்நெறி யாளர் ஒப்பிலாப் பெண்கள்
சிறுவர் இவர்களைச் செறுத்தவர் நரகே
சென்று வருந்துவர், தேவரைச் சிறைவிடின்
அறுமுகன் கயிலை அடைவான், போருக்
கணுகான், அன்றேல் அசுர்குலம் அழியும்'

## சிங்கனை இகழ்தல்

சூரபத் மன் சினம், சுடத்தலை அசைத்தான்
சொல்லூழும் மூர்த்திகள் வெல்லவொண் ணாத
வீரம் படைத்த விறல்மிகு தம்பியே
வேலவன் குழந்தை விதம்படு பூதர்கள்
இவர்களுக் கஞ்சியே இவ்வா றுரைத்தாய்
"எனது சக்தி ஒன்றே யழிக்கும்"
சிவனின் இம்மொழி செவியில் கேட்டிலேன்
சிங்கனே வஞ்சனை செப்புகின் றாயோ,
அப்படிக் கூறினும் அதுசொல் வழக்கே
அழியாத வாழ்நாள் ஆயிரத்தெட் டண்டம்
ஒப்புறும் ஆட்சி உடையேன் நானே
ஒருமொழி சொல்வேன் உணர்வாய் சிங்கனே

***



எண்ணிலாத தோர் பாலகன் எனைவெல்வன் என்கை
விண்ணிலாதவன் தன்னையோர் கனியென வெ ்.கிக்
கண்ணிலாதவன் காட்டிடக் கையிலாத வன்போய்
உண்ணிலாதபேர் ஆசையால் பற்றுமா றொக்கும் (க)

****

என்று கூறிட இளையவன் சிங்கன்
என்னண் ணாவே எழுசினம் கொள்ளேல்,
ஒன்றெனும் பரம்பொருள் ஒளிர்மதிச் சடையும்
உயர்முக் கண்ணும் ஓங்குதோள் நான்கும்
பவள மேனியும் நீல கண்டமும்
பயின்ற வடிவில் பஞ்ச கிருத்தியம்
எவரும் அறியா தியற்றிப் பாசம்
இடர்தவிர்த்தினிய எழில்வீடளிப்பான்
அதனைமறந்தாய் அறத்தை மறந்தாய்
அமரரைச் சிறையில் அடைத்துவருத்தினாய்
இதனை யறிந்த இறைவனே விழிப்பொறி
இருமூன் றுவிட்டான் எழுந்தான் முருகன்
அந்தமுருகனை அறியார் அறியார்
அகில மெல்லாம் அவனிடத் தடக்கம்
கந்தனின் ஆடலைக் கழறமுடியுமோ
கற்பனைக் கடங்காக் கற்பகச் செல்வன்

***

அருவு மாகுவன் உருவமு மாகுவன் அருவும்
உருவு மில்லதோர் தன்மையு மாகுவன் ஊழின்
கரும மாகுவன் நிமித்தமுமாகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடப் பாலார்

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்
மூதக்கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக்காதியாய் உயிர்க்குயிராய்நின்ற அமலன் (க)

*****

பாலகன் என்று பகரேல் அண்ணா
படர்கிளை யோடுனை படர்ந்தொரு கணத்தில்
சீலமோ டழிப்பான் செப்புமண்டங்களைச்
சிருட்டிக்க வல்லான் தேய்க்கவும் வல்லான்
உனது வச்சிர உடம்பு மழியும்
உலகில் பிறந்த உடலெலாம் அழியும்

சினத்தை விட்டிடு தேவரைச் சிறைவிடு
சிந்தித் தினிநீ செயற்படு வாயென,
உடனே சூரன் உறுமினான் உரைப்பான்
ஒன்றே பிரமம் உயிரெனும் பெயர்பெற்
றிடமிடம் பற்பல இசைந்த வடிவெடுத்
தெடுத்த வினையற எழுங்குடா காயமாய்
பிரமப் பொருளும் அபேத மாகும்
பிரமம் இவரென பிரமம்அற் றோரென
இருவித மாக எண்ணலை உயிர்கள்
எல்லாம் ஒன்றுதான் இசைந்த வெற்றி
வலிமை யற்றோர் மடிந்துதாழ்வர்
மற்றுஅவை யுடையோர் வாழ்வார் உய்வர்
குலத்தை யழித்த கொடியதேவரை
கொடும் சிறை வைத்தது குற்றமும் அன்றே
தரும நூல் சொல்வதைத் தம்பிநீ அறியாய்
தலைவன்நான் பெரியவன் சண்முகன் சிறியவன்
பெருவலி யுடையேன் பேசும் சிவனையும்
பின்வாங்காமல் போரிட் டெதிர்ப்பேன்

***

காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு கங்கை
ஆற்றில் தாக்குண்டு சரவணம்புக்கு அலைப்புண்டு
வேற்றுப் பேர்முலை உண்டழுதே விளையாடும்
நேற்றைப்பாலனை யோபரம் பொருளென நினைந்தாய் (க)

***

அடடா சிங்கா, அமரர்சார் பாக
அறைந்தனை எல்லாம் அடுபகை எதிரிநீ
முடுகிய வீரம் முற்று மிழந்தாய்
முகமா யிரமுடை முட்டாளானாய்
இருந்தென் னபயன் இறந்தவன் ஆனாய்
ஏந்திய ஆயுதம் எல்லாம் எறிந்திடு



வருண னிந்திரனை வன்சிறை யிட்ட
மகாவீரன்நீ மாதரைப் போல
நடுங்கிநிற் கின்றாய் நான்முகனைப்போல்
நயந்தபஞ் சாங்க நற்பணி செயச்செல்
கடுஞ் சமர் புரிவேன் கந்தனை வெல்வேன்
கருதுநின் நகர்க்குக் கடிதுநீ செல்கென

## சிங்கன் போருக்குடன்படல்

அறிவிலார்க் குரைப்பவர் அவரிற் பேதையர்
ஆவதும் அழிவதும் அவரவர் விதிவழி
கனிதேன் மழையால் காஞ்சிரைக்காயின்
கைப்புநீங்காது, கனன்றசூரனின்
காலமண் ணியது கந்தனின் கைவேல்
களத்தில் சூரரைக் கலக்கியழிக்கும்
ஞாலமே லனைவரும் நலிந்தழிந்திட்டபின்
நானிருந் தென்பயன் நானுமிறப்பேன்
என்று சிங்கனும் இதயத் தெண்ணினான்
இகல்மிகு சூரனை இனிது தொழுதான்
துன்றுபோரிலே தொடுசமர் புரிவேன்
சொல் விடை என்றலும் சூரன் மகிழ்ந்தான்
படைகளைத் திரட்டியப் பாங்குயர் நகரில்
பயில்வா யாகப் பன்னிருகையன்
படை வரும்போதில் பகருவேன் என்றனன்
பலரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

***

மகேந்திரகாண்டம் முற்றிற்று

உ

நான்காவது

# யுத்தகாண்டம்

நாரணன் என்னும் தேவும் நான்முகத் தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவும் தேறா அனாதியாய் உயிர்கட் கெல்லாம்
காரணனாய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்
(க)

## 1. ஏமகூடப் படலம்

சூரியன் உதித்தான் செந்தூர்ச் சுந்தரமுருகன் ஆங்கண்
சுரர்முத லானோர் கேட்க, தூதுவன் வீர வாகு
வீரனை நோக்கிச் சொல்வான் வீரம கேந்திரம்போய்
வெம்பழிச் சூரனோடு விரவிய அசுரர் மாளப்
போரினைத் தொடுப்போம் தேவர் புரிதுயர் ஒழிப்போம்,
விண்ணோர்
புறப்பட்டு வருதிர், என்றன் பொலிமன வேகம் செல்லும்
தேரினைக் கொணர்மின் என்ன. திறல்மிகு வாயு
தன்னால்
செலுத்திடும் தேரிலேறிச் சிவமகன் காட்சிதந்தான்
அவரவர் வாகனத்தில் அமரர்கள் சூழ்ந்துவந்தார்
அடல்மிகு பூதவெள்ளம் அணியிரண டாயிரங்கள்
புவனத்தைக் கணத்தழிக்கும் சுப்பிரன் மேக மாலி
பொருந்திய சுவாலகேசன் பொலிந்தநூற் றெட்டுவீரம்
திவள்படைத் தலைவர் சூழச் செருப்பறை படகம்கோடு
செறிகர டிகை உடுக்கு திமிலைசல் லரிமுழங்க
சிவமகன் கடலைத்தாண்டிச் சேணுயர் இலங்கை மேவும்
சிகரியை நீங்கிவீர மகேந்திர புரியின் பாங்கர்
வந்தனர் அந்தவேளை மாலயன் சுரர்கோன் சொன்ன
வாசகப் படியே போரில் வருமுபா யங்கள் நாடிச்
சிந்தனை புரிவதற்குச் சிறந்தபா சறை அமைக்கத்
தேவதச் சனைப் பணித்தார் சீரிய மாடகூடம்
சுந்தரச் சோலை வாவி சூழ்தரும் ஏம கூடம்*
தூயதம் மனத்தால் செய்ய துணைவரும் சுரரும் மேவ
மந்திரக் கோயிலுள்ளே மகிழ்ந்துவீற்றிருந்தான் கந்தன்
வருபரா சரர் புதல்வர் மலரடி போற்றி நின்றார

* ஏமகூடம்–கதிர்காம்



## 2. வரவு கேள்விப்படலம்

ஏமகூ டத்தில் மேவும் இறைவனின் வருகைதன்னை
இசைவிலாச் சூரனுக்கங்(கு) இயம்பிட நாரதர்தம்
பாமலர் வீணையோடு பாங்குயர் மகேந்திரத்தை
பரிவுடன் சேர்ந்தார் கந்தன் பாசறை விபரம் சொன்னார்
வேமனற் சினம்மிகுந்து வேலனை யழிப்பதற்கு
விறற்பானு கோபன்தன்னை விரைவுடன் அனுப்பச்சொன்ன
மாமுனி உரைத்தவண்ணம் மகன்தனைப் போருக்கேக
வகுத்தணி புரியச் சொல்லி வருணனை வைதான், அந்தப்
பாலகன் உன்னைத்தாண்டிப் பயின்றிட வைத்தாய் நீயென்
பகைவனாய் விட்டாய் என்று பகரலும் வருணன் ஏங்கி
" வேலவன் பூதரோடு விண்வெளி வந்தானையா,
விறலுறு படைகளாலே வெதும்பினேன் புழுதியானேன்
சாலவும் எதிர்த்தேனானால் தகுமுனி உண்டதைப்போல்
தமியேனை உண்டுதீர்ப்பர் தடுக்கநான் வலிமையற் றேன்
ஓலமிட் டிவற்றைக்கூற ஒற்றரின் செய்தி கேட்டான் "
உணர்பானு கோபன் தன்னை உடன்வரப் பணித்து நின்றான்

## 3. முதல்நாள் பானுகோபன் யுத்தப் படலம்

வந்தனன் பானு கோபன் வகைவகை உரைத்தான் சூரன்
மன்னிய மகேந்திரத்தின் வடபாலே வந்திருக்கும்
கந்தனை பூதர்தம்மை கமலன் இந்திரனை வென்று
கடிதினில் வருக என்றான் கனன்றிடு பானுகோபன்
சுந்தரி துர்க்காதேவி துணையடி தொழுதான் போர்க்குத்
துணையுறு முடையணிந்தான் தொடுபடை வீரராக
முந்துறு விசயன் மாயன் முசலிநே மியன் விசண்டன்
முரன், கரன் கனலிசண்டன் அசமுகன் மூர்க்கன் , ஆய
பொலிதரு தலைவர் சூழப் பொருபதி னாயிரங்கள்
பொங்கிய வெள்ளம் செல்லப் பொருந்துநாற் படைகளோடு
மலிஅலை கடலைப்போல வந்தனன் பானுகோபன்
வருகையைக் கண்டெழுந்து நாரதர் ஓடிவந்தார்
நலந்தரு முருகா, பானு கோபனும் போர்க்கெழுந்தான்
நான்முகன் இந்திரன் மால் எனும்பலர் தமையும் வென்ற
குலந்தரு பானுகோபன் கொடியவன் தன்னை வெல்லல்
குமராஉன் னாலும் ஈசன் தன்னாலு மேநடக்கும்
என்றலும் முருகச் செவ்வேள் இளநகை புரிந்தார் ஆங்கண்
இளவலாம் வீராவாகுத் தம்பியை இளையாரோடு
துன்றிய பூதரோடு தொடர்சமர்க் கனுப்பிவைத்தார்

சொற்படி வீரவாகு தொடுகிரி மேருவொத்த
வென்றிடு வில்லைஏந்தி விருதுறு தேர்கள் சூழ
வீரர்கள் இலக்கத்தெண்மர் விரவிய பூதசேனை
ஒன்றுமா யிரமாவெள்ளம் உடன்வரப் போர் தொடுக்க
ஒண்மதில் மகேந்திரத்தின் உயர்மதிற் புறத்துவந்தார்
படைகளின் வருகைதன்னைப் பரவிய அசுரர்கூட்டம்
பானுகோ பனுக்கு ரைக்கப் பணித்தனன் அசுரருக்குத்
தொடுத்தனர் போருமாங்கே துன்னிய பூதசேனை
சூலம்தோ மரங்களாலே தொலைத்தனர் அசுரர்தம்மை
அடுத்திடும் தேரைத் தேரால் ஆனையை ஆனைதன்னால்
அசுவத்தை அசுவம் தன்னால் ஆட்களை ஆட்களாலே
அடித்துயிர் துறக்கச் செய்ய அழிந்ததே அவுணச்சேனை
ஆங்கங்கே சிதறிஓடி அலமந்தார் திகைத்தகன்றார்
அனலியாம் படைத்தலைவன் அம்பிடு வில்லைப்பூட்டி
அன ற்கணை விட்டான் பூதர் அடல் மிகு தோள் துளைத்தான்
சினமிகு சிங்கன் என்னும் திகழ்பூதப் படைமேலாளன்
சீற்றமாய்த் தண்டினாலே அனலியின் தேரிழுத்த
கனமிகு குதிரைதம்மைக் கடுகிவந் தடித்துக்கொன்றான்
கடுந்தலை பிடித்திழுத்துக் கையினால் மார்பொடித்தான்
அனலியும் மாண்டான் சண்டன் ஆகிய அவுணவீரன்
அண்டினான் சிங்கன்தன்னை. அடிபட்டார் இருவர்தாமும்
வீழ்ந்தனர் மயங்கினார்கள் வீரனாம் அசுர மாயன்
மிண்டினான் அந்தவேளை வீறல்மிகு பூத நீலன்
சூழ்ந்தவன் மார் பிடித்து சுற்றிக்கை யால்பிடித்து
துண்ணெனக் கழுத்தைக் கவ்வித் தோன்றிய குருதியுண்டு
மாய்ந்திடச் செய்தான் சண்டன் மறுபடி போர்க்கு வந்தான்
வந்தவன் தண்டைச் சிங்கன் வலிதிலே யடித் தொடித்தான்
பாய்ந்தனன் சண்டன் தன்றோள் பயிலும் தண்டாகக் கொண்டான்
பற்பல அடியும் குத்தும் பரவிய உதையும் போட்டு
இருவரும் போர்புரிந்தார் இறந்தனன் சண்டன். ஆங்கண்
இயமதூ துவரும் வந்தார் எடுங்கள் இவ் வுயிரைஎன்ன
மருவிய தூதர் அந்த வயச்சண்டன் உயிர் கவர்ந்தார்
மற்றொரு அசமுகன்பேர் வல்லசு ரன்வந்துற்றான்
பொருமது பூதநாதன் புகுந்தனன் போர்புரிந்தான்
புகுந்திடும் கணைகளெல்லாம் பொலிவிழந் தேகுமாறு
அருகுறும் * ஆல்பிடுங்கி அவன்முன்னே பிடித்தான் பின்னர்
ஆயுதமின்றி நின்ற மதுவினைத் தாக்குமாறு
விட்டுணு சக்கரத்தை வீசினான் ஆயுதங்கள்

* ஆல்–மரம்



விரவிடா மதுவை அந்த விட்டுணு சக்கரம் போய்
எட்டாமல் திரும்பிவந்து துட்டனாம் அசமுகன்தன்
எதிர்ப்படு தலையைக்கொய்து சக்கரம் மாயன்கையில்
இட்டவாக் குரைத்தவண்ணம் இருந்தது மற்றைச்சூரர்
இரத்தவெள்ளத்தைநீந்தி ஏங்கினார் ஒளித்தகன்றார்
மட்டிலாப் படைகளோடு வந்தனன் பானு கோபன்
மன்னிய தபனன் தன்னை வன்சிறை இட்டவன்யான்
இராயிரம் வெள்ளம் சேனை இறந்தன ஆயிரம் தான்
எனக்குள. இவற்றைக் கொண்டே எதிரியைத் தொலைப்பேன்
என்றான்
சராசரம் நடுங்கும் வண்ணம் சரமழைபொழிந்தான் பூதர்
சஞ்சலித் தோடிச் சென்றார் தகுபலர் இறந்தார். துன்பம்
வராதுகாத் திடுக என்று வாகுவை வந்தடைந்தார்
வலிய பூதத்தலைவன் உக்கிரன் என்பான் வெய்ய
அராவென வந்தான் கோபன் அடுகணை பல சொரிந்தான்
அம்புகள் மழுங்கிப் போக அயில்எழுப் படையைவிட்டான்
உக்கிரன் இரும்புலக்கை எடுத்தெழுப் படை யழித்தான்
உருத்திடு பானுகோபன் உற்றிடு தேரும் மாவும்
புக்கிட விண்ணெறிந்தான் புகுந்திடு பானுகோபன்
பொலிவுகண்டஞ்சி வெய்யோன் புலம்பி ஓட்டம் பிடித்தான்
அக்கணம் அயனளித்த மூவிலை இருதலைவேல்
ஆயஉக் கிரனின் மார்பில் செலுத்தினான் பானுகோபன்
உக்கிரன் மயக்கங் கொண்டான் அடுத்திடு தண்டி வந்தான்
உயர்மலை – மராமரத்தால் கோபனை அடித்தான். பின்னர்
முத்தலைச்சூலத்தாலே முனைந்திடு பானுகோபன்
முட்டினான் தண்டிதன்னை மூர்ச்சித்தான் தண்டி. பின்பு
வித்தக பினாகி வந்தான் விரட்டினான் பானு கோபன்
விறல்மிகு கபாலியோடு மேவினர்இலக்க வீரர்
அத்தருணத்தில் கோபன் ஆயிரம் கணைகள்விட்டான்
அடுபெரும் போரில் இலக்கத் தனைவரும் தோற்றுப்போனார்
இத்திறம் கண்டவீர கேசரி அம்புமாரி
இயற்றினன் இளைத்தான் கோபன். எடுத்தனன் திருமால்தந்த
படைக்கலம் விட்டான் அ:.து படையெலாம் விழுங்கிவிட்டுப்
பயில்வீர கேசரிமேல் பாய்ந்தது மார்பினூடே
விடைப்பரன் மைந்தன்வேலன் மெய்யருளா லேவீரன்
விட்டிலன் உயிரைமெல்ல விழுந்தனன் இறந்தான் போலே
அடுத்தனன் மன்னுவீர மார்த்தண்டர் பொருதலுற்றார்
ஆயிரம் கணைகளாலும் அணிஉடை வாளினாலும்
தொடுத்தனர் உக்கிரப் போர் துடித்திடும் பானுகோபன்
துளைத்தனன் உடைவாளாலே வீரமார்த் தாண்டர் நெற்றி
அன்னவன் இறந்தவன் போல் அருகிலே கிடக்கக் கண்டார்

அமரிலே சிறந்த வீர ராக்கதர் என்பார். வந்து
முன்னிற்கும் பானுகோபன் முனைந்திடும் படைகளெல்லாம்
முருகனை மனத்தில்வைத்து முட்டினார் அசுரன் பூண்ட
மின்மணி முடியறுத்தார் வேறொரு முடிதரித்து
விரைந்து தேர்க்குதிரையெல்லாம் வீழ்ந்திடச் செய்தான் வேதன்
உன்னுவேற் படையைவிட்டான் உடல்தளர்ந் தோய்ந்தார் வேலன்
ஓங்கிய அருளினாலே உயிர்நீங்கா துணர்விழந்து
வீரராக் கதர்கிடக்க, வீராந்த கர்தம்மோடு
விரவிய ஐவர்வந்தார் வெகுபடைப் போர் புரிந்தவ்
வீரர்கள் சோர்வுகண்ட வீரவா குவந்துற்றார்
விறல்மிகு மிருவரும்போர் வெகுண்டனர் வார்த்தையாடி
தேரொடு குதிரைசேனை சிதறிடச் செருபுரிந்தார்
திறல்மிகு பானுகோபன் சேனைகள் உதிரவெள்ளம்
பாரினில் பாயக்கண்டான் பலபிணக் குவியல்கண்டான்
பாணத்தால் இவனை வெல்லல் முடியாமை கண்டு நொந்தான்
நான் முகன் கொடுத்த மோகப் படையினைவிட்டான் அ∴து
நஞ்சிரு ளாக வந்து நண்ணிய படைகள்தம்மை
வான்புகழ் வாகுதன்னை மயக்குறச் செய்த போதில்
வள்ளல் வேல் முருகன் அங்கே மகா அமோ கப்படைவிட்
டுன்படு மயக்கம்நீத்தார் உற்றது பெரும்போர் வெட்கி
உயர்சிவப் படைக்கலத்தை உவப்புடன் எடுப்பதற்கு
வான் வழி பானுகோபன் மறைந்தனன். மறைதல்கண்டு
வானவர் பூதரெல்லாம் மகிழ்ந்தனர் ஆடல் பாடல்
வேலனைப் பூசை செய்தார் வேலவன் வீரவாகு
விறலினை வாழ்த்தித், தேகம் மிகுந்திடும் களைப்புநீங்க
சாலவும் துணைவரோடு தங்கிடம் செல்க என்றார்
சஞ்சலப் பானுகோபன் சங்கதி கேட்டசூரன்
ஞாலமும் நடுங்கக்கூவி நானே போருக்குச் செல்வேன்
நாற்றிசைப்படைக ளெல்லாம் நயந்தொன்றாய்ச் சேர்மின் என்ன
நால்வகைப் படைகள் மற்றோர் அணியணியாக வந்தார்
நற்றும்பை மாலைசூடி நற்கோயில் வாயில் நின்றான்

## 4. இரண்டாம் நாட் சூரபன்மன் போர்

சிங்கன் மைந்தன் திறல் அதிசூரனும்
தீர தாரகன் மைந்தனசு ரேந்திரனும்
வெங்கடும் சூரனின் படைத்தலை வர்களாய்
வேகமுற் றருகுற தொண்டகம் பம்பை
முரசு துடி முருடு பேரிகை கொம்பு
முழங்கும் தடாரி காளம் சங்கு



பெருமொலிசெய்ய பெருந்தேர் யானை
பேணுகாலாட்படை குதிரைப்படைகள்
இரைச்சல் வானெழ எழுந்தான் சூரன்
இவற்றை யெல்லாம் இந்திரன் அறிந்தான்
உரைச் சலிப்புடனே உற்றனன் முருகனை
உன்னருளாலெமைக் காக்குதி என்றான்
அக்கணம் முருகன் அஞ்சல் என்றருளி
அதிபன் வாயுவை அணிதேர் கொணர்கென
புக்கனன் வாயுவும் பொற்றேருடனே
பூதர்கள் எழுந்தனர் பூமழை சொரிந்து
மாலயன் துதித்தனர் தக்கை தண்ணுமை
வருதுடி சல்லரி தடாரி முதலிய
கோலவாத்தியங்கள், கணநாதர்குழாம்
குளிரவா சித்தனர். நாரதர் கருடர்
கின்னரர் கூடிக் கீதம் இசைத்தனர்
கிளர்வானவரும் முனிவரும் வணங்கினர்
உன்னும் வீரர்கள் இலக்கத்தொன் பானரும்
உடன்வர முருகன் உயர்மணித் தேரில்
போர்முனை அடைந்தார். பூதப் படைகளும்
பொலிந்த அவுணரும் போரைத் தொடங்கினர்
ஈர்திறத்தாரும் அம்புகள் கணிச்சி
இயங்கும் சக்கரம் தண்டுகள் சூலம்
கொண்டு பொருதினர் குலவீடு பூதர்கள்
குதிரை யானைகளைத் தூக்கி எறிந்தனர்
கண்டிடு பூதர் கைகால் இழந்தனர்
கடுபடை அவுணர் பிணமலை யாயினர்
இத்திறம் கண்ட சிங்கனின் மைந்தன்
இராயிரம் குதிரைகள் பூட்டிய தேரில்
மெத்திய வில்லுடன் மிகுபோர் புரிந்தான்
வீரப் பூதர்கள் வெருண்டனர் ஓடினர்
உக்கிர பூதன் உயர்ந்ததண்டத்தை
ஓங்கி வீசினான் அது அதி சூரனின்
தக்க கவசம் தவிடாய்ச் செய்தது
தழலெரி படையை விட்டான் சூரன்
அறுமுகன் அருளால் அக்கினிப்படையை
ஆவென வாய்கொண் டடக்கி விழுங்கி
வீறுடை உக்கிரன் விளங்கும் காலை
வேறொரு வருணப் படைவா யுப்படை
பற்பல விடவும் பற்றிவிழுங்கினன்

படைபதி உக்கிரன் பார்த்த தேவர்கள்
உக்கிரன். செயல்கண்(டு) உற்றநான் முகனிடம்
உரைத்தனர் வியந்தனர் ஒப்பிலா முருகனின்
அருட்கொடை இதுவென அயனார் உரைத்தார்
அப்பால் அதிசூரன் அணிசிவப் படையை
அருளுறப் பூசித் தரிய உக்கிரன் மேல்
அமைவுடன் விட்டான் அப்படை கண்ட
உக்கிரன் தன்கைத் தண்டை நீக்கினான்
ஓம் சிவாயவென உச்சரித் தரனைப்
பக்குவ மாகத் தியானம் செய்தான்
பார்த்த சிவப்படை பரமன் உரைப்படி
ஐயன் திருக்கரத் தணைந்து பொலிந்தது.
ஆயுத மற்றவன் தன்மேல் விட்டால்
செய்யுமிவ் வாயுதம் சேருமென் னிடமெனச்
செப்பிமுன் கொடுத்தார் சிவனுமிப்படையை.
ஆதலால் அதிசூரன் அகம்தடு மாறினான்
அசுரர்கள் ஓடினர் அனலெனச் சூரன்
மோதினான் தண்டால் முழுதுணர் உக்கிரன்
முடுகும் அத் தண்டினைப் பறித்துச் சூரன்மேல்
அடித்தனன் அடித்ததும் அதிசூரன் மாண்டான்
அசுரேந் திரன்வந் தனற்போர் செய்தான்
துடித்தனர் பூதர்கள் துஞ்சினர் பற்பலர்
தோன்றினான் கனகன் எனும்பெயர்ப் பூதன்
ஆயிரம் ஆயிரம் கணைகளைப் பெய்தனன்
அயர்ந்தான் கனகன் அப்பால் உன்மத்தன்
ஆயமாபூதன் அமரிடவந்தான்
அவனும் போரில் மயக்க மடைந்தான்
பொருதான் மந்தனாம் பூதத்தலைவன்
புலன்கள் தளர்ந்து போனான் மந்தன்
மருவினான் சிங்கன் மகாஅசுரேந்திரன்
வாட்டினான் அவனையும் பூதப்படையையும்
இலக்கவீரர்களுள் ஒருவனாம் தண்டகன்
எதிர்த்தான் மயங்கினான் இவன்தன் இளவல்
துலக்கமார் சோமுகன், அசுரேந்திரனைத்
துரத்தி வந்தான் துவண்டு மயங்கினான்
சோமுகன் இளவல் விசயனும் எதிர்த்தான்
தோற்றான் அதன்பின் துணிவுறு வீர
வாகுதேவர் மயில்வா கனனை
மனத்தில் துதித்து வன்போர் தொடங்கினார்
விண்ணிலும் மண்ணிலும் விறற்போர் நிகழ்ந்தது



வீர வாகுவும் அசுரேந் திரனின்
திண்ணிய தலையைச் சிதைத்தனர் வாளால்
தேவர்கள் எல்லாம் பூமழை பொழிந்தனர்
இவர்கள் இறந்ததை எண்ணிக் கலங்கிய
இகல்சூர பன்மன் எரியெனக் கொதித்தான்
நவமுயர் வில்லை நாணொலி செய்தான்
நாணொலி பன்னிரண் டாண்டுகள் ஒலித்தன
பூதர் நடுங்கினர் பொன்றினர் சிற்சிலர்
புரந்தரன் எமனயன் புந்திநொந் தஞ்சினர்
மாதவன் சிறிது மணிமுடி யசைத்தான்
மன்னு நூற்றெட்டுப் பூதத்தலைவரும்
புரிந்த போரில் புண்பட் டேங்கினர்
பூதரின் கணைகளைப் பொசுக்கினான் சூரன்
விரைந்து வந்த வீரமார்த்தாண்டர்
வீரயுத்தத்தில் மயங்கிக்கிடந்தார்
உடனே வீர ராக்கதர் எதிர்த்தார்
ஓங்கினார் வாளை, வாளே ஒடிந்தது
படையிலாதவனைக் கொல்வது தவறென
பாதத்தாலே தூக்கி எறிந்தான்
விரைந்தார் வீர மகேந்திரர் என்பார்
வீரரின்காலில் முப்பது கணையும்
திரண்ட தோளில் முப்பது கணையும்
திகழும் மார்பில் இருபதுகணையும்
செலுத்தினான் சூரன் அவரும்வீழ்ந்தார்
சீரார் வீர தீரரும் வந்தார்
வலுத்த தோளிலும் மார்பிலும் கொடிய
வாளியால் வதைத்தான் மயங்கினார் வீரர்
வீரமகேச்சுரர் வேற்படைவிட்டார்
விரைந்து சூரன் எழுகணை விட்டான்
மார்பினைத் துளைக்க விழுந்தது தேகம்
மருவினார் துரிய வானுயர் நிலையை
வீரகேசரி விட்டார் கணைமழை
வெகுண்டு சூரனின் மார்பிலடித்தார்
வீரன் கையே வெடித்துப் பிளந்தது
விழுந்தார் தேரில் வீழ்ந்தவன் தன்னைக்
கொல்வது பழியெனக் குறித்த சூரன்
குறித்தொரு கையால் எறிந்தான் பாற்கடல்
பல்வரம் மிக்க வீரகேசரி
பாற்கடல் நீங்கிப் படையிடம் சேர்ந்தார்.

வீரபுரந்தரர் போரில் மயங்கினார்
வீராந்தகரும் மயங்கி விழுந்தார்
வீர வாகுவும் மேவினார் போர்க்களம்
விளங்கு மிருவரும் பழங்கதை உரைத்தனர்
இருவரும் தத்தம் வில்நா ணொலித்தனர்
எண்டிசை உலகும் சேடனும் கலங்கின
இருவரும் ஆயிரம் கோடி கணைகளை
எய்தனர், தடுத்தனர் வீர வாகு,
சூரனின் நெற்றியில் நூறு கணைகளைத்
தொடுத்தார் அவையெலாம் ஓடிந்து விழுந்தன
சூரனின் எண்கணை வீர வாகுவின்
தோள்களின் ஊடாய்ப் பிடரியைப் பிளந்தன
வீரவாகுவும் அக்கினி, வாயுவை
விட்டார் அவைகள் வீணாய்ப் போயின
சூரியப் படையையும் இயமப் படையையும்
தூண்டி யனுப்பினார் துகளாய்ப் போயின
வருணன் இந்திரன் வருணப் படையை
வகுத்து விட்டார் அவை செயலிழந்தன
தருணம் பார்த்து சிவப்படைக் கலத்தை
தவசூ ரன்மேல் விட்டார் கடிதில்
சூரனும் தனது சிவப்படை விட்டான்
தொடர்ந் திருபடைகளும் ஒன்றோ டொன்று
கோரமாய் மோதித் திரும்பிச் சென்றன.
கொடிய தண்டத்தை வீசினான் சூரன்
தண்டந்தாக்கிச் சாய்ந்தார் வீரர்
சரமழைகண்டு பூதசேனைகள்
மண்டி ஓடினர் மாண்டனர் பலபேர்
வாகுவும் இலக்கத் தெண்மரும் படைகளும்
ஆற்றல் அழிந்ததை அறுமுகன் அறிந்தார்
அசுரன் முன்தேர் செலுத்திடச் சொன்னார்
போற்றுதற் கினிய புராந்தகன் மகனை
பொலிதவச் சூரன் தெளிவுறக் கண்டான்

****

முண்டக மலர்ந்ததன்ன மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன் மவுலியும் கோலமார்பும்
எண்டரு கரமீராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பும் ஆர்க்கும் சரணமும் தெரியக்கண்டான் (க)

***



முருகவேள் திருவடிவை முந்துதவம் செய்தமையால்
முன்னிற்கக் கண்கண்டான் முனைசூர பன்மனவன்
பெருவலிமை யுடையேனைப் பிரமனரி சிவபெருமான்
பேதித்து வெல்லரிது பேதையொரு பாலகன்நீ
இமைப்பொழுதில் உனையழிப்பேன் என்தம்பிதாரகன்போல்
எழுந்தகிர வுஞ்சம் போல் என்னைநீ நினைக்காதே
உமையவளும் வருந்துவகை உனையழிப்பேன் பார் என்றான்
உவந்தபுன் சிரிப்புடனே ஓம்முருகன் கூறுகின்றான்
சிவன்நெற்றிப் பொறிஎல்லா உலகினையு மேயழிக்கும்
செப்புநூற் றெட்டுயுகம் செல்வமொடு வாழுகின்றாய்
திவள்பாற் கடல்புகுந்த உவர்நீர்போல் உனையழிப்பேன்
சிவமுருகன் கூறியதைச் செவிகொள்ளாச் சூரபன்மன்
வில்லினால் போரிட்டான் விடாமழைபோல் கணைவிட்டான்
விட்டபெருங் கணைகளெல்லாம் பொடிப்பொடியாய் மறைந்தனவே
வல்லவனாம் சூரபன்மன் வச்சிரயாக் கையையறிந்து
வாய்ந்தபத்துக் கணைகளினால் மகாசூரன் வில்லறுத்தார்
தேரழித்தார் இமைப்பொழுதில் சேர்ந்தபடைப்பலமழித்தார்
சென்னிமிசை முடியழித்தார் சிறந்தமணிக் குடையழித்தார்
சோரியெழ உடல்துளைத்தார் துலங்கிடுமா பரணமெல்லாம்
சொரிகணையா லேயழித்தார் சுழலும் சக் கரப்படையால்
அவுணரின்நாற் படையழித்தார் நூறாயிரம் வெள்ளம்
ஆயனஓர் நாழிகையில்அழித்தொழித்தார் அறுமுகனார்
அவிகொள்ளும் சக்கரம் செங் கதிரவன்போல் தோற்ற முடன்
அவுணப்பே ரிருள்நீக்கி அதிவீரம் புரிந்ததுவே
பிணக்குவியல் மீதேறிக் கொள்ளிவாய்ப் பேய்க்கூட்டம்
பிணந்தின்று களித்தனவே பெருங்குருதி பாய்வெள்ளம்
அணையில்லா ஆறுகள்போல் அலையலையாய் ஓடியதே
அலகைகளும் காக்கைகளும் ஆனந்தித் தாடினவே
படையிழந்து பொலிவிழந்து மனமழிந்த சூரபன்மன்
பாலகனோ இவைசெய்தான் படையெடுத்துக் கொல்வனென
திடமாக நான்முகனின் திருப்படையை ஏவிவிட்டான்
செவ்வியவேற் படையதனைச் சென்றுதின்று விழுங்கியதே
திருமாலின் படைவிட்டான் செவ்வடிவேல் விழுங்கியது
சிவப்படையை ஏவிவிட்டான் திசைகளெலாம் நடுங்கியன
பெருவேலன் அப்படையைப் பேணியணி கரங்களினால்
பிடித்தணைத்தான் சூரபன்மன் பெருமூச்சிட் டயர்வுற்றான்
கதியழிந்த சூரனுக்குக் கந்தவேள் புகலுகின்றார்

காரணங்க ளில்லாமல் சயந்தனையும் தேவரையும்
மதியழிந்து சிறையிலிட்டாய் வானவரின் சிறை நீக்க
வருதூது யான்விட்டேன் மறுத்ததால் தாரகனை
மற்றவுணப் படையனைத்தும் வன்போரில் நீயிழந்தாய்
வலிதிலுன்னைக் கொல்லவல்லேன் வானவரின் சிறைநீக்கு
பற்றியுன்னைக் கொல்லேன்யான் பகருவாய் உன்எண்ணம்
பார்வதியின் ஞானமைந்தன் பகர்ந்ததற்குப் பதிலின்றி
மாயமாய் மறைந்:துவிட்டான் வானவர்கோன் மால்பிரமன்
மாமுருகன் தனைப்பணிந்தார் வாழ்த்துரைகள் பலபுகன்றார்
ஆயபெரும் பூதப்படை அசுரன்அரண் மதிலனைத்தும்
அழிப்பதற்குச் சென்றார்கள் ஆங்குநின்ற அதிகோரன்
எதிர்த்துரிய போர்புரிந்தான் மேகனெனும் பூதப்படை
எழில்வீரன் ஓடிவந்து தலையிற்கை யாலடிக்க
அதிகோரன் உயிர்துறந்தான் அலங்காரக் கோபுரத்தை
அணிமதிலை உடைத்தார்கள் அலைகடலில் எறிந்தார்கள்
வீரமிகும் அவுணர்உடல் மீன்கள்தின்று களித்தனவாம்
வீரமகேந் திரபுரியை விறல்பூதர் தாக்கினதால்
சீரதிக கோபுரம்போய்ச் செறிகடலில் வீழ்ந்ததினால்
செழுநீர்போய் மகேந்திரத்தின் திண்மதிலைத் தாக்கியது
அப்போது பூதகணம் அவ்விடத்தைவிட்டகன்று
ஆறுமுகன் பாசறையை அடைந்தார்கள் ஆதவனும்
ஒப்பான மேற்கடலில் உறங்குதற்குப் போய்மறைந்தான்
ஒளித்தகன்ற சூரபன்மன் உயர்பதும கோமளையின்
கோயிலிடம்சென்றிருந்தான் சிந்தனைகள் பல நினைந்தான்
குறித்தசெயல் அறிந்துகொண்டான் மகன்பானு கோபனவன்
நேயமிகு தந்தையே நிகழ்போர்க்கு நான்சென்று
நிகரிலா வெற்றியுடன் வருவேன்அன் றேலிறப்பேன்
உத்தரவு தருகஎன்றான் உடனேஅச் சூரபன்மன்
உரைக்கலுற்றான்- என்மகனே உயர்ந்தவேற் படைதாங்கி
அத்தனென வந்தவனோர் சிறுவனென மதிக்காதே
அவனையான் வெற்றிகொள் வேன். தூதன்வீர வாகுவைநீ
அமரிட்டு வென்றிடுவாய் செல்கஎன விடைகொடுக்க
அப்பொழுதே பானுகோபன். வடமதிலைக் கட்டுவித்து
தமதுபடைத் வீரனெனும் மகாயனைக் காக்கவைத்து
* தன்பாட்டி தனையழைத்து தனக்குதவி வேண்டுகின்றான்

* தன்பாட்டி-மாயை



## 5. மூன்றாம்நாட் பானுகோபன்யுத்தம்

மாயைப்பாட்டி தனைநினைக்க வந்தாளே மாயையவள்
வரவழைத்த என்பேரா உனக்கென்ன வேண்டுமென்றாள்
மாயைப்பாட்டி யேநானும் வாகுதேவர் உடன்பொருது
வலியிழந்து மதிப்பிழந்தேன் வாகுதனை வெல்லுதற்கு
வரமெனக்குத் தரவேண்டும் என்றலுமே மாயைசொல்வாள்
மறைநெறியை நீவிலக்கி வானவரைச் சிறையிலிட்டாய்
அருள்முனிவர் தவங்கெடுத்தாய் அநியாயம் பலபுரிந்தாய்
ஆயினும் ஓர் வரந்தருவேன் அறிவுமயக் கும்படையை
இப்படையால் வென்றிடுவாய் என்றலுமே பானுகோபன்
எண்ணில்லாப் படையுடனே இயமப்படை வாயுப்படை
வெப்பக்கதி ரோனின்படை சந்திர, அக்கினி பிரம்ம
விஷ்ணுசிவப் படைகளுடன் வெள்ளம்பதி னாயிரமாம்
குதிரையானை தேர்கள் இருபதினாயிரம் காலாட்படை
கொண்டுபுறப் பட்டானொரு தூதுவனால் அறிவித்தான்
அதிவிறலார் வீரவாகு முருகனது தாள் தொழுது
ஆகியதம் துணைவரொடு பூதமாயி ரம்வெள்ளம்
முன்செல்லப் போர்க்களத்தை முட்டினார் வீரரெல்லாம்
பூதர்அவு ணரைப்பிடித்து கைகால் கழுத்தொடிக்க
வன்சூரப் படைகளும் தோள் தலைமுதலி யனவெட்ட
மகாயுத்தம் நிகழ்கிறது. மண்டலமெ லாமதிர
வாகுவின் கணைகளொடு பானுகோபன் கணைகளெலாம்
வந்துவந்து ஒன்றைஒன்று வலிந்துகவ்வி விழுத்தியன
வாகுகணை ஆயிரத்தால் பானுகோபன் மார்பிறுத்தார்
வருணப்படை தனைவிட்டான் வாகுஅக்கி னியைவிட்டார்
வாயுப்படை விட்டானங்கு வாகுநாகப் படைவிட்டார்
வருகருடப் படைவிட்டான் வாகுநந்திப் படைவிட்டார்
வாமனின் படைவிட்டான் வாகுநந்திப் படைவிட்டார்
வலியசிவப் படையிரண்டை இருவருமே விட்டார்கள்
சிவப்படைகள் சண்டையினால் ஊழிக்காற்று, ஊழித்தீ
திரண்டபுகை கொடுநஞ்சு பூதங்க ளின்கூட்டம் ,
அலகைப் பேய், காளிவகை அதிகவை ரவர் கூட்டம்
அதிமாயை யொடுவீர லட்சுமிகள் இருட்கூட்டம்
பாம்புகளின் கூட்டங்கள் பரவுவிநா யகர் ஐயன்
பலகோடி யானை முக சிங்கமுகப் படைக் கூட்டம்
கூம்புமழு சக்கரம்வேல், குபேரன்அயன் அரிவாயு
கோவிந்தன் படைக்கலங்கள் யாவுமுண்டாயினவே
இப்படைகள் மோதுதலால் அண்டங்கள் தடுமாறி

எழுந்தமலை மேருவும்தன் எழில்மாறிக் குலைந்ததுகாண்
அப்போரின் காரணத்தை அறிந்தானே சூரபன்மன்
அணியான படையெல்லாம் அழிந்துதனி யாகநின்ற
பானுகோபன் தன்னிலையைப் பதைபதைத்துச் சிந்தித்தான்
பணித்தசிவப் படைகள்தாம் படைத்த உரு வங்களெல்லாம்
தானடங்கித் தம்மைவிட்ட தலைவர்கள் பால் மீண்டனவே
தபனனும்மேற் றிசைமறைந்தான் கோபனும்வான் வழிமறைந்தான்
மறைந்தவன்பின் மீண்டுவந்து மாயப்படை தன்னைவிட்டான்
மாயப்படை வாகுவையும் மன்னுபடை யாவற்றையும்
அறிவுதனை மயங்கச் செய்து அலைகடலில் வீசியது
அவற்றையெல்லாம் கண்ணுற்ற நாரதனார் முருகனிடம்
செப்பிஅருள் செய்கவென்றார் தேவர்களும் வேண்டிநின்றார்
சிவமுருகன் தன்கையின் சித்தரவே லைவிட்டார்
அப்பொழுதே வேற்படையும் ஆழியிடம் சேருகையில்
அங்கிருந்த மாயப்படை அகன்றதுவே அக்கணமே.
கடலரசன். வேண்டிநின்றான் கடற்கிடந்தோர் கைதொழுதார்
கந்தன்கை வேலரசே கந்தனென உனைக்கண்டோம்
தடவரையாம் கிரவுஞ்சம் சதியிட்டவேளையிலும்
தாவிவந்து மீட்டீரெமை எனப்போற்றி நின்றார்கள்

## 6. நகர்புகு படலம்

(மூன்றாம் நாள் பிற்பகல் நிகழ்ச்சி )

வேற்படை முன்செல்ல வீரவாகு வும்படையும்
விரைந்து செல்லும், போதினிலே வீரமகேந் திரங்கண்டார்
ஆர்ப்பரித்தார் பானுகோப அசுரன்தனை அழித்தபின்பே
ஆறுமுகன் அடிசெல்வேன் அன்றேல்யான் உயிர்வாழேன்

***

நன்னகர் அழிப்பன் இன்று நண்ணலன் மதலை நேரின்
அன்னவன் தலையும் யானே அடுவனால் அடுகிலேனேல்
பின்னுயிர் வாழ்க்கை வேண்டேன் யான்பிறந் தேனுமல் லேன்
என்னொரு சிலையும் யானும் எரியிடைப்புகுவன் என்றான்
(க.)

***



நம்வீர வாகுவுடன் நாடிச்சென்ற படைகளெலாம்
நடுங்கிடுபோ ரிட்டரணின் மேல்வாயில் செல்லுகையில்
அம்மதிலைக் காத்துநின்ற புலிமுகன்வந் தெதிர் பொருதான்
ஆற்றல்மிகு சிங்கனெனும் பூதன்அவ னைக்கொன்றான்
வீரமகேந் திரத்தமைந்த மேற்குத்திசை மதில்முழுதும்
விரைந்துவந்த பூதப்படை வேரோடு வீழ்த்திவிட்டார்
வீரவாகு தேவர்விட்ட வாயு அக்கி னிப்படையால்
வீரமகேந் திரநகரம் வெந்தெரிந்து, கருகியது
நகரமெலாம் அழிந்ததனை சூரபன்மன் கேள்வியுற்றான்
நகைத்தான்பின் எழுமுகிலை நண்ணியழைப் பித்தங்கே
புகைஎரியைப் போக்குதற்குப் பொழிவீர்கள் மழைஎன்றான்
புகுந்த முகிற் கூட்டங்கள் நெருப் பெல்லாம் தணித்தனவே
நாரதனார் ஓடிவந்தார் நடந்ததனை உரைத்தகன்றார்
நாரதனார் சொன்னபடி வடவாமு காக்கினியை
ஆராத னைபுரிந்தார் அனுப்பினார் அப்படை போய்
ஆழ்நீரை வற்றச்செய்து முகில்கனையும் துரத்தியது

## 7. இரணியன் யுத்தப் படலம்

இத்தருணம் சூரபன்மன் எழுந்தானே போர்புரிய
ஏற்பாடு செய்வித்தான் இரணியன்பேர் தனையுடைய
பத்தனெனும் சூரன்மகன் மூன்றுதலை யுடையமகன்
பகருகின்றான் தர்மமொழி “ அப்பாநாம் தேவர்களைச்
சிறையிட்ட தேபாவம் தேவர்கட்குத் துயரிழைத்தீர்
செல்வங்கள் யாவையுமச் சிவனல்ல வாதந்தார்
மறையவனைத் திருமாலை வயங்கொண்ட தெவராலே
வரந்தந்த சிவபெருமான் வரமெல்லாம் மாற்றிவிட்டால்
என்னைநீ செய்வாயப்பா, இசைத்தநன்றி கொன்றுவிட்டால்
எதிரத்தெழும்பும் அந்நன்றி, மன்மதனை முப்புரத்தை
மன்னுமந்த காசுரனை மறலியை, யடக்கியதை
மனத்திலெண்ணிப் பாரப்பா, மழவிடையேன் பழஞ்சரிதை

ஒன்றொரு பயன்றனை உதவினோர் மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழில் அவர்க்கு முன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ (க)

***

கங்கைதன் செருக்கடக்கிச் கவின்சடையி லே அணிந்தான்
கடுவிஷத்தை மிடற்றணிந்தான் கனல்வீர பத்திரனால்

பொங்குநர சிங்கம்தன்னை அடக்கினார் பூவயன்தன்
பொலிதலையை வைரவனால் கிள்ளுவித்தான். மாலிடத்தே
வைரவனால் இரத்தப்பலி ஏற்பித்தார் புரந்தரனின்
புனைதோளை முறித்தான் *ஐ யிராவணரை அழித்தொழித்தான்
வருயானை புலித்தோலை உரித்தணிந்தார் திருமாலாம்
வராகத்தினை கொம்புடனே கூர்மத்தின் ஓடணிந்தார்
அயன் தேவர் தலையணிந்தார் முயலகனை அடக்கிவைத்தார்
ஆதலால் அச்சிவனை அடைக்கலமாய்ப் புகுவாயேல்
நயம்பெறுவாய் தந்தையேஇந் நன்னெறிவே தத்துண்மை
ஞானவடி வேற்குமரன் நண்ணுதே வரைக் கொன்று
பின்னெழுப்பித் தன்வடிவப் பேருருவம் காட்டி இந்த
பேரண்டம் உயிர்களெலாம் தம்முள்ளே யடக்கமென
முன்னிகழ்ச்சி யாய்க்காட்டி னான்முருகன் என்றுரைப்பர்
முகம்நான்கோன் சிறையிருக்க தாமுலகம் எலாம்படைத்தார்

எண்டொகை பெற்ற அண்டம் யாவையும் புவன வைப்பும்
மண்டுபல் வளனும் ஏனை மன்னுயிர்த் தொகுதி முற்றும்
அண்டரும் மூவர் தாமும் அனைத்துமா கியதன் மேனி
கண்டிட இமையோர்க் கெல்லாம் காட்டினன் கந்தன் என்பர்
(க)

சிவன்மைந்தன் சிறுவனல்லன் செயல்களிலே மிகப்பெரியன்
சிவனே ஓர் சிறுவனைப்போல் திருமுகங்கள் ஆறுகொண்டான்
அவன் கடலில் செலுத்தியவேல் ஆகியஇந் நகர்க்குவிட்டால்
ஆர்தடுக்க வல்லார்கள் அத்தனையும் நீயறிவாய்
அறிவாளர் வீரவாகு வுடன்சமரம் புரியார்கள்
அவர்நினைத்தால் நம்செல்வம் அனைத்துமே அழிந்துவிடும்
சிறைநீக்கு வானவர்க்குச் செய்தபிழை அவன் பொறுப்பான்
சிறந்ததென ஈதுரைத்தேன்" என்றலுமே இரணியன் மேல்
சீறினான் சூரபன்மன் சிறுபயலே இவற்றையெல்லாம்
செப்பவைத்தார் யாவர்சொல்? சிரச்சேதம் செய்திடுவேன்
மாறிலா என்வீரம் மற்றெவர்க்கு மில்லையடா
மகாதேவன் வந்தெதிர்த்தால் மடிந்துபின் வாங்கிடுவான்
இவ்வார்த்தை இனிப்புகன்றால் எமபுரத்துக் குனைவிடுவேன்
என்றலுமே இரணியனும் இவனழிதல் திண்ணமினி
எவ்வாறு நிகழ்ந்திடினும் இட்டபடி நடக்குமென
எண்ணினான் தந்தையே என்பிழையைப் பொறுத்திடென்றான்

* ஐயிராவணர் – பஞ்சராக்கதர்



போருக்குப் போகின்றேன் என்றுசென்றான். இரணியனார்
புனையாயி ரம் சிங்கம் யூட்டியமா தேரினிலே
போர்புரிய வந்ததனைப் புகன்றுசென்றார் நாரதனார்
புகழ்படைத்த வாகுதேவர் பொருதார்பல் லாயுதத்தால்
ஆயிரமாம் கணையொன்றாய் அனுப்பினான் இரணியனும்
ஆயிரங்கோ டிப்பூதம் அழிந்ததொரு நொடிப்பொழுதில்
மாயமிகும் இரணியனை எதிர்த்துவந்தான் நீலன்என்பான்
வன்போரில் நீலன்என்பான் வருத்தமுற்ற நிலைகண்டு
வாகுதேவர் இரணியனை வன்போரில் நிலையழிக்க
வான்வழியே சென்றெழுந்தான் மறிகடலுள் மீனானான்
சாகுமென்றன் தகப்பனுக்கு தகுந்தகடன் செய்வதன்றோ
தனயனது பொறுப்பென்று தன்னிதயம் நினைந்தொளித்தான்

**இரணியன் நினைத்தது**

மைந்தனைப்பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழி த்தம் முறைக் கேற்றிட
அந்தமில் கடன் ஆற்றுதற் கேயன்றோ (க)

கடலுள் இர ணியனொளிக்கக் கதிரவனும் குணக்கெழுந்தான்
கண்டவீர வாகுதேவர் களிசங்கம் ஊதிநின்றார்
திடமிகுந்த சூரனுக்கு செய்தியெலாம் தூதுவர்கள்
சென்றுரைத்தார் கவலையுற்றான் எழுந்தான் அக்கினிமுகனும்

## 8. அக்கினிமுகாசுரன் வதைப் படலம்

அட்டதிக்குப் பாலருடன் ஆனைகளையும் வென்றோன்
ஆதவனின் தேருடனே அசுவங்களை அடக்கியவன்
பட்டத்து ராணியெனும் பதுமகோ மளைவயிற்றில்
படிந்தகர்ப்ப நாள்முழுதும் அவள்உடம்பில் அக்கினியே
சிந்தியதால் இவன்பெயரை அக்கினிமு காசுரனாய்ச்
சீராட்டி வளர்த்தார்கள் செப்புமிவன் தந்தையிடம்
வந்துவிடை பெற்றெழுந்தான் மாயைதந்த வில்லுடனே
மகாவீரர் சோமகண்டன் பிங்கலன்சோ மன் மேகன்
சூர்யவைரி அணிவகுக்க அக்கினிமு காசுரன்போர்
தொடங்கினான் அவுணர்களும் பூதர்களும் பொருதார்கள்
தேர்யானை குதிரைகளும் சிதறியன, பூதர்களும்
சேராத அவுணர்களும் சேதமிக இறந்துபட்டார்
வீரபுரந் தரர் சோம கண்டனது தலையறுத்தார்
வேற்படையால் மேகனுயிர் விண்செல்லக் கொன்றெழித்தார்

வீரபுரந் தரர்மேலே பிறைமுகக் கணையைவிட்டான்
வீரர்விறல் குறைந்துவிட்டார் மிகுபூதர் இறந்துவிட்டார்
வீரபுரந் தரர் இளையோர் எழுவருமே வந்தெதிர்த்தார்
வெகுண்டுசிவப் படையாலே எழுவரையும் கொன்றுநின்றான்
வீரவாகு தேவர்வந்தார் வீரம்பல பலபேசி
வில்நாண் ஒலி செய்தான் நஞ்சுக்கணை நூறுவிட்டார்
அக்கினிமு காசுரனும் அயர்ந்தான் தெளிவுபெற்றான்
அழைத்தானே காளிதனை, அரியேறிக் காளிகளும்
மிக்கபல கூளிகளும் விரைந்தோடி வந்தார்கள்
விறற் பூதப் படையெல்லாம் வேரறுப்போம் என்றார்கள்
முத்தலைச் சூலந்தன்னை முடுக்கிவிட்டார் வாகுதேவர்
முதுகாளி செயலிழந்தாள் எட்டுக்கை களையும் தன்
கைத்தலத்தால் பிடித்திழுத்து காசினியில் உதைத்து வென்றார்
கரிய உடல் மீதிரத்தம் பெருகிக் கறுத்ததனால்
காளியென்று பேர்படைத்தாள் வாகுவீரர் தனைவாழ்த்தி
கனபூசைப் பலியிட்டுக் கருதியழைத் தமையாலே
சூழவந்தேன் வாகுவீரா, சுழல்போரில் தீமுகனைத்
துணித்துவெல் எனவாழ்த்திச் சென்றுவிட்டாள் காளியம்மா
அசுரகாளி மீண்டதனை அக்னிமுகன் அறிந்துவிட்டான்
அதிகோபம் உற்றவனாய் ஆயுதப்போர் செய்ய லுற்றான்
விசைகணைகள் நூறு நூறாய் விட்டலுத்த பின் அசுரன்
வேதனது படைவிட்டான் வீரபத்தி ரப்படையால்
அக்கினி அசுரன்தலையை அறுத்தழித்தார் அக்கணமே
அவ்வசுரன் படைவீரர் அறுநான்கா யிரர் எதிர்க்க
மிக்க நூறா யிரங்கோடி வெங்கணையை விட்டழித்து
வீரமிக்க தம்மேழு தம்பியரும் இறந்ததனை
எண்ணிமனம் வாடிநின்றார் ஏரகணையின் நுனியினிலே
இயமனுக்கோர் உரைஎழுதி ஏவிவிட்டார் இயமனிடம்
திண்ணமுடன் அக்கணையில் தீட்டிவந்த வார்த்தைகளை
சீராகவே படித்தார் " திருமிகுமென் தம்பியரின்
உயிர்கவர்ந்தாய் அதுமுறையோ சீக்கிரமாய் அவர்பிழைக்க
உற்றசெயல் செய்க" எனும் உரையறிந்து திடுக்கிட்டான்
உயிர்கொள்ளும் நமராசன். ஓங்குதம்பி எழுவருமே
உயர்ந்தமலைக் கைலையிலே விளங்குவதை அறிந்தயமன்
எருமைக்கடா மீதேறி எதிர்கொண்டு வரவழைத்தார்
எல்லாரும் வீரர்களும் இசைந்துதங்கள் உடல்புகுந்து
பெருவீரன் வாகுவிடம் பெருமையுடன் வந்தணைந்தார்
பேசுவர லாறெல்லாம் நமனுரைக்கக் கேட்டறிந்து
மகிழ்வுடனே மறலிதனை வழியனுப்பி னார் வீரா.



வன்சூர பன்மனவன் மகன்மடிந்த கதையறிந்து
அகிலமெல்லாம் கவலையுற அரற்றினான் புலம்பிவெந்தான்
அழுதுபுலம் பினாள்பதும கோமளையும் துடிதுடித்தாள்

## 9. மூவாயிரவர் வதைப் படலம்

(4ம் நாள் பிற்பகல்)

அக்கினியான் இறந்ததனை அறிந்தார்கள் சூரன்மக்கள்
ஆகிய மூ வாயிரம்பேர், அப்பனிடம் விடைபெற்று
தக்கபடை ஆயுதங்கள் தாம்கொண்டு சமர்தொடர்ந்தார்
தளர்ந்தனவே பூதப்படை, சண்முகனின் இலக்கவீரர்
துடித்தெழுந்தார் அவருள்ளே துணிந்தஓர் ஆயிரவர்
துதித்தார்கள் வாகுதன்னை, வாகுஅனு மதியளிக்க
இடபன், சயன் விசயன், கர வீரன்அதி குணன், அந்தன்
அதிகோரன் சசிகண்டன், வாமனன் அகளங்கன்
அநகன்,மா ருதன், வருணன் சதவலிமா, ருதன் அசலன்
ஆயதேவர் ஆயிரவர் அம்புவிட்டும் மலைதூக்கிச்
சினமுடனே மேலெறிந்தும் திரள்மல்யுத் தம்புரிந்தும்
திறலழிந்தார் ஆயிரவர் அவருள்ளே விசயன் என்பான்
பலவகையாய்ப் போரிட்டான் பலனேதும் கிட்டாமல்
பன்னிருகை வேலவனைப் பரிந்துகண்ணீர் சொரிந்தழைத்தான்
கலைவடிவேற் கந்தனவன் ககனத்தி லேதோன்றி
கழறுகின்றான், விசயனே கமலஅயன் கொடுத்தவரம்
இம்மூவா யிரவருக்கும் இருப்பதனால் இவர்கள் படை
இனிவைர வப்படை யாலேதான் அழியுமென்று
எம்மான்வேல் முருகையன் இசைந்தவைர வப்படையை
ஏத்திநின்ற விசயனுக்குத் தந்துவிண் ணில்மறைந்தார்
வைரவப் படைவாங்கி மகாவிசயன் பூசைசெய்து
வந்தமூ வாயிரர்மேல் விடுத்தான்உன் மத்தனென்பான்
கைவருமா யப்படையை விட்டான் அப் போதினிலே
கடுகிவை ரவப்படைபோய் மாயைஇருள் நீக்கிநின்ற
மூவாயி ரவர்தம்மைத் தூளாக்கி வந்ததன்றே
முருகனடி நெஞ்சிருத்தி விசயன்பல பூசைசெய்தான்
ஏவலர்கள் தூதுவர்கள் சூரபன்ம னுக்குரைக்க
இதயந்தடு மாற்றமுற்றான் இரவியுமேற் கடலடைந்தான்

## 10. தரும கோபன் வதைப் படலம்

(நாலாம் நாள் இரவு)

சூரபன்மன் மந்திரியாம் தருமகோபன் கொதித்தெழுந்தான்
சூரனிடம் விடைபெற்று தொடர்நான்கு படைசூழ
போருக்குப் புண்டரீகம் எனும்தென்கீழ்த் திசையானைப்
பொன்முதுகில் ஏறிவந்தான் போர்க்களத்தில் இலக்கத்தெட்டு
வீரருடன் வீரவாகு விளங்குவதைக் கண்டயர்ந்தான்
வீரதண்டு மழுதிகிரி விண்ணோங்கு மலை மரங்கள்
ஏராளம் பூதகணம் எறிந்துசமர் இட்டெதிர்த்தார்
இலங்குதண்டு கழுமுள்வேல் என்பவற்றால் அவுணர்குலம்
சமரிட்ட வேளையிலே சாய்ந்ததுவே அவுணப்படை
தளர்ந்தனர்பல் பூதகணம், வீரமார்த் தாண்டர்என்பார்
இமைப்பொழுதில் வந்தடைந்தார் எதிரிகளை அழித்தொழித்தார்
இகல்தரும கோபனவன் எரிபோலக் கணையைவிட்டான்
வீரபுரந்த ரர்வந்தார் விடுதண்டால் களைப்படைந்தார்
வீரவாகு தேவர்வந்தார் விரவுபல கணைவிட்டான்
வீரவாகு விடுகணையால் விட்டபடை அத்தனையும்
விறல்மழுங்கி யடங்கியன புண்டரீகப் பேர்யானை
வெந்துடலம் மயங்கியது தருமகோப னும்மாண்டான்
மெய்யுணர்ந்த புண்டரீகம் வீரவாகு தனைவணங்கி
தன்னுடைய கதைசொல்லி தாழ்ந்துவிடை பெற்றுத்தன்
தனிக்காவல் திசைசென்று தன்பணியைத் தொடங்கியது

***

ஐந்தாம் நாள் யுத்தம்

## 11. பானுகோபன் வதைப் படலம்

முன்னே நடந்தவைகள் எல்லாமறிந்து
முற்பட்டுப் பானுகோ பன்சூரபன்மன்
தன்னிடம் வந்தனன் தருமம் புகன்றான்
சரவண பவன்தன்னை வெல்லுவதும் அரிதே
தூதனாம் வாகுதனை யும் வெல்லலரிதே
சுரர்தம்மை சிறைவிட்டு வாழ்வதே உசிதம்
மேதக்க போரிலே நீயும்மன மழிந்தாய்
விறல்மிக்க மக்களையும் படைகளையும் இழந்தாய்
ஆதலால் யான்சொன்ன அறிவுரையைக் கேட்பாய்
அக்கணம் சூரனும் அனல்நகை செய்தான்
ஓதுமகன் முகம் பார்த்துக் கழறினான் பலவே
உனக்குறுதி யில்லையேல் உறங்குவாய் நீபோய்
நான்மானம் இழந்திங்கு வாழவே மாட்டேன்
நம் இளமை வலி, செல்வம் வீரம் உடல் சுற்றம்



ஈனம் இவை நிலையில்லை என்பதனை அறிவேன்
இவன் சூரன் என்கின்ற கொள்கை விடமாட்டேன்
பானுகோ பன்பின்னர் பகர்ந்ததற் கிரங்கி
பரிவுடன் சொன்னபிழை பொதுத்திடுக என்று
தானும்போர் புரிவதற் குத்தரவு பெற்றான்
சமரிட்டு பூதர்களும் அவுணர்களுமழிந்தார்
பானுகோ பன்கணை பலபூதப்படையை
பட்டுருவ ஓடினர்கள் இறந்தனர்கள் பலபேர்
ஞானவடி வேலவனை வீரவாகினிதே
நற்பூசை செய்துபுறப் பட்டனர் போர்க்கு
இருவரும் கணைகளால் எதிர்எதிர் மார்பை
இறுத்தனர் இருவரும் மயங்கித் தெளிந்தனர்
இருவரும் வாயுப்படை அக்கினிப்படையை
எய்தனர், கோபனும் மாயப்படைவிட்டான்
ஞானக்கணை யாலதனை வாகுவும் தடுத்தார்
நடந்ததை உணர்ந்தங்கு பானுகோபன் போய்
வானத்தில் தேருடன் வந்து சமர்செய்தான்
வாகுவும் விண்வெளியில் நின்று சமர்செய்தார்
கோபனும் நச்சுக்கணை தன்னைவிடுத்தான்
கொதிப்புடன் வாகுவும் பதினான்குகணையால்
ஆயகணை தடுத்தனர் அவன் தேரழித்தார்
ஆறுமுகன் அருள்கொண்டு வாளேந்தி அசுரன்
கைவெட்டித் தலைவெட்டி வீழ்த்தினார் கீழே
காலனும் வந்துதன் இடங்கொண்டு சென்றான்
மெய்வரும் வாகுவை "வீராதிவீரர்"
விளங்குபேர் இட்டமரர் வெற்றிகொண் டுவந்தார்
வெற்றியொடு படைகளொடு வருவீரவாகுவை
வேலவன் வாழ்த்தினான் வேண்டும் வரம்கேளென
கொற்றவா வெற்றியுன் குளிர்செயல்களன்றோ
குபேரனிந் திரவாழ்வு குறித்துயான் விரும்பேன்
தந்தருள் நின்பாத தாமரைச் செல்வம்
தவத்தோரும் பெறலரிய சாத்வீகச் செல்வம்
எந்தையே இதுவன்றி ஏதொன்றும் வேண்டேன்
என்றலும் கந்தவேள் இசைந்தவரம் தந்தார்

***

" கோல நீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெ:கேன்
மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்மையே வேண்டுவன் தமியேன்"(க)

## சூரன் துயரம்

பானுகோபன் கொலைக்களத்தில்
பட்டிறந்த மொழிகேட்டுச்
சூரபன்மன் சோர்ந்து மண்ணில்
துடிதுடித்து வீழ்ந்தழுதான்
என்மகனே பானுகோபா
இதற்கோநான் உனைவளர்த்தேன்
தன்தந்தைக் கொருதந்தை
தானில்லாப் பாலகனோ
உன்னைக்கொலை செய்துவிட்டான்
உன்மொழியைக் கேட்காமல்
உனையிழந்து விட்டேனடா
உள்ளம்தடு மாறுதடா
என்றழுது புலம்புகையில்
இச்செய்தி கேட்டறிந்த
பெண்பதும கோமளையும்
பிதற்றினாள் புரண்டழுதாள்
தேறினான் சூரபன்மன்
தேவர்களின் இரத்தத்தால்
கூறுமொரு வேள்விசெய்து
குமாரனையான் எழுப்பிடுவேன்
எனக்கூறிப் பானுகோபன்
இறந்தபிணம் பாதுகாத்து
தனக்கிளைய சிங்கமுகன்
தனையழைத்து வரச்சொன்னான்

## 12. சிங்கமுகாசுரன்வதைப் படலம்

(6ம் நாள்)

சென்றார்கள் தூதுவர்கள்
சிங்கனிடம் செய்திசொன்னார்
கன்றிஎழுந் தான்சிங்கன்
கடந்தகால நிகழ்ச்சியெல்லாம்
தூதுவரால் அறிந்துகொண்டான்
சொல்லரிய சேனைகளும்
வீதியிலே தொடர்ந்துவர
வீரமகேந் திரமடைந்தான்
சிங்கமுகன் சண்முகனின்
சிறப்பெலாம் உரைத்துவிட்டு
பொங்கிவரும் படையுடனே



புறப்பட்டான் போர்க்களமே
அண்ணாநான் செல்கின்றேன்
அறுமுகனால் இறந்திலனேல்
திண்ணமாய் வந்திடுவேன்
திரும்பிவந்து நினைக்காண்பேன்
என்றுசிங்கன் அங்கிருந்த
இறைச்சிதேன் கள்சோறு
துன்றுபால் தயிருண்டான்
தூமவா சனைபூசி
ஆயிரம் நெற்றியிலும்
அணிந்தான் திருநீறு
ஏயபல விருதுகளோ(டு).
ஏகினான் சிங்கமுகன்.
அசுரனங்கு வருவதனை
அயனிந்தி ரன்முதலோர்
திசைதிசையாய் ஓடிஓடி
செய்வதனை அறியாமல்
ஆறுமுகன் வாசலிலே
அடைந்துமுறை யிட்டார்கள்
ஏறுமயில் வாகனனே
என் செய்வோம் கந்தப்பா
ஓராயி ரந்தலையும்
இராயி ரங்கையும்
நேராக கொண்ட சிங்கன்
நெடும்போர்க்கு வந்துற்றான்
முருகா நீ காத்தருள்வாய்
முன்னுலகம் யாவையுமோர்
கரத்தாலே அவன்சுமந்தான்
கைலாய பதிசூலம்
கையிலே ஏந்தியவன்
ககனம்விண் பாதலங்கள்
நையவே உண்டுமிழ்ந்தோன்
நகரான ஆசுரத்தை
ஆளுகின்ற அசுரமன்னன்
ஆற்றலிவை எனஉரைக்க
நீளயில் வேல் ஆறுமுகன்
நின்றுநகை செய்தருளி
தேரைக்கொண்டு வருகஎன்றார்
தீரன்வீர வாகுவென்பார்
நேரிலே பொருதிடுவேன்

நீங்கள்வரம் அருளுகென்றார்
வாகுவுடன் இலக்கத்தெட்டு
மாவீர கூட்டமுடன்
போயினரா யிரம்வெள்ளம்
பூதகணம் போர்முனைக்கு
மரங்களையும் மலைகளையும்
வன்படைக்க லங்களையும்
பெரும்பூதர் ஏந்திவந்து
பிணங்குபோ ரிட்டார்கள்
சிங்கன்எனும் படைத்தலைவன்
சினந்துதண்டால் அவுணர்களை
அங்கழித்த வேளையிலே
அவுணனாம் தசமுகனும்
தீவடிவ வேற்படையைச்
செலுத்தினான் * சிங்கன் என்பான்
தாவுசக்க ரம்விடுத்து
சரமெல்லாம் தடுத்து நின்றான்
அங்குலக்கம் வீரர்களுள்
அநகன்என்பார் அவுணர்களைப்
பங்கமுறச் செய்தவுணப்
படையெல்லாம் சிதறடித்தார்
மாயவடி வங்கொண்டு
வந்ததுன் முகன்தன்மேல்
ஏயகணை பலவிடுத்தார்
எழுந்தகன்றான் விண்வழியே
பூதகணம் விண்வழியே
போனவனைத் தாக்குதற்குத்
தாவியமர் செய்வதனைத்
தடுத்தாரே வாகுதேவர்

" ஓடினர் தம்மையும் உற்றுத்தாள்மலர்
சூடினர் தம்மையும் தொழுத கையராய்
வாடினர் தம்மையும் வலியிலோரையும்
சாடினர் அல்லரோ நவைக்கட் டங்குவார் " (க)

இவ்விதமாய் வாகுதேவர்
இயம்பிநிற்க சிங்கமுகன்
அவ்விடமே போர்க்குவந்தான்
அடுபூதர் அமர்புரிந்தார்

* சிங்கன்–பூதப்படைத்தலைவன்



கடும்போரைச் கண்டுமிகக்
கதிரவனும் மனமகிழ்ந்தான்
கொடும்கோபச் சிங்கமுகன்
குழுமிவந்த பூதர்களை
மலைமேலே எடுத்தெறிந்தான்
வந்தசில பூதர்களை
அலைகடலில் எடுத்தெறிந்தான்
ஆகாயம் மேலெறிந்தான்
அள்ளியள்ளி எறிந்தெறிந்தே
அவனியிற்கா லால் மிதித்தான்
கொள்ளும்வரை வாயிலிட்டான்
குருதிநதி ஓடியது
ஆங்குவந்தான் அழற்கண்ண
னாயபூதப் படைத்தலைவன்
ஓங்குமுயர் தண்டாலே
உரத்தபோர் புரிகையிலே
அழற்கண்ணன் அறிவிழந்தான்
அப்போது சுமாலி என்பான்
எழும்மலையை எடுத்தெறிந்தான்
எதிர்த்துச்சிங்கா சுரன் தடிந்தான்
தண்டிஎன்பான் வந்தெதிர்த்தான்
தண்டியையும் சிங்கமுகன்
மிண்டிவிண்ணில் வீசிவிட்டான்
விண்ணிருந்து வீழ்ந்ததண்டி
சிங்கமுகன் மேல்விழுந்து
செங்குருதி பாயச் செய்தான்
சிங்கமுகன் தண்டிதனைச்
சிற்றீசல் போலெறிந்தான்
வந்தார்கள் இலக்கத் தெண்மர்
மழைபோலக் கணை சொரிந்தார்
பந்து போல் தேரொடித்தான்
பயந்தோடி னார் அவர்கள்
வீரவாகு தேவர்வந்தார்
மிகுபூதப் படையழிந்து
போரிலே இலக்கத்தெண்மர்
புறங்காட்டி யழிந்தார்கள்
என்றெண்ணிக் கோபங் கொண்டார்
எடுத்துவிட்டார் பெரியகணை
கண்ணெதிரே நாற்படைகள்
கட்டழிந்து மாண்டனவே

குருதிநதி குதித்தோடிக்
குரைகடலில் பாய்ந்ததுவே
தருணமிதில் சிங்கமுகன்
தனயர்நூற்றுவர்வந்தார்
வாகுதனைப் போரினிலே
வாளிவிட்டு வெல்லரிது
வாளேந்திப் போர்புரிய
வந்தார்கள், வீரவாகு
சிவன்கொடுத்த வாட்படையால்
சிதறடித்தார் நூற்றுவரை
இவனையான் கொல்வனென
எழுந்துவந்தான் சிங்கமுகன்
ஆரடாஉன் பெயர் சொல்வாய்
அறுமுகனோ தூதுவனோ
கூறடாநீ என்றலுமே
கொதித்தெழுந்தார் வாகுதேவர்
சிங்கமுகா சுரனே உன்
சேனைகளை அழிப்பதற்கே
இங்குவந்தேன் என்றலுமே
இருசாரும் போர் தொடர்ந்தார்
வாகுவிட்ட பதினெண்கணை
வலியிழந்து போயினவே
வேகுதண்டைச் சிங்கமுகன்
வீசிவிட்டான் சூலப்படை
சிவப்படையை இருவருமே
செபம் செய்து விட்டார்கள்
சிவப்படைகள் ஒன்றோடொன்று
செருப்புரிந்து திரும்பின.
பூதர்களின் அவுணர்களின்
பொலிந்தபிணக் குவியலினால்
பூதலமேல் செங்குருதி
பொங்கியெழுந் தோடியது
சிங்கமுகன் ஆயிரம்வில்
சேதமுற்ற நிலைகண்டு
மங்கிமனம் சோர்ந்தான், தன்
மாயைதந்த பாசம்விட்டான்

***

மாயா பாசம் தீயைச் சிந்தி
வந்த வீரரொடு வாகுதன்னையும்
ஓயா இருளாய் ஒருங்குகட் டியதே.

உயிரறி வகற்றி உதய கிரியிலே
உயிர்ப் பில்லாமல் உறங்கச் செய்தது
உற்ற போரிலே ஒருவரும் இல்லை
செயித்து விட்டேன் சிறியபாலகனைச்
சீறிநான் அழிப்பேன் என்றான் சிங்கன்
தூதுவன் ஒருவன், சுடர்வடி வேலவன்
சுந்தரப் பாசறை தொடர்சேனையொடு
மோதிட வந்தான் என்று மொழிந்ததும்
முனைந்தசிங் காசுரன் முருகனை யடைந்தான்
வாயு தேவனால் வரலாறு அறிந்த
மாயவன் மருகன் மனவேகம் என்னும்
தூய தேரினை வாயு செலுத்திட
தொடர் பல விருதுடன் தோன்றினான் முருகன்

மூவர்கள் முதல்வன் வந்தான்
    முக்கணான் குமரன் வந்தான்
மேலவர் மடங்கல் வந்தான்
    வேற்படை வீரன் வந்தான்
ஏவரும் தெரிதல் தேற்றாது
    இருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான்
    என்றன சின்ன மெல்லாம் (க)

வந்ததும் முருகனின் பூதப்படைகள்
மரம்மலை ஆயுதம் வாரி எறிந்து
முந்திய அவுணரை முட்டி யழித்தன.
முனிந்தசிங் காசுரன் தலைகள் ஆயிரம்
கரமிரண்டாயிரம் ககனம் பாதலம்
கதித்து முட்டிடப் பேருரு வெடுத்தான்
மறலியிந்திரன் சூரியன், வானவர்,
மனமிக நடுங்கி மயங்கி நின்றனர்.
ஆயிரங் கோடி பூதரைத் தனதிரண்
டாயிரம் கைகளால் அள்ளி வாயிட்டான்
தீய சிங், கன்வயிற் றுள்ளே பூதர்கள்
சிந்தைகலங்கினர் இதுமண்ணுலகோ
விண்ணுல கோவென வியப்பினை எய்தினர்
விடுமவன் மூச்சால் பற்பல பூதர்கள்
மண்ணில் எறிந்தும் உள்ளே புகுந்தும்
வாதனைப் பட்டனர் வான்வர் ஓடினர்

நிகழ்ந்தன எல்லாம் நின்ற தூதுவர்கள்
நினைந்தனர் ஓடினர் சூரனுக்குரைத்தனர்
மகிழ்ந்தனன் சூரன் மற்றுள சேனையை
வழிப்படச் செய்தான் வடிவே லன்பால்
வந்தான் சிங்கன் முருகனின் நாணொலி
மண்டல மெல்லாம் மடக்கி அடக்கி
வெந்திறல் செய்தது அசுரரும் நடுங்கினர்
வேலவன் முன்னே வந்த சிங்காசுரன்
சிவகு மாரரே தேவர்க்கும் எமக்கும்
தீராப் பகையால் செருவிட வந்தேன்
இவர்களுக்காக இளவேலே, வந்ததேன்
என்றலும் குமரன் எளியாரை வலியார்
தண்டனை செய்தால் அதனை அடக்குதல்
தர்மமாம் நீதியே சமரிட் டமரர்கள்
கொண்ட சிறையை மீட்க வந்தேனெனக்
குமரன் கூறலும் கொதித்தான் சிங்கன்
அவன்மேல் ஒருகணை அறுமுகன்விட்டான்
அ.:.தவன் மார்பில் புகுந்து முதுகின்
வழியே சென்றது, வயிற்றிடைப்பூதர்கள்
வந்தார் வெளியே, மறச்சிங் காசுரன்
தண்டை எறிந்தான் தண்டைத் தடுத்துச்
சதுர்க்கணை விட்டார் நெற்றியைத் துளைத்தது,
மண்டிய துளைகளின் வழியே பூதர்கள்
மகிழ்ச்சி பொங்கிட வந்தனர் வெளியே
உதயகிரிபால் ஒருகணை தொடுத்தார்.
உறங்கிய வீர வாகுவும் யாவரும்
மதமிகு மாயை இருளிடை நீங்கி
வடிவே லன்தாள் வந்தனர் வணங்கினர்
விட்ட கணையினால் விடுதலை பெற்றிடும்
வீர வாகுவும் வீரரும் யாவரும்
கிட்டி வழிபட்டுக் கிலேசம் நீங்கினர்
கிளர் சிங்காசுரன் வீரம் பேசினான்
அறுமுகப் பெருமான் அம்பு சொரிந்தார்
அக்கினி, நஞ்சு , இருள் விடப் பாம்பு
செறுநமன், கதிரவன் சூலம் மின்னல்
செஞ்சுடர்க் குலிசம் போன்றிட வந்தன
அநந்த கணைகள் ஆங்கே தோன்றின
அசலம் துளைக்கும் அண்டமு டுருவும்
இன முகில் பிளக்கும் கடலை உறிஞ்சும்
இரத முடைக்கும் வடதீ விழுங்கும்



அவுணரின் அங்கம் அனைத்தும் துணிக்கும்
அவுணரின் குருதி அண்டம் செறியும்
இவற்றைக் கண்டான் எதிரிசிங் காசுரன்
எய்தான் ஆயிரம் கைகளால் கணைகள்
அவற்றினை எல்லாம் அறுமுகன்தடுத்தான்
அனல் எழுகணைகளால் அசுரன்கை துணித்தார்
எமனிடம் பெற்ற பாசத்தை முருகன்மேல்
எய்தான் சூரன் இவையெலாம் தடுத்தார்
ஈராயிரம்கணை யால்சிங் காசுரன்
ஈராயிரம் கரம் எல்லாம் அறுத்தார்
ஈராயிரம்கரம் முளைத்தன இதன்பின்
எதிர்கணைவிட்டுத் தலையாயிரமும்
துணித்தார் முருகன் முளைத்தன, கரம்தலை
தொடர்ந்தயா கத்தில் பெற்றவரமிதென
நினைத்தனன் முருகன், விளையா டல்போல்
நிறைகணை விட்டார் ஆயிரத் தெட்டுத்
தரமவன் கரம், தலை தளிர்த்தது கண்டார்
தளிர்த்த சிங்கன், தன்தவ வலிமை
பரமன் அளித்ததைப் பகர்ந்துபின் கூறுவான்
பாலனே நீஎனை யழிக்க வொண் ணாது
அமரரைச் சிறைவிடப் போவது மில்லை
ஆதலால் திரும்பிச்செல் என்றலும் முருகன்
" சமரிடும் அசுரனே தந்தை வழங்கிச்
சாற்றிய காலம் சமைந்ததை அறிகிலை
உன்னுயிர் குலத்துடன் அழிவதே உறுதி
உணரென்று பல்லா யிரங்கணை விட்டு
மன்னிய தோள், கை தலைகளை அறுத்தார்
வலியவன் உறுப்புகள் கடல், மலை விண்,மண்
எங்கும் விழுந்தன எண்ணிலாப் பேய்கள்
இணைத்த துண்டுகளால் இல்லம் அமைத்தன.
அங்காந்த வாயுள் புகுந்த பேய்கள்
அறுத்த மூக்குத் துவாரத்தால் வந்தனர்
பின்னர் முருகன் ஒருதலை இருகரம்
பிழைத்திட விட்டார் ஏனைய அறுத்தார்
இன்னும் சிங்காசுரன் எதிர்த்தமை கண்டு
இணையிலாக் குலிசப் படைதனை விட்டார்
குலிசம் சென்று சிங்காசுரனின்
கொடுமார் பிடந்து கங்கையில் மூழ்கி
தலைவன் முருகன் தண்கரம் சேர்ந்தது
தமதுதூ துவரால் எல்லாம் அறிந்த

சூரபன்மன் துடித்தான் மயங்கினான்
சோர்ந்துபுலம்பினான் துணையென இருந்த
வீரத் தம்பியே விண்ணகம் புக்காய்
வேறினிஉன்னை எங்கே காணுவேன்

பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னையுள பொருளையெல்லாம் பெறலாகும்
என்னையுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னைஇனிப் பெறுவதுண்டோ உரையாயே (க)

என்று புலம்பினான், இருதம் பியரையும்
இழந்தேன் இருதோளும் இழந்தேனென் றேக்குற்றான்
துன்றுமா யிரத்தெட் டண்டமும் செவிடாக
சோகம் வெளிப்படச் சூரனும் குழறினான்
***

## 13.சூரபன்மன் வதைப் படலம்

(7ம் நாள் தொடக்கம் 10ம் நாள்வரை)

ஆயிரங்கோடி ஒற்றர்களை ஆங்கேவிரைவில் அழைப்பித்தான்
ஆயிரத்தெட் டெனும் அண்டங்களில் அடங்கியபடைகள்
திரட்டுவித்தான்
ஆயபல்சேனைகள் வருமொலியால் அயனரிமுதலோர் கலங்கிநின்றார்
அம்புயனுலகம் அரிஉலகம் அமரரின்உலகம் முனிஉலகம்
எங்கும்சேனைகள் நிரம்பிடவே பொங்கிப்படைகள் குழுமியதே
இகல்மிகப் படைத்த சூரபன்மன் நீராடி நீறாடிபூசைசெய்து
தங்குபொன்நகைகள் புனைந்துதுகில் தரித்தான் உணவும்
உண்டெழுந்தான்
சர்வசங்காரம், பாசுபதம் முதலியபடைகள் கொண்டெழுந்தான்
இயற்றிய யாகத் தேயெழுந்த இரதத்தில் ஏறி வீற்றிருந்தான்
இசைகள் முழக்கும் தண்ணுமைகா, களம்துடிபேரி பலவிசைக்க
செயற்படவந்தான் சூரபன்மன், செறிபடைபாசறை தனைச்சூழ
தேவர்கள் நடுவில் திகைத்தார்கள் பூதர்கள் ஏங்கி அலமந்தார்
சூரனின் தூசிப் படைகள் எல்லாம் பாசறை சூழ்ந்திடப்
பயங்கொண்டு
சுப்பிரமணியனை அரிமுதலோர் தோத்திரம் செய்து முறையிட்டார்
வீர முருகன், மனவேகம் என்னும் தேரில் வந்தமர்ந்தார்
விரைவுடன்வாயு, தேரோட்ட வேல்மழு சூலம் வெங்குலிசம்
வாள்தண்டுநேமி வில்அம்பு கேடகம், எழு, கை வேலேந்தி
வாகுவும் இலக்கத் தெண்மர்களும் இராயிரம் வெள்ளம் பூதர்களும்



சூழ்ந்திடப் போர்க்களம் விரைந்துற்றார் சூரனின்
சேனைகண்டமாரொடு
சுரேந்திரன் நடுங்கித் திருமால்பால் எப்படி வெற்றி எமக்கெய்தும்
போரெப்போது முடிவுறுமோ, பொல்லாச்சேனைகள் அழிவாரோ,
புகுசிறை நீங்கும் நிலைவருமோ என்றுகலங்கப் பரந்தாமன்
நேராய்என்மொழி நீ கேட்டி, நிமலன் கைலைப் பரம்பொருளே
நெடுவேலவனாய் வந்துற்றான் நீகலங்காதே என உரைத்தார்
****

காலமாய்க் காலமின்றிக் கருமமாய்க் கருமமின்றிக்
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்தவள்ளல் மூவிருமுகங்கொண் டுற்றான்(க)
****

என்றலும் அவுணப்படையெல்லாம் எதிர்த்தனபூதப் படைதம்மை
எண்ணரும் பூதர்கள் போரிட்டுப் புறங்கொண்டோடினர்
தலைவரெலாம்
வன்றிறல் வாகுவும் இளையோரும் வலிகுன்றிவந்தனர்-முருகனிடம்
மண்டிய அவுணர் படைபலவால் முருகனைச்சூழ்ந்து மல்லிட்டார்

### முருகன்போர்

செய்தான் நாணொலி திருமுருகன் தேவர்கள்நடுங்கினர்
அவுணர்படை
தேர்பரி யானை புரண்டனவே கொடிகுடைபடைக்கலம்
அழிந்தனவே
எய்தான் கணைமழை எம்முருகன் அசுரரின் கைகால்
அறுந்தனவே
எண்திசை யயன்மால் உலகுருவி எதிரிகளைக்கண்டழித்தனவே
மீண்டுமவுணர்கள் வந்தங்கே வேலனைமாய்க்க முற்பட்டார்
வேகவாயுவும் தேர் செலுத்த அவுணர்கள்தோன்றும்
இடமெல்லாம்
தாண்டிப்பூமி திசைவானம் கடல்கள்யாவும் குகன்கண்டான்
சரமிட்டவுணப் பிணமலையை அவர்களின் நாய்கள்
உணவிட்டான்
முருகன் செலுத்தும் கணைவேகம் போலத்தேரின்வேகமுமாய்
முனையும் நிலையைக் கண்டோர்கள் முருகன் வலியை
வியந்தார்கள்
பெருகுமிரத்தப் பேராறு ஏழ்பாதலம்வரை பாய்ந்ததுவே
பேசுமிவ்வண்டத் தவுணரெலாம் பெருமான் அம்பால்
ஒழிந்தார்கள்

ஏனையஅண்டங் களின்வாயில் அவுணர்வராமல்
தன்கணையால்
எம்பெருமான்குகன் அடைத்துவிட்டார் ஈராறுகண்ணால்
பிணமலைகள்
அனைத்துமெரித்தார் மூவுலகும் அநாதிபோல விளங்கியன
அதன்பின் சூரன் முருகன்முன் வந்தான்பின்வரு மாறுரைத்தான்
"பாலகனே சிவ பெருமானின் வரத்தால்நானழி யாதிருப்பேன்
பாலகனென்றுனை விடமாட்டேன் என்னைநீவெல்ல முடியாது
மூலப் புத்தி யில்லாமல் முன்வந்தவழியே பின்செல்லு"
மொழிந்ததைக் கேட்டான் முருகையன், மூடாஉனை
ஒருகணையாலே
மார்புசிவக்கத் துளைத்திடுவேன் என்றலும்சூரன்
மேருவைப்போல்
வரிசிலையம்பு மழைபொழிந்தான் பூதப்படைபல அழிந்தனவே
கூர்சிவவாளால் வீரவாகு சூரனின் வில்லை வெட்டி விட்டார்
குத்தினான் சூரன் வீரவாகு குருதிபெருகிட வீழ்ந்தயர்ந்தார்
வீரவாகுவால் வெட்டுண்ட வில்லைச்சூரன் எறிந்துவிட்டான்
வேலவன் ஒருபெரும் வில்லெடுத்து நாணொலிசெய்தார்,
அவ்வேளை
சூரன்இருபது லட்சம்கணை விட்டான் அண்டங்கள்
துளைபடவே
சூரனும் முருகனும் விடுகணைகள் ஒன்றோடொன்று மோதியன
அதனால் எழுந்த பெருநெருப்பு பூமியில் விழுந்து கடல் மலையை
ஆற்றை வற்றச் செய்தருணம் வீரலட்சுமி பார்த்துநின்றாள்

## பானுகம்பன் வெற்றிச்சங்கு ஊதல்

புதுப்புது கணையால் சூரபன்மன் முருகன்விடுகணை
பலஅழித்தான்
பொருந்திய தேர்க்கொடி தனையறுத்து வெற்றிச்சங்கினை
ஊதலுற்றான்
ஏழுகணைகளால் எம்பெருமான் எதிரியின்தேர்க்கொடி
தனையறுத்தார்
இட்டார் அதனைக் கடலிடத்தே இதனைக்கண்ட பானுகம்பன்
தொழுதான் தன்னா யிரம்வாயால் வெற்றிச்சங்குகள்
ஊதலுற்றான்
சுந்தரக்கோழிக் கொடியாக அக்கினிபகவான் தேர்மீதே
தோன்றி அண்டம் வெடிபடவே வெற்றிகூறிப் பணிபுரிந்தான்
சுரர்கோன்பிரமன் திருமாயன் சூரிய சந்திரர் எமன்வாயு
போன்றிடுதேவ கணங்களெலாம் பொலிந்திடுமண்டம்
செறிந்திடவே



புகழ்துதிபாடி ஆனந்தப் புணரியிலாடிக் களித்தனரே
சூரன்தேர்மேல் ஆகாயம் தோன்றிக்கணைமழை பொழியலுற்றான்
சுரர்தமை அஞ்சேல் எனக்கூறிச் சுப்பிரமணியன் தன்தேரில்
வீரர்வேசம் கொண்டவனாய் விண்ணிற்சென்று வருங்கணைகள்
வேகச்செய்தார் சமரிட்டார் இருபுறக்கணைகளும் மோதியன.
சூரனின்கணைகளும் சண்முகனின் சுடரெறிகணைகளும்
மோதுகையில்
சூறைக்காற்றென. பாதலத்தில் பூமியில் மலைகளில் எண்டிசையில்
சாரும் சத்திய உலகத்தில் சக்கரவாளக் கிரியெல்லாம்
சாரிகையாகத் திரிந்தனவே சண்முகன்மார்பில் சூரபன்மன்
மழுவச்சிரம்எழு முதலியவெம் படைகளைச் சொரிந்தான்
அவற்றையெல்லாம்
வகைவகையாக அழித்துவிட்டு. பதினான்குசரத் தாலவுணன்
வருதேர்குதிரைப் படையழித்தார் வயத்தோள்மீது கணைவிட்டார்
மலைமேல் மழையாய் அவையெல்லாம் மறைந்ததைக்கண்டார்
முருகையன்
ஈராயிரம்கணை சூரன்விட்டான் எல்லாம்எரிந்து போயினவே
எழுந்தான்வானம் தனைநோக்கி எதிர்த்தார் முருகன்
அவனையங்கே
பார்மேல் வந்தான் பகைச்சூரன், பன்னிருகையனும் பார்சேர்ந்தார்
பயிலும் திக்குகள் பலசென்றான் பரம்பொருள் அங்கே
சென்றெதிர்த்தார்
பாதாளத்தில் சமரிட்டான் அங்கும் முருகன் சென்றெதிர்த்தார்
பரவிடுமேரு வைகுண்டம் அண்டகோளகை அவையெல்லாம்
சூதாய் ஓடிச் சமரிட்டுத் தோற்றான் சூரன் பின்பெருமை
சொல்லிய இந்திர ஞாலத்தேர் ஏறிவிரைந்து போர் செய்தான்
பற்பல அண்ட வாயில்களை பன்னிருகையன் மூடிவிட்டான்
பார்த்தான் சூரன் பலகோடி பகழியைவிட்டுத் திறந்துவிட்டான்
முற்படுநால்வகைச் சேனையெலாம் முருகனைவந்து சூழ்ந்தனவே
முருகன்தன்விழித் தீயாலே முனைந்தசேனையை எரித்தாரே
தன்கைச் சூலம் மழுதண்டு சக்கரம். எழுஎனும் ஐந்தினையும்
தாவிடும்ஏனைய ஆயிரத்தே முண்டங்களில் சூழ்படைகளையும்
சென்றழித்திடுகென விட்டாரே தீயால் அழிந்தன சேனையெலாம்
சிவன் தந்தசக்கரம் தனைவிட்டான் திருமுருகையன் தன்கையால்
வருகெனப்பற்றிக் கைக்கொண்டான். மாயவடிவம் பலஎடுத்து
வலியசூரன் கணைசொரிந்தான். ஞானாஸ்திரத்தை வேலவனார்
பொருதிடவிட்டார் கொடுமைபுரி மாயாவடிவ இருளகன்று
பொருந்திய தேரினில் சூரபன்மன் தனித்துத்திகைத்து நின்றனனே
அண்டங்களெல்லாம் சென்றுசென்று அசுரன்வெம்போர் இட்டனனே
அறுமுகனவனைப் பின்தொடர்ந்து பிருதிவி அண்டம் முதலாய
அண்டமும் அண்டப் புரையுளும் போய் அமரிடும் அசுரனை
முருகப்பன்
அவன் செலும்வழியே தான்சென்றார் தூரத்திலங்கும் செல்கின்றார்

முருகனுக் கென்ன விளைந்திடுமோ என்றுதேவர்கள்
கலக்கமுற்றார்
முகுந்தப் பெருமான் தேவருக்கு மொழிந்தார்வேலன்
பெருமைகளை

" ஓதியாகியும் உணர்ந்தவர்க் குணரவும் ஒண்ணா
நீதியாகியும் நிமலமதாகியே நிகழும்
சோதி யாகியும் தொழுதிடு மெம்மனோர்க் கெல்லாம்
ஆதி யாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ" (க)

முருகன்புகழைக் கேட்டமரர் உள்ளந்தெழிந்து நின்றார்கள்
முருகனைவெல்ல முடியாமல் மகேந்திரத்தே ஓடிவந்தான்
அங்கே சூழ்ந்தனர் அசுரப்படை அறுமுகன்சிரிப்பால்
அழித்தொழித்தார்
அன்னை மாயையைச் சூரபன்மன் அழைத்தான் அழிந்த
படைக ளெல்லாம்
இங்கே மீண்டும் உயிர்பெறவே எனக்கொருவழிசொல்
என்றானே
"இழிதொழில் புரிந்தாய் இமையவரை இடுக்கண் சிறையில்
ஏங்கவைத்தாய்
முருகனைச் சிறுவனென் றெண்ணாதே முழுமுதற்கடவுள்
அவனாவன்
முழங்கும்வன்வேற் படையாலே இறப்பது திண்ணம் நீ.
யதனால்
பெருகிடுமமர்பொர எண்ணாதே பேசிடும் என்மொழி
கேட்டிலையே
பெரும்படை உயிர்பெற வேண்டுமெனில். அமுதசீதமந் தரகூடம்
என்னும்மலையைக் கொண்டுவரின் இறந்தவர்எழும்புவர்
எனக்கூறி
ஏகினாள்மாயை சீக்கிரமாய் இந்திரஞாலப் பெருந்தேரை
மன்னும்மலையைக் கொணர்கஎன மலையைக் கொணர்ந்தது
இந்திரத்தேர்
மாண்டவர் மீண்டார் போர்க்களத்தே மழுமுதலாயுதம்
கொண்டுநின்றார்
தேவர்கள் பயந்தனர் மயில் அன்னம் காகம்குயில்கிளி
வண்டுபுறா
சிறகுறுபறவைகள் வடிவினிலே திக்குத்திக்காக மறைந்தார்கள்
தாவியசிங்க முகாசுரன்மற் றனைவரும்முருகனைச்
சூழ்ந்துவந்தார்



சண்முகன் பாசு பதப்படையை வழிபட்டுவிட்டனர் அதுசென்று
உயிர்பெற்ற அசுரரெல் லாமழித்து மலையாம் அமுத
சீதத்ததையும்
ஊடறுத்துடைத்தது சூரபன்மன் இந்திரஞாலத் தேராலே
வயமிகுதேவப் படையனைத்தும் அண்டத்தின் உச்சியில் தூக்கிச்
சென்று
வைத்திருப்பதனை முருகேசன் அறிந்தான் ஒருகணை
வேல்போல
அனுப்பினன் தேரைக் கொணர்வித்தான். அமரர்கள்எல்லாம்
தேரினின்று
அணியணியாக இறங்கினர்பின் அங்கேநின்ற தேரினையும் *
தனதுமுன் னிலையில் தரிப்பித்தான் தேரும்குகன்முன் தங்கியது

சரமழைபொழிந்து**வாயுதனைச் சலிக்கச் செய்தான் சூரபன்மன்
சூரன் விடுகணை யனைத்தினையும் குருபரன்ஆயிரம்கணை
செலுத்தி
தொடர் கணைவில்லைத் துணித்துவிட்டார். சிவபெருமான்தரு
மூன்றுதலைச்
சூலத்தைச் சூரன் விடுத்தலுமே குலிசப்படையால், சூலத்தினைச்
சுழற்றிப் பிடிக்க அதுகந்தன் கரத்தில் சேர்ந்து தங்கியதே
சூலமும் சிங்கமும் அழிந்ததனைச் சூரன்கண்டு
சினந்தெழுந்தான்
தொடர்மலை வடிவில் பெருவடிவச் சக்கரவாகப் புள்ளாகி
சாலவும் அமரரைப் படைவகையைச் சாடிப்பற்பல துயர்
செய்தான்
சண்முகர்விட்ட பலகணையைச் சிறகால் மூக்கால்
முறித்தெறிவான்
பாதலம்விண்டலம் திசையெல்லாம் பறந்துதிரிந்தான் புள்வடிவில்

பறவையைத்தாக்குதல் பழியென்று பகவான் இந்திரன்
தனைப்பார்த்தார்
சோதியனேகத் தோகையுடன் இந்திரன் மயிலாய் வந்துநின்றான்
தூயோனானேன் பழிதீர்ந்தேன் தீயேன்மீதுசெஞ் சேவடிகள்
சுமக்கும் புண்ணியம் என்செய்தேன் சுடர்வேலவனே அமர்ந்தருள்க
என்றனன்எந்தை தேரைவிட்டு மயிலிலமர்ந்தார் புள்செல்லும்
இடங்களெல்லாம் பின்தொடர்ந்தார் புள்ளும்மயிலும் தீவிரமாய்
ஒன்றோடொன்று மூக்குக்கால் சிறகால் தாவித் தாக்கியன
உருத்தசக்கர வாகப்புள் மயிலின்முகத்தைக் கபாலத்தை

* தேர்–இந்திரஞாலத்தேர் * வாயு – முருகனின் தேர்ச்சாரதி

இழுத்துத் துன்பம் செய்வதனைக் கண்டான்கந்தன்
கணைவிட்டான்
எதிர்த்தகணைகளை அழித்துவிட்டுப் புவிவான்கடல்கள்
எலாம் திரிந்தான்
அலுத்த சூரன், குமரையன் கரத்துவேலைக் கடிப்பதற்காய்
அணுகிய வேளை வாட்படையால் சக்கரவாகப் பறவைதனை
இரண்டு துண்டாய் வெட்டி விட்டார் இமையோர்எல்லாம்
மகிழ்ந்தார்கள்
இன்னமும் சூரன்அண்டமுட்டும் பூமியினுருவம் எடுத்துவந்தான்
பரந்தகடலை சூரியனை வழியைமறைத்தான் அத்தருணம்
பரவைஏழாய்ச் செலும்வண்ணம் பகழிதொடுத்தார் கந்தையன்
அப்பால் சூரன் தண்ணீராய் அண்டம்தொடும்படி
ஓங்கிநின்றான்
ஐயன்நூறு கணைசெலுத்த அனலாய் அவனை, அடக்கியன
அப்பால் தீயின் வடிவெடுத்தான் ஆயிரங்கணையால் காற்றாக
அனலையழித்தார்: அசுரனும்காற் றாகவந்தான், அறுமுகனும்
பேருறும் இலட்சம் கணைவிட்டார்– பெரும்பாம்புகளாய்
அவன்வடிவை
பிணித்துமாயை வடிவமெலாம் சிதைத்துவந்தன, நான்குதினம்
சூரனும் தொடர்ந்து முருகனொடு யுத்தம்புரிந்தான்– ஆற்றாமல்
தொழும்மும் மூர்த்திகள் போல்வந்தான் தேவர்கள் அசுரர்கள்
பூதவினம்
இந்திரன் இயமன் பேய்வாயு தீகடல் நஞ்சு, பாம்புமுகில்
இருள்மலையாகிய வடிவுடனே எதிர்த்தான் சரவணப் பெருமானை
அந்தரர் கலங்கினர், ஆறுமுகன் ஆயிரங்கோடி கணைஎய்தான்
அம்புகளாகிய தெய்வங்கள் அசுரனின் மாயைகள் அறுத்தழித்து
கந்தனம்புறாத் தோணியிலே வந்துசேர்ந்தன, போர்க்களத்தில்
கனற்சினத்தோடு சூரபன்மன் தனித்துநின்றான் அத்தருணம்
கந்தன்புகல்வான் சூரபன்மா அழியும்மாயா வடிவெடுத்தாய்
கடுதீப்பஞ்சாய்க் கண்டாயே காட்டுகிறேன்என் பெருவடிவம்
நீசெய்தவத்தால் காண்க என நிகரில்லாத வடிவெடுத்தார்
நெடியவடிவைத் தேவரெலாம் நேரேகண்டு மனம்நடுங்கி
தானாய் நின்ற தற்பரனை தாழ்ந்து வணங்கி நிற்கையிலே
சற்றும் அஞ்சற்க என உரைத்துச் சாந்தி தந்தார் குகமூர்த்தி

***

திருப்பெரு வடிவத் திருமே னியிலே
திருவடி உட்புறம் திகழ்ந்திடும் மலைகள்
புறவடி யிற்கடல் பொருந்துகால் விரல்களில்



செறும்இடி விண்மீன் நவக்கிர கங்கள்
பரட்டில் வருணன் குபேரன் நிருதி
அரக்கர், கணைக்கால் களிலே முனிவர்கள்
சிந்தா மணிமுதல் மணிவகை எல்லாம்
முந்துமு ழந்தாள் வித்தியா தரர்கள்
தொடையில் இந்திரன் சயந்தன் முதலோர்
தொடைமூ லத்தில் இயமனும் காலனும்,
அரையில் அசுரர் விலாப்புறம் தேவர்கள்
உரைமூ லாதரம் நாகர்கள் யாவரும்
குறியில் அமிர்தம் நாபியில் சீவர்கள்
வெறிகமழ் மார்பில் சகலசாத் திரங்கள்
உபவீ தத்தில் ஓங்கிய ஞானம்
திவள்உரோ மத்தில் திகழும் அண்டங்கள்
அங்கைபோ கங்கள் தோள்களில் அயன்அரி
செங்கைவிரல்களில் தெய்வப் பெண்கள்
கண்டத்திலே ஒலிக் கூட்டம் அக்கினி
பண்டரு திருவாய் பயில்வே தங்கள்
பற்களில் அட்சரம் நாவில் சிவாகமம்
சொற்பொலி உதட்டில் எழுகோடி மந்திரம்
மூக்கினில் வாயு கண்களில் ரவிமதி
கேட்கும் செவிகளில் திக்குகள் எல்லாம்
நெற்றியில் பிரணவம் தலையில் பரசிவம்
உற்ற வடிவினைச் சூரபன் மன்கண்
டதிசய மடைந்தான் அறுமுகப் பெருமான்
மதிக்குநல் லுணர்வை வழங்கினார் அவற்கே
கடந்த காலம் நடந்ததை நினைந்தான்
கந்தனின் பெருமைகள் எல்லாம் உணர்ந்தான்
வீர வாகு விளம்பிய வண்ணம்
சீரார் இவரே ஈசன் என்பதைக்
கண்டேன் கண்டேன் என்று தெளிந்தான்
கொண்டிடும் ஆயிரத் தெட்டண் டங்களும்
குமரனின் பாதத் தமாரை தனில் ஓர்
உரோமத் தேயுள தறிந்தேன் என்றான்
சிங்கன் இரணியன் செப்பிய மொழிகளை
இங்கே உணர்கிறேன் இனிய ஞானமும்
எனக்குக் கிடைத்தது என்தவம் பலித்தது
இனத்தொடு தேவரைச் சிறையிட் டதுமே
நன்றே யானது நாரணன் நான்முகன்
சென்றறி யாத தேவனைக் கண்டேன்
போரில் வீரமும் புகழும் பெற்றேன்

நேரிய யாக்கை உயிரைக் காத்திட
வணங்கிச் சரண்புகல் வழுவே யாகும்
இணங்கும் போரில் என்புகழ் காப்பேன்
எனப்பல விதமாய் எண்ணிய சூரனின்
மனத்துறு ஞான வரம்பை நீக்கி
பழைய வடிவில் மயிலில் நின்றார்

* * *

## சூரன்நிலை

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணாந்தி லேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலும்
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே
(க.)

***

ஞான வண்ணம் நீங்கிய சூரபன்மன் சீறினான்
ஈனமான மாயையால் இவனு மென்னை மயக்கினான்
நானும் மாயை வடிவினால் வெற்றிபெறுதல் நிச்சயம்
வானம் அண்டம் மூடிய பேரிருளாய் அதனுளே
கோரவடிவில் தோன்றினான் விழுங்க வந்தான் அமரரை
வீரவேலன் பாதமே விண்ணவர்கள் வேண்டினர்

* * *

நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்
(க)

***

தேவருடனே இந்திரன் சேர்ந்து வேண்டி நிற்கையில்
சித்திரவே லாயுதன் வேற்படையை ஏவினன்



யாவருமே பயந்திடும் மாமரமாய்க் கடலுளே
நாடும்சூரன் நிற்கையில் வேலுமவனை அழித்தது
மாமரமாய் நின்றவன் பழைய வடிவில் தோன்றினான்
மாயன்மருகன் வீரவேல் மார்பைப் பிளந்து துண்டிரண்
டாக்கிமுருகன் கையிலே கங்கையாடி வந்தது
ஆக்கைத்துண்டம் இரண்டுமே ஆடுமயில் சேவலாய்
மீண்டும் மீண்டும் போர்செயக் குகனை நோக்கி வந்தன
ஆண்டவன்தன் பார்வையால் அகந்தை நீக்கி ஆண்டனன்
தேரிற் கொடியாய்க் கூவெனச் சேவலைப்ப ணித்தனன்
போரிற் சுமந்த இந்திர புனிதமயிலை நீக்கினான்
சூரமயிலில் ஏறியே மகேந்திரத்தை நண்ணினார்
மயிலாய் வந்த இந்திரன் கோழியான அக்கினி
செயலை நீங்கித் தொல்லுரு திகழுமாறு பணித்தனன்
அமரர் ஆடிப் பாடினர் அகில உலகும் மலர்ந்தன
கமலநாதன் இந்திரன் கண்ணனின்பம் கண்டனர்

* * *

## 14. தேவர்கள் போற்றுப் படலம்

அப்பா: முருகையா ஆறுமுக நாயகனே
எப்போது முன்றன் இணையடிக்கே பணிபுரிவோம்
நூற்றெட்டு யுககாலம் நொய்ந்திளைத்த நம்மனதை
ஆற்றியெமைக் காத்தளித்த அழகா சரணமையா
காண்பானும் காட்சியும் காட்டுவானும் புரிந்து
காண்பொருளும் ஆயவெலாம் தேவரீர் எனஉணர்ந்தோம்
இன்னவகை பலவிதமாய் இமையோர்கள் தோத்தரிக்க
பன்னிருகைப் பரமேசன் பெருங்கருணை மழைபொழிந்தார்

## 15. இரணியன் புலம்புறு படலம்

சூரபன்மன் செய்திகளை அவுணர்சிலர் மகேந்திரம் போய்ச்
சொன்னார்கள் சொன்னதுமே சூரனின்பட் டத்தரசி
பேரிடிசூழ் நாகம்போல் பிதற்றி உயிர்துறந்தாள்
பேணுமற்றை மனைவியரும் பெருந்துயரில் சோர்ந்தழுதார்
பதுமகோ மளையுடலை படர்தீக் குழியிலிட்டு
பற்றுமனை வியரெல்லாம் அத்தீயில் மாண்டார்கள்
புதல்வனாம் இரணியனும் புலம்பினான் பலவறாய்
புத்திசொன்னேன் கேட்டிலையே புள்வடிவ மானாயே

ஆழியான் வேதன் அமரர்க் கிறைமுதலோர்
வாழியா யென்று வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப் புராரிசிறு வன்தேரில்
கோழியாய் நின்று விலாவொடியக் கூவுதியோ

ஓகையால் அண்டத் (து) உயிர்களெலாம் வந்திறைஞ்ச
சேகையாய் மல்குந் திருத்தாள் கொண் டுற்றிடுநீ
வாகையார்கின்ற வடிவேற் கரத்தோனைத்
தோகையாய் நின்று சுமக்குதியோ தோன்றாலோ (க.)

***

எனப்புலம்பி இங்கிருந்தால் எதிரான பூதகணம்
எனைக் கொன்று சினந்தீர்ப்பர் ஏகுவேன் முன்போல
மனத்தி லிவையெண்ணி மறிகடலிற் போய்மறைந்தான்
மரபுக்குரு சுக்கிரன்பால் வந்துவிதிப் படியாக
மாதா பிதா முதலோர் மறைந்த இறு திக்கடன்கள்
வரன்முறையிற் புரிந்தனன்பின் வாழ்க்கைச் சுகம் வெறுத்தான்
ஆதார மானசிவன் அடியிணையைப் பெறுவதற்காய்
அரியதவம் மேற்கொள்ளச் சென்றடைந்தான் தனியிடமே

## 16. மீட்சிப் படலம்

சூரமயில் வாகனத்தில் வீற்றிருந்த வேல்முருகன்
துணைவீர வாகுதனை அழைத்தமரர் சிறைமீட்கும்
நேரார் பணிபுகல நெடுவேலன் தாள்போற்றி
நெடுஞ்சிறைசென் றல்லலுற்ற சயந்தனையும் தேவரையும்
சிறைமீட்டுக் கொண்டுவந்தார் எல்லாரும் கந்தப்பன்
சேவடியை ஆனந்தக் கண்ணீரால் பூசித்தார்
கறைமிடற்றான் மைந்தன், யாவருக்கும் அருள்புரிந்தார்
கதித்தநுங்கள் பதவியொடு வாழ்கவென அனுப்பிவைத்தார்
போரிலே இறந்துபட்ட பூதகணம் யாவரையும்
புண்ணியனாம் திருமுருகன் உயிர்ப்பித்தார் அருள்புரிந்தார்
வீரமகேந் திரபுரியை வருணனிடம் பணிபணித்து
வியன்கடலில் போய்மாளச் செய்தார்வே லழகையன்
பின்னரிந் திரன்மாயன் பிரமன்முதல் தேவரொடும்



பெருஞ்சேனை யொடும்வீர வாகுவொடும் பூதகணம்
உன்னிஇரு புறஞ்சூழ ஓங்காரக் குருநாதன்
உற்றபோர் முனைநீங்கி இலங்கைக்கட லைத்தாண்டி
செந்தூர்ப் பதிவந்தார் சிங்கா சனத்தமர்ந்தார்
தினகரன்மேற் கடல்புகுந்தான் திசைமுகனும் தேவர்களும்
சந்தனமஞ் சனம்தூபம் சரோருகமா மலர்வகைகள்
தருகுமார தந்திரத்தின் சாத்திரத்தால் கும்பம்,தீ
உருவமெனும் மூவிடத்தும் உயர்பூசை செய்தார்கள்
உங்களுக்குக் குறையுண்டேல் உரையுங்கள் எனக்கந்தன்
திருவாய் மலர்ந்தருள செல்வா நின் திருவடியில்
சிரமான அன்பிருக்க தேவரீர் வரமருள்க
எனத்தேவர் வேண்டிநிற்க எம்பெருமான் வரங்கொடுத்தார்
இமையோர்கள் எல்லாரும் இருந்தார்கள் செந்திலிலே
நினைத்ததோர் கோயில்கட்டிச் சிவலிங்கம் தாபித்து
நிறைபூசை புரிதலுற்றார் நெடியவேல் சிவமுருகன்.

***

யுத்தகாண்டம் முற்றிற்று

உ
சிவமயம்
ஐந்தாவது

# தேவகாண்டம்

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க, அன்னான்
பொய்யில் சீர்அடியார் வாழ்க வாழ்கஇப் புவன மெல்லாம்.

## 1.திருப்பரங்குன்று சேர்படலம்

சிவபூசை செய்தபின்பு செந்தூரான் மயிலேறி
சேனையுடன் தேவரெல்லாம் சேர்ந்துவரப் பரங்குன்று
புவனமெலாம் போற்றிநிற்கப் புறப்பட்டுச் சென்றாரே
பூதப்படைக் கூட்டத்தினால் பூதூளி கிளம்பியது
ஆலவட்டம் குடைகொடிகள் பேரிகைகா களம்கொம்போ
டாயஇசை வேதவிசை தேவர்களின் வாழ்த்தொலிகள்
மேலெழும்ப முழவினிசை விண்ணொலிக்க வந்தாரே
குறிஞ்சி நில வழியாகக் கூடலென்னும் மதுரைநகர்க்
குடதிசையில் உள்ளபரங் குன்றமதைச் சேர்ந்தாரே
குழுமிவந்த தேவர்களும் நான்முகனும் அறுமுகனை
இடமாக இத்தலத்தில் இருந்தருள்க என்றிரந்தார்
இதமாக தேவதச்சன் எழிலான கோயில் செய
எம்பெருமான் வீற்றிருந்தார் எல்லார்க்கும் விடைகொடுத்தார்
இலக்கத்தெண் மரும்வீர வாகுவும் பூ தாதிபரும்
செம்பதும பாதமலர்த் திருத்தொண்டு செய்தார்கள்
சேர்ந்தபர ராசர்மக்கள் சிவகுகனைத் தோத்தரித்தார்
சிவபெருமான் அவர்களுக்குச் செப்பியவண் ணம்முருகன்
சிவஞானோ பதேசமெலாம் செய்துபரங் குன்றமர்ந்தார்

## 2.தெய்வயானையம்மை திருமணம்

சூராதி யவுணர்களின் துயர்தீர்த்த முருகனுக்கு
சுரேந்திரன்தன் மகள்தெய்வ யானைதனை மணமாக்க
பேராசை கொண்டவனாய்ப் பிரமன்மால் தமக்குரைத்தார்
பெருமகிழ்வு கொண்டார்கள் திருமணஏற் பாடுசெய்தார்
மேருமலை தனிலிருக்கும் மனைவிஇந்தி ராணியையும்
விளங்குதெய்வ யானையையும் மேவுபரங் குன்றினுக்கு



வீரஅயி ராவதத்தில் விண்ணவர்கோன் அழைப்பித்தான்
மெய்குளிரச் சயந்தனுடன் ஏனையோரும் மகிழ்ந்து வந்தார்.
இந்திரனும் தேவர்களும் எம்முருகன் தனையணுகி
இலங்குதெய்வ யானைதனை மணம்புரிய வேண்டிநின்றார்
அந்தநாள் அமிர்தவல்லி ஆகிஎமை அடையத்தவம்
ஆற்றினாள் கஜவல்லி ஆகையால் அவளைநாம்
நாளைதிரு மணம்புரிவோம் நன்றென்றான் சிவபுதல்வன்
நலமான அலங்காரம் தேவதச்ச னாலியற்றி
சூழமணி மண்டபங்கள் சுனைசோலை முதலியன
தோரணகும் பங்களுடன் சுரேந்திரனும் செய்வித்தான்
முன்புமுசுவா யிருந்து வில்வமிலை பறித்தெறிய
முக்கண்ணி உமைவெகுண்டாள், அக்கணமே சிவபெருமான்
அன்புமையே இக்குரங்கு நமக்கினிய வில்வத்தை
ஆய்ந்தெறிந்த ததுகண்டாய் என்றதுமே உமையம்மை
முசுவுக்குக் கருணைசெய்தாள் பசுபதிமெய்ஞ் ஞானமெனும்
முத்துதவிக் காத்தணைத்தார் முசுகேட்ட வரப்படியே
முசுகுந்தன் பெயருடனே சோழநாட்டுக் கருவூரில்
முந்துமரிச் சந்திரனின் வழித்தோன்ற லாயுதித்தான்
அவன்முதலாம் அரசருக்கும் முனிவருக்கும் தேவருக்கும்
அரியதிரு மணவோலை முறைமுறையே அனுப்பிவைத்தான்
தவமுடைய முசுகுந்தன் திருமணத்தின் நலம் கேட்டுத்
தன்னாட்டு மக்களுடன் சாகரம்போல் வந்தடைந்தான்
நால்வகைச்சே னைகளுடன் முசுகுந்தன் செல்லுகையில்
நடந்துவந்தார் சிலபெண்கள், பலர்யானை ஏறிவந்தார்
தேர்களிலே சிலர்வந்தார் குதிரைகளில் சிலர்வந்தார்
செவிடர் ஊமை பேசுகின்றார் உறுப்பற்றோர் வலிமைபெற்றார்
இவ்விதமாய் வந்தமக்கள் இராசாக்கள் தங்கள்தங்கள்
ஏற்புடைய படங்குவீடு தங்கிமகிழ்ந் தாடினார்கள்
அவ்விடத்தே வந்தவரை அமரர் கோன் அணைத்துவந்தான்
அரம்பையர்கள் நாகர்தேவ நீரரகன் னியரெல்லாம்
தெய்வயானை தாள்வணங்கிச் சீராட்டுப் புரிந்தார்கள்
திருமுடிக்கு நெய்தடவி நீராட்டுச் செய்தார்கள்
மைவந்த கூந்தலுக்குப் புகைவாசம் மலரிட்டார்
மகரப்பகு வாய்மஞ்ஞை வலம்புரியைத் தலைக்கணிந்தார்
கருஞ்சாந்துப் பொட்டிட்டு சுட்டியிட்டு காதினிலே
கனக புலி முகப்பணியும் கழுத்தில்முத்து மாலைகளும்
கரங்களிலே வளையல்களும் தோள்களிலே தொடிகளையும்
கால்களிலே பாதசாலம் பாடகம்சி லம்புகளும்
அணியணியாய் அணிந்தார்கள் கஜமகளைக் கண்டினித்தார்
அயன்மூலம் முகூர்த்தங்கேட் டாறுமுக மணப்பிள்ளை

மணிமயிலில் ஏறிவந்தார் மதியிரவி குடைபிடித்தார்
வாயுசா மரம்வீச மறலிவாட் படைஏந்த
சேவற்கொடி ஜெயம்கூவ தேவரெலாம் இசைமுழக்க
திருமறைகள் சேர்ந்தொலிக்க திருமணச்சா லைபுகுந்தார்
ஆவலுடன் இந்தராணி அரம்பையர்கள் சூழவந்து
ஆவின்பா லால்முருகன் அடியிலபி ஷேகமிட்டாள்
ஆலாத்தி எடுத்தார்கள் முசுகுந்தன் முதலாய
அரசர்களும் அடிவணங்க அருள்புரிந்தார் முருகையன்
மேலாக அப்பன் அம்மை விடையேறி வரக்கண்ட
வேலையன் எழுந்தேத்தி அவர்கள் திரு வடிதொழுதார்
சிவனும்உமை நாயகியும் திருமுருகப் பெருமானைச்
சேர்த்துமார் போடணைத்துத் தழுவிஉச்சிமோந்தார்கள்
உவகையுடன் இந்திரன்மால் அயனாதி முனிவர்களும்
உள்ளழைத்துச் சென்றார்கள் உன்னதசிங் காசனமொன்
றங்கேவந் திறங்கியதும் அதிலமாந்தார் அப்பனம்மை
ஆறுமுகன் புகழ்கூறி அமரரெலாம் பணிந்தார்கள்
மங்கைதெய்வ யானைதனை மணவறைக்கு வரவழைத்தார்
மலரடியில் சிலம்பரற்ற மருவியமே கலையிரங்க
இலக்குமியும் சரஸ்வதியும் இருபுறமும் துதித்துவர
இபமகளாம் அமிர்தவல்லி ஈராறு தோள்முருகன்
குலக்கொழுந்தாய் வந்தமர்ந்தாள் குளிர்ந்துசிவன்
உமையம்மை
கொடைசிறந்த அருள்புரிந்தார். கோலமிகும் இந்திரனும்
கஜவல்லி கரம்பிடித்துக் கந்தனது கையில்வைத்துக்
கடையேனிக் கன்னிகையைத் தந்தேன்நீர் வார்த்துரைத்தேன்
நயமாயேற் றருள்கென்றான் நான்முகன்ஓர் மாங்கலியம்
ஞானமனத் தாலாக்கி நல்கினான், முருகையன்
தெய்வயானை திருக்கழுத்தில் சிவம்கமழ நாண்புனைந்தார்
தீவளர்த்துச் சடங்கெல்லாம் திசைமுகத்தோன்
இயற்றிவைத்தார்
கையேந்தி மணமக்கள் பரமசிவன் பார்வதியைக்
கனிந்துவலம் வந்தார்கள் கந்தனையும் மருகியையும்
ஓங்குகருணை புரிந்து "நங்களது முதன்மையெலாம்
உங்களுக்குத் தந்தோ"மென் றுரைத்துத்தம் மிடம்சென்றார்
ஆங்குவந்த எல்லோரும் அவரவரின் பதி சென்றார்



அழகியசெம் மஞ்சம்மேல் தம்பதிகள் சேர்ந்திருந்தார்

## 3. விண்குடியேற்றுப் படலம்

வாயுவினால் மனோவேகம் என்னும் தேரை
வரவழைத்தார் கஜவல்லி பாக னாக
ஆயசிவன் உமைபோல இருவரும்வந்
தத்தேரில் அமர்ந்தார்கள். முனிவர்வானோர்
தூயமலர் மழைபொழிந்தார். அவர்களைத்தம்
உடன்வரவும் பணித்தார் பன் னிருகரத்தர்
ஏயஇசை பலமுழங்க பூதவெள்ளம்
இரண்டாயி ரம்செல்ல வானகத்தின்
நகரமரா வதியடைந்தார் பானுகோபன்
நலிந்தெரித்த விண்ணுலகைப் புதுக்குவித்தார்
மிகவேகத் தேவதச்சன் முன்னையைப்போல்
விண்ணுலகம் ஆக்கிவைத்தான் அய னரிக்கும்
அகமகிழ இந்திரற்கும் கோயிலாக்கி
அறுமுகற்கும் அலங்காரக் கோயில் செய்தான்
தகமையுறு கோயிலுக்குள் முருகன் தெய்வத்
தந்திம களுடன்சிங்கா சனத்தமர்ந்தார்
இந்திரனைக் கங்கைநீ ராட்டிச் செம்பொன்
எழில்மகுடம் புனைந்துவாழ்த் தியம்பவைத்தார்
இந்திரனும் பணிந்திறைஞ்சி நன்றிகூறி
இருந்தனன்மற் றெல்லாரும் தமது முன்னைச்
சொந்தமெனும் பதியடைந்தார் தெய்வ யானைத்
துணைவியுடன் எம்பெருமான் கோயில் புக்கார்
அந்தரநாட் டிணைநீங்கி அறுமுகத்தான்
அம்மையொடு கந்தவெற்பு நோக்கி வந்தார்

## 4. கந்தவெற்புறு படலம்

இசைவீர வாகுதேர் செலுத்த அன்பி
னிலக்கத்தெண் மரும்பூத கணமும் சூழ
திசை புகழும் கைலாய மலையைச் சேர்ந்தார்
சிவன்உமையை வழிபட்டு வணங்கி மேலாம்
அசைவிலா அருள்வாங்கி விடைபெற் றப்பால்
அருணிறைந்து கந்த மலை தனையடைந்தார்
விசைபெறுபோர் வீரர்களும் வீரவாகு
மேவுபடைத் தலைவர்களும் பணிமேற் கொண்டார்.

## 5. இந்திரபுரிப் படலம்

சூரனால் பட்டதுயர் எல்லாம் எண்ணிச்
சுரேந்திரனும் மனங்குமுறி அரசவாழ்வுச்
சீரினால் ஏதுபயன் என்றிசைந்த
சிவதவமே பெரிதென்று துணியலுற்றான்
நேரினால் சிறந்தசுர குருவும் இந்த
நிலைமைதனை மாற்றுவதற் குள்ளம் கொண்டார்
பேரினால் புகழ்படைத்த குருக்களாய
பிரகஸ்பதி இந்திரன்பால் வந்தார் அன்றே

வருகுருவை இந்திரன் வணங்கி ஐய,
வந்தவர லாறென்ன என்று கேட்க.
பெருமைதரும் இப்பதத்தை விட்டு நீபோய்
பெருந்தவஞ்செய் தென்னபயன். பெண்கள்போகம்
ஒருவினர் யார்? இவ்வுலகிற் கண்ட இன்பம்
ஒருங்கி உடல் அழியும் தவத் தால் உண்டாமோ
மருவு சுக போகமே இன்பமாகும்
மனத்தெழுதிக் கொள்என்றார் வியாழமூர்த்தி
இதுவரையில் காமஇன் பத்தைப்பற்றி
எமக்கியம்பா திருநததேன் என்றுகேட்க
அதிபதியே இந்திரா. சமயம் ஆறாம்
அவற்றுள்ளே உலோகாயதம் இம்மைவீட்டுப்
பதமருளும் அதன்படியே ஆடவர்கள்
பயன்பெறுவர் முத்தியின்பம் பெண்கள் ஈவர்
மதனநூல் இவற்றையெலாம் விரித்துக்கூறும்
மற்றெல்லாம் வகுத்துரைத்தார் வியாழமூர்த்தி
குருஉரைத்த இம்மொழிகேட் டுள்ளம்மாறிக்
கொடுத்தனன்தன் அரசியலைச் சயந்தனுக்கு
மருவிடுதன் மனைவியிந்தி ராணியோடு
மதனநூல் முறைப்போக வாழ்வு கொண்டான்
அரசுசெயும் சயந்தன்தம் குருவைநோக்கி
அசுரரால் தேவரெலாம் துன்பம் காண
வருகார ணங்களெவை உரைத்தருள்க
மனந்தெளிய என்றலுமே வியாழன் சொல்வார்

***

விண்ணவர் ஆயினோர்க்கும் மேதகு முனிவர் யார்க்கும்
எண்ணமில் சூரன்தன்னால் எய்திய தீமைஎல்லாம்
நண்ணலர் புரமூன்றட்ட நாதனை அன்றித் தக்கன்
பண்ணிய மகத்திற்புக்க பாவத்தால் விளைந்த தென்றான் (க)

தேவ காண்டம் முற்றிற்று



உ

ஆறாவது

# தட்ச காண்டம்

முருகவேள்– வணக்கம்

மாயையின் வலியோனாகி மான்முதலோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய்துக நூற்றெட்டுக்
காயம தழிவின்றாகிக் கடவுளர்க்கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்தாள் சென்னி வைப்பாம்

## 1. உபதேசப்படலம்

மைந்தனே சயந்தா கேட்பாய் சொல்வேன்
மலரவன் சத்திய உலகில் ஒருநாள்
முந்துறு முனிவரும் மக்களும் இருக்கையில்
மூத்தவ னாகிய தக்கன் எழுந்து
தந்தையே தேவரில் தலைவரும் ஞானத்
தத்துவப் பொருளும் அழியா முழுமுதற்
சுந்தரக் கடவுளும் யாரெனச் சொல்லென
தூயநான் முகத்தோன் சொன்னான் இனிதே
" அன்றொரு நாளில் அரியும் யானும்
அடிமுடி காணா அனற்பெருஞ் சோதிக்
குன்றென நின்றவன் கோலமார் சிவனே
குறித்திடும் பரம்பொருள் அவரே யாவர்."
" முத்தொழி லுள்ளே முதலிரு தொழிலோர்
முதல்வரா காமல் முடிவுத் தொழிலாம்
அத்தொழில் புரிவோன் அரும்பரம் பொருளென
அறைகுதல் தகுமோ" என்றனன் தக்கன்

***

தக்கனே கேளாய் சதுர்மறை புகலும்
தத்துவம் உணர்ந்திலை. சகலஉயிர் களையும்
சக்கர மாலையும் சதுர்முக னெனையும்
சராசர மனைத்தையும் சங்கரிப் பவர்அவர்
இறுதியில் ஒருவராய் நிலைப்பவர் அவரே.
இறந்ததை எழுப்பி. வளர்ப்பவர் அவரே
உறுபிழை வராமல் காப்பவர் அவரே
உள்ளும் புறம்புமாய் நிற்பவர் அவரே.

***

எள்ளூறு மெண்ணெய் என்ன எறிமணி அரவமென்ன
கள்ளூறு போதுகான்ற கடியெனச் சலாகை தன்னில்
தள்ளுற அரியசோதி தானென உலக மெங்கும்
உள்ளொடு புறமுமாகி ஒருமையாற் பரவும் அன்றே (க)
*** (சலாகை –இரத்தினம்)

வேதா கமங்களை அருளினார் அவரே
விதிப்படி எமக்கும் உரைத்தவர் அவரே
ஆதா ரமவர் அவரையும் எம்மையும்
அறியா தொன்றாய் எண்ணுவ தவமே.
என்றலும் தக்கன், அருமறை எல்லாம்
இலங்கும் உயிர்கள் தேவர் பூதம்
ஒன்றிய பிரமம் எனக்கூறுவ தேன்
உரைக்குக என்றான் ஓங்கு வேதங்கள்
சிவனைப் புகழ்ந்து செப்புவ துண்மை
தெரிந்த மற்றவை சிறப்புரைப் புகழ்ச்சி,
அவரவர்க் கியம்பும் அரும்புகழ் எல்லாம்
அரனுக் காகும் அரியவே தங்களை
உணர்பிரா மணரைப் பிரமா எனச் சொல்லும்
உன்னத புகழ்ச்சிபோல் அனைத்துப் புகழ்ச்சியும்
அணிவது சிவனே ஆகையால் மகனே
அரனே பிரமம் அறிவாய் என்றார்.

***

யாதொரு பொருளையாவர் இறைஞ்சினும் அதுபோய் முக்கண்
ஆதியை அடையுமம்மா. அங்கதுபோலத் தொல்லை
வேதம துரைக்கநின்ற வியன்புகழ் அனைத்தும் மேலாம்
நாதனை அணுகும் எல்லா நதிகளும் கடல் சென்றென்ன. (க)

முத்தொழில் புரிவோன் மூதருட் டலைவன்
முடிநடு ஈறிலான் சிவனே என்றும்
சுத்தசாட் குண்ணியன் உலகத் தந்தை
தொடர்அரு உருவுளான் சிவனே என்றும்
சோதி சொரூபி சிவனே என்றும்
தொல்லைத் தாண்டவன் சிவனே என்றும்
ஆதி அழிவிலான் சிவனே என்றும்
அரியயன் அறிவொணாச் சிவனே என்றும்
ஆண்பெண் அலியிலான் சிவனே என்றும்
அயன்முதலான்மா அனைத்தும் காக்கும்
காண்பரும் தந்தையாய் கடைசியில் சுட்ட
கனற் சாம்பல் பூசுவான் சிவனே என்றும்



ஊனா, முடலில் உயிருடன் புகுந்து
தானே அவரவர் குணம் கலவாது
தானே தன்குணத் தொடுக்கித் தன்னிலை
சாற்றரும் தன்மையன் சிவனே என்றும்
முத்தி கொடுப்பவன் சிவனே என்றும்
மொழியும் வேதம் பசுபதி அவனே
அத்தனை வேண்டியே அரியும் நானும்
அளித்தல் படைத்தல் ஆம்பணி புரிவோம்

***

அவனருள் பெறாதுமுத்தி அடைந்தனர் இல்லை அல்லால்
அவனருள் இன்றிவாழும் அமரரும் யாரும் இல்லை.
அவனருள் எய்தின்எய்தா அரும்பொருள் இல்லை ஆணை
அவனல திறைவனில்லை அவனைநீ அடைதி என்றான்.
(க)

## 2. தக்கன் தவஞ்செய்படலம்

தந்தையின் மொழிகேட்டுத் தெரிந்த தக்கன்
தவம்செய்யப் புறப்பட்டான் தவத்தைச் செய்ய
எந்தஇடம் பொருத்தமென்றான் பிரமன் சொல்வான்
என்மனத்தில் தோன்றியமா னசவா விப்பாங்(கு)
உந்துதவம் புரிகஎன சென்றான். எல்லாம்
உணர்தக்கன் அவ்விடத்தை நோக்கிச் சென்று
வந்தடிக்கும் காற்றுமழை வெயில்பனிக்கு
வருந்தாமல் பிராணவா யுவைமே லேற்றி
சுழுமுனையின் வழிச்சென்று மூலத் தீயைச்
சுடர்ப்படுத்தி நடுப்புருவ அமிர்த தாரை
விழச்செய்து மனத்திருக்கும் சிவனுக்கன்பால்
மிகுந்தஅபி ஷேகமிட்டுப் பூசை செய்து
வழிமுறையே மனத்தைஒரு மைப்படுத்தி
மந்திர ஐந் தெழுத்தோதிப் பாச பந்தம்
அழிவுபெற முயல்கின்ற ஞானியர் போல்
ஆயிரமாண் டருந்தவத்தைப் புரிந்தான் தக்கன்
அவ்விடத்தில் சிவபெருமான் உமையினோடே
ஆதிவிடை யேறிவந்தார் நீ விரும்பும்
எவ்வகைநல் வரம்வேண்டும் கேட்பாய் என்ன
எந்தையே, விண், மண், நான் முகன் முகுந்தன்
ஒவ்வியமா உலகெல்லாம் என்றன் ஆக்ஞை
உற்றரசு செயவேண்டும் உயிர்களெல்லாம்
செவ்விதே எனைவந்து பணியவேண்டும்

சிறியேனும் தேவரீரை அன்றி மற்றை
யாரையுமே வணங்காத நிலையும் வேண்டும்
நற்றேவர் அவுணர்என் பணிகள் செய்யப்
பேரான பலபுதல்வர் பிறக்க வேண்டும்
பிறந்தபிள்ளை இறவாமல் வாழ வேண்டும்
தாராரும் உமை மகளாய் வரவும் வேண்டும்
தாங்கள்அந் தணவடிவில் மணக்க வேண்டும்
நேரான இவ்வரங்கள் வேண்டுமென்றான்
" நீகேட்ட வரமெல்லாம் தந்தேன், ஆனால்
நன்னெறியில் நீசென்றால் வரம் நிலைக்கும்
நலம்பெறுக" எனமறைந்தான் தியாகராஜன்
தன்னிகரில் லாவரத்தைப் பெற்றதக்கன்
தந்தையினால் ஒருநகர மாக்குவித்தான்
பொன்னுலகின் மேலான நகரங்கண்டு
பூரித்தான் முனிவர்எலாம் துதிக்க ஆங்கு
மின்னுமணி மண்டபத்தில் கொலு விருந்தான்
விண்ணவரும் யாவரும்வந் தடிபணிந்தார்
இந்திரனால் பயந்தகன்ற அசுர மன்னன்
இனத்தோடு தக்கனிடம் வந்து சேர்ந்தான்
சந்திரசூ ரியர்முதல கிரகம், விண்மீன்
தங்குதிக்குப் பாலகர்கள் பாத லத்தார்
வந்துவந்து வழிபட்டுச் செல்லுவார்கள்
மதம்மீறித் தக்கனர சாட்சி செய்தான்
உந்திநான் முகன் பாதத் துதித்த கன்னி
ஓங்குபெயர் வேதவல்லி மனைவி யானாள்

## 3. தக்கன் மகப்பெறு படலம்

வீறுடைஆ யிரமக்கள் பிறந்தார் தக்கன்
வெல்லரிய தவம்புரிந்து சிவனிடத்தே
கூறுமுயிர் களைப்படைக்கும் வரத்தைவாங்கி
கொற்றமுடன் வருகெனமக் களைப்பணித்தான்
ஏறுபுனல் மானசவா வியை அடைந்தார்
இசைந்ததவம் புரியலுற்றார் அவர்கள் முன்னே
மாறில்லா நாரதனார் வந்தார், மக்கள்
வரலாற்றைக் கேட்டுப்பின் புகல லுற்றார்
மக்களே சிவனைத் திரி கரண சுத்தம்
மலநீக்கம் பெறும் தவத்தைப் புரிந்து வீடு
புக்கிடும்பே றடையாமல் படைப்பைச்செய்து



பொல்லாத பழிசுமப்பீர் பிரமன் முன்னர்
மிக்கதலை இழந்ததனை அறியீ ரோநீர்
விளைவுதரு அன்பினால் தவம்புரிந்தால்
நக்கன்தாள் அடையலாம் என்றுகூற
ஞானமிகு ஆயிரவர் வீடுபெற்றார்
அதனையறிந் தான்தக்கன் வெகுண்டான் மீண்டும்
ஆயிரமக் களைப்பெற்றான் தவங்கிடந்து
விதமுடனே படைக்கின்ற வரத்தைக் கேட்க,
விடைகொடுத்தான் முன்போல்நா ரதரும் வந்தார்
பதவீடு பெறுவழியைப் புகன்றார் ஞானப்
பத்திமிகு தவத்தால்ஆ யிரவரும் போய்
இதமான சிவனடியாம் வீடு பேற்றை
எய்தினார் இத்தனையும் அறிந் தான் தக்கன்
தான்பெற்ற மக்களெலாம் எனக்கில்லாமல்
சதிசெய்த நாரதரில் கோபம் பொங்கி
" வான்மிக்க புகழ்படைத்த நாரதன் போய்
மண்டலமெ லாமுழன்று திரிக" என்றே
ஊன்பட்ட தக்கனுமிச் சாபமிட்டான்
உளங்குளிர்ந்து பெற்றான்ஈர் பத்துமூன்று
தேன்பட்ட பெண்மக்கள் சுபுத்தி, புத்தி
திருதி துட்டை சுரசை, வபு, கிரியை, கீர்த்தி
சாந்தை,சிரத் தை,இலச்சை, மேதா, சுத்தி
சம்பூதி, நாரிசன் னதி, கியாதி
காந்த–ஊற் சை,சுவதை, பிருதி, மிருதி,
கமை, சுவா, அனசூயை என்னும் ஈர்பான்
மூன்றுமக்கள் இவர்களிலே தருமருக்கு
முதற்பதின்மூ வர்தம்மை மணம்செய் வித்தான்
ஆய்ந்துமுனி பிருகு, மரீ சி,புலத்தி
யர்,அங்கிரா புலகர்,வசிட்டர், அத்ரி, அக்னி,
கிரது,பித ராதமக்குப் பத்துப்பெண்ணை
கிரியைமணம் செய்துவைத்தான் தருமர் என்பார்
இருபத்தேழ் புத்திரரைப் பெற்றெடுத்தார்.
இருபுதல்வர். விதாதா,தா தாஎன்பாரும்
ஒருபுதல்வி இலட்சுமியும் பிருகுபெற்றார்
உற்றதிரு மாலிலட் சுமியை வேட்டார்
மரீசிநால் பெண்பெற்றார் அவர்களுக்கு
மட்டில்லாப் பலமக்கள் வந்துதித்தார்
புலத்தியர்பல் மகவீன்றார் அங்கிரா, தம்
புத்திரராய் அங்கிதீரன் பரதனோடு

குலந்திகழ்நாற் பெண்களையும் பெற்றார் அன்னார்
கோத்திரத்தில் பலமுனிவர் வந்துதித்தார்.
புலகர், தாத், திரியைப் பெற்றார் அவர்தம்
புத்திரர்க்கும் பர்வந்தார் முனிவசிட்டார்
குலவுமொரு பெண்ணையும் ஆண் எழும் பெற்றார்
குணம்சிறந்த அத்திரியும் சத்தி நேத்ரன்
சந்திரன் சனி.சங்க தானன் என்னும்
தனையரைப்பெற் றார், அக்னி, மூன்று ஞான
மைந்தரைத்தந் தார், கிரது மூவர் தந்தார்
வரு–பிதரா, மேனை, பூமி இருபெண் தந்தார்
பைந்தொடிமே னையைஇமவான் மணந்துகொண்டான்
பார்மகளை மேருமலை வதுவைபூண்டு
மந்தரத்தை பெற்றதுபின் மந்தரம்தன்
வசம்சிவனை வைத்திருக்கும் வரம்வாங்கிற்று
மேருமலை வேலைஎன்பாள் தன்னைப்பெற்று
விருப்பமணம் வருணனுக்கு முடித்த(து) அப்பால்
வருணனும்பெண் சரவணிஎன் பாளைப் பெற்று
மணம்புரிவித் தான் பிரா சினன் என்பார்க்கு
மருவுமிவர் பத்துப்புத் திரரைப் பெற்றார்
வம்சவிருத் திகள் மிகுந்து வாழும் தக்கன்,
இருபத்தேழ் வான்மீனாம் பெண்கள் பெற்றான்.
இவர்களைச்சந் திரனுக்கு மணம்செய்வித்தான்

## 4. சந்திரசாபப் படலம்

சந்திரனே இருபத்தேழ் பெண்கள் மாட்டும்
தாராள அன்புடனே பாரபட்சம்
எந்தவித முங்காட்டா திருக்க வேண்டும்
எனப்பணித்தான் சந்திரனும் அவ்வா றாற்றி
வந்தனன், கார்த்திகைரோ கிணியென் பாரில்
மட்டில்லா அன்பாற்றி மற்ற வர்மேல்
சிந்தைசெலுத் தாதொதுக்கி நின்றான். அஃதைச்
சேரிருபத் தைவரும்போய்த் தக்கனுக்கு
முறையிட்டார் அப்பொழுது கோபம் கொண்டு
முரடனே உன்கலைகள் நாளொன்றாக
குறைவாகித் தேய்ந்திடுக என்றுசாபம்
கொடுத்தகன்றான் மதிதேய்ந்தான் கலை ஒன்றாகி
நிறைசெல்வம் அழிந்தவன்போல் நெஞ்சழிந்தான்
நேயமுடன் இந்திரனும் வந்துரைப்பான்



கறைமதியே கழறக்கேள் முன்னோர்காலம்
கணபதியின் நடங்கண்டு சிரித்ததாலே
"நீசனாய்ப் போ"எனறு சபித்தவேளை
நேயமுடன் நான்முகன்போய் வேண்டிநிற்க
மாசமா வணிச்சதுர்த்தி மாத்திரத்தில்
வன்சாபம் உறுகவெனக் கருணை செய்தார்
பேசுதக்கன் சாபத்தைப் பிரமன் பாற்போய்
பேணிமுறை யிடுகென்றான், மதியும் சென்று
வீசுபுகழ் பிரமனிடம் விளம்பி நின்றான்
விண்மதியே இஃதென்னால் சரிவராது
தவத்திலே வரங்கொடுத்த சிவனைத்தானும்
சற்றெண்ணான் என்சொல்லைக் கேட்கமாட்டான்
அவமதிப்பான் ஆகையால் அரனிடத்தில்
அணுகிமுறை யிடுகஎன அனுப்பிவைத்தான்
சிவகயிலை யடைந்துதிரு நந்தி பாதம்
தெரிந்தேத்தி சிவன்பால் போய்க் குறை யிரந்தான்
கவலைமிகத் தேய்ந்துகரு நிறமாய்நின்ற
கலைமதியை விசாரித்தான் கருணைவள்ளல்
ஐயனே என்கலைதே யாதிருக்க
இழந்தகலை வளர்ச்சிபெற அருள் செய்வாயே
உய்யவே வேறுவழி இல்லையென்றே
உமதுதிரு வடிபிடித்தேன் என்றான் திங்கள்
மையணிகண டப்பெருமான் மனமிரங்கி
மதியேநீ, அஞ்சற்க உன்னை என்றன்
செய்ய சடை தனில் அணிந்தேன் இனிநீ தேயாய்
செப்புவேன் ஒருவார்த்தை உன்க லைகள்
நாளொன்றாய் வளர்ச்சியுறும் வளர்ச்சியின்பின்
நாளொன்றாய்த்தேய்வுபெறும் சாபம் நீங்கி
வாழென்றான் பரமசிவன். மதியும் தாழ்ந்து
வழிபட்டு வானுலகில் சஞ்சரித்தான்
மூளுமனற் கோபமுடன் தக்கன், முக்கண்
மூர்த்தியருள் செய்ததனைக் கேள்வியுற்று
ஆழிசூழ் உலகமெலாம் ஆளுமென்னை
அவமதித்தான் பரம்பொருள்நான் என்பதோரான்
ஆயவசை மொழிகளால் ஈசன்தன்னை
அடங்காத சினத்தனாய் இகழ்ந்துபேச
தூயமுனி புலகர்என்பார் ஆங்கேவந்தார்
சொல்லரிய தமக்குநிக ரில்லாத் தேவ
நாயகனை இகழாதே இகழ்வா யாகில்
நகைத்திடுவர் யாவர்களும் செல்வம் எல்லாம்

தேயுமென முனிவர்சொல மீண்டும் தக்கன்
சிவனென்னை என்செய்வர் வரங்கள் கொண்டேன்
எவர்க்கும்பணி வேனல்வேன் என்ற போதில்
இனிதுபுல கர் புகல்வார், இறைவன் செய்கை
கவலைமிகச் சரணடைந்தார் தம்மைக் காத்தல்
கலைமதியும் அவ்வாறே வேண்டிநின்றான்
அவன்சாபம் தான்நீக்கி, உனது சாபம்
அப்படியே நடைமுறையில் இருக்க வைத்து
புவனமதில் வளருவதும் தேய்வு மாக
மாற்றியதை மனத்தில்நீ கொள்ளுவாயே

***

## 5. உமை கயிலை நீங்கு படலம்

இன்னுங்கேள் தக்க னேஉன்
எழில்மரு மகனுமாக
பொன்னலர் சடையான்வந்துன்
புதல்வியை மணம் முடிப்பார்
அன்னதை நினைந்தாயில்லை
அகம் சினம் கொள்ளாய் என்று
முன்னிய முனிவர்கூற
மூர்க்கனும் சாந்தி பெற்றான்

***

கயிலையில் சிவனும் உமையு மிருக்கையில்
கௌரியாம் உமையாள் சிவன்முகம் நோக்கி
உயர்வுறும் நாதனே உங்களின் நிலையின்
உண்மையை எனக்கு விளம்புக என்றாள்
எம்பெரு மானும் இயம்புத லுற்றான்
எங்கும் நிறைந்தது உருவமும் குணமும்
தம்பா லில்லாத தன்மையும், குற்றம்
சாரா நிலையும் உயிர்களின் பாசம்
போக்குதற் காக திருவருட் சத்தியால்
புரிந்ததும், பராசக்தி, ஆதி இச்சா ஞானம்
ஆக்கும் கிரியா சத்திஐந் தாக்கி
அருளிச் செய்ததும் நிட்கள சகள
சதாசிவ மூர்த்தியை வழிபட, ஐந்து
சத்திகள் மூலமாய் சிவசா தாக்கியம்
கன்மசா தாக்கியம் கர்த்திருசா தாக்கியம்
அமூர்த்திசா தாக்கியம் மூர்த்திசா தாக்கியம்
ஆகிய பஞ்சசா தாக்கிய மானதும்
* ஐயைந்து மகேஸ்வர வடிவம் கொண்டதும்



ஆய குடிலையில் சிவம் முத லாகிய
நவந்தரு பேதங்கள் ஆனதும், மூன்று
மாயைகள் சுத்த மாயை, அசுத்த
மாயை பிரகிருதி இவற்றின் மூலமாய்
ஆறாறு தத்துவம் தோன்றச் செய்ததும்
ஐவகைத் தொழில்கள் புரிவதும் மூவகை
தகுவிஞ்ஞான கலர்பிர ளயாகலர்
சகலர் என்னும் ஆன்மாக் களையும்
மிகுமாறாது தத்துவங் களையும்
விளைந்ததத் துவங்களில் உள்ளவர் களையும்
தோன்றிய முறைப்படி ஒடுங்கச் செய்வதும்
சொல்லும்எக் காலமும் ஒரேதன் மையராய்
தான்விளங் குவதும்" ஆகிய அனைத்தும்
சங்கரன் சாற்ற உமையாள் கேட்டாள்
எம்பெருமானே தேவரீ ருக்கோ
எந்த உருவமும் இல்லைஎன் றீர்கள்
ஐந்துரு வத்தை அடைந்தமை ஏன்? என
ஐயன் கூறுவான் அடைந்த வடிவெலாம்
சத்தியின் காரியம் தானே என்றார்
"சங்கரா, யானுன் சத்தியே யாகில்
அத்தனை வடிவமும் யானே யாகும்
அல்லாவா?' என்றாள் உமையே உன்னைப்
புகழ்ந்துரை க்கின்றாய், ஆணவ இருளில்
புகுந்துழல் உயிர்களை அவைகளில் நிறைந்து
இகல் இருள் அழிப்பது யானே யன்றோ
இன்றேல் உயிர்கள் அறிவின்றி அழியும்
உன்னிடத் தேநான் இல்லையேல் நீயும்
உணர்வினை அடையாய் இந்த உண்மையை
இன்னே காட்டுவேன் எனச்சிவ பெருமான்
இயங்கும் பிரமன் ஏனைய உயிர்கள்
இயங்கும் நிலையை ஒழித்தனர் சிறிதே
எல்லா உலகமும் சித்திரம் போல
இயங்கா திருந்தன செயல்கள் அற்றன.
இவற்றைக் கண்டு இறைவியும் நடுங்கினாள்

ஆட்டுவித் திடுபவன் அதுசெயாவழிக்
கூட்டுடைப் பாவைகள் குலைந்து வீழ்ந்தென
நாட்டிய பரனருள் நடாத்தல் இன்மையால்
ஈட்டுபல் உயிர்த்தொகை எனைத்துமாய்ந்தவே (க)

***

எம்பெரு மானே எல்லாப்பொருளிலும்
இணைந்து நிற்பதை நானறி யேனே
என்பொருட்டாக ஓர்இறைப் பொழுதே
இயங்கா தருளினீர் உயிர்களுக் கெல்லாம்
பலயுக மாயின என்பிழை பொறுத்துப்
பல்லுயிர் தெளிவுறப் பண்ணுக என்றனள்
உலகெலாம் பெற்ற உமையவள் இரந்தாள்
உள்ளவாறே இயக்கினன் இறைவன்
பதினோ ருருத்திரர் பழைய உணர்வுடன்
பாவம் நீங்கிப் பல்லுயிர் வாழ்ந்திடத்
திருவிடை மருதூர் சேர்ந்தனர் விதிப்படி
சிவபெரு மானைப் பூசனை புரிந்தனர்
இந்திரன் அயன்அரி முனிவர்கள் தேவர்கள்
யாவரும் எழுந்தனர் சீவரும் எழுந்தனர்
அந்த வேளையில் சிவனும் தோன்றினார்
அன்பில் வரங்கள் எவை வேண்டுமென,
பதினோ ருருத்திரர், பரனே தேவரீர்,
பயிலும் திருவிடை மருதூர்த் தலத்தில்
மதியெனுமாசி கிருஷ்ண சதுர்த்தசி
மகாசிவ ராத்திரி என்னும் தினத்தில்
இரவுநாற் சாமம் ஏத்திடு வோருக்(கு)
இன்சிவ பூசைப் பலன்கொடுத் தருளுக
வரமிது வேண்டினர் மகாசிவன் கொடுத்தான்
மண்ணகத் திறைஞ்சுவோர் தாமும் இப்பலன்
பெறுவார் களாக என்றிறை மறைந்தார்
பிரமன் முதலோர் சிவனிடம் சென்று
நெறிமுறை தவறினோம் பாவத்தில் மூழ்கினோம்
நிறையிருள் கிடந்தோம் விமோசனம் சொல்க
என்றதும் ஈசன் பிழைஉமக்கில்லை
இப்பிழைப் பாவம் உமையையே சேரும்
என்றனன், உடனே உமையவள் கலங்கி
"இப்பழி தீர்ந்திட எனக்கொரு வழிசொலும்"
அப்பொழு திறைவன் "ஆருயிர் செய்பிழை
அன்னையாம் உன்னையெ அடையும்" ஆகையால்
இப்பொழு தேநீ காளிந்தி என்னும்
யமுனை ஆற்றில் வெண்டா மரைமலர்
மீதில் வலம்புரி வடிவில் தவம்புரி
வேந்தன் தக்கன் உன்னை எடுப்பான்
நீதனிக் குழந்தை வடிவ மெடுப்பாய்
நினைஅவன் மனைவி வேத வல்லி



விரும்பி வளர்ப்பாள் ஐந்து வயதில்
விழைதவம் புரிவாய் வந்துநாம் உன்னைத்
திருமணம் புரிவோம் என்றதும் இறைவி
திருவடி தொழுது யமுனையை அடைந்தாள்

## 6. காளிந்திப் படலம்

மாசி, மகத்தில் வருபுனலாடிட
வந்த தக்கன் வலம்புரி எடுத்தான்
மாசிலா வலம்புரி மாதா ஓர்பெண்
வடிவ மாகினாள் மகிழ்ந்தான் தக்கன்
பேசிடும் உமையே எனமனங்கொண்டான்
பெண்வேத வல்லி பாலூட்டி வளர்த்தாள்
ஆசையால் அவள்பெயர் தாட்சா யணியென
அரும்பெயர் சூட்டி அழைத்தனர் இனிதே

## 7. உமை தவம்புரி படலம்

ஐந்து வயதும் அடைந்ததாட் சாயணி
அரனாம் சிவனை அடைந்திடும் வரம்பெறச்
சிந்தை கொண்டேன் சிறப்பு மிக்கதோர்
திருத்தலம் தருக. தவம்செய என்றனள்
முன்வர லாறெலாம் வேதவல்லிக்கு
மொழிந்தனன் தக்கன் மனைவி குளிர்ந்தாள்
அன்புயர் தவத்தை ஆற்றிடும் வேளை
அந்தணர் வடிவினில் பிரமச் சாரியாய்
தவம்புரி சாலையைச் சார்ந்தனர் அந்தணர்
தாதியர் அவர்தாள் பூசை புரிந்தனர்
சிவசிவ என்று தேவியும் தொழுதாள்
சென்ற அந்தணர் தேவியை நோக்கி
தட்சா யணியே தமியேன் வந்ததைச்
சாற்றிடக் கேளாய் " உன்னைத் திருமணம்
இக்கணம் புரியவே இங்கே வந்தேன் "
என்றலும் இறைவி ஐயனே நீவிர்
இவ்விதம் கேட்டல் தகாதெனத் தனதுகை
இருசெவி பொத்தி இயம்பினள் உமையாள்
செவ்விரி சடையன் சிவனை மணக்கவே
செய்கிறேன் தவமெனச் செப்பினள் பைந்தொடி
அறிவதற் கரிய அரனை எப்படி
அருள்மணம் புரிவாய் என்றார் அந்தணர்
இறைவன் வந்தெனை மணம்புரி யாவிடில்

இறப்பேன் நிச்சயம் என்றவண் நீங்கினள்
நன்றுநன் றென்று நம்பன் சிரித்து
நானுன் அன்பெனும் உறுதியை வியந்தேன்
என்றுகூறி இசைந்த மெய்யுருவம்
எடுத்தார். கன்னி இரந்து முன்நின்றான்
பேசிய வார்த்தைப் பிழைபொறுத் தருள் கென
பிரானடி வணங்கினாள் சேடியர் ஓடினர்
மாசிலாக் காதலர் மாண்பினைக் கூறினர்
வந்தவர் சிவனென மதித்தான் தக்கன்

## 8 திருமணப்படலம்

தக்கன் திருமணச் சகலஏற் பாடும்
தக்கமா புரியில் செய்தனன் விரைந்து
நக்கனை யணுகி, நம்மிடம் வருக
நம்பனே என்றான் திருமணம் புரியும்
நாளிது வைத்தேன், என்றலும் பரமன்
நாடினான் மணவறை சேடியர் உமையை
வாழ்த்தி அலங்கரித் தாடையா பரணம்
வாசனை பூசி அழைத்து வந்தனர்
மாலயன் இந்திரன் வணங்கி நின்றனர்
மங்கல கீதம் கின்னரர் கருடர்
சாலவும் பாடினர் மாமிநீர் வார்க்கத்
தக்கன் விதிப்படி பூசனை புரிந்து
உமையின் கரத்தைச் சிவனிடம் கொடுத்தான்
உமக்கிவள் தந்தோம் காத்தருள் கென்றான்
இமையவர் முனிவரும் யாவரும் திருமண
எழிற் காட் சியினால் குளிர்ந்தனர் உள்ளம்
சடுதியில் அந்தணர் மறைந்தார் அங்கே
சக்தி உமையும் தவித்தாள் அழுதாள்
சுடுசினத் துடனே தக்கன் நின்றான்
துன்பம் துடைத்து வேத வல்லியாள்
அம்மா அழாதே மீண்டும் தவஞ்செய்
அவர்வரு வாரென, அலைமகள் திருமகள்
அம்மா உங்களை அரன்விட் டகலான்
ஆதலால் தவத்தால் அடையலாம் என்றனர்
தவச்சா லைக்குச் சென்றாள் உமையவள்
தாயும் தகப்பனும் உறவுமில் லாதவன்
உவப்பவன் பொதுவிடம் உற்றான் மயக்கம்
உற்றிடும் எனக்கும் பழியுண் டாக்கினான்
என்றான் தக்கன் பெருமூச் சுவிட்டான்



எல்லாத் தேவரும் இருப்பிடம் திரும்பினர்
மன்றாடும் சிவனை மன்றாடி னாள்உமை
மகிழ்ந்தொரு நாளில் மணமகன் வந்தார்
வெண்டலை மாலை விபூதிப்பூச்சு
விளங்குருத் திராட்சம் விரவிய காதணி
தண்டைச் சிலம்பும் சடையும் சூலமும்
தாங்கி உமைமுன் சங்கரன் வந்தார்
வணங்கினாள் உமையவள் நிகழ்ந்ததை உணர்த்தி
வாமபா கத்தே இடபத்தில் வைத்து
மணங்கொண் டுமையைக் கயிலைகொண் டடைந்தார்
மருமகன் கள்வன், முன்னரும் பிச்சை
எடுத்தான் என்பர், எங்கள் குலத்தை
இழிவு படுத்தினான் இனிமேல் சிவனை
அடுக்கேன் துதியேன் பிதாமா தாவை
அறியா தவனை அழைத்துச் சென்றான்

## 9. தக்கன் கயிலைசெல்படலம்

எனப்பல விதமாய் தக்கன் இதழ்வதை
அமரர்கள் கண்டனர் மனம் பயம்கொண்டனர்
சினந்த தக்கனால் தீதே எமக்குறும்
சிவனிடம் போம்படி செப்புவோம் என்று
குற்றம் பார்க்கில் சுற்ற மில்லை
குறை கொள்ளாமல் கயிலை சென்று
உற்ற மகளையும் மருகன் தனையும்
உள்ளம் குளிர்ந்திடச் செய்தல்நன் றென்றனர்
தக்கன் கயிலை சேர்ந்தனன் அங்கே
தனிக்குரு நந்தியின் கோபுரம் அணுகினன்
புக்கிடும் வாயிற் பூதர்கள் அவனை
போக விடாது தடுத்தனர், தக்கன்
மருமகன் மகளைக் காணவந் தேனென
மகேஸ்வரன் தனைநீ இகழ்ந்தாய் தக்கனே.
புரமூன் றுடையார் கொடியவர் எனினும்
பொலிதரு சிவனில் அன்புமிக் கவர்கள்
உன்பால் அன்போ அணுவுமே மில்லை
உதவிய நன்றியைக் கொன்றவன் நீயே
நின்மகள் மருகனைக் காண வேண்டுமேல்
நிற்பாய் இங்கே என்றனர் பூதர்
நில்லெனச் சொன்னது நீங்கள் அல்லர்
நிலவிய மகளும் மருகனும் ஆவர்
சொல்லுமென் பெயரோ தக்கன். என்னிடம்

சுரர் அயன் திருமால் ஏவல் செய் கின்றனர்
உங்கள் கடவுளை எவர்கள் வணங் கினும்
உரைத் தாலும்துதி செய்தாலும் அவர்
தங்களைத் தடிவேன் என்று தன்பதி
சார்ந்தான். சிவனை மதிப்பவர் பதவி
இழப்பார் அன்றியும் எனதுதண் டனையை
ஏற்கவும் வேண்டும் என்றனைவர்க்கும்
மொழிந்தான் தக்கன் யாவரும் அவன்தன்
மொழிப்படி பணிகள் முறைமுறை செய்தனர்.

## 10. பிரமயாகப் படலம்

நான்முகன் தானொரு யாகம் செய்திட
நம்பனை வேண்டினான் யாகத் தவியைநீ
தான்பெற வேண்டும் சங்கரா. என்றான்
"சதுர்முகா என்றன் வடிவுடை நந்தியை
ஆங்கே அனுப்புவேன் அவிஏற் பானென
அயன்விடை பெற்றனன் இந்திரன் திருமால்
ஓங்கிய தேவர்கள் ஒருங்கு கூடி
உயர்ந்ததக் கனையும் அழைத்து அவனுடனே
மேரு மலைப்புற மனோவதி நகர்பால்
மேவினர். பிரமன் அவரவர்க் கேற்ற
சீரிய ஆசனந் தந்துப சரித்தான்
சேயாம் தக்கனை ஆசியோ டழைத்தான்
நந்தியை நம்பன், "யாகத் திடைபோய்
நம்அவிப் பாகம் பெற்றுநீ வருக"
என்றுரை பகர்ந்தார் நந்தியும் வந்தார்.
இனந்தரும் நூறு கோடி பூதரும்
வேள்விக்கு வந்தனர். நந்திக்குச் சிறப்பு
விளங்குமா சனமும் பூதங்களுக்கும்
சூழ்சிறப் பிருக்கையும் தந்தனன் பிரமன்
சுருதியின் விதியில் செய்தனன் யாகம்
தக்கன். நந்தியும் பூதரும் அங்கே
தங்கி இருப்பதைக் கண்டு கொதித்தான்
"நக்கனுக் கெப்படி வரவேற் புரைத்தாய்
நந்தியை என்முன் நடுவில் இருத்தினாய்
தந்தைநீ யாகையால் உன்னைஎன் வாளால்
தலைதுண்டி யாமல் விட்டு விட்டேன்
வெந்த சாம்பலை மெய்க்குப் பூசி
விஷப்பாம் பணிந்து தலைமாலை சூடும்
பித்தனோநல் அவிப்பாகம் ஏற்பவன்
பித்தனுக் கிதுவரை அவியைக் கொடுத்தனர்



பித்தனுக் கிதுவரை அவியைக் கொடுத்தனர்
இத்துடன் இனிமேல் சிவனுக் கிடாதே
இமையவர்க் கெல்லாம் கொடுப்பாயாக
திருமால் தனையே கடவுளாய்க் கொள்வாய்
சிவனைப் பரம்பொருள் என்று கூறிடும்
மறைகளை விலக்குவாய்" என்றனன் தக்கன்
மலரவன் திருமால் மனந்தடு மாறினர்
நந்தியம் பெருமான் சினத்துடன் எழுந்தார்
நடுங்கினான் அக்கினி. தேவரும் பதறினர்
எந்தை சிவனை இகழ்ந்தஉன் வாயை
இடந்து துளைப்பேன் இதுகடன் அன்று
இனிஎம் சிவனை இகழுவா யாயின்
இலங்கும்உன் தலையைத் துணிப்பேன் அறிதி
தனிஒரு சிவனைத் தள்ளினை. திருமால்
தான்பரம் பொருளெனச் சாற்றினை. தக்கனே
சிவனைவிலக்கி வேள்வி செய்வோர்
சிரம்வீழ் வதாக. சிவனைத் தூற்றிய
அவமிகும் உன்தலை அழிந்து வேறோர்
அருவருக் கும்தலை உண்டாவ தாக
இத்தனை தேவரும் இறந்து மீண்டெழுந்து
இகல்மிகு சூரனால் எண்ணிலாக் காலம்
மெத்திய துயர்க்கடல் வீழ்வார்களாகென
விளம்பி நந்தியும் பூதரொடகன்று
சிவன்பால் சென்று நிகழ்ந்ததை உரைத்தார்
திகழ் கீழ் வாயிலைக் காவல் செய்தார்
கவலையால் பிரமன் யாகம்கை விட்டான்
கனன்ற தக்கனும் யாவரு மகன்றனர்

***

## 11. சாலைசெய் படலம்

விண்ணவரும் முனிவர்களும் தேவர்களும் பன்னாள்
வேதவிதி யாகம்புரி யாதிருத்தல் கண்டு
திண்ணமிகு தக்கனும் அன்னவரை நோக்கி.
திறலான யாகம்செய் யாதிருப்ப தென்னோ?
எனக்கேட்க. நான்முகன் செய்தயா கத்தில்
எமதுசிவ னுக்கவியைக் கொடாதுநீ தடுக்க
சினத்துடன் திருநந்தி இட்டாசா பத்தால்
சிதறுண்டு யாம்வேள்வி செய்திலோம் என்றார்
சரிசரி முதலில்யான் ஒருயாகம் செய்வேன்

தனியாகம் முடிவுறில் நீங்களும் செய்க
எனத்தக்கன் ஆயிரம் சதுரயோ சனையில்
எடுப்பித்தான் கனகலம் எனுமிடத்தில் கங்கை
அணித்தாக விஸ்வகன்மனால் வேள்விச் சாலை
சமிதைகள் கிளைஇலைகள் யூபத்தம் பங்கள்
தருப்பைசிரு வம்சிருக்கு பறப்பைபசு தீக்கோல்
அமையும்பல தானியங்கள் யாவும் சேர்ப் பித்தான்
ஐந்தருக்கள் சங்கநிதி பதுமநிதி தேனு
மணிமுதல் அழைப்பித்து வருவோர்க்கு விருந்து
வகையாக உபசரிக்கக் கட்டளையு மிட்டான்
முனிவர்தொண் ணூறாயிரம் பரிமாற்றுக் காரர்
முதலாய ஏற்பாடு பலவுஞ்செய் வித்து
சிவன்தவிர மற்றையவிண் தேவர்முனி வர்க்கும்
செகத்துள்ள அந்தணர்க்கும் ஓலையறி வித்தான்
புவிதேவி ஸ்ரீதேவி யொடுமாயன் வந்தார்
பூவயனும் தேவியர்க ளுடனேவந்துற்றார்
இந்திரனும் முனிவர்களும் சுற்றமுடன் வந்தார்
எட்டதிபர் ஆதித்தர் உருத்திரரும் வந்தார்
முந்துநாள் கோளெலாம் அணியாக வந்தார்
முறையாக அவரவரைத் தக்கன்வர வேற்றான்
சுருதிஇசை செய்யநடுப் பீடத்தில் தக்கன்
துணிவுற்று யாகத்தைச் நிகழ்ந்திடச் செய்தான்
வரவுசெய் யாதவரை இகழ்ந்துவசை சொல்ல
வந்தார்கள் ததீசிமுதல் முனிவர்கூட் டத்தார்

## 12 ததீசிப் படலம்

முனிவர்களைத் தக்கன்வந் துபசாரம் செய்தான்
முனிவர்கள், தமையழைத்த தேனென்று கேட்டார்.
இனிவான முன்னிகழ்ச்சி உரைத்தனன் தக்கன்
இவற்றினைக் கேட்டவுடன் ததீசியும் சிரித்தார்
சிவனுடைய அடியன்நீ ஆகையால் சிரித்தாய்
செப்புமுறை கேட்டென்னை இகழ்ந்தனை என்று
தவதக்கன் கூறியதும் ததீசிமுனி சொல்வார்
தகுவேள்வித் தலைவன் சிவன் அன்றிஎவ ருளரோ?
அக்கினியின் முதல்வரவர் வேள்விக்குத் தலைவர்
அவர்பதியு மாகுவார் மற்றவர்கள் பசுக்கள்
அக்கோனின் கட்டளையில் பணிபுரிவர் மற்றோர்
ஆதலால் உன்வேள்வி முடிவேபெ றாது.
என்றவுடன் தக்கனுமென் வேள்வியின் அவியை



இங்குதிரு மாலுக்கு. வழங்கலாம் என்றான்
உன்றன்மன எண்ணம்மிக இழிவான குற்றம்
உயர்ந்தோரை விட்டுச்சிறி யோரைமதிக் கின்றாய்
முனிவரிது கூறியதும் ஈசான ருத்ரர்
முன்வைத்து யாகத்தை முயலுவேன் என்றான்
ஏகாதச ஈசான ருத்திரரும் தவத்தால்
எய்துவார் சாரூபம் என்பதனை அறியாய்
ஏகநா யகன்சிவன் என்றனர் முனிவர்.
"இறப்புத்தொழில் செய்யுமவர்" ஏன்முதல்வர் ஆவார்
எனக்கறியச் சொல்லுகென தக்கனும் கேட்டான்
பிறப்பிறப் பற்றவரும் உருவமற் றவரும்
பெரும்பரம் பொருள்என்று பேசும்நால் வேதம்
ஆணவத்தி னாலலையும் ஆன்மாக்கட் கருள
ஆதிசிவன் உருக்கொண்டான். சிற்சத்தி யாலே
பேணுமுயிர் ஆக்கலளித் தற்றொழிலை அயன்மால்
பிறங்குவாழ் நாளெலாம் புரிகஎன விட்டான்
ஐந்தெழுத்தை ஓதிவிபூ தியதனை யாக்கி
ஆற்றலினைப் பெற்றுங்கள் தொழில்கள்செய் கென்ன
இந்தவகை எம்மிறைவன் சொல்லியிறப் பதனை
ஏற்றனன் அவனாலே எல்லாமிங் கழியும்
பவத்துயரம் நீக்கிமேல் உயர்த்திவிடு வதனால்
பரமன்உருத் திரனென்ற பெயரதனைப் பெற்றான்
அவுணருடன் தேவர்கள் போர்க்குப்போம் பொழுது
அக்கினியி டத்தில்தம் பொருட்களைக் கொடுத்து
சமர்செய்து வந்ததும் பொருட்களைக் கேட்க
தரிக்காது அபகரித்துச் சென்றபொழு தவனை
அமரர்கள் துரத்திட அக்கினியும் அழுதான்
அதனாலே உருத்திரன் எனும்பெயர் பெற்றான்
உருத்திரரின் நாமமெல்லாம் சிவனுக்கா காது.
உயர்முனிவர் யாவரும் முன்னையொரு காலம்
பெருத்தபரம் பொருள்யாவர் என்றயனைக் கேட்க
பிரியமாய்ச் சிவன்வண்ணம் இயம்பியடி தொழுதான்
நமசிவாய ஐந்தெழுத்தைச் செபித்துவி பூதி
நலிபிறவி நீங்குங்கள் எனஅனுப்பி வைத்தான்
தமதுரையைத் ததீசிமுனி தக்கனுக்குக் கூறி
சங்கரனுக் கவிகொடுத்து யாகம்புரி என்றார்

## 13 ததீசியுத்தரப் படலம்

இவற்றையெல் லாங்கேட்ட தக்கனும் கொதித்தான்
ஏகாந்த னாயசிவன் எலும்புதலை மாலை
அவிந்தசுடு சாம்பல்தனை அணிவரோ எங்கும்
அங்கையில் கங்காளம் ஏந்தித்திரி வாரோ
புலியானைத் தோலையுடுத் தலைவரோ. தீ.மான்
பொங்குமழு சூலமுடன் பிச்சைஏற் பாரோ
பலபூதப் படையொடுகூத் தாடவல் லாரோ
பக்கத்தில் ஒருபெண்ணைத் தலையிலொரு பெண்ணை
கொண்டுதிரி வாரோநஞ் சுண்டுகறுப் பாரோ
குமாரரைப் பெறுவரோ குணமற்ற சிவனை
அண்டிஅவி கொடுக்காது புரிவன்யான் யாகம்
ஆயமொழி களைக்கேட்டு முனிவர்மனம் நொந்தார்
தகுதியற் றவனிவன் வினாவுக்கு விடைகள்
சாற்றுதல் வீணென்று ததீசிநினை வுற்றார்
பகருவேன் இன்னமும் என்றுளம் தெளிந்து
பகுத்தறிவில் லாதமுழுக் கயவனே எங்கள்
சிவனையவ மதித்தனை செப்புவேன் கேள்நீ
சீவர்களை ஒடுக்கியபின் பிரமன்முத லானோர்
சிகைமுதல் யாவையும் தாமணிந்து கொள்வர்
செய்தவப் பயனிதென விளங்குவதற் காக ;
இரணியாட் சன்புவியை வயிற்றிலே மறைத்தான்
ஏகினான் பாதலத் துள்ளே புகுந்தான்
பெருநடுக் கங்கொண்டு விண்ணோர்கள் ஏங்க.
பிரமனின் மூக்கிலே பன்றியாய்த் தோன்றி
அரிமாயன் பூமிதனை மீட்டனன் பின்னர்
ஆங்காரத் துடன்பன்றி திரிந்துதுயர் செய்ய
பரமனப் பன்றியின் கொம்பொன்றை முறித்து
பழையவடி வத்தைஅரி பெற்றிடச் செய்தார்
அந்தநினை வாகவே அரனந்தக் கொம்பை
அணிந்துளார் என்பதனை அறிகுவாய் தக்கா.
மந்தரத்தை அரிமுதுகில் தாங்கிப்பாற் கடலை
வானவரும் அசுரர்களும் கடையவழி செய்தார்
அமுதத்தைப் பிரிக்காமல் ஆமைபாற் கடலில்
அட்டூழி யஞ்செய்யச் சிவனதனைக் கண்டு
தமதுகரத் தால்பற்றி ஆணவத்தை யடக்கி
தரித்தனர் அதனோட்டை கொம்புடன் சேர்த்து
அமுதத்தை மோகினியின் வடிவத்தில் மாயன்
அசுரரைக் கொன்றுவிண் ணவருக்குப் பகிர்ந்தார்



தமதுசெய லால்வீட்டை யடையலா மென்று
தவங்களொடு யாகங்கள் முனிவர்கள் புரிந்தார்
அத்தருணம் மாயன்மோ கினியாக வந்தார்
அரனும்பிச் சாண்டியாய் நிருவாண உருவில்
ஒத்தமுனி பத்தினியர் வீதிகளில் செல்ல
ஓடிவந்த பெண்கள்கா மத்தினால் மயங்கி
கருவாகி நாற்பத்தெண் ணாயிரம் மகவைக்
கனிவாகப் பெற்றனர் அவர்களைப் பரமன்
உருவான தவங்கொண்டிங் கிருப்பீர்கள் என்றார்
உற்றமோ கினியின்பின் முனிவர்கள் தொடர்ந்தார்.
நிகழ்ச்சியெல் லாம்முனிவர் உளத்திலே எண்ணி
நிர்மலனும் மாயவனும் எங்கள்தவம் கெடுத்தார்
மிகக்கற்பு மாதர்களின் விரதத்தை யழித்தார்
விரவிவரும் பெண்களைத்தம் மிடமனுப்பி விட்டு
இப்படிச் சதிசெய்த சிவனையழிப் பதற்காய்
ஏற்றஅபி சாரஹோ மத்தினைச் செய்தார்
அப்படிச் செய்தயா கத்தில் எழும் புலியை
அனுப்பினார் சிவன்தனைக் கொல்லும்படி யாக
வந்தபுலி தன்னைத்தன் கையால் உரித்து
வாய்ந்தஒர் ஆடையாய் அரைதனில் தரித்தார்
வெந்தழலில். வரும்மழுவை விடவும் அதைக் கையில்
வீரமிகு படையாகக் கொண்டனன் பரமன்
வேள்வியில் வந்தமான் பாம்புபூ தங்கள்
வெண்டலையு டுக்கையெல் லாம்பற்றிக் கொண்டார்
வேள்வியின் தீயையும் முயலகன் தனையும்
விரைவாக விட்டனர் முயலகன் முதுகில்
திருவடியை வைத்தழுத் திச்சிவன் நின்றார்
தீயைக்கை ஏந்தினார் பின்முனிவர் கூட்டம்
பெருகுபல சாபங்கள் இட்டனர் பின்பு
பெரும்பாவம்சேர்முனிவர் நாணமுடன் நின்றார்
திருவடியில் முயலகன் மெல்லத்தலை தூக்க
சிவனும்நட மாடினான் உயிரெலாம் நடுங்க
திருமாலும் நான்முகனும் மனமகிழ்ந்து வணங்க
திகைப்புற்ற முனிவர்களை நல்லறிவுண் டாக்கி
அருள்கொடுத் தனுப்பினார் கைலைமலை சென்றார்
ஆனைமுகங் கொண்டிடுக ஜாசுரன் கதையை
அங்குள்ள தக்கனுக்குத் ததீசிசொல் கின்றார்
ஈனமிகும் கஜாசுரன் பிரமனை வேண்டி
எண்ணிலாத தவம்செய்தான் அயனும்வந் துற்றார்
என்னவரம் வேண்டுமென. " அழியாத ஆயுள்

திண்ணமிகு வலி,வெற்றி தருக எனக் கேட்டான்
சிறந்தவரம் தருகின்றேன் சிவனிடம் பகைத்தால்
இவ்வரமும் அழிந்திடும் என்றனன் பிரமன்
ஏற்றங்கு கஜாசுரன் எண்ணில்துயர் செய்தான்
ஒவ்வாத போரினால் விண்ணவரை வென்றான்
ஓங்குபுகழ்ச் சுவர்க்கத்தில் இந்திரனை எதிர்த்தான்
ஐராவ தத்தின்வால் பிடித்துச் சுழற்றி
எறிந்திட்டான் எட்டுத்திசை அதிபரையும் விரட்டி
வெய்யனாய்ப் பூவுலகும் வந்துதுயர் செய்தான்
வெருண்டோடி முனிவர்கள் காசியம் பதியில்
மணிகர்ணி கைக்கோயில் புகலிடம் கொண்டார்
மகாவிஸ்வ நாயகரை வேண்டிநின் றழுதார்
தணியாத கோபமுடன் கஜாசுரனும் காசி
தலம்நோக்கி வந்தனன். விஸ்வேசர் கோடி
சூரியப் பிரகாச னாய் உச்சி அண்டம்
தொடுமுக்ர வடிவெடுத் தசுரனது தலையை
சீரடியி னால்மிதித் தவனுடைய முதுகை
சிதைத்துப் பிளந்துநாற் கால்களும் பொருந்த
அவன்தோலை உரித்தனர், சிவனின்பேர் ஒளியால்
அமரரும் யாவரும் கண்ணொளி மயங்கித்
தவிப்பதைக் கண்டனர் அன்னவர்க் காகத்
தன்தோளில் அத்தோலை போர்த்தருள் செய்தார்
அப்பாலும் தக்கனுக்கு முனிநாதன் :ஓட்டை
அணிந்தவர லாற்றையும் இனிதுபுகல் கின்றார்
செப்பரிய தொகை முனிவர் தேவர்கள், மேரு
சென்றங்கு மாலயனை நோக்கி முதல் மூர்த்தி
யாரென்று கேட்டனர் நான்முகன் நானே
நாடுபரம் பொருளென, நாரணன் வெகுண்டு
யாருன்னை தோற்றுவித் தவரெனநீ யறியாய்
நானேப ரம்பொருள் என்றுவா திட்டார்
இருவரும் பலகாலம் தர்க்கமிடு கையிலே
இமையவரும் முனிவர்களும் அவ்விடம்விட் டகன்றார்
பிரணவமும் நான்மறையும் வேற்றுருவில் வந்து
பிரமமாம் பொருள் சிவன் என்றுபல சொன்னார்
சொற்களைக் கேளாத மாலயன் பின்னும்
தொடர்பான பெருவாதம் செய்தனர்பல் லாண்டு
தற்பரனும் இருவரது நிலைகண்டு வானில்
தாவுபரஞ் சோதியாய் ஓங்கினார் நின்றார்
உமையோடு சோதிக்குள் சிவனழகு கண்ட
உத்தமன் மாயனடி தொழுதுபணி வுற்றார்



அமையாத ஐந்துமுக முடையநால் வேதன்
அகந்தையால் உச்சித்தலை வாயினாலிகழ்ந்தான்
அயன்முனிவர் விண்ணவர்கள் அகந்தையை ஒழிக்க
அப்பன்வை ரவக்கடவுள் தனைத்தோற்று வித்தார்
மையனைய மேனியும் திருவடியிற் சிலம்பும்
மார்பில்சிர மாலைகளும் மருவுகரங் களிலே
சூலம்மழு பாசம்துடி யும்மூன்று கண்ணும்
சுடுகோரைப் பற்களும் செஞ்சடையும் கோபக்
கோலமொடு புன்னகையும் கொண்டங்கு நின்றார்
குமரனே. நான்முகனின் உச்சித்தலை கிள்ளி
உயிர்கொடுத் தமரரின் முனிவர்களின் உடலில்
உறுகுருதி பிச்சையாய் ஏற்றுயிர் கொடுத்து
உயர்வான வைரவப் புவனபதந் தன்னை
உனதுபதி யாய்க்கொண்டு காவல்புரி கென்றார்
சோதியில் சிவனுமுமை யும் மறைந் தார்கள்
திருமாலும் துதிசெய்து வைகுண்டம் சென்றார்
ஓதியமு றைப்படி வைரவர் புரிந்தார்
உச்சித்தலை யைக்கையில் ஏந்திடுக என்று
செருக்கழிந் தயன்வேண்ட வைரவரும் ஏற்றார்
தேவர்முனி வர்குருதி ஏற்றபின் திருமால்
இருக்கின்ற வைகுண்டம் சென்றனர், தமது
இசைவான பூதகண மாம்கால வேகன்
அக்கினிமு கன்சோம கன்ஆல காலன்
அதிபலனு டன்வாயில் செல்ல,விஷ்வ சேனன்
உட்செலத் தடுத்தனன் வைரவக் கடவுள்
ஒருசூலத் தாலவனைச் சூலத்தில் கோத்து
விட்டுணுவை இரத்தத்தின் பிச்சைதரச் சொன்னார்
மேல் நெற்றி நரம்பினால் குருதியைக் கொடுத்தார்
இட்டகுரு தியும்பதி னாயிர மாண்டாக
இடுபாத்தி ரம்பாதி யும்நிறைய வில்லை
மாயவனும் மயங்கினார் மனைவியர்கள் வேண்ட
வைரவரும் அருள்செய்தார். காவலனை விட்டார்
ஓயும்ஊ ழிக்காலம் சங்காரம் செய்வார்
ஓதுவே தங்களை நாய்களாய்க் கொண்டார்
மறக்கருணை இதுவென்று முனிவருரை செய்தார்
வானவர் கோமகன் கைலைவரு வேளை
இறைவனொரு பூதமாய் வாயிலில் நின்றார்
ஏற்றபதில் சொல்லாத பூதத்தின் மேலே
குலிசத்தை இந்திரன் வீசினான் உடனே
கோரஉருத் திரராகச் சிவன்உருவம் கொண்டு

வலிமைதனைக் காட்டவே இந்திரன் வணங்கி
மலரடிகள் பற்றினான் சிவனுமருள் செய்தார்
சிவனும்தன் கோபத்தை மேல்கடலில் எறிந்தார்
சிவன்சினம் குழந்தைவடி வானதைக் கண்டு
அவணின்ற வருணனதை வாழ்த்திவளர்த் திட்டான்
அக்குழந்தை அழுதகுரல் யாண்டும் முழங்கியது
குழந்தையழும் குரல்கேட்டுக் சதுர்முகவன் வந்தான்
குழந்தைவர லாற்றையும் வரும்பலனும் சொல்லி
மழவிடைய னாலன்றி எவராலும் அழியான்
வருணன். வளர்த்ததால் சலந்தரன் நாமம்
பெறுகஎன வாழ்த்திப் பிரமன்சென் றடைந்தான்
பேரோங்கு சலந்தரன் காளைவய தாகி
செறும்அவுணர் கூட்டமொடு திசையெலாம் வென்று
தேவுலகம் அத்தனையும் அவுணர்களுக் காக்கி
கவினார்ச லாந்தரம் தனிலரசு பூண்டான்
காலநேமி மகள்விருந்தை தன்னைமணம் கொண்டான்
தவமேரு மலையிலொளித் திருந்தவிண் ணவரை
தாக்கிட வந்தனன் திருமாலெ திர்த்தார்
இருபதினா யிரம்வருடம் போர்செய்தும் இயலா(து)
இனிதாகச் சலந்தரனைப் புகழ்ந்துபின் சென்றார்
பெரும்பயங் கொண்டுகயி லாயமலை நண்ணி
பேரான வானவர்கள் மறைந்திருக்கக் கண்டு
விருந்தைபல முறைதடுத்தும் சலந்தரன் கயிலை
வீராவே சத்துடன் வந்தெதிர்ப் பட்டான்
பரிந்துவிண் ணவரதிபன் பரமனுக்குச் சொல்லி
பலவாறு தோத்திரம் செய்தழுது நின்றான்
"அஞ்சற்க" என்றுசிவன் அந்தணக் கிழவன்
ஆயவடி வத்திலே சலந்தரன்முன் வந்தார்
செஞ்சொல்பல கூறியும் சீறியெழு மவனை
திருப்பதத் தால்நிலத் தொருசக் கரத்தை
வரைந்ததும் அ.:.துசக் கரமாய ததனை
வலிந்துனது தலையிலே தூக்கிவைப் பாயேல்
சிறந்தபெரும் வீரன்நீ என்றனர் சிவனார்
திறலான சலந்தரன் சக்கரம் தன்னை
மிகுமுயற்சி யால்தூக்கித் தலையிலே வைத்தான்
வேகமுறு கங்கையை வடமுகாக் கினியை
தகவற வடக்கிய சலந்தரன் நேமி
தன்னாலீர் கூறாகி னான் அவனின் குருதி
சிவனுடைய ஆணைப்படி நரகம் சேர்ந்ததுவே
திருமால்.ச லந்தரனின் மனைவிவிருந் தையைத்தான்



கவர்ந்துமணம் செய்வதற்கு கருத்துடன் எழுந்தார்
கபடமாய் முனிவர்போல் விருந்தைவரும் வனத்தில்
தங்கினார். ஆங்குமனக் கவலையுடன் விருந்தை
தன்கணவன் நிலைமையெப் படியோநான் அறியேன்
எங்குநான் காண்பனெனும் இன்னலுடன் அந்த
இருட்சோலை தனையடைய, திருமாலின் காவல்
துவாரபா லகரிரண்டு சிங்கமாய் வந்தார்
துள்ளிப்ப யந்தவள் முனிவர்தமை யணுகி
தவமுனிவ ரேயென்றன் றலைவனிலை அறியேன்
சாற்றிடும் என்றலும் அரிமுனிவர் சேனை
அதிபர்இரு குரங்காகிச் சலந்தரனின் உடலை
அவ்விடம் கொணர்ந்தனர் முனிவர் துண்டிரண்டும்
புதிதாகச் சேர்த்துடலில் தாமேயுட் புகுந்து
புனிதமிகு விருந்தையுடன் இன்பமனு பவித்தார்
சின்னாட்பின் கண்ணுறங்கும் மாயத்தைக் கண்டாள்
சினமுற்றாள் திடுக்கிட்டாள் கலங்கினாள் விருந்தை
இன்னாளில் வஞ்சகம் செய்ததிரு மாலே
என்னுடைய கற்பினை வஞ்சித் தழித்தாய்
சிங்கமாய் வந்தவருன் துவாரபா லகர்கள்
சிங்கமா னவர்களுன் பகைவராய் வருவர்
அங்குநீ அரசனாய்க் குரங்குகளி னுடனே
அலைந்துதிரி வாயென்னை வஞ்சித்த வண்ணம்
உன்னினிய மனைவியை உன்பகைவர் கவர்வர்
உலககெலாம் தீராத பழியைநீ அடைவாய்
இன்னவகை சாபமிட் டெரிமூட்டி யதனுள்
இறந்தனள் விருந்தைசுடு சாம்பலாய்ப் போனாள்

## திருமாலும் துளபமும்

பிரிவுத்துய ரால்மாயன் சாம்பலில் வீழ்ந்து
பேதுற்றுப் புலம்பினார் நான்முகன் முதலோர்
பரிவுற்றுச் சிவனிடம் விபரத்தைச் சொன்னார்
பக்கத்தில் இருந்தஉமை, விதையொன்றைப் பிரமன்
இனியகரத் தேகொடுத்து "இதனைத்திரு மால்முன்
இடுகஎன அவ்விதம் விருந்தை சாம்பலிலே
கனிவாக விதைத்துக்கடல் நீரையுமூற் றினரே
கருதுவிதை வளர்ந்துதுள வத்துருவப் பெண்ணாய்
நின்றதனைக் கண்டமால் விருந்தையை மறந்து
நிகரற்ற அப்பெண்ணைக் கண்டுமயல் கொண்டார்

துன்றுதுள வப்பெண்ணைப் பிரமன்வா னவர்கள்
சுந்தரத் திருமணம் செய்துவைத் தார்கள்

****

## சக்கரப்படைபெறுதல்

சலந்தரன் தன்னைக் கொன்ற சக்கரப்படையை வாங்க
தலந்தரு மாயன்பன்னாள் சகஸ்ரதா மரையால் ஏத்தி
நலந்தரு நாளில் ஓர்நாள் நறுமலர் ஒன்றிலாது
கலந்தரு கண்ணொன்றேந்திக் கமலமாய்ப் பூசை செய்தார்
கண்ணினைக் கமலமாகக் கண்டகண் ணுதலான் அன்றே
திண்ணிய சக்கரத்தைத் திருமாற்குத் தந்தாட் கொண்டார்
கண்ணொன்று கொடுத்ததாலே கண்ணன்பேர் கொண்டான்,நேமி
எண்ணிய வாறுபெற்றே எழில்நேமி யான்பேர் பெற்றான்

இராயிரம் சதுர்யுகங்கள் பிரமனுக் கோர் நாளாகும்
பராவும் நாள் ~~முப்பது~~ாயின் பகருமோர் மாத மாகும்
விராவுபன் னிருமாதங்கள் மிளிருமோர் வருடமாகும்
தராதர வருடம்நூறில் சதுர்முகன் ஆயுள் நீங்கும்
நான்முகன் ஆயுட்காலம் நாரணற் கொருநாளாகும்
தோன்றுமால் காலத்தின்பின் தொடர்ந்திடும் உலகமெல்லாம்
கான்றிடு தீயால் வேகும் கடுகிய சுடலை யாகும்
ஊன்றரு மயானம் தன்னில் உமையுடன் சிவன்நடிப்பார்
பிரளயாக் கினியைக்கண்டு பெரும்பயம் கொண்டு ஞானத்
தருமதே வதை நினைந்து தகுமிட பத்தின் தோற்றம்
மருவிய கோலந்தன்னில் மகாதேவ னிடத்தே சென்று
வருமிறப் பில்லாதுன்றன் வாகன மாக என்னைக்
கொள்ளென வேண்டிநிற்க மான்மழுக் கையன் நோக்கி
வெள்ளைமா விடையேஉன்னை விளங்குவா கனமாய்க்
கொண்டேன்

உள்ளவர் எவர்களுக்கும் உயர்ந்திடு தலைவ னாவாய்
தெள்ளுமா னிடமுமாகத் தெரிந்தெமைப் பூசை செய்வாய்
என்றருள் செய்தான் ஈசன் ஏத்திடும் அடியார்க்கெல்லாம்
ஒன்றிடும் இடபமேறி உவந்துவந் தருளும் செய்வார்.
அன்றொரு காலம் மாயன் அழகிய இடப மாகி
நின்றரன் தனைச் சுமந்த நிகழ்ச்சியும் அறிதி என்றார்



## நஞ்சுண்டல்

அன்றி, முற் காலந்தன்னில் அமரரும் அசுரர் தாமும்
பொன்றிடு போர் நிறுத்திப் பூவயன் தம்பாற் சென்று
துன்றிய இறப்பில்லாமல் சுகத்துடன் நீடு வாழ
நன்றுபாற் கடலிலுள்ள நயந்தரும் அமுதம்நல்கி
எங்களுக் கருளவேண்டு மென்றனர், வேத நாதன்
பொங்கலைத் துயில் கிடக்கும் புண்ணியன் துணையைச் கேட்க
அங்கவர் உபாயம் சொன்னார் அசலமந் திரம்மத்தாக
திங்கள்தூ ணாக, பாம்பு வாசுகி நாணதாக
அசுரர்கள் ஒருபுறத்தும் அமரர்கள் ஒரு புறத்தும்
விசைபெற இழுக்கயானும் விளங்கிடு மத்தின் கீழும்
அசலத்தின் மேலும் பற்றி ஆவன செய்வே னென்றார்
மசியுறும் பாம்பு வாயில் வருநஞ்சை வெளியில் கக்க,
அலைகடல் தன்பால் நஞ்சை அக்கணம் கக்க, ஏங்கி
நிலைகுலைந் தசுரர்தேவர் நின்றவர் ஓடினார்கள்
மலைதனை ஏந்திநின்ற மாயன்தன் மணிநிறத்தின்
குலநிறம் குறைந்துகாய்ந்து கோலமார் நீலமானார்
எழுவிஷம் வந்ததென்றே எல்லாரும் கைலைநோக்கி
தொழுகையர் ஆகச்சென்றார் தொடுசெயல் எல்லாம் சொன்னார்
அழுகையர் கூட்டம் எல்லாம் அழைத்தனர் உள்ளே, அன்னார்
பழுதுறு குறையைக்கேட்டார் பார்வதி உமையைப்பார்த்து
இதற்கென்ன செய்யலாம் சொல் என்றனர் உமையும் ஈசன்
பதமலர் தொழுதடைந்தோர் பயந்தவிர்த் தருள வேண்டும்
இதமுற இதனைக்கூற இறைவன்தம் மருங்கிலுள்ள
விதிபுரி சுந்த ரர்க்கு விஷங்கொடு வரப்பணித்தார்
சுந்தரர் கொண்டு வந்த சுடுவிஷம், திவலை யாக்கி
இந்தநஞ் சினைத்தூரத்தில் எறியவோ உண்ணவோஎன்(று)
அந்தரர் தம்மைக்கேட்க, அப்பனே இதை எறிந்தால்
நந்தமர் தாங்குவோமோ நயந்துண்ண வேண்டுமென்றார்
அப்பனும் நஞ்சையுண்டான் அதுகண்டம் அடைந்தபோதில்
இப்படி எக்காலத்தும் இருந்திட அருள்க என்றார்
அப்படிக் கண்டங்கொண்டான் அநாதரட் சகனாம் எம்மான்
செப்பிடுங் கடல் கடைந்து திருவமு தினிப் பெறுங்கள்
எனவிடை கொடுத்தார் ஐயன், இமையோரைக் காப்பதற்கே.
சினமிகு தக்கனேகேள், செறிஉல குயிர் உடல்கள்
தினமொடுங் கியநற்றானம் சிறந்திடும் சுடலையாகும்
தனதுமை யோடுதானும் சங்கார காலம் நிற்பர்.
ஒருதிரு விளையாட்டாக உமையவள் முன்னோர்காலம்
அருகுறு சிவன்பின்னாலே அணைந்திரு விழிகள் தம்மை

ஒருகணம் கரத்தினாலே உவந்துமூ டியகாலத்தில்
இருளினால் உலகமெல்லாம் இருண்டது பற்பல் ஊழி
சிவனும்தன் நெற்றிக்கண்ணால் ஜெகத்தொளி கொடுத்துத் திங்கள்
திவளும்சூ ரியன் எவர்க்கும் திருவருள் புரிந்தார், அம்மை
கவலையால் கைஎடுத்தாள் கைவிரல் பத்து மூலம்
அவண்மிகு வியர்வைதோன்றி ஆயிர நூறு கோடி
முகங்கொண்டு கடல்போல்கங்கை முட்டிய துலகமெல்லாம்
அகங்கொண்ட கவலைதோய அமரரும் அரன்பாற் சொல்ல
புகுங்கங்கை நீரைக் கூவிப் பொலிசடா பாரத்துள்ள
தகும்மயிர் ஒன்றில்விட்டார் தணிந்தது கங்கைவேகம்
கங்கையில் சிறிது தீர்த்தம் கனிந்தருள் செய்க என்று
சங்கரன் தன்னை மாயன் சதுர்முகன் சுரர்கோன் வேண்ட
அங்கவர்க் களித்தார் ஈசன் அயனிடம் இருந்த ஆற்றை
தங்கிய பகீரதன் தன் தவத்தினால் புவிக் கிழுத்தான்
பகீரதன் பெற்ற கங்கை பாரெல்லாம் புரண்டுபாய
மிகமிகப் பயந்தார் மக்கள், விடையவன் அதனை மீண்டும்
அகமகிழ்ந் துச்சிதாங்கி அவனியிற் செல்லவிட்டார்
* சகரரின் சாம்பல்மேவிச் சாகரம் புகுந்ததாறு
முன்னொரு காலத்தில்நான் முகன்படைத்திட முயன்று
நன்னிலைச் சனகராதி நால்வரைப் படைத்தார் அன்னார்
முன்னிய தவத்தரானார். முடங்கிய தயன்படைப்புத்
பின்னர்நா ரணனை நண்ணிப் பீடுயர் கைலை சென்றார்
சிவனிடம் விண்ணப்பித்துத் திருவருள் வேண்டினார்கள்
சிவனவர் தமையழித்துத் தேவன்தா னென்றுநின்று
திவளும்தன் இடத்தோள் நோக்கச் சிவசக்தி உமையாள் வந்தாள்
அவருடன் சேர்ந்து நோக்கி அயனைமற் றோரை ஆக்கி
இனிஅயன் படைப்புச் செய்ய எல்லாங்கை கூடு மென்றார்
தனிமுதல் உமையைக் கொண்ட சரித்திரம் அறிவாய் தக்கா,
கனிதரு சிவனைஅன்புக் கடலென மதிப்பாய் என்று
முனிவரும் விளக்கம் சொன்னார் முரடனாம் தக்கன் கேட்டான்

## 14. கயமுகன் உற்பத்திப்படலம்

அசுரரின் அரசனான அசுரேந்திரன் வெம்போரில்
மசியுண்டிந் திரன்பால் தோற்று, வந்தனன் சுக்கிரன்பால்
இசைவன எல்லாம் தோற்றேன் எங்குல வீரர் மாண்டார்
இசைமிகு குருவே யானென் செய்குவே னியம்பு கென்றான்
வருந்தற்க. பிரமபுத்ரர் வசிட்டரின் மரபில்வந்து
பொருந்துமா கதர்பால்நின்றன் புனைதரு கன்னி யொன்றை

* சகரருக்கு நற்கதி உண்டாவதற்காக



விரைந்தனுப் பிடுவாய் ஓர்சேய் பிறப்பன்வெங் கஜமுகத்தன்
தெரிந்தவன் சிவனை நோக்கி சிறந்திடுதவ மேற் கொள்வன்
அவன்பெறும் வரங்களாலே அசுர்குலம் சிறப்புக்கொள்ளும்
இவற்றைச்சுக் கிரனுரைக்க எழுந்தனன் அசுரவேந்தன்
விபுதைப்பேர்க் கன்னிதன்னை விளக்கங்கள் உரைத்தனுப்ப
அவளும்அம் முனிவர்முன்னே அருந்தவம் சிவனை எண்ணிப்
புரிந்தனள் அங்கே ஓர்நாள் பொலிவுறும் இரண்டுயானை
சுரந்திடும் காமஇன்பம் துய்த்தன அவற்றைக்கண்டு
வருந்தவ முனிவரான மாகதர் கூர்ந்து பார்த்தார்
பொருந்துகா மத்தராகிப் புறமுள விபுதை தன்னை
அணைந்தனர் ஆனைரூபம் ஆகியின் பத்தையுற்றார்
புணர்ந்தபின் கயமுகன்பேர்ப் புத்திரன் வந்துதித்தான்
இணங்கிய விபுதைசென்றான் மாகதர் துயரமுற்றார்
பிணங்கிய கஜமுகனைப் பெருங்குரு வான வெள்ளி
தவநெறி தனையுரைத்துத் தவம் செய அனுப்பி வைத்தார்
சிவனடி குறித்துமேரு சிகரத்தில் கஜமுகன் போய்க்
கவலைகள் யாவும் நீக்கி கருதும்ஐந் தெழுத்தை ஓதி
உவமனில் லாத மேலாம் உயர்தவம் புரிதலுற்றான்
ஆயிரம் ஆண்டிலைபுல் ஆயிரம் ஆண்டு தண்ணீர்
ஆயிரம் ஆண்டுகாற்றும் அருந்தினான் பின் பிராண
வாயுவால் மூலாதாரம் மண்டுதீ வளர்த்து விந்துத்
தூயநல் அமுதமுண்பன், தொடர்தவம் இனியவாறே
அவனிடம் சிவனார்வந்தார் ஆம்வரம் யாது வேண்டும்
இவனுரை என்றுகேட்க எம்பெருமானே, தேவர்
எவர்களும் ஏனையோரும் எதிர்புறங் காட்டி ஓடப்
புவனத்தில் மற்றோராலும் புகல்விலங் கெவற்றினாலும்
எத்தகா யுதத்ததினாலும் இறவாமல் இருக்க, எங்கும்
மெத்துசெங் கோல்செலுத்த, இறந்திடில் பிறப்பில்லாமை
இத்தகை வரங்களீவாய் எம்பிரான் என்றான் ஈசன்
அத்தகை வரங்கொடுத்தார் அசுரனும் மகிழ்ந்து சென்று
அழகிய சம்புத்தீவில் அணிதரு நகரமாக்கி
முழவதிர் மதங்கம் என்னும் மோகன நாமமிட்டு
விழைஅசு ரேந்திரன்தன் விசித்திர காந்தி யாம்பூங்
குழலியை வதுவைசெய்து கொடுமர சாட்சி செய்தான்
தேவர்கள் காமதேனு திகழும் ஐந் தருக்கள் எல்லாம்
மேவிய ஏவல்செய்ய விட்டனன் ஆணை, மேலும்
நீவிர்என் முன்னேநின்று நெடுந்தலை மூன்றுகுட்டி
தாவுகை மாறிக்காதில் தழுவித்தாழ்ந் தெழுதல் வேண்டும்
இப்பணி கயமுகன்மற் றெவருக்கும் சொல்லிவைத்தான்

அப்பணி செய்வோர் மாயன் அயனுக்கு முறையிட்டார்கள்
செப்பிய மாற்றம் கேட்டுத்திருமாலும் அயன்மற்றோரும்
அப்பணி சடையன்பாதம் அனுகியங் கெடுத்துரைத்தார்
மக்களே அஞ்சவேண்டாம் மதலையொன் றருள்வோம். அன்னான்
அக்கய முகனைக் கொல்வான் அமைதியாய்ச் செல்க என்று
நக்கனும் உரைத்து ஞான நாயகி உமையாளோடு
புக்கனன் ஓர்பூஞ் சோலை புனைந்த ஓவி யத்துச்சாலை

***

சித்திர மண்டபம் திகழும் பிரணவம்
ஒத்தயா னைகளாய் ஒன்றாண் ஒன்றுபெண்
ஆகிக் கலவி ஆற்றிடும் வேளை
ஏகநாயகி இறைவனைப்பார்த்து
பிரணவம் யானையாய்ப் பிணைவதேன் என்றாள்.
அருள்வடிவாகிய அம்பிகை உமையே
மூலப் பிரணவம் முனைந்துநீ பார்த்ததால்
கோலயானைகளாய் குலவிய தறிவாய்
உன்னுடைப் பெருமையை யாவர்மற்றறிவார்
என்னையன்றி எவரும் அறிந்திலர்
என்றனர் பெருமான். இரண்டு யானைகளும்
முன்றிகழ் வடிவில் பிரணவ மாயின.
யானைகள் சேர்க்கையால் ஞானஐங் கரமும்
வானுயர் திங்கள் வளர்செஞ் சடையும்
மூன்று கண்களும் முன்தொங்கு வாயும்
தோன்றுமும் மதமும் தும்பிமா முகமும்
உடையஓர் புத்திரன் உதித்தனன் அன்றே
அடிமைமெய் யன்பர் அறிவுக்கறிவாய்
எங்கும் நிறைந்தவர் ஈரிரு மறைப்பொருள்
எங்கணும் எவர்களும் ஏத்திடத் தக்கவர்
அருள்வடி வானவர் அறிவதற்கரியவர்
பொருளெனும் பிரணவப் புத்திரன். அவரை
சிவனும் உமையும் சிறப்புற ஏந்தி
உவகை யடைந்து மார்போடணைத்து
எம்முதல் மகனே எவர்க ளாயினும்
தம்தொழில் தொடங்குமுன் உன்னை நினைத்திடில்
அவர்தொழில் நலம்பெற அருளுவாய் அன்றேல்
கவரிடை யூற்றினைக் காட்டுவாயாக
நான்முகன் முதலிய வானவர் யார்க்கும்
ஆன்மாக்களுக்கும் பூதங்க ளுக்கும்
அனைவர்க்கும் நீயே தலைமை தாங்குக



துணிவுறு கயமுகா சுரனையு மழித்து
திருமால் சாபமும் தீர்த்திடு வாயென
அருளுரை புகன்று சோலையை நீங்கி
சேர்ந்து மூவரும் திருக்கயி லாயம்
சேர்ந்தனர் கணேசனை திருவா யிலின்கண்
கணநா யகராய் இருந்திட வைத்தனர்
கணபதி பூத சேனைக ளுடனே
வீற்றிருந் தருளினார் விண்ணவர் ஏனையோர்
போற்றிப்புகழ்ந்து மகிழ்ந்து நின்றார்கள்

## சூதாட்டம்

ஒருநாள் திருமால் கைலைக்கு வந்தார்
கருணையங் கடலாம் கயிலை நாதன்
கடுகிய தமது சூதாட்டத்தில்
நடுவ னாக இருக்குமாறவரைப்
பணித்தனர் உமையைப் பார்த்துரைக்கின்றார்
அணிதரு முமையே. அரியசூ தாட்டம்
ஆடுவோம் நாங்கள் ஆர்தோற் றாரோ
கூடுதம் அணிகலன் வென்றவர்க் குதவிட
வேண்டும். சாட்சியாய் விஷ்ணு விளங்குவார்
ஆண்டவன் சொன்னதை அம்பிகை ஏற்றாள்
ஆடும் கருவியை ஆலால சுந்தரர்
மேடையில் வைத்தார் விளையாடி னார்கள்
சூதில் வென்றவள் சுந்தரி உமையே.
ஆயினு மதனை அரன்மறுத்துரைத்து
நானே வென்றேன் நல்லா பரணம்
நீயே தருவாய் என்றலும் உமையாள்
யார்வென் றதுசொல் எனத்திரு மாலை
ஏரணி உமையாள் கேட்டனள். அவரோ.
வென்றவர் சிவனே என்றலும் உமையாள்
நன்று புகன்றாய். கடவுளே பொய் சொன்னால்
எங்கு நியாயம் இருக்கும் ஆதலால்
பொங்குபொய் சொன்னாய் போவாய் பாம்பாய்
என்றுமை சபிக்க இரங்கினார் விஷ்ணு
கொன்றையம் சடையனைக் கும்பிட் டேத்தினார்
திருமா லேநீ திகைத்திட வேண்டாம்
உருவார் ஆலம் காட்டிலோர் ஆலின்
பொந்தில் கிடந்து பொருந்திய தவம் செய்
ஐங்கர மைந்தன் சாபம் நீக்குவான்
அங்ஙனம் திருமால் ஆலங்கா டடைந்தார்

***

இந்திர னாதியோர் இபமுகக் கடவுள்பால்
வந்தனர் பணிந்தனர் வல்ல கஜமுகன்
கொடுமைகள் உரைத்தனர் குட்டித் தாழ்ந்தெழும்
இடர்களும் உரைத்தனர் எந்தை விநாயகர்
அசலன் என்னும் பூதன் தோளில்
கயமுகன் நகர்க்குக் கடுகிவந் தடைந்தார்
இசைபல முழங்க ஏரம் பன்வர
திசைநிறை பூதரும் திரண்டு வந்தனர்
அசுரசே னைகளுடன் கயமுகன் வந்தான்
அமர்தொடங் கிற்று மாண்டனர் பல்போர்
கயமுகன் தனது படைபல அழிந்ததும்
வயமிகு கணைமழை பூதர்மேல் சொரிந்தான்
கயமுகன் முன்னே அசலனின் முதுகில்
நயமுற விளங்கிய ஞானவி நாயகன்
அசுரனுக் கறிவுரை அனந்தம் கூறினார்
அசைவிலா அசுரன் விற்கணை விட்டான்
அதனை யழித்தார் தண்டம் விட்டான்
அதனையும் தடுத்தார் பாசத்தி னாலே
அசுரசேனையைக் கட்டினார் தமது
வசியஓர் மருப்பை முறித்துக் கணபதி
விட்டனர், மார்பு பிளந்திரண்டாக,
கொட்டிய குருதி காட்டிடைப் பரவி
செங்காடாகத் திகழ்ந்தது பதியிது
செங்காட்டங்குடி எனப்பெயர் பெற்றது.

***

அசுரன் கயமுகன் அடுபெருச் சாளியாய்
விசையுடன் எதிர்வர விநாயகப் பெருமான்
அசலனை விலக்கி அப்பெருச் சாளிமேல்
திசைதொழ வமர்ந்தார் தேவர்கள் போற்றினர்
பூதர்கள் உயிர்த்தனர் பொலி அசு ரேந்திரன்
பூதருக் கஞ்சிப் பறவையின் வடிவில்
மேருபால் ஒளித்தனன். விரகுடைப் பறவையாய்
சூரசுக் கிரனும் சென்றனர் தம்மிடம்
சீரார் விநாயகர் செங்கா டதனில்
தாரார் சாந்தி தருசிவ லிங்கம்
தாபித் தேத்தினார் இதனால் அப்பதி
ஓம் கணபதீச்சரம் எனும்பேர் பெற்றது.

***



# 15 .அனந்தன் சாபநீங்குபடலம்

செங்காட் டங்குடி திருப்பதி நீங்கி
ஐங்கரன் திருவா லங்கா டடைந்தார்
ஆலின் பொந்துள் அரவமாய்க் கிடந்தோன்
மூல விநாயகர் மூஷிகம் மேலே
வந்ததைக் கண்டு வணங்கினார் சாபம்
வெந்தது முன்போல் விசேஷ வடிவில்
சங்கு சக்கரம் தண்டுவாள் வில்லு
தங்கு மழகுடன் தந்தியைப் போற்றி
வாரண முகனே, மார்கழிப் பூர்வம்
சேரும் சஷ்டியில் சிறியேன் நும்மை
வழிபட்டேனருள் வழங்கினீர் தேவரீர்
மொழியுமித் தினத்தில் முறைப்படி வணங்கும்
அன்பருக் கிடர்கள் அகற்றிச் செல்வமும்
இன்ப வாழ்க்கையும் இனிதருள் செய்க
என்று திருமால் வேண்டிடக் கணபதி
நன்றெனக் கொடுத்து நண்ணினார் கயிலை
தேவர்கள் தினமும் கயமுகன் முன்னிலை
ஏவல்முன் வணங்கிய குட்டும் தோப்புக் *
கரணமும் புரிந்தனர் கருதிடும் அடியவர்
சரணமிட் டிதுபோல் தங்களைப் பணியின்
நல்லருள் செய்குவாய் நாதா எனவே
எல்லாத் தேவரும் இறைஞ்ச அவ்விதம்
ஐயன் விநாயகன் அருள் வரம் கொடுத்தார்
உய்வகை சிவன்செயல் உணருவாய் தக்கனே.

***

தாமத குணத்தைத் தழுவினான் சிவனென
நீமிகச் சொன்னாய், நான்முகன் படைக்கச்
சாத்வீ கக்குணம்; நாரணன், உயிரைக்
காத்திட இராசதம்; நம்பன் அழித்திடத்
தாமத குணமும் ,தாங்கினர் கண்டாய்
தாமத குணத்தராய்ச் சங்கரன் இருப்பின்
கல்லா லின்கீழ் கனிந்த சிவாகமம்
சொல்லுவராமோ? தூய " விஞ்ஞையின்
மூலம் " என்று வேதம் சொல்லுமோ
சீலமார் ஞானம் இல்லா தவர்க்குத்
தெளிவிக்க முடியுமோ சிவனுக்குத் தாமதம்
இயற்குணமன்று செயற்கை யாகுமே.

*தோர்பி. கரணம் என்பது கையால் காதைப்பிடித்தலைக் குறிக்கும் வடசொல்

திருமால் நீல நிறத்தி னாலும்
கருங்கடற் கண்ணே உறங்குவதாலும்
அகந்தை முதலிய கொண்டதினாலும்
புகுமிரு குணத்துடன் சிவனைத் துதித்து அவர்
அருளால் சாத்விகம் அடைவார்; பிரமன்
உருப்பொன் னிறமும் நானெனும் செருக்கும்
சிவனடி வணக்கமும் செய்வதால் முக்குணம்
அவரும் பெற்றார் ஆயினும் சிவனுக்கு
ஒருகுணம் கூறுதல் அறியாமை யாகும்
வருதத்து வங்கள் வழங்கிய வர்சிவன்

***

எத்தனை வகையாய்த் ததீசி உரைத்தும்
அத்தனை யுரையும் உணராத் தக்கன்
"முனிவரே நீவிர் மொழிபல கூறினும்
தனிஎண் குணச்சிவன் தலைவனென்றாலும்
வேள்வியின் அவியைச் சிவனுக் குதவேன்
வேள்விச் சாலையை விட்டு விலகுவீர்"
தக்கன் இவ்வுரை சாற்றலும் ததீசி
தொக்க முனிவரும் தாமும் எழுந்து
தக்கனே "சிவனைத் தவிர்த்து நீ செய்யும்
அக்கினி யாகமும் அணைந்ததே வர்களும்
அழிக.இங் குற்ற அந்தணர் யாவரும்
ஒழிவிலாப் பிறவியால் ஓதிடும் வேத
வழிதடு மாறி வாழ்வீர்களாக"
இழிசாபம் இவ்வா றியம்பினார் ததீசி
தம்முனி வரோடு தம்மிடம் புக்கார்

## 16. தானப் படலம்

அம்முனி குழாமங் ககன்றதும் தக்கனின்
நெடுங்கொடி அறுந்தது வேத வல்லியின்
தொடுமங் கலநாண் தானே சுழன்றது
காகம் கழுகு தூணில் நெருங்கின
ஆகுமிந் நிமித்தம் வந்து மஞ்சாது
அவரவர் வரிசையில் ஆவன செய்தான்
சிவனிலா யாகத் தீமேல் எழுந்தது
யாவரும் உண்டனர் சந்தனம் முதலாம்
பூசனைப் பொருட்கள் பொற்றட் டிட்டு
அந்தணர்க் கெல்லாம் அள்ளிக் கொடுத்தான்
வந்தகருடனும் அன்னப் பட்சியும்



ஐரா வதமும் ஆட்டுக் கடாவும்
எய்யும் இயமனின் எருமைக் கடாவும்
ஒருபால் ஒலித்தன அரம்பையர் இசைத்தனர்
ஒருபால் நடனம் நிகழ்ந்தது வேள்விபால்

## 17. வேள்விப் படலம்

தக்கன் ஆங்குள மேலோர் தம்மிடம்
முக்கனல் குண்டம் ஆக்குக என்றனன்
ஆகவ னீயம் காருக பத்தியம்
தக்கிணாக் கினியம் ஆகிய மூன்று
யாககுண்டத்தில் நடந்தது யாகம்
நவின்றகட் டளைப்படி அவரவர் செய்தார்
இதனை ஏற் றுண்ணுங்கள் என்றவி யுணவை
மதியிலாத் தக்கன் அவரவர்க் கூட்டினான்

## 18. உமைவருபடலம்

யாகங் கண்ட நாரத முனிவர்
ஏகினார் கயிலை இறைவனிடத்தே
நடப்பன சொன்னார், நடக்கும் யாகத்
திடம்போய் யானும் பார்த்து வருவேன்
எனக்கருள் செய்க என்றனள் உமையாள்
சினக்குண அகந்தை தேங்கிய தக்கனின்
யாக சாலையை நீ யணுகாதே
போகு முன்றனை மதிக்க வேமாட்டான்
என்றனர் சிவனார். எப்படியும் நான்
சென்று பார்த்திட்டுத் திரும்புவேன் விடைஎனக்
கருளுக எனவே அம்மையார் வேண்ட
கருணையெம் பெருமான் விடைகொடுத்தனுப்பினார்

***

ஈஸ்வரி உமையவள். எழிலார் விமானம்
தேசுற அமர்ந்தாள் சுமாலி மாலினி
குடைகள் தாங்க மங்கலை சுமனை
படரும் சாமரை பங்குநின் றிரட்ட
நந்தியின் மனைவி சுகேசை என்பாள்
செந்தண் பாதுகை திருக்கரத் தேந்த
கமலினி அனிந்திதை மாலைகள் தாங்க
அமர மகளிர் பீலியால வட்டம்
கொண்டிட அரம்பையர் ஆடிப் பாடிட

தண்டுடை கணாதிபன் சோம நந்தி
பூதர்கள் சூழ இடபவா கனத்தின்
மீதினில் சென்று யாக சாலையை
அடைந்தாள் தக்கனைக் கண்டு தெளிந்தாள்.
கண்டனன் உமையைக் கனற்சினத் தக்கன்
பண்டுதாய் தந்தை இல்லாச் சிவனின்
மனைவியே, நீஏன் இவ்விடம் வந்தாய்
உனைவரவழைத்தனோ? திரும்பிப் போவாய்
என்றனன், உமையாள் 'நீ உன் மருகர்
என்னுடைத் தங்கையர் இவர்களை யழைத்தாய்
என்னையும் பதியையும் மறந்தது நன்றோ?
இன்னெறி குற்றம் என்றனள், தக்கனும்
தாமத குணத்தனாய் அழிதொழில் செய்பவன்
சாமம்பேயொடு பித்தனாய் அலைபவன்
அவன்மனை யாட்டியாய் அகந்தை கொண்டாய்
அயன்மால் யாவரும் எனைப்புகழ் கின்றனர்
மாட்டில் ஏறிக்கு வழங்கேன் அவியை
காட்டிய மறைமொழி மாற்றுவேன் நீசெல்.
ஆகிய சுடுமொழி புகன்றனன் .அம்பிகை.
கடுஞ்சினம் கொண்டாள், விமலை தணித்தாள்
"அறிவிலாத் தக்கனே, ஐயன்ஓர் குணமிலி
மறையெலாம் துதிக்கும் வள்ளல், உயிர்களின்
வருத்தம் அழிக்கும் அருட்செயல் செய்வர்
திருத்தகு சிவஎனச் சொன்னவர் வீட்டுப்
பேற்றை அடைவர் பிரபஞ்ச மெல்லாம்
தோற்றும் அவரிடம், அத்தகை யார்க்குநீ
அவிகொடுக் காமல் எப்படி வாழ்வாய்
அவரை இகழ்ந்தோர்க் கெல்லாம் தண்டனை
விரைவில் கிடைக்கும் விமலனை விலக்கிய
நிரையிலா வேள்வி புரிந்திடும் உனக்கும்
தண்டனை வருக" எனமொழிந் தகன்றாள்
நம்பனுக் கம்பிகை நடந்தன உரைத்தாள்
எம்பெருமானே இவன்செயும் வேள்வியை
அழித்தல் வேண்டும் என்றனள். இறைவன்
செவிக்கெடுக் காமல் வாளா விருந்தார்
மீண்டும் உமையவள்: அடியேன் பொருட்டு
வேண்டல் வேண்டாமை யற்றவர் ஆயினும்
தங்களை ஒதுக்கிய தக்கன் வேள்வியை
அங்குசென் றழிக்குக எனப்பரிந் துரைத்தாள்

***



## 19. வீரபத்திரப்படலம்

தக்கனின்யாகம் அழித்திட எண்ணிச் சங்கரன் உளம் கொண்டார்
தன்திருக்கண்ணில் வீரபத்திரத் தனயனைத் தோற்றுவித்தார்
முக்கண் உடைய ஆயிரம்தலைகள் வளைந்த கொடும் பற்கள்
மொழிதருமிரண்டா யிரந்திருத்தோள்கள் எலும்பொடு சிரமாலை
ஆமையோடுகள் புனைந்திடுமாலைகள் நீலகண்டம் பூணூல்
நாகா பரணம் கேடயம் சூலம் வாள்வேல் குலிசங்கள்
சக்கரத்துடனே வீரக்கழலுடன் சிவந்த திருமேனி
மிக்கவிறலுடன் வீரபத்திரன் வெளிவந்தே நின்றார்
உமையாள் கொண்ட கோபத்திலுதித்தாள் மகாபத் திரகாளி
தமதுதுணைவியாய்ப் பத்திரகாளி விளங்கிடப் படைக்கெல்லாம்
அதிதே வதையாம் அஸ்திரதேவரொ டஸ்திரசக்திவர
மதிமிளிர் சடையோன், மலரடிபோற்றி வீரன்கேட்கின்றார்
அயனை மாயனை ஏனையோர்களைக் கொண்டுவரவேண்டுமா?
இயமனைக் கொல்ல வேண்டுமாஉல கழித்துவரவேண்டுமா
எதுசெயவேண்டினும் செய்வேன்என்றலும் சிவனங்குரைசெய்வார்
உதவுவேள்வியில் எனக்குள அவிகேள் அவியைத் தராவிட்டால்
தக்கனின்தலையை அறுத்துமற்றவர் அனைவரையும் மாய்த்து
தக்கவேள்வியை அழிப்பாய் நாமும் வருவோம் ஆங்கென்றார்
வீரபத்திரர் பத்திரகாளி, சிவனுமை யடிபோற்றி
விரைந்துதக்கனின் யாகசாலையை நோக்கிப்புறப்பட்டார்
சேருயிர்க்காற்று வியர்வைமுதலிய உறுப்புக்கள் வழியாக
திரண்டபூதகணம் பலவுண்டாக்கி சினத்துடனேயெழுந்தார்
பத்திரகாளியும் துர்க்கைமோகினி சாகினி முதலாய
பற்பலகாளிகள் தோற்றுவித்தாள்இசை பானுகம்பனிசைத்தான்
அண்டங்களெல்லாம், மண்டிக்குலுங்க அட்டதிக்குமசைய
அடைந்தனர் யாக சாலையைச்சுற்றிச் சேனைகள் காவலிட்டார்
மண்டியதக்கனின் எதிர்த்தசேனைகளை வாய்மடுத்தார் பூதர்.

## 20. யாகசங்காரப்படலம்

மனந்தடுமாறி இருந்தவர்ஏங்க வந்தான் சிவவீரன்
வந்தவீரனைத் தக்கன்நோக்கினான் ஏன்வந்தாய் என்றான்
வாய்த்தவேள்வியின் அவியைச்சிவனுக்கு வழங்குவா யென்றார்
எந்தவேள்வியிலும் சிவனுக்கவியிலை என்றனன் கொடும் தக்கன்
இருந்த வேதங்கள். வெளியில்ஏகின இன்னமும் பலமுறைகள்
வீரபத்திரன் கேட்டும்பயனில்லை அங்குள்ள அயன்மாலை
வெறிபடப் பார்த்தார் தக்கனின் செயல்கள் உங்களுக் குடன்பாடோ
சோரத் தேவரே என்றுவினாவ ஊமைகள் போலிருந்தார்

தூக்கினார்தண்டை தக்கனின்மார்பில் ஓங்கியடித்தாரே
திருமாலருகே தக்கன்வீழ்ந்தான் நான்முகன் தலையினிலே
செங்கரத்தாலே குட்டிவிழுத்தினார் நான்முகன் மனைவிமற்றும்
மருவிய பெண்களின் மூக்கும் கொங்கையும் வாளால்
அறுத்தெறிந்தார்

வளர்மதிதன்னைக் காலால் உழக்கி சின்னம்படச் செய்தார்
கதிரவன் கன்னத் தடிபோட்டவனின் பற்களைவிழச் செய்தார்
கண்ணைப்பிடுங்கினார் எமன்தலை கொய்தார்இந்திரனைக்
கொன்றார்

துதிமிகு மக்கினி கையை வெட்டினார் ஏழ்நாக்கும் துணித்தார்
சுவாகா தேவியின் மூக்கை நகத்தினால் கிள்ளிஎறிந்திட்டார்
நிருதியைத் தடியால் அடித்துவீழ்த்தினார் வருணனை எழுப்படையால்
நெடிதுதாக்கினார் வாயுவைமழுப்படை கொண்டு தாக்கியபின்
உருத்திரர் கலங்க தண்டம்செய்யாது போம்வழிகாட்டிவிட்டார்
உதவுகுபேரனைச் சூலத்தினாலே குத்திவீழ்த்திக் கொன்றார்
சோணிதபுரமன்னன் அசுரேந்திரன்தலை கணையாலே வீழ்த்தி
தொடுத்த யாகத்தின் தெய்வமாகிய எச்சனின் தலையறுத்தார்
வேள்விச் சாலைபல பிணத்தின்சாலையாய்க் கண்ட விறநறக்கன்
மிகுந்த கவலையால் கடந்த காலத்தின் நிகழ்வுகளை நினைத்தான்
ஊழ்விதி இதுவெனில் யானென் செய்வேன் உயிர்பிழைத்திடலரிது
உயர்ந்தஆற்றலை உடையவன் போலே நின்றிடுவது துணிவு
என்றுநின்றவன் முன்னே சென்ற வீரபத்திரப்பெருமான்
எந்தையை இழிவாய்ப் பேசிய உனக்கு இதுவே தண்டனையாம்
என்றுகூறித்தம் வாட்படையாலே தக்கன் தலைதுணித்தரர்
இழிந்ததலைதனை ஏந்தியக்கினி யிடங்கொடுத்துண்பித்தார்
தக்கனின் மனைவி வேதவல்லியும் புதல்வியர் எல்லாரும்
தளர்ந்துபுலம்ப பத்திரகாளி வல்லியின்காதறுத்தாள்
மற்றவர்தம்மைத் தலைகளை வெட்டிப் பந்தினைப் போலடித்தாள்
வானவர் முனிவர் ஏனையோரையும் கை.கால்.படைக்கலத்தால்
கொன்றுகுவித்தனர் வேள்விமதில்களை பூதர்கள் உடைத்தெறிந்தார்
குலைந்த தேவர்களை அடித்தும்பல்லினால் கடித்தும்கழுத்தொடித்துச்
சென்றுவீசியும் யாக முடைத்தும், பசுக்களைக் கங்கையிலே
செல்லவிடுத்தும் யாகமழித்தனர் அழிவிலர் எவருமிலர்

***

தன்பரிசனங்கள் யாவருமழிந்ததைத் திருமால் கண்டெழுந்தார்
தனதுகருடனை நினைத்தார் அதுவும் வீரபத்திர சுவாமி
முன்வரப் பயந்து வரவில்லை, பின்தன் கோபத்தை வாகனமாய்
முரளீதரன் சமர் செய்திடவந்தார் போர்ச்சங் கொலிசெய்தார்
அக்கினிதேவன் கொடுத்தவில்லினால் பலகணை மழைமொழிந்தார்
அப்பொழுதேசிவன், வேதங்களாகிய ஆயிரம்பரியிழுக்கும்
மிக்கதேரொன்றை யனுப்பினார் அதைப் பிரமன் செலுத்திவந்தான்
வேதனின் மீதுள கோபம்தணிந்து பத்திரகாளியுடன்
வீரபத்திரர் தேரிலேறினார் மூண்டது பெரும்யுத்தம்
மாதவன் வீர பத்திரர் தம்மை நோக்கிக் கேடகின்றார்



மாறிய தக்கன் தன்னை யழிக்கலாம் வானவர் மற்றோரை
ஏனழித்தீரென, எந்தையை யிகழ்ந்த யாகத்தின் அவிதன்னை
ஏற்றுண்டதாலே வேத நீதிநெறி இதுவே தண்டனையாம்
ஆனதாலினி உன்னையுமழிப்போம் என்றனர் வீரசுதன்.
அனற்சின முடனே மாதவன் கடும்போர் தொடங்கினர் வில்லேந்தி
சண்டையின் போது திருமால் சக்கரப் படையைச் செலுத்திடவே
*தக்கனந்தகன் சக்கரப் படையைப் பிடித்து விழுங்கிவிட்டார்
கண்ட மாயவன் வாட்படையுடனே வந்திட, ஓங்கார
கர்ச்சனை செய்தார் வீரபத்திரர்:. தளர்ந்தார் திருமாலும்
"மிகுந்த சினத்தை விடுவாய்" என்றது விண்ணில் அசரீரி
வீரபத்திரர் சினந்தணிந்தார் அயன் மாயனும் மனம்மாறி
தகுந்த தண்டனை தந்த வீரரின் தாள்மலரிணை போற்றி
சாந்தி யடைந்தனர் வீரரும் அவர்க்குத் தண்ணருள் புரிந்தணைத்தார்
சிவபெரு மானும் உமை யம்பிகையும் அங்கே வந்தார்கள்
சேதங்க ளுடனே பிணமலைக் காடாய்க் கண்டஉ மாதேவி
"அவமிகு தக்கன் காரணமாய் மற் றுயிர்களும் மாண்டார்கள்
அடியவளாலே விழைந்தது இதுவென உலகத்தவர் சொல்வர்
ஆகையினாலே இறந்தவர்மீண்டும் உயிர்பெறச் செய்க"என
அரனார் சிரித்தார் வீரபத்திரனால் உயிர்உடல் பெறச்செய்தார்
சோகமுகத்துடன் நான்முகன்தனது மைந்தன் தக்கனையும்
தோன்றச் செய்கென தக்கன் உடலிலே ஆட்டுத் தலையொன்றை
வைத்திடத் தக்கன் வந்தான் சிவன்முன் மனநடுங்கிப் பணிந்தான்
வள்ளலே நான்முன் அளவிடமுடியாத் தீமைகள் புரிந்திட்டேன்
அத்தனையும் பொறுத் தருளுக என்றான் அப்பனும் அனைவர்க்கும்
ஆறுதல் சொன்னார் பத்திர காளி வீரபத் திரர்க்கினிய
புவனமொன் றாக்கி, அமர்ந்திடவைத்தார் அவரவர்தம்பதிபோய்ப்
புரிந்தனர் பதவிகள் தேவர் முனிவர்கள் நிம்மதியடைந்தார்கள்

***

## 21 அடிமுடி தேடு படலம்

ஆட்டுத்தலையுடன் நின்ற தக்கன் தன்னை
அயன்பார்த்துக் கூறுகிறான் மகனே கேள்நீ
கேட்டினால் சிவன்தனைநீ யிகழ்ந்தாய், வந்து
கிடைத்தநலம் அத்தனையும் ஆணவத்தால்
ஓட்டினாய், மயக்கத்தால் யாவும் தோற்றாய்
ஒப்பிலாச் சிவனடியை வழிபா டாற்றி
வீட்டினைக்காண் என்றலுமே தக்கன் ஏற்றான்
விடைவல்லான் உங்களது மயக்கந்தீர்த்த
வரலாற்றை விளம்புகென வேண்டி நின்றான்

* தக்கனந்தகன் – வீரபத்திரர்

மலரயனும் பழங்கதையை விளம்பலுற்றான்
விரவுமா யிரம்சதுர் யுகமெனக்கு
விளம்புபக லாம்அதன்பின் துயில்மேற் கொள்வேன்
இரவிமுதல் உயிர்களெலாம் அழியும். வாரி
இறைவிதொழும் காஞ்சியொத்ததலங்கள் விட்டு
பரவுபுவி யனைத்தையுமே விழுங்கிக் கொள்ளும்
பரந்தாமன் ஆலிலையில் பள்ளிகொள்வர்
ஆலிலையில் துயில்வோனை முனிவர் வேண்ட
அதிபாதா ளத்திலுள்ள பூமி தன்னை
கோலமிகு பன்றியாய் சென்று மீட்டார்
குறித்ததுயில் நீங்கிநான் பழமை போல
சீலமிகு முயிரெலாம் படைத்து விண்ணோர்
தேசம்முன் இருந்தபடி அனைத்தும் செய்தேன்
ஏலவே இதனையான் செய்தேன் நானே
என்றிறுமாப் படைந்தரியை எழும்பச் செய்தேன்
திருமால்கண் விழித்தவுடன் நீயாரென்று
செருக்குடனே வினவினேன் யானுன் தந்தை
திருமாலென் றறியாயோ என்றபோதில்
திருவுந்தி தனில்வந்த வகையினாலே
பெருமைந்தன் என்றென்னை விளம்பலாமோ
பெருவிறகில் தீவளர்ந்தால் தீக்குத் தந்தை
*தருவிறகென் றுரைப்பதோ நீயென் தந்தை
சாபத்தால் ஐயிரண்டு பிறப்பெடுத்தாய்
அப்பிறப்பை யான்படைத்துக் கைசிவந்த(து)
அதையறியாய் யான்பிரமம் அறிதிஎன்றேன்
ஒப்பரிய உச்சித்தலை கிள்ளிக் கொள்ள
உன் தலையை நீபடைக்க வல்லையல்லை
செப்பும்பொன் னின்றிஆ பரணமாமோ
தேங்குசரா சரங்கள்யான் வேதமும் யான்
எப்புலனும் அருவுருவும் சோதியும்யான்
எங்கும்நிறை பிரமம்யான் என்றான் மாயன்
மாயவன் வெம் மறலிப்படை என்மேல் விட்டார்
வளர்தருப்பைப் படையாலே அதைத் தடுத்தேன்
ஆயபோர் பலகாலம் நடந்த தன்பின்
அணுகினார் நாரதர்எம் முன்னே. வந்து
"நேயரே. நீவிர்பரப் பிரமம் அல்லர்
நிறைசோதி ஒன்றிங்கே தோன்றும் காண்பீர்"
ஏயமொழி முனிகூறிச் சென்றார். பின்னர்
எழுந்ததோர் மலைச்சோதி எங்கும் சூழ



ஆணவத்தின் வசப்பட்ட நாங்கள், சோதி
அடிமுடியைக் காண்பதற்கு முயன்றோம். உச்சி
காணுதற்கு நான்முயன்றேன் அடியைக் காண
கான்பன்றி வடிவாகத் திருமால் சென்றார்
சேணோக்கி யன்னமாய்ச் சென்ற போதில்
சித்தர்பலர் என்செயலை இகழ்ந்து பேசி
மாணுயர்ந்த சோதியையிப் பறவை காண
வல்லதோ? எனத்தம்முள் விளம்பிச் சென்றார்
அடிதேடு திருமாலும் அயர்ந்து வந்தார்
ஐயனே சிவபெருமான் சரண மென்று
நெடுஞ்சோதி அருகுநின்றார். ஆணவம் போய்
நின்றேன்யான் பின்னர்சிவ லிங்கம் ஆக்கி
அடிபணிந்து பூசித்தோம் அப்போ தாங்கே
அன்னைஉமை பாகனாய்ச் சிவனும் நின்று
முடிவிலாத் திருக்காட்சி தந்தார் நாமும்
முளரிபதத் தலையாய அன்பு வேண்டும்
என்றுவரம் பெற்றினிது மகிழ்ந்தோம். நீங்கா
எழிற்சோதி தனைவணங்கி நிற்க. அஃது
குன்றாகிச் சுருங்கிச்சிவ லிங்க மாகி
குலவும் அரு ணாசலப்பேர் படைத்த தன்றே
அன்றிரவே சிவராத்திரி எனும்பேர் தாங்கி
அடியார்கள் சிவபூசை செய்யின் என்றும்
குன்றாத பேறெல்லாம் நல்கும் நாளாய்க்
குறித்தின்பம் கொடுக்குமிதை அறிவாய் மைந்தா.

## 22. தக்கன் சிவபூசைசெய் படலம்

நான்முகவன் இவைகூற தக்க மைந்தன்
நல்லறிவு வரப்பெற்றுச் சிவனை ஏத்த
மேன்மைமிகு காசிநகர் சென்றான் அங்கே
மிளிர்கங்கைக் கரையிலே மணிகர் ணிகையின்
பான்மருவு புதுக்கோயில் அமைத்து வேதம்
பயில்முறையில் சிவலிங்க பூசை செய்ய
தேன் மலரும் சடையானும் வந்தார். தக்கன்
சிவபூதத் தலைவனாய் விளங்க வைத்தார்
திருமால்நான் முகவன்இந் திரன் வானோர்கள்
சிவவீர பத்திரரை வணக்கம் செய்து
உருவாகி உள்ளசிவ லிங்க பூசை

உள்ளுணர்ந்து பூசித்து தேகத் தின்னல்
தருகோது தீர்ந்தகன்றார் அந்த ணர்கள்
தத்தமிடம் சென்றார்கள் எனவியாழன்
உருகாத தக்கனது வரலாறெல்லாம்
ஓதினார் சயந்தனுக்கு விளக்கமாக

## 23. கந்தவிரதப் படலம்

வெள்ளிக்கிழமை

முன்னொருகா லந்தன்னில் முசுகுந்தச்சக்ரவர்த்தி
முனிவர்வசிட் டரிடம்போய் முருகனது விரதமெலாம்
இன்னிதமாய் என்றனுக்கிங் கியம்புகஎன் றான் முனிவர்
இனியவெள்ளிக் கிழமையுறும் விரதநலம் இசைக்கின்றார்

***

எள்ளரும் சிறப்பின்மிக்க எழுவகை வாரந்தன்னுள்
வெள்ளிநாள் விரதந்தானே விண்ணவர் உலகம் காத்த
வள்ளல்தன் விரதமாகும் மற்றது புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்தவெல்லாம் ஒல்லையின் முடியுமன்றே(க)

***

பகர்ந்திடும் பூ வுலகமெலாம் பகீரதனே ஆட்சிசெய்தான்
பற்றினனே கோரனெனும் பகையான ஓர்அரக்கன்
பகீரதனும் மனைவியொடும் பற்றுறுதன் மகனுடனும்
படர்ந்தபெரு வனத்திடையே பக்தியுடன் சுக்கிரன்பால்
தன்னிலைமை யெல்லாமே சாற்றினான். சுக்கிரனார்
சண்முகனின் வெள்ளிநாள் தவவிரதம் மூன்றாண்டு
மன்னுநெறி யனுட்டித்தால் வருமுனக்கே யரசாட்சி.
வருந்தற்க எனஉரைக்க பகீரதனும் நோன்பிருந்தான்
முன்னாளும் பின்னாளும் ஒருவேளை உணவுண்டு
முழுவெள்ளி நாளதனில் உண்டிநீர் ஒன்றுமின்றி
உன்னிவிரதங்காக்க ஓங்கார வேல். கோரன்
உயிர்போக்கமுன்போல பகீரதனே அரசுபெற்றான்

### கார்த்திகைவிரதம்

ஏழுமுனி வர்களுக்குள் இணையில்லா முனிவரென
இலங்குவதற் கெண்ணிவிநா யகரைவழி பாடுசெய்து
பழுதில்லா நாரதனார் பணிந்துவரு நாளினிலே
பன்னிரண்டு வருடங்கள்நீ பன்னிருகை வேலவனை



கார்த்திகைநாள் விரதத்தைக் காத்துவந்தால் சித்தி என்று
கணபதியார் உரைத்தபடி கருத்துவந்து நாரதனார்
கார்த்திகையின் முன்பரணி நாட்பகலோர் உணவுண்டு
கார்த்திகைநாள் நீருண்டு முருகனையே தியானித்து
தர்ப்பசய னங்கிடந்து துயிலின்றி முருகனடித்
தாமரையைச் சிந்தித்து நீராடி நீறாடி
நற்பகலாம் ரோகிணியில் நலமான முனிவருடன்
நயந்தபா ரணை செய்து பகற்பொழுதில் உறங்காமல்
விதிப்படியே பன்னீராண் டொப்பரிய விரதமுற்றி
மேலான முனிவரென மேன்மைபெற்றார் மகாரிஷியாய்
இதுவிதமோர் அந்தணன் நோற் றுயர்மனுவாய் உலகாண்டான்
இன்னோரந் தணன்நோற்றான் எண்ணுபல சித்திபெற்றான்
அவ்விரத பலனாகத் திரிசங்கு மன்னானான்
அரசனுமோர் வேடுவனும் ஆயுமுறைப் படிநோற்று
இவ்வுலகை அந்திமான் சந்திமான் பெயருடனே
இனியஅர சாட்சிசெய்து இன்பப்பே றுற்றார்கள்

### சஷ்டிவிரதம்

ஆறுமுகன் சஷ்டிவிர தம்சிறந்த விரதம் அதை
அனுட்டிப்பார் சித்தியெலாம் அடைந்திடுவார் பேரின்பப்
பேறுமடைந் திடுவார்கள் ஐப்பசிச்சுக் கிலபக்கப்
பிரதமைதொட் டாறுதினம் நீராடிப் புனிதமுடன்
உருவமுட னேகலசம் அக்கினிமுன் றுரைத்தவிதி
ஓங்கார முருகையனை உளங்குளிரப் பூசித்து
இரவுபகல் எம்பெருமான் இனியபுகழ் தியானித்து
ஏழாம்நாள் சப்தமியில் இயம்புவிதிப் படிதுதித்து
இதயத்தில் முருகையன் இணைமலரைப் பதிவாக்கி
இயைந்தஅடி யார்களுடன் இனிதுபா ரணைசெய்க

வசிட்டமுனி இவ்வாறு முருகன்விரதப் பெருமை
வரைந்துரைக்க முசுகுந்தன் வகுத்தவிதி விரதமெலாம்
பசிசுகத்தைப் பாராமல் பலகாலம் அனுட்டித்தான்
பன்னிருகை வேலவனார் பச்சைமயில் வாகனத்தில்
இனியவீர வாகுவுடன் இலக்கத்தெண்மர். பூதகணம்
இருமருங்கும் சூழ்ந்துவர முசுகுந்தன் முன்னின்றார்
கனிவுடைய அன்பாநீ கேட்கும்வரம் யாதென்றார்
காந்தா இவ் வுலகமெலாம் கடையேன்யான் அரசாள
இலக்கத்தெண்மர் யாவரையும் வீரராய்த் தருகஎன்றான்
இந்தவிதம் வரமளித்தான் எம்பெருமான் ஆங்குநின்ற

இலக்கத்தெட்டு வீரரையும் அவனுக்கு துணைவர்களாய்
ஏகுகவே என்றலுமே, வீரர்முரு கனைநோக்கி
“சூரர்குலம் வென்றவர்நாம் சூர்யகுல மனிதனுக்குத்
துணையாகப் பணிபுரியோம்'' என்றார்கள் அந்நிலையில்
வீரர்களே நீவிரென்றன் கட்டளையை மறுத்தமையால்
மேதினியில் மானிடராய் முசுகுந்தன் சேனைகளாய்
பலகாலம் பணிபுரிந்து பின்தவத்தால் எமையடைவீர்
பரமன்மகன் இவையுரைத்து மறைந்தார் அவ்வீரரெலாம்
குலமனிதன் முசுகுந்தன் குளிர்சுற்ற மானார்கள்
கோலமுயர் கருவூரை முசுகுந்தன் ஆட்சிசெய்தான்
வீரவாகு முதலானோர் முசுகுந்தன் அரசியலில்
வீரப்படைத் தலைவர்களாய் விளங்கினார்கள்: அரம்பையர்கள்
தாரணியில் பெண்களாகி வளர்ந்துவந்தார் அவர்களுள்ளே
தகுந்த புட்ப கந்திதனை வீரவாகு மணம்புரிந்து
சித்திரவல் லியென்கின்ற புத்திரியைப் பெற்றெடுத்து
சிறந்துமுசு குந்தனுக்குத் திருவதுவை செய்துவைத்தார்
புத்திரர்அன கன்சனகன் இவர்களையும் வாகுபெற்றார்
பொருந்துவீரர் எல்லாரும் மணம்பூண்டு மகவீன்றார்
மனுவம்சம் இப்படியாய் வளர்ந்துகுலம் பெருகியது
மன்னன்முசு குந்தனது மனைவிஒரு கிளிவளர்த்தாள்
இனியமொழிக் கிளியின்மேல் எமன்மனைவி ஆசைகொண்டாள்
எமதூதர் மூலமந்தக் கிளிகவர்ந்து விட்டார்கள்
கிளியிருக்கும் இடமறிந்து மீட்டுவரு மாறுரைக்க
கிளையோடு வீரவாகு யமன்வலிமை தனையழித்துக்
கிளியைக் கொணர்ந்தார்கள். கருவுற்ற காலத்திலே
கேட்டாள் காய்கனிவகையை சித்திரவல் லித்தேவி
ஏவலரை அனுப்பிவைக்க மலைநாட்டார் மறுத்தார்கள்
இணையில்லாப் புகழ்வீர வாகுமுத லோர்சென்று
தேவையான காய்கனியைத் தேடிவந்து தந்தார்கள்
திறைவாங்கி முசுகுந்தன் சீராட்சி திகழ வைத்தார்
அந்நாளில் வலனென்னும் அவுணப்பெரு வீரன்விண்ணில்
அமரர்கோன் உடன்பொருதான் வலனைவெல்ல முடியாமல்
மன்னனான முசுகுந்தர் துணைகேட்டுத் தூதுவிட்டான்
மகாவீர வாகுவுடன் முசுகுந்தன் விண்சென்று
வலனுடைய அவுணப்படை எல்லாமே அழித்துவிட
வானவர்கோன் வலன்தன்னைக் கொன்றொழித்து
வெற்றிகொண்டான்
வலனைக்கொன் றானென்று வலாரிஎன இந்திரனும்
மகிமைதரு பேரெடுத்தான். முசுகுந்தன் தனைப்போற்றி
இந்திரனும் உபசரித்து திருமால்முன் பூசைசெய்த



இலிங்கமாம் தியாகேசர் இணையடிகள் போற்றிநின்றான்
இந்திரன்பூ சித்தலிங்கத் தியாகேசர் கயிலாயந்
திருக்கின்ற சிவன்உமைவேல் முருகேசன் காட்சிதரும்
அந்தவகைக் கோலங்கண் டகங்குளிர்ந்தான் முசுகுந்தன்
ஆனந்தம் பொங்கக்கண் ணீர்மல்கி அஞ்சலித்தான்

முன்னெனும் பொருளுக்கெல்லாம் முன்னவா போற்றி முப்பால்
மன்னுயிர்க் குயிரேபோற்றி மறைகளின் முடிவேபோற்றி
என்னைமுன் வலிந்தாட்கொண்டே இருநிலம் விடுத்தாய்போற்றி
நின்னுருக் காட்டிஎன்னை நினைப்பித்த சித்தா போற்றி (க)

எனப்பரவும் முசுகுந்தன் நிலைகண்ட எம்பெருமான்
இந்திரன்கே ளாவண்ணம் “ முசுகுந்தா எம்மைநீ
நினதுபூ வுலகுகொண்டு வழிபாடு செய்” என்றார்
நிமலாநின் சித்தப்படி செய்வேன்என் றான்மன்னன்
இந்திரன்தன் பூசைமுடித் தெல்லார்க்கும் நல்விருந்து
தந்தனனங் குற்றபசு காமதேனு தன்னாலே:
இந்தநன்றி மறவேன்யான் வேண்டியதைக் கேள்என்றே
இந்திரனும் கேட்கையிலே நீவைத்துப் பூசைசெய்யும்
அந்தலிங்கம் தருகஎன முசுகுந்தன் வேண்டிநின்றான்
தியாகேசர் வரலாற்றைச் சீராகக் கேள்என்று
செப்புகிறான் இந்திரனும், முன்னொருகா லந்தன்னில்
தயாவுடனே திருமாயன் தனயரில்லாத் துயரத்தினால்
சங்கரனை நோக்கிஓர் ஊழிவரை தவமிருந்தார்
அங்குவந்த சங்கரனார் மால்கேட்ட வரங்கொடுத்தார்
அம்மைஉமை, தனைப்பணிந்து வணங்காத தன்மையினால்
பொங்குசினத் தால்,உனக்குப் புத்திரன்வந் தாலும்அந்தப்
புத்திரன்எம் பெருமானால் அழிந்திடுவான் எனச்சபித்தாள்
திருமால்அம் மொழிகேட்டு சிவன்உமை” முருகேசன்
சேர்ந்தசோ மாஸ்கந்த மூர்த்திதனைத் தாபித்து
வருபல்லா யிரங்கோடி வருடங்கள் தவமிருந்தார்
மழவிடையோன் உமையுடனே வந்துதித்துக் காட்சிதந்தார்
கண்டவுடன் உமையம்மை திருவடிகள் முதற்றொழுதார்
கனிந்தவரம் தருகஎன்றார் சிவனுமையைக் கண்பார்த்து
வண்டுறையும் குழலாளே வரங்களைநீ கொடுஎன்றார்
மாயனே சிவன்வரமும் என்சாப மும்பலிக்கும்
உனக்குவரும் நன்மைந்தன் சிவன்நெற்றிக் கண்தீயால்
உற்றழிவான் பின்உயிர்ப்பான் என்றுரைத்துச் சென்றார்கள்
மனத்திருந்து மாயனுக்கு மன்மதனாம் மகனுதித்தான்
மலர்க்கணையைக் கருப்புவில்லில் வைத்தெல்லார்க் கும்விடுவான்

மன்மதனெம் பெருமான்மேல் கணைவிட்டுப் பொடியானான்
மருவுமவன் அருளாலே உயிர்பெற்றான். திருமாயன்
முன்மார்பில் சோமாஸ்கந்த மூர்த்திதனை வைத்தவண்ணம்
மோதுமலைப் பாற்கடலில் பள்ளிகொண்டார் பலகாலம்
ஐயன்சோ மாஸ்கந்தர் ஆதிசேடன் மூச்சாலும்
அரங்கன்பெரு மூச்சாலும் அலைகடலின் அசைவாலும்
மெய்குலுங்கி ஆடியாடி மிகத்துவண்டு காணப்பட்டார்
அவ்வேளை என்னுடனே அசுரர்கள் படைக்கெல்லாம்
அரசனெனும் வாற்கலிப்பேர் அவுணன்என்மேல் போர்தொடுத்து
செவ்விதிலே வெற்றிபெற்றான் திருமாலிடம் சென்றிருந்தேன்
திருமார்பில் விளங்குகின்ற சோமாஸ்கந்த மூர்த்திதன்னை
என்கரத்தி லேதந்து வழிபாடு செயச்சொன்னார்
இங்கெடுத்து வந்தெனது தலைமேலே தாங்கிநின்றேன்
பின்திருமால் கனகசபை வந்துசிவன் ஆடல்கண்டு
பெருகுகண்ணீர்ப் பேரின்பம் நான்குமதி கண்டினித்தார்
அதன்பின்பு வாற்கலியைக் கொன்றெனது துயர்தீர்த்தார்
அச்சோமாஸ் கந்தனையே அனுதினமும் போற்றுகின்றேன்
இதனைஉனக் குதவுதற்குத் திருமாலும் சம்மதித்தால்
ஈவேன்யான் என்றலுமே முசுகுந்தன் பாற்கடல் போய்
திருமாலி டம்வேண்டத் திருவாயால் "அதனைப்பெற்று
செகத்திலே வழிபடுவாய்" எனஉரைத்தார். முசுகுந்தன்
பெருகுகளிப்புடன் வந்து புரந்தரனுக் குரைக்க. அவன்
பெரிதுமனம் கவலையுற்றுக் கொடுக்கமனம் இல்லாமல்
அதனைப்போல் ஆறுருவம் ஆக்கிமுசு குந்தன்கை
அளித்தபொழு(து) " இவர்அவரல் லர்"எனவே அறுதரமும்
பதிலளித்தான் முசுகுந்தன். பின்மூல மூர்த்திதனை
பரிந்தளித்தான் அப்பொழுதில் எம்பெருமான் குறிப்புணர்த்த
முசுகுந்தன் அதைப்பெற்றான். அத்துடனே மற்றாறு
மூர்த்திகளும் தர வாங்கித் திருவாரூர் முதலாய
இசைவான ஏழ்பதியில் வைத்துப்பூ சித்திடுக
எனஉரைக்க முசுகுந்தன் இம்பருக்குக் கொண்டுவந்தான்
முசுகுந்தன் சோமாஸ்கந்த மூர்த்தியெழு வர்தம்மில்
முகுந்தன்வழி பாடுசெய்த மூர்த்திதிரு வாரூரில்
இசைநாகைக் காரோணம் நள்ளாறு காறாயல்
கோளரியூர் வான்மியூர் மறைக்காடு தலங்களிலே
அமைத்துவழி பாடுசெய்தான். இந்திரன்தான் பூசைசெய்த
அக்கடவுள் இல்லாமல் அரசிழந்து புலையன்போல்
தமதயிரா வதமேறித் திருவாரூர்த் திருவிழவில்
சகலருமே வருகவெனத் தனிமுரசு சாற்றிவந்தான்
பல்லாண்டு புலையனது வடிவிலே சேவைசெய்து



பயில் " இந்ரப்பெரும்பறை" எனும்வடிவு நீங்கப்பெற்றான்
மல்லாரும் முசுகுந்தன் மகன்அக்கினி வன்னனுக்கு
மணிமகுடம் சூட்டிக்கயி லாயமலை சென்றடைந்தான்
தவம்புரிந்து வீரவாகு முதலியோர் கந்தவெற்புத்
தனையடைந்தார் சண்முகனின் தாள்வணங்கி இருந்தார்கள்
புவனமெலாம் சிறப்புள்ள கந்தவிர தங்களெலாம்
பொலிந்தபல வரமுதவிப் பொன்னுலக வாழ்வுதரும்

## 24. வள்ளியம்மை திருமணப்படலம்

விளங்கும் தொண்டை நாட்டில் மேற்பாடி
மேதகு ஊரினில் வள்ளி மலையினோர்
வளங்குளிர்சிற்றூர் மன்னன் நம்பியாம்
வனமுறு வேட்டுவத் தலைவனிருந்தான்
ஆண்மக வதிக முடையேன் ஓர்பெண்
அடியேற் கருள்செய வேண்டு மென்று
மாண்புறு முருகன் மலரடி போற்றி
வாழ்ந்திடு காலம் மகான்சிவ முனிவர்
ஐம்புல னொடுக்கி அருந்தவம் செய்ய
ஆங்கே ஒருமான் கண்ணெதிர் வந்தது
அம்மான் தன்னை அம்முனி பார்த்தார்
அவரின் பார்வையால் அம்மான் கருவுற்
றலைந்து வேட்டுவப் பெண்கள் வள்ளி
அருங்கொடிக் கிழங்கை அகழ்ந்த குழியில்
தலைதரு மோர்பெண் குழந்தையை ஈன்றது
தன்தவக்குழந்தை மானுட வடிவில்
விளங்கக் கண்டு வெருண்டோ டியது
விட்டுணு புத்திரி சுந்தர வல்லியே
உளங்குளிர்ந் துதித்தாள் எனமான் எண்ணா
தோடி மறைந்ததும் அவ்வழி வந்த
வேடுவநம்பி தன்மனை வியொடு
விளைதினைப் புனத்தே வந்தனன் அங்கே
கூடிய குழந்தையின் அழுகையைக் கேட்டான்
குதித்தான் ஓடினான் குழந்தையை எடுத்தான்
மனைவிகைக் கொடுத்தான் மனைவி கொடிச்சி
மார்போடணைத்து முலைப்பா லூட்டி
இனிதே வளர்த்தாள் இவள்வள் ளிஎன்று
இசைந்த பெயரிட் டழைத்தனர் குழந்தையை:
வள்ளி யம்மையை வயதுபன் னிரண்டு
வந்ததும் தினைப்புனக் காவலுக் கனுப்பினர்

புள்ளினம் வராமல் தட்டை கவண் கொடு
புனிதஆ லோலம் புகன்று துரத்தினாள்
வள்ளிக் கருள்செய்ய மாமயில் முருகன்
வளம்தரு தணிகையில் வந்து வீற்றிருந்தார்
வள்ளி மலைக்கு வந்தநா ரதர்
மகாதவம் செய்த சுந்தர வல்லியைக்
கண்டார் தொழுதார் கந்தனுக் கியைந்த
காதலி இவளெனக் கருத்திற் கொண்டு
தண்தேன் சோலைத் தணிகையை அடைந்தார்
சண்முகன் திருவடித் தாமரை போற்றி
தையலின் பூர்வ சரித்திர ஞாபகம்
சாற்றினார் முருகனும் மானுடவடிவில்
எய்யும்வே டுவனாய் ஏந்திழை வள்ளிபால்
எய்தினார் தினைப்புனப் பரணரு குற்றார்
வள்ளியே உன்னை வனமுறை வேடர்
வளர்தினைப் புனத்தைக் காக்க விட் டார்களே
துள்ளு மவர்க்குப் பகுத்தறிவில்லை
சொல்வாய் உன்பெயர் சொல்வாய் உன்ஊர்
இவை உரைக்காவிடில் எதுசிற் றூர்வழி
என்றுள முருகி முருகன் வினாவ
இசைமிகு கருவிகள் இசைத்திட நம்பி
ஏகினான் புனத்தே. வேடுவ முருகன்
அடிவே தங்களாய் நடுசிவா கமங்களாய்
அணிகிளை பலகலை யாகவும் திகழும்
நெடிய வேங்கை மரமாய் நின்றார்
நீலவள்ளிக்குக் கிழங்குதேன் தினைமா
காட்டுப் பசுப்பால் கொணர்ந்த நம்பியும்
கலந்த வேடுவரும் வேங்கையைக் கண்டனர்
கேட்டனர் வள்ளியை இ:.தென்ன புதுமை
கிளைதளிர்த்தோர்மரம் நிற்பதென் காரணம்?
வள்ளியம்மை மனம்மிகப் பயந்து
வந்ததை யறியேன் மாயமீ தென்றாள்
துள்ளினர் வேடர் துணித்திட வந்தனர்
தொழும் நம்பிராசன் தடுத்தான் தறிப்பதை
என்மக ளேயிது நன்னிழல் உனக்கே
எம்முருகன்துணை யாயிது வந்ததென்
றன்புரை கூறி ஆசீர் வதித்தபின்
அப்பன் நம்பி ராசன் அகன்றான்
வேடுவர் அகன்றதும் அறுமுகன் வேங்கை
விருட்ச வடிவினை விட்டு மானுட



ஆடவனாகி அழகுறு வள்ளியை
அண்டினான் இரந்தான் அரிவையே உன்:.னை
விட்டுயான் வாழேன் உன்விழி வலையில்
வீழ்ந்தேன் உன்கழல் புகலடைகின்றேன்
திட்டமாய் அரம்பையர் வாழ்த்திடச் செய்வேன்
திருமணம் என்னைச் செய்குக என்ன
இழிகுல வேட்டுவர் இனத்துப் பெண்யான்
என்னை விரும்புதல் ஏற்புடைத் தன்று
மொழிதரும் அருள்மிகு முதல்வர் நீங்கள்
முழுப்பசி யாயினும் புலிபுல் தின்னுமா?
இப்படி யாங்கே அரும்புன வள்ளி
இவருக் குரைசெய்ய எந்தை நம்பியும்
ஒப்பின வேடரும் உணவு கொண்டணுகினர்
உடனே வள்ளி உத்தமரே நம்
வேடுவர் பொல்லா விறலினர் ஆகையால்
வேறிடம் செல்லுதிர் என்றனள் முருகன்
நாடிய வள்ளியின் நல்லன் பெண்ணி
ஞானச் சிவனடி யார்வடி வெடுத்தனர்
நம்பிரா சனுக்கு வெண்ணீ றளித்து
நலமுண் டாக வாழ்த்தினர் அடியவர்
எம்பெரு முனிவரே என்ன வேண்டுமோ
எல்லாம் தருவேன் என்றனன் நம்பி
அரசனே என்றன் மூப்பு விலகவும்
அடல்மன மயக்கம் தீரவும் இங்கே
விரவும் நும்வரைக் குமரியா டுதற்கு
விரும்பியே வந்தேன் என்றலும் மன்னன்
அவ்வாறாகுக அன்புடை என்மகட்(கு)
அருந்துணை யாகுகஎன்றுரை செய்து
கையில் கொணர்ந்த கனிதேன் மாபால்
கன்னிக்குக் கொடுத்து நம்பியு மகன்றான்.
பசியெனப் புகன்று பாங்குறு வள்ளியின்
பங்குவந் திரங்கினான் முருகம ணாளன்
புசித்திடத் தேன்தினை வழங்கினாள் வள்ளி
புசித்ததும் தண்ணீர் தருவாய் என்றார்
இங்கிருந் தேழ்மலைக் கப்பால் ஒருசுனை
இருக்கிற தேகிப் பருகுவீர் என்றாள்
மங்கையே யானோ புதியவன்: செல்லும்
வழியறி யேன்நீ வழிகாட் டென்றார்
தங்கிய சுனையில் நீரைப் பருகித்
தாகம் தணிந்தது மோகமும் தணிய

எனைமணம் புரிவாய் என்றனர் கிழவர்
" இணையிலாத் தவத்தரே இழிந்த வேடுவர்
இனமகள் என்னைத் தழுவ விரும்பி
இருகை கூப்பி இறைஞ்சுதல் தகாது
நரைமுடி வந்தும் நல்லுணர் வுமக்கிலை
நம்குலத் திற்குப் பழியுண் டாக்கினீர்
விரைவாய்ப் புனம்போய்க் குருவி கலைப்பேன்
விலகிநீர் செல்லும்" என்று குறத்தி
நடந்தாள் முன்னே, நயந்த கிழவர்
ஞானக் கணபதி யண்ணனை நினைந்தார்
இடரைத் தவிர்த்திடும் எந்தை விநாயகர்
இரைச்ச லுடனே இலங்குபேர் யானையாய்
வந்தார் அங்கே பயந்தாள் வள்ளி
மணம்செய் வேனென வள்ளல்பின் சென்று
செந்தா மரைக்கை சேர்த்துத் தழுவினாள்
சேர்ந்த தமையனை வணங்கி அனுப்பினார்
வள்ளியி னுடனே வனத்தொரு சோலையில்
வைகினார் முருகன் வடிவேற் படையுடன்
புள்ளிமாமயிலில் பொருந்திய தோற்றம்
புனிதவள்ளிக்குப் பொலிதரக் காட்டினார்
வள்ளிகலங்கினாள் மன்னவா முருகா
மகிழுமித் தோற்றம் முன்னமே காட்டிலீர்
எள்ளினேன் பிழைபல ஏழையேன் செய்தேன்
என்பிழை பொறுத்தருள் என்றனள் வள்ளி
முன்னைத் தவத்தை முருகன் கூறி
முந்திநீ தினைப்புனம் செல்லுகவிரைவில்
பின்னையான் வருவேன் என்றனன், தினைப்புனம்
பேணிச் சென்றாள் பெருந்தவக் குறத்தி
தினைப்புனம் சென்றதும் சீர்மிகு பாங்கி
சென்ற இடத்தைச் செப்பெனக் கேட்க
சுனைப்புனம் சென்று தூநீர் ஆடினேன்
சுடுவெயில் வெப்பம் நீங்கினேன் என்னலும்
கண்கள் சிவந்திட வாயும் வெளுத்திட
கைவளை கழல தனங்களும் விம்மும்
வண்ணம் செய்யும் சுனைஎங் குளது
வகுத்துரை கூறென, வள்ளி சினந்து
பாங்கியை வைதாள் அத்தரு ணத்தில்
பன்னிரு கையன் வேடன் வடிவில்
ஆங்கு வந்துற்றுக் கணைபட்டிங்கொரு
யானை வந்ததுவோ எனக்கேட், டுநோக்கினார்



தோழி, முருகனும் சுந்தர வள்ளியும்
சூழ்ந்துகண் ணாலே பேசுவ தறிந்தாள்
சுடர்வேள் முருகன் தோழிபால் சென்றார்
ஆழ்ந்த காதலி ஆகிய வள்ளியை
அருள்மணம் புரிய ஆவன செய்வாய்
என்றலும் தோழி" இது நிக ழாது
எங்கள் இனத்துக் கிகழ்ச்சி உண்டாக்க
நின்றீர் ஐயா நீவிர் செல்லுதிர்
நிகரிலாப் பேதைப் பெண்ணையா விரும்பினீர்
இவற்றை யுரைக்க: என்றன் தலைவியை,
இனியமா தர்க்கோர் அரசியைப், பேதையென்
றவமொழி கூறினாய் அவளையென் னுடனே
அணையவைக்காவிடில் நாளைநான் தெருவில்
மடலேறு வேனென, வேடுவன் கூறலும்
வருந்திய தோழி நீர்மட லேறி
இடர்ப்பட வேண்டாம் இங்கே யுள்ள
எழிற்குருக் கத்திச் சோலையில் மறைந்திரும்
தலைவியைக் கொணர்வேன் எனமொழி புகன்று
தலைவியை விட்டாள் மலர் கொய்வதற்கு:
சிலபொழு தகன்றாள் சிலைவே டுவனும்
தினப்புன வள்ளியும் அன்புடன் சேர்ந்தனர்
வள்ளியை முருகன் வழியனுப் பியபின்
வாய்ந்த பாங்கி காந்தள் மலரை
வள்ளியின் கூந்தலில் வணங்கிச் சூடி
வளர்தினைப் புனத்திடை யழைத்துச் சென்றாள்

–

தினைப்புனக் கதிர்கள் முற்றி விளைந்ததால்
செறிபுனம் நோக்கிக் குறவர் வந்தனர்
தினைப்புனம் காத்த வள்ளியைச் சிற்றூர்
செல்லப் பணித்தனர். முருகனை நினைத்தாள்
சிற்றூர் செல்லும் செய்தியைத் தனது
செவ்வே லவற்குச் செப்பும் வண்ணம்
உற்ற மான்மயில் புறாக்களுக் குரைத்தாள்
உள்ளம் பதைத்தாள் சிற்றூர் சென்றாள்

மானினங்களை மயில்களைக் கிளியைமான் புறவை
ஏனை யுள்ளவை தங்களை நோக்கியே யாங்கள்
போன செய்கையைப் புகலுதிர் புங்கவர்க்கென்னாத்
தானிரங்கியே போயினள் ஒருதனித் தலைவி (க)

சிற்றூர் சென்ற தெய்வீக வள்ளி
சித்தங் கலங்கிக் கழங்கா டாமல்
நற்றோ ழியரோடும் உரையா டாமல்
நனிபுலம் பலொடு மாறுதல் கொண்டதை
செவிலியும் நற்றாயும்மிக வெகுண்(டு)இற்
* செறிந்தார். இப்படி சிறைநிகர்த் தடக்க
தவித்தாள் வள்ளி முருகனை எண்ணித்
தயங்கினாள் மயங்கி வீழ்ந்தாள், நின்றவர்
இதுமலைத் தெய்வம் தீண்டலால் வந்ததோ
எனத்தேவ ராட்டியை, வெறியாட் டாளனை,
விதிமுறை யழைத்து வேலனைத் துதித்தனர்
வெறியாட் டாளன்மேல் குமாரக் கடவுள்
தோன்றி, வள்ளியை நாமே தொட்டோம்
சொல்லிய என்மனக் குறையது தீர்ந்தால்
தோன்றும் சுகமெனச் சொன்னதும், வேடர்
சுடர்வடி வேலனைப் பிரார்த்தனை புரிந்தார்
சிலைக்கை வேடத் திருமுரு கையன்
தினைப்புனம் வந்து தேடினார் வள்ளியை
கலக்கமுற்றார் கடிது தேடினார்
கான மயில்களை கரிகளை மான்களை
புனத்தை, மலையை சோலையைக் கேட்டார்
போன வள்ளியின் அடிச் சுவடாய்ந்து
மனத்தைத் திருத்திப் பகலெலாம் தேடி
மண்டுநள் ளிரவில் சிற்றூர் வந்தார்
வந்ததை அறிந்த வள்ளியின் தோழி
வாய்ந்தன கூறி வள்ளியை எழுப்பி
கந்தன் கையில் கருதிஓப் படைத்தாள்
கந்தனும் தோழிக் கினியன புகன்று
சுந்தரம் சிறந்தஓர் சோலையுட் புகுந்தார்
தோழியும் தாயும் வள்ளியைத் தேடினர்
இந்தநிகழ்வினை நம்பிக்குரைத்தனர்
எழுந்தான் சினத்துடன் வேடர்களுடனே
கன்னியைக் கவர்ந்த கள்வனைப் பிடிக்கக்
காடும் புனமும் தேடினர். பின்பு
பொன்னலர் சோலை புகுந்தனர். புகுந்ததைப்
பூரணிவள்ளி கண்டு பயந்தாள்
வள்ளியம்மையே மனம்பதறாதே
மலையைப் பிளந்த சூரனைப்பிளந்த
வெல்படையுண்டு வேடரைக் கொல்வேன்

* இற்செறிதல் – வீட்டைவிட்டு வெளியே போகாமல்கட்டுப்படுத்தல்



விரைந்தென் பின்புறம் இருந்துகாண் என்றார்
வள்ளியும் முருகனும் மன்னிய சோலையுள்
வனமுறை வேடுவர் வந்து புகுந்தனர்.
துள்ளினர் வெங்கணை தொடுத்தனர் மிகவே
சுடர்க்கொடி சேவல் கொக்கரக் கோவெனக்
கூவியதுடனே வேடுவர் யாவரும்
ஆவி மயங்கி வீழ்ந்து மடிந்தனர்
சேவலங் கொடியோன் தேவிவள் ளியொடு
காவைவிட்டகன்றான். கலைமுனி நாரதர்
வந்தார் முருகனை வள்ளியைப் பணிந்தார்
“வள்ளலே முருகா, வள்ளியின் தந்தை
சொந்தங் களெல்லாம் இறந்து கிடந்தனர்
துணிவுடன் உயிர்பெறச் செய்யா தகலுதல்
தகுமோ சுவாமி ” என்று கேட்டனர்
சண்முகன் மறுபடி சோலைக்கு மீண்டு
மிகுபுகழ் வள்ளியை விழித்து நீ, உன்றன்
விரவிய சுற்றம் உயிர்பெற எழுப்புக
என்றலும் வள்ளி, முருகனை வணங்கி
எல்லாரும் எழுக என்றலும் எழுந்தனர்
பொன்றிகழ் மேனிப் புனிதவேல் முருகன்
பொலிந்த தன்தோற்றம் காட்டினான்: வேடுவர்
எங்களைக் காக்கும் இறைவனே நீவிரெம்
இனப்பெண் கவர்ந்து குலப்பழி சுமத்தினீர்
எங்கள் மகளை எம்மூர் வந்து தீ
இலங்கும் சாட்சியாய் மணம்புரி வீரென
வேண்டினர், பின்னர் நாரத முனியொடு
வேலனும் வள்ளியும் சிற்றூர் வந்தனர்
ஆண்டவன் வள்ளியை அருள்நோக்குற்றார்
அம்பிகை வள்ளி தெய்விக வண்ணம்
தாங்கினாள் வேட்டுவ நம்பி ராசன்
சண்முகன் கையில் வள்ளியின் கையை
பாங்குற வைத்து நீர்வார்த் தளித்தான்
பரவிடும் நாரதர் மணவினை இயற்றினார்
விண்ணிலே சிவன்உமை, திருமால் நான்முகன்
விரவிட வந்து தம்பதி கட்குத்
தண்ணருள் புரிந்தனர். நாரதர் வாழ்த்தினார்
தன்மரு கனையும் மகளையும் நம்பி
ராசனும் வாழ்த்தி மகிழ்ச்சி கொண்டாடினான்
எண்ணிலா வேட்டுவப் பெண்கள், மணமக்கள்
நேசமாய் இன்றுபோல் என்றும்வா ழியஎன
நிறைஅறு கரிசி சொரிந்தனர் தேனும்

தினைகாய் கனியும் மணமக் களுக்குத்
திருவமு தளித்தனர். திருமுரு கையன்
அனைவர்க் கும்திரு வருள்மழை பொழிந்து
அச்சிற் றூரை அணிபெற ஆளுக
எனநம் பிராசனை ஆசீர் வதித்தபின்
இருவரும் செருத்தணி மலைமிசை ஏகினார்
மனமகிழ்வுற்ற வள்ளி, முருகனை
மாண்புயர் இம்மலைப் புகழ்புகன் றிடுகென
வேண்டினாள், சூரனை, வேடுவர் தம்மை
வென்றபின் கோபம் தணிந்துவீற் றிருந்ததால்
பூண்டது செருத்தணி மலையென இதன்பெயர்
பொருந்திய காஞ்சியின் அருகில் இருப்பது
மலரில் தாமரை நதியிற் கங்கை
மலையிற் செருத்தணி பதியிற் காஞ்சி
நலமிகச் சிறந்தவை நாம்இம் மலையில்
யாழில் ஏழிசை வேய்ங்குழல் ஊதி
ஆடல் புரிவோம் அன்றியும் இந்திரன்
அலைபுனற் சுனையில் மூன்றுநீ லோற்பலம்
தேடிவளர்த்தான் திவ்விய மும்மலர்
தினம்காலை நண்பகல் மாலைஒவ் வொன்றாய்
ஊழி திரும்பினும் ஒழிவின்றி மலரும்
உணர்அடி யவர்கள் இச்சுனை மூழ்கிஎம்
தாளைவழிபடச் சாருவர் நம்மிடம்
தங்கிஐந்துநாள் தவநெறி துதிப்போர்
பாவம் போக்குவர் பயில்வீ டடைவர்
பரவிடா தவர்கள் இழிபிறப் பாளர்

பாதகம்பல செய்தவராயினும் பவங்கள்
ஏதும் வைகலும் புரிபவ ராயினும் எம்பால்
ஆதரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமியர் எவற்றினும் மிக்கார் (க)

எனவுரை முருகன் இயம்பக்கேட்டு
மனநிறை வெய்தினாள் வள்ளியும் முருகனும்
இனமலர்ச் சடையோன் உறைசிவ லிங்கம்
இங்குதா பித்துப் பூசனை யாற்றினர்
பின்னர் இருவரும் பிறங்கு கயிலைபால்
பீடுயர் கந்த வெற்பினை யடைந்தனர்
முன்னே வந்து தெய்வ யானையார்
முருகனை வள்ளியை முறைப்படி வணங்கினள்
அறுமுகன் தெய்வ யானையை அணைக்க



அக்கணம் வள்ளி, தெய்வ யானையின்
நறுமல ரடிகள் நயந்து வணங்கினாள்
நாரணன் போல நாயகன் முருகனும்
வள்ளிதெய்வானை மணவாள னாக
வலமிடம்திகழ வீற்றிருந் தருளினார்
தெய்வ யானை அம்மையார்- வள்ளியின்
சீர்வரலாற்றை செப்புக என்றாள்
உய்வகை திருமால் மக்களாய் நீவிர்
உடனெனைச் சேர்ந்திட உயர்தவம் செய்தீர்
அப்பொழு தில்யான் உரைத்ததற் கேற்ப
ஆண்டுபன் னிரண்டின் பின்னர் மூத்தநீ
தப்பிலா திந்திரன் தந்திபால் வளர்ந்தனை
தங்கை சுந்தரி தீயில் மூழ்கி
சூக்கும வடிவில் வள்ளி மலையிலே
தொடர்தவம் புரிந்து மான்மக ளாகினள்
ஆக்கமாய் இவளை அடைந்து மணந்தோம்
ஆண்டவன் இவ்வா றுரைசெயக் கஜமகள்
ஐயனே. தங்கையும் நானும் பற்பல
ஆண்டுகள் பிரிந்தோம் ஒன்றுசேர்ந்திட்டோம்
கைமா றெதுநாம் செய்வோம் எனறனள்
கன்னியர் இருவரும் களிப்புடனிருந்தனர்
அருள்ஞானசக்தி கிரியாசக்தி
ஆய இருவரும் அருகினி லிருக்க
தெருட்கொடி சேவலும் – மயிலும் தேரும்
செந்நிறக்கடாவும் செங்கதிர் வேலும்
ஏனை ஆயுதங்களும் எந்தைகந்தனின்
இன்பணி புரிய இகபர சுகந்தரும்
கனிரசக் கந்தன கருணை பொழிந்து
கனகா சனத்தில் இனிதுவீற் றிருந்தார்.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சிநல்கி
என்னையு மடியனாக்கி யிருவினைநீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

சுபம்

கந்தபுராண வசனகாவியம் முற்றிற்று.

130203



நாகவரதநாராயணர் தேவஸ்தானம் அளவெட்டி

## 2. ஸ்ரீவள்ளிநாயகன

" ஸ்ரீவள்ளிநாயகன்" என்னும் நாடகக்காவியம் சாதாரண மக்களும் இரசிக்கத்தக்க வகையில் தெய்வபத்தியை வளர்ப்பதாய் அமைந்திருக்கின்றது. இது இதன் தனிச்சிறப்பு. நூலாசிரியரின் கவிதா சாமர்த்தியம் பிரசித்தமானது பாராட்டற்பாலது.

17-08-1969

## 3. குரும்பசிட்டி முத்துமாரி திருப்பதிகம்

குரும்பசிட்டி மாமாரி அம்பாள் பதிகம்
கரும்பாய் இனித்திடுதல் காண்க – விரும்பிப்
படிப்பவர்கள் கேட்பவர்கள் பாவவினை யாவும்
இடிப்பவர்கள் ஆவர் இனிது.

02-01-1971

## 4. நவக்கிரக தோத்திரமாலை

நல்வினைப்பயனை நாம் நுகர்ந்தன்றி
உய்வினை யின்மையின் ஊட்டுவோ னாணையால்
நவக்கிரக கம்எனும் நல்லதெய் வங்கள்
எமக்கருண் முறையில் இயலுமா றுணர்ந்து
போற்றுமா போற்றி புவியிடை இனிதே
வாழுமா வாழ வழிகாண் முறையின்
அருட்கவி விநாசித் தம்பியாம் புலவோன்
மலப்பிணி தனக்குநல் மருந்தென்
நவக்கிரக கத்துதி நயந்துநல் கினனே.

12-09-1971

## 5. தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவி அநுபூதி அந்தாதி

துர்க்கை திருவருளைத் துய்க்க அநுபூதி
சர்க்கரைப்பால் தேனென்னச் சாற்றினால் - மிக்கஅருள்
நாடுங் கவிஞன்; நலமலிநூல் வாழியரோ
தேடும் புதையலிதன் சீர்

25-08-1976

## 6. மாவை அன்புத் திருப்புகழ

சுப்பிரமணிய தியானப்பாடலோடு கூடிய மாவை திருப்புகழ்ப் பாடலைப் பாடக் கேட்டபோது உருக்கம் உண்டானது, மெய்ப்பாடு விழுங்கியது மாவை அன்புத்திருப்புகழ் மாவைத் திருமுருகன் அருட்பிரசாதம் நூலாசிரியரின் கவிதா சாமர்த்தியம் எத்துணையும் பாராட்டி யமையாது.

30-07-1978